# உதயன்

சுடர் 30 கதிர் 298 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 03 ஞாயிற்றுக்கிழமை 20.09.2015


### கலப்பு நீதிமன்ற விசாரணையை நடத்தமுடியாது

கொழும்பு, செப். 20
ஐ.நா. விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கலப்பு நீதிமன்ற விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு இலங்கையின் அரசமைப்புச்

பக்கம் 24.....

### ஐ.எஸ். படையில் 2400 ரஷ்யர்கள்

பக்கம் 25

# கலப்பு நீதி பொறிமுறையை உருவாக்க அமெ. அழைப்பு

## இலங்கை தொடர்பான தீர்மானத்தின் முதல் வரைவில் காத்திரமான அம்சங்கள்

கொழும்பு, செப்ரெம்பர் 20
ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தின் முதல் வரைவு வெளியாகியுள்ளது.
இதில், போரின் இறுதி ஆண்டுகளில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக, சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறையை உருவாக்குமாறு இலங்கை அரசிடம் கோரப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் - ஊக்குவித்தல் - என்ற தலைப்பில் தீர்மான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
இழைக்கப்பட்ட மோசமான குற்றங்களை விசாரிக்கும் ஆற்றலை இலங்கையின் உள்நாட்டு குற்றவியல் நீதிப் பொறிமுறைகள் கொண்டிருக்கவில்லை என்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டே, அமெரிக்காவும் அதன் சக நாடுகளும் தீர்மான வரைவில் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று கோரியிருக்கின்றன.
இலங்கை மீதான புதிய தீர்மானம் தொடர்பில் நாளை ஜெனிவாவில் நடக்கவுள்ள முதலாவது முறை

பக்கம் 24.....

### அரசமைப்புச் சபையில் சிவில் பிரதிநிதிகளின் பெயர் நாடாளுமன்ற அனுமதிக்காக

கொழும்பு, செப். 20
அரசமைப்புப் பேரவைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பெயர்கள் நாளைமறுதினம் நாடாளுமன்ற அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன. சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்

பக்கம் 24.....

## சர்வதேசப் பங்களிப்புடன் உள்நாட்டுப் பொறிமுறை

### வலியுறுத்தியது அமெரிக்கா



புதுடில்லி, செப். 20
இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்குச் சர்வதேச சமூகத்தின் கணிசமான பங்களிப்புடன் உள்நாட்டு விசாரணை மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.
இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியான பின்னர், முதல் முறையாக ஒபாமா நிர்வாகத்தின் உயர் மட்டத்தில் இருந்து

பக்கம் 24.....

## ஏற்கக்கூடிய தீர்வொன்றை முன்வைப்பதே அவசியம்

### கோருகிறார் சம்பந்தன்

புதுடில்லி, செப்.20
நிரந்தரமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
இந்தியாவின் இந்து நாளித

பக்கம் 24.....

## ஜெனிவா அறிக்கை தொடர்பில் சு.க. நிலைப்பாடு அடுத்த வாரம்

கொழும்பு, செப். 20
ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு பற்றி ஒருவாரத்துக்குள் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்ச

பக்கம் 21.....

### அமெரிக்கா செல்கிறார் மைத்திரி

கொழும்பு, செப். 20
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்மாத இறுதியில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
நியூயோர்க், ஐக்கிய நாடுகள்

பக்கம் 24.....

## கடல்களில் குளிக்கச் சென்ற இரு மாணவர் மூழ்கிச் சாவு

### மேலும் இரு மாணவரைக் காணவில்லை
### வெவ்வேறு இடங்களில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப். 20
கற்கோவளம், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் உள்ள கடல்களில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவர்களில் 2 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். நீரில் மூழ்கிய மேலும் 2 மாணவர்களைக் காணவில்லை. அவர்கள் இரவு வரை கண்டறியப்படவில்லை. அவர்களைத் தேடும் பணி தொடர்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கம் 24.....

## உள்ளகப் பொறிமுறையை சிறுபான்மை நம்பவில்லை

### அமெரிக்க காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் சூடான விவாதம்





நியூயோர்க், செப். 20
இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்கள் உள்நாட்டு பொறிமுறையொன்று குறித்து நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. புதிய அரசின் கீழ் இலங்கையின் பாதுகாப்புத் தரப்பில் முழு

பக்கம் 21.....

## மத்திக்கும் மாகாணத்துக்கும் அதிகரிக்கின்றது இடைவெளி

### வடக்கு முதலமைச்சர் கவலை

யாழ்ப்பாணம், செப். 20
அரசியலானது மத்திக்கும் மாகாணத்துக்கும் இடையில் இடைவெளியை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எமது அரசியல் யாப்பும் எமக்குப் போதிய அதிகாரங்களை வழங்க வில்லை. எங்கள் பிரச்சினைகள் அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படும்வரை எமது மக்கள் காத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே உரிய சட்டதிட்டங்களுக்கு ஏற்ப உள்நாட்டு வெளிநாட்டு எமது உறவுக

பக்கம் 24.....

## தொகுதி வாரியாகவே உள்ளூராட்சித் தேர்தல்

### அமைச்சர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, செப். 20
நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொகுதி வாரி அடிப்படையிலேயே நடத்தப்படும் என்று உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

பக்கம் 21.....


www.sdb.lk
நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
10.75%
011 5 411 411
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
Digitized by Noolaham Foundation

# ஐ.நாவின் அறிக்கைக்கு நாடாளுமன்ற விவாதம்

## கோருகிறார் வீரவன்ச



கொழும்பு, செப். 20
சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கிளை ஒன்றை இலங்கையில் நியமிக்குமாறு ஜெனிவா மனித உரிமைகள் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறித்து நாடாளுமன்ற விவாதம் ஒன்று கோரப்படவுள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் சபாநாயகருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கிளை ஒன்றை இலங்கையில் நிறுவுவதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.
அதேநேரம் சீபா உடன்படிக்கை தொடர்பாக தொடர்ந்தும் நாம் எதிர்ப்புகளை வெளியிட விரும்புகின்றோம்.
எவ்வாறாயினும், சீபா உடன்படிக்கை தொடர்பான எந்த முன்னெடுப்புகளும் இடம்பெறவில்லை என்று, ஜனாதிபதியும் பிரதமரும் நேற்றுமுன்தினம் ஊடகப் பிரதானிகளிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## கே.கே.எஸ். வீதி வாய்க்கால் நாற்றமடிப்பதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப் 20
யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியும் கே.கே.எஸ் வீதியும் இணையும் சந்தியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால் என்றுமில்லாதவாறு பல நாள்களாக துர்நாற்றம் வீசுவதாக அதனைச் சூழவுள்ள வர்த்தகர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.
சில மாதங்களாக இந்தப் பிரச்சினை தொடர்ந்துகொண்டிருக்கிறது. அந்த அடைப்புக் காரணமாக கே.கே.எஸ். வீதியின் அருகாகச் செல்லும் கழிவுநீர் வாய்க்காலும் நீண்ட தூரத்துக்குத் துர்நாற்றம் வீசிக்கொண்டிருப்பதாகவும் அதனால் அங்கு நின்று வியாபாரம் செய்வதில் இடையூறுகளை எதிர்கொள்வதோடு வாடிக்கையாளர்களும் அங்கு வந்து இடையூறுகளை எதிர்கொள்ளவேண்டிய இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
அங்கு எவராவது மலக்கழிவுகள் கொட்டுகின்றனரா என்று சந்தேகிப்பதாகவும், வியாபாரிகள் கூறுகின்றனர்.
இது தொடர்பில் யாழ்.மாநகர ஆணையாளர் பொ.வாகீசனிடம் கேட்டபோது அவர் தெரிவிக்கையில், அது போன்ற முறைப்பாடுகளை மாநகர சபையிலுள்ள அதற்கென உள்ள பிரிவில் முறையிட முடியும். அது வழமை. வர்த்தகர்கள் கூறும் குறித்த இடம் நாளை திங்கட்கிழமை பார்வையிடப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (த-4)

## நொச்சிக்குளம் பகுதியில் மரக்கடத்தல் முறியடிப்பு



வவுனியா, செப்.20
வவுனியா நொச்சிக்குளம் காட்டுப் பகுதியில் வர்த்தக நோக்கத்துடன் மரங்களை வெட்டி விற்பனைக்காகக் கொண்டு சென்றுகொண்டிருந்தபோது அதனை முறியடித்த பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.
ஈச்சங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் அதிகாலை இந்த மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.
டிராக்டரில் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான மரங்களை ஏற்றியவாறு காட்டுப் பகுதியினூடாக சென்றுகொண்டிருதபோதே ஈச்சங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி என். டபிள்யூ.பண்டார தலைமையிலான பொலிஸார் மரங்களைக் கைப்பற்றியதுடன் டிராக்டரையும் பறிமுதல் செய்துள்ளதுடன் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (த-402)

## மது விற்பனை வருமானம் பட்ஜெட்டில் உள்ளடங்கா

மதுபான விற்பனை நிலையங்களுக்கு, ஒழுங்கு முறையை மீறி வழங்கப்பட்டுள்ள சகல அனுமதிப் பத்திரங்களையும் இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் வருடங்களில் வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும்போது மதுபான விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தை முழுமையாக நீக்கவும் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால.சிறிசேன தெரிவித்தார்.
காலி நகர மண்டப விளையாட்டரங்கில் இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு தேசிய வேலைத் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சமூகத்தில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் துஷ் பிரயோகங்கள், கொள்ளைகள் கொலைகள் உள்ளிட்ட எல்லா குற்றங்கள் தொடர்பாகவும் நாட்டில் புதிய சட்ட திட்டங்களை கொண்டு வர வேண்டியிருக்கிறது.
போதைப்பொருள் பிரச்சினையை சமூகத்திலிருந்து முற்றாக ஒழிக்க முடியாததாயினும் போதைப் பொருளிலிருந்து விடுதலை பெற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்.
போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகளின்போது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித அழுத்தங்களுக்கும் அடிபணிய வேண்டாம். சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு அரசு எப்போதும் பக்கபலமாக இருக்கும்.
நான் ஒரு அரசியல்வாதி என்ற வகையில் அசௌகரியங்களுக்கு உட்பட்ட சந்தர்ப்பம் ஆனது போதைப் பொருள் தொடர்பான தீர்மானங்களை [illegible] பட்டதே - என்றார். (த-4)

## கலைவிழாவும் பரிசளிப்பும்

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் 20ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறவுள்ள கலை விழாவும், பரிசளிப்பு வைபவமும் மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்க தலைவர் இ.சஞ்சீவன் தலைமையில் இன்று மாலை 5 மணிக்கு இளைஞர் சங்கக் கலையரங்கில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதர் ஏ.நடராஜன் ,சிறப்பு விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம்,கௌரவ விருந்தினர்களாக கனடா மாதகல் நலன்புரிச் சங்கச் செயலாளர் சபா அருள்சுப்பிரமணியம் மற்றும் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தின் வீ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (த)

## பல்கலை மாணவியின் சாவில் தாயார் சந்தேகம்

### பூரண விசாரணைக்கு நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 20
நெருப்பில் எரிந்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் முல்லைத்தீவைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவியின் சாவில் தனக்குச் சந்தேகம் இருப்பதாக அவருடைய தாயார் நீதிமன்றத்தில் முறையிட்டதைத் தொடர்ந்து அது குறித்து பூரண விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டது.
கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வந்த முல்லைத்தீவைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவியொருவர் மண்ணெண்ணெய் ஊற்றித் தனக்குத் தானே தீ வைத்து கொண்டதாகத் தெரிவித்து அவரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட யாழ்.மருத்துவ பீட மாணவனால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். யாழ்.போதனா வைத்திய சாலையில் 3 நாள்கள் சிகிச்சை பெற்றும் அது பயனளிக்காமல் அவர் 9 ஆம் திகதி சாவடைந்தார்.
வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த இருவரும் பெற்றோருக்குத் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்து ஒன்றாக வாழ்ந்து வந்ததாகவும், பின்னர் அது பெற்றோருக்குத் தெரியவந்ததால் திருமணம் தொடர்பாகப் பெண் வீட்டார் மதம் மாறுவதற்கு வற்புறுத்தியதால் ஏற்பட்ட பிணக்குக் காரணமாகவே மாணவி தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
இந்நிலையில் இந்த வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இறந்த மாணவியின் தாயார் சார்பாகத் தோன்றிய சட்டத்தரணி, இந்தச் சாவு தொடர்பாகச் சந்தேகம் இருப்பதாகவும், மாணவி 3 நாள்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் தாயாரைப் பார்க்கவில்லையெனவும், மாணவியைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர் மருத்துவபீட மாணவரென்பதால் முறையற்ற செல்வாக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா எனச் சந்தேகம் உள்ளதாகவும் மன்றுக்கு விண்ணப்பித்தார். இதனையடுத்து மேற்படி கட்டளையை வழங்கிய நீதிமன்றம் வழக்கு விசாரணையை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (த-103)

## ஓசோன் படலப் பாதிப்பை குறைக்க ஜனாதிபதி முடிவு

### 54 வகையான பொருள்கள் பாவனையிலிருந்து நீக்கம்

கொழும்பு, செப்.20
இலங்கை அரசு மேற்கொண்டுள்ள தீர்மானங்களின்படி ஓசோன் படலத்தைப் பாதிக்கும் 97 இரசாயனப் பொருள்களில் 54 பொருள்களை இந்த நாட்டின் பாவனையிலிருந்து நீக்க முடிந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
மொரட்டுவையிலுள்ள இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச ஓசோன் தினத் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
கடந்த பல தசாப்தங்களாகச் சூழல் பாதுகாப்பில் அரசியல்வாதிகள் தங்களது பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றவில்லை என்பதாலேயே தான் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதாகவும் அவர் தெரிவித்தார்.
சில வர்த்தகர்களினதும் அரசியல் செயற்பாட்டாளர்களினதும் அதிகார துஷ்பிரயோகத்தின் காரணமாக இயற்கை வளங்கள் அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதோடு, மணல், மண், இரத்தினக்கல் கைத்தொழில் போன்ற துறைகள் சூழலை அழிவுக்குட்படுத்தும் வியாபார நடவடிக்கைகளாக மாறியிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
பொலனறுவை மாவட்டத்தில் மண் அகழ்வது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.
மனிதன் தனது தொழிநுட்ப அறிவைச் சக மனிதர்களையும் ஏனைய உயிரினங்களையும் அழிப்பதற்குப் பயன்படுத்துவதே தற்காலத்தின் மிகப்பெரும் சவாலாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
இந்தச் சர்வதேச ஓசோன் தின நிகழ்வு அடுத்த வருடம் நடைபெறுகின்றபோது ஓசோன் படலத்துக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் பங்குபற்றுகையுடன் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என ஜனாதிபதி முன்மொழிந்தார். (த-4)

## பொலிஸுக்கு எரிபொருள் விற்ற ஏழு பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப். 20
உரிய அனுமதியின்றி எரிபொருள் விற்று வந்த 7 பேர் பொலிஸாருக்கும் அவ்வாறு விற்றபோது மாட்டிக் கொண்டனர். அவர்களுக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மன்னார் நீதிமன்று.
மன்னார் நகரில் வெவ்வேறு பகுதிகளில் 7 பேர் அவ்வாறு எரிபொருள்களை விற்பனை செய்து வந்துள்ளனர். அவர்கள் அவ்வாறு விற்பனை செய்ய அனுமதி பெற்றிருக்கவில்லை. இந்நிலையிலேயே அவர்கள் சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கும் எரிபொருள் விற்பனை செய்துள்ளனர். அதனால் விவரம் தெரியவரவே அங்குள்ள ஏனையவர்களையும் பொலிஸார் சிவில் உடையில் சென்று எரிபொருள் வாங்கும்போது கைது செய்தனர்.
மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அவர்களது வழக்கு விசாரணைக்கு வந்தது. 7 பேரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். இதனையடுத்து அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்தகையோ பெருந்தொகை இலாபமோ சிறு தொகைதான்

## நல்லூர் வியாபாரிகள் விசனம்

யாழ்ப்பாணம், செப். 20

நல்லூர் ஆலயச் சூழலில் கடைத் தொகுதிகளை பெருந்தொகைக் குத்தகை செலுத்திப் பெற்றுகொண்ட போதிலும், போதுமான அளவுக்கு இலாபம் பெறமுடியவில்லை என வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடைக் குத்கைக்காகப் பெருந் தொகைப் பணம் அறவிடப்பட்டதாகவும், வருமானம் சீராக இல்லாத காரணத்தால் அடுத்த வருடம் கடைத் தொகுதி அமைக்கத் தயக்கம் காட்டுவதாகவும் வெளி மாவட்ட வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வருடம் நல்லூரானின் வைபவம் சிறப்புற நடைபெற்றுள்ள நிலையில் சில குறைபாடுகளையும் அவதானிக்க முடிந்தது. மக்கள் கூட்டம் அதிகரிப்பால் கூட்ட நெரிசல், சுகாதாரப் பிரச்சினைகள் என்பனவும் ஏற்பட்டன.

இலட்சக் கணக்கான பக்தர்கள் கூடிய பெருந்திருவிழா தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, முடிவடைந்த நல்லூர் ஆலயத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் திட்மிட்டவாறு நிறைவு செய்துள்ளதாகவும், சில குறைபாடுகள் ஏற்பட்டபோதும் அவை அடுத்த வருடத் திருவிழாவில் சீர் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்துள்ள நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் கடைத் தொகுதி குத்தகைக்கு வழங்கியமை மற்றும் பிற வரியீட்டுதல்கள் மூலமாக ரூபா 14.6 மில்லியன் வருமானம் கிடைத்துள்ளது. மொத்தமாக 348 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. கடைத் தொகுதிகளின் குத்தகை வருமானம் ரூபா 10.6 மில்லியன் உள்ளது. எனினும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் தொடர்பான அனுமதிகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளாதபோதும் தனியார் துறையூடாகவே இவ்வாறான வாகனப் பாதுகாப்பு நிலையங்கள் செயற்பட்டன.

இவர்களிடம் இருந்து வரி அறவீடாக 50 அடிக்கு 3ஆயிரம் ரூபாவும், 50 அடிக்கு மேற்பட்ட பகுதிக்கு 5ஆயிரம் ரூபா வீதமும் வரி அறவீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 27ஆயிரத்து 500 ரூபா வருமானம் கிடைத்துள்ளது– என்றார்.

கடைத்தொகுதி வாடகைக்குப் பெற்றுள்ளவர்கள் தாம் தங்கும் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை வெளியிட்டுள்ளனர் என வினா எழுப்பிய போது,

அவர்களின் பாவனைக்கான தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் மலசல கூடப் பழுதுகள் தொடர்பான முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டு சீர்செய்துள்ளோம். எதிர்வரும் திருவிழாக் காலத்தில் இவை சீர் செய்யப்படும் – என்றார்.

வாகனத் தரிப்பிடத்துக்கான பாதுகாப்புத் துண்டுகள் ரூபா 10 மற்றும் ரூபா 5 என்ற அளவில் அறவிடப்பட வேண்டும் என்பதற்கு மாறாக ரூபா 20 அறவிடப்பட்டதாகவும், இதற்கான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.பொலிஸாரிடம் தெரிவித்ததாகவும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

திருவிழாக்காலப் பாதுகாப்புச் சேவைகளுக்காக தினமும் 700 பொலிஸாரும் விசேட திருவிழாக் காலத்தில் 900 பொலிஸாரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஆலயச் சூழலில் குறைந்தளவான குற்றச் செயல்களே நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி–5)

# வாக்குறுதியை காக்கவேண்டும் பிரதமர் ரணில்

## யாழ். மாவட்ட மீனவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 20

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய சொல்லைக் காப்பாற்றவேண்டுமென யாழ். மாவட்ட மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப் பிள்ளை எமிலியாம்பிள்ளை தெரி வித்தார்.

பிரதமர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற் பாடுகளைக் குறைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளதாக அறிந்துள்ளீர்களா? என யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்கள் சமாசத் தலைவரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு சென்று என்ன பேசினார் என்பது எமக்குத் தெரியாது, ஆனால், மீனவர்கள் மட்டத்தில் பேச்சு இனி மேல் நடக்காது. அந்த பேச்சுக்கே இங்கு இடமில்லை.

இந்திய மீனவர்கள் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு இடமில்லை. எமது கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால், சுடவேண்டுமென்ற பிரதமரின் சொல்லை அவர் மறக்காமல் காப்பாற்ற வேண் டும். எதிர்காலத்தில் இந்தியாவுக் குப் பேச்சுக்குச் செல்லமாட்டோம்.

எமது அரசு எமது பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுத்தால் போதும். மீனவக் குடும்பங்களிடம் இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை –என்றார். (த–106)

# சிதம்பரபுரம் காணியை பிரித்து வழங்க அனுமதி

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, செப்.20

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுக்கு அவர்கள் வசிக்கும் காணியையே வழங்க அனுமதி கிடைத்துள்ளது என வடக்கு மாகாண சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சிதம்பரபுரம் நிலன்புரி நிலையத்தில் உள்ள மக்களை கடந்த 17ஆம் திகதி நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக எல்லோரும் கண்ட கனவு இன்று நிறைவேறியிருக்கின்றது. நீங்கள் வசிக்கும் இந்த காணியே உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என எல்லோரும் கேட்டீர்கள். கடந்த புதன்கிழமை அதற்கான அனுமதி கிடைத்துள்ளது. எனவே உங்களுக்கு என்று ஒரு காணி இனி இருக்கும். அதனைப் பிரித்துத் தருவதற்கான காணிக் கச்சேரி எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறும்.

இதேவேளை, வட மாகாண புனர் வாழ்வு அமைச்சினால் தற்போது நீங்கள் வசிக்கும் கொட்டகைகளைத் திருத்துவதற்குப் பொருள்களைத் தருவதாக கூறியிருந்தோம். அவை தயாராக உள்ளன. எனினும் அவற்றை நீங்கள் புதிய காணிகளில் அமைக்கும் வீடுகளுக்குப் பயன்படுத்தி கொள்ளுங்கள் அல்லது அந்தப் பொருள்களை எவ்வாறு பயன்படுத்துவது என நீங்கள் தீர்மானித்து உரிய முறையில் பயன்படுத்துங்கள்–என்றார். (த)

# மூத்தோர் பேரவை வடக்கில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் . 20

வடக்கு மாகாணத்தின் மூத்தோர் பேரவை அங்குரார்ப்பணம் கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது வடமாகாண மூத்தோர் பேரவையின் தலைவராக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சு.பரம்சோதியும், செயலாளராக வவுனியா மாவட்டத்தை சேர்ந்த க.இராமச் சந்திரனும், பொருளாளராக கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த திருமதி சோமசேகரம்பிள்ளை செல் வராணியும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

மேலும், உபதலைவர், உபசெயலாளர் மற்றும் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச மூத்தோர் பேரவையினர் அறிவித்துள்ளனர். (த–ரி5)

# மோதிரத் திருட்டு கைகூடாமையால் ஆசாமி சைக்கிளுடன் தலைமறைவு

வலி.தென்மேற்கு, செப் 20

பட்டப்பகல் சனசமூக நிலையத்திலிருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த வயோதிபரின் தங்க மோதிரத்தைத் திருட முற்பட்ட இளைஞரொருவர் காரியம் கைகூடாததால் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவருடைய சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளார்.

இந்தத் துணிகரமான சம்பவம் ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:

இதே இடத்தைச் சேர்ந்த முதியவரொருவர் மேற்படி சனசமூக நிலையத்துக்குச் சென்று பத்திரிகை வாசிப்பது வழக்கம். சம்பவ தினம் பிற்பகல் 2மணியளவில் சைக்கிளில் சனசமூக நிலையத்துக்குச் சென்ற இவர் சைக்கிளைச் சனசமூக நிலைய வளாகத்தினுள் விட்டுவிட்டு உள்ளே சென்று பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்.

அதேநேரம் சனசமூக நிலையத்துக்குச் சென்ற இளைஞரொருவர் தனிமையில் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த முதியவருக்கருகில் அமர்ந்திருந்து பத்திரிகை வாசிப்பது போல் பாசாங்கு செய்துவிட்டு, திடீரென்று முதியவரைக் கையால் கட்டி அணைத்து அவர் அணிந்திருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான மோதிரத்தைத் திருட முற்பட்டார்.

இவரின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்ட முதியவர் திருடன் திருடன் என்று சத்தம் போட்டதும் திருடன் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முதியவரின் சைக்கிளை எடுத்துக்கொண்டு தப்பி ஓடிவிட்டார். (த–115)

# ஹெரோயின் விற்றவருக்கு 24 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், செப் 20

சட்டவிரோதமாக ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தவருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மன்னார் நீதிமன்று.

மன்னாரைச் சேர்ந்த குறித்த நபர் 2011 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக 1105 மில்லி கிராம் ஹெரோயின் விற்பனை செய்தமை மற்றும் 514 கிராம் ஹெரோயின் உடைமையில் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு முன்னெடுக் கப்பட்டு வந்தது. எனினும் அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து அவருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதகால சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிமன்று பணித்தது. (த–4)

# நாளையுடன் நிறைவடைகிறது யாழ்.சர்வதேச திரைப்பட விழா

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவின் இறுதிநாளான நாளை திங்கட்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மு.ப 10.00 மணிக்கும் நண்பகல் 12.30 மணிக்கும் தெற்காசியத் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளதுடன் பி.ப 3.00 மணிக்கு 'பைவ் ப்றோக்கின் கமராஸ்' காட்சிப்படுத்தப்படவுள்ளது.

தொடர்ந்து இரவு 7.00 மணிக்கு விருது வழங்கும் வைபவத்துடன் லெனின் எம். சிவத்தின் 'எ கன் அன்ட் எ றிங்' திரைப்படம் திரைப் படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த–10)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021-493 1111

விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## உரிய அணுகுமுறைகள் ஊடாக சுகநலம் பேணப் பழகுவோம்

நாம் நவீன உலகில் இப்போது நுழைந்து கொண்டிருக்கிறோம். ஆனால் மிகப் பல விடயங்களில் சரியான, தேவையான அணுகுமுறைகளைக் கைக்கொள்வதில்லை; பின்பற்றுவது மிக மிகக் குறைவு.

மேற்போந்தவாறு மிகுந்த கவலை வெளியிட்டுள்ளார், மனநல மருத்துவ நிபுணர் சா.சிவயோகன்.

வீட்டில், அன்றாடச் செயற்பாடுகளின்போது நஞ்சூட்டப்படுதலைத் தடுப்பது குறித்த, தேசிய விஷ ஒழிப்பு வாரத்தை ஒட்டிய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார்.

மக்கள் நலன்நாடி மருத்துவ நிபுணர் வெளியிட்ட கருத்துக்களை இங்கே குறித்துக் கொள்வது பொருத்தம்.

★ மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், ஆரம்பத்தில் ஒழுங்காகச் சிகிச்சை பெற்று வந்தாலும், காலப்போக்கில் அதனைக் கைவிட்டுவிடுவது ஒரு வழக்கமாகவே மாறிவிடுகிறது. அதனால் அவர்கள் பூரண குணமடைவதில் பல சிக்கல்களை எதிர்கொள்ள நேர்கிறது.

★ வெளிப்படையாகத் தென்படாமல் இருப்பினும், ஒவ்வாத மருந்துகள் மூலமாகவே அதிக அளவில் பலரும் மனநோய்க்கு ஆளாகும் நிலை உயர்ந்து செல்கிறது.

★ எம்மை அறியாமலே, எமக்கு அடுத்த தலைமுறையினருக்கும் நஞ்சூட்டும் நிலை மேலுயர்ந்து வருகிறது.

★ தத்தமக்குப் பிரச்சினைகள் என்று வரும்போது, அதனைச் சரியான வழியில் கையாளாமல் விடும்போதே, பாதிப்புற்றவர்கள், அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள்; ஆளாகிறார்கள்.

- அதனால், பிறருக்கும் பாதிப்பை உண்டாக்குகிறார்கள்.

★ மனநிலை சார்ந்த பிரச்சினைகள் ஆரம்பமாகும் போது, அதனை உரிய முறையில் கையாள வேண்டும்.

-- உதாரணமாக, எவருடனாவது மனம்விட்டுக் கதைத்து அவற்றைத் தீர்த்துக் கொள்வது அவசியம்.

★ யாருடன் கதைக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய இயலாதிருப்பின் அல்லது நேரடியாகக் கூறுவதற்குத் தயக்கம் இருப்பின் --

உளநல ஆற்றுப்படுத்தல் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சினை குறித்துப் பேசலாம்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களில் பலர் அது குறித்துச் சிந்திப்பது குறைவு. ஆகையால் அவர்களது உறவுகள் அதனைத் தமது விவகாரமாக உள்வாங்கி, ஆரம்ப நிலையிலேயே வைத்தியம் செய்வதற்குத் தயங்கவோ, "வெட்கப்படவோ" கூடாது.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை புறம் ஒதுக்கி வைக்கும் காலம் சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் மிகப் பெரிய அளவில் இருந்தது. எனினும் பரம்பரை பரம்பரையாக அதில் நிபுணத்துவம் வாய்ந்த ஆயுள்வேத வைத்தியர்கள், தமது வைத்திய முறைகள் மூலம் நோயாளிகளைக் குணப்படுத்தினர். ஆயினும் அந்த நிலை இப்போது மிகப் பெரிய அளவில் தேய்ந்துவிட்டது.

மேல்நாட்டு வைத்தியமே எல்லாத் துறைகளிலும், மிக மேலோங்கி உயர்ந்து நிற்கும் காலம் இது. அதுவே அடைக்கலம் என்ற நிலை ஸ்தாபகமாகிவிட்டது.

எமது சமுதாயத்தில் மனநலம் குன்றியோர் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான, வைத்திய வசதி வாய்ப்புக்கள் மேன்மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதற்கு கொழும்பை மட்டும் நம்பி இருக்காது, எமது மண்ணிலும், மாகாணமட்டத்தில் நவீன வைத்திய முறைகளைப் பலப்படுத்த வேண்டிய உடனடித் தேவை உண்டு. மாகாண சபையும் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மக்கள் சுகநலத்துடன் வாழ்ந்தால் மட்டுமே, ஏனைய எல்லாத் துறைகளிலும் ஆரோக்கியமான திட்டங்கள், செயல்முறைகள் நெடிதுயர்ந்து பயன் விளைவிக்கும். இதனைச் சகல தரப்பினரும் மனதில் உள்வாங்கிக் கொண்டால், நோயின் பாதிப்பைக் குறைத்து சுகநலத்தை உயர்த்தலாம். அதனூடாகவே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற நிலையை எய்த இயலும்.

# கலப்பு நீதிமன்றத்தை உருவாக்க இலங்கை ஒத்துழைக்க வேண்டும்

## நியூயோர்க் ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கம்

மைத்திரிபால சிறிசேனவின் அரசானது எவ்வித கால தாமதமுமின்றிக் கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் நியூயோர்க் ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கம் வரைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் நியூயோர்க் ரைம்ஸ் வெளியீட்டில் வரையப்பட்ட ஆசிரியர் தலையங்கம் வருமாறு:-

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு போர்க் குற்றங்களை உள்ளடக்கிய அறிக்கையை ஐ. நா. மனித உரிமைகள் சபை கடந்த புதனன்று வெளியிட்டது. 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த இந்த உள்நாட்டுப் போரில் இலங்கை இராணுவத்தினரால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற குற்றங்கள் அனைத்தும் மிகப் பயங்கரமான வன்முறைகள் மற்றும் மீறல்கள் என ஐ. நா. மனித உரிமைகள் சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதுடன், பல பத்தாண்டுகளாக இலங்கையில் வன்முறைகள் மற்றும் மீறல்கள் தொடரப்பட்டுள்ளன. இவை தொடர்பில் இலங்கை அரசால் முன்வைக்கப்பட்ட எவ்வித வாக்குறுதிகளும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் இலங்கையில் பரவியுள்ள வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒருபோதும் வெற்றியளிக்காது எனக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் இந்தக் கருத்தை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா மனித உரிமைகள் சபையில் உரையாற்றும் போது மறுதலித்தார்.

இலங்கை அரசானது உண்மையான, நீதியான மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதுடன், இதற்கான புதிய அரசியல் யாப்பு ஒன்றையும் வரையும். இதன்மூலம் போர்க் குற்றங்கள் விசாரணை செய்யப்படும் என வெளிவிவகார அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டி யிருந்தார்.

2009ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் மூலம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த ராஜபக்ச தனது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு சர்வதேச விசாரணைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையின் ஒத்துழைப்பின்றி ஐ.நா. தனது விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுத்தது.

ராஜபக்ச ஜனவரி மாதத் தேர்தலில் தோல்வியுற்றபோது, தேசிய மீளிணக்கப்பாடு மற்றும் சர்வதேச விசாரணையாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான திட்டத்தை வரைவதற்கான கால அவகாசத்தை மனித உரிமைகள் சபை, மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசுக்கு வழங்கியது.

இலங்கையில் பரவியிருந்த இன மற்றும் மத வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதாக சிறிசேன வாக்குறுதி வழங்கினார். இந்த மாதம் மூன்றாம் திகதி, தமிழரான இராஜவரோதயம் சம்பந்தன், இலங்கையின் நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டமை இதுவே முதற் தடவையாகும்.

ஆனால் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமக்கு எதிராக தமது நாட்டு அரசினால் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறப்படவேண்டும் என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். அத் துடன் இவ்வாறான மீறல்களுக்கு உள்நாட்டுப் பொறிமுறை ஒரு போதும் சாத்தியப்படாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதாவது இலங்கை அரசானது உள்நாட்டு விசாரணையை மேற் கொள்வதற்கும், குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கும், சாட்சியமளிப்பவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதற்குமான இயலுமையைக் கொண்டிருக்கவில்லை என தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட போரில் தலைமை தாங்கிய ஜெகத் டயஸ் மற்றும் சரத் பொன்சேகா ஆகிய இருவரும் தற்போது சிறிசேன அரசின் கீழ் பணியாற்றுகின்றனர். வடக்கில் வாழும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் வாழ்கின்றனர். சிறிசேனவின் அரசின் கீழும் பல்வேறு மீறல்கள் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு ஐ. நா மனித உரிமைகள் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான ஒரு பொறிமுறையின் ஊடாக மட்டுமே போர்க் குற்றங்களைப் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பது உறுதி செய்யப்பட முடியும்.

சிறிசேனவின் அரசானது எவ்வித கால தாமதமுமின்றி கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றுள்ளது. (த-வ)

# வடக்கு மாகாண சபை வெளியிட்ட இடமாற்றப் பட்டியல் முறையற்றது

## யாழ்.மாவட்ட உத்தியோகத்தர்கள் முதலமைச்சருக்குக் கடிதம்

வடக்கு மாகாண சபையினால் விடுக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்கான இடமாற்றப் பட்டியல் உத்தியோகத்தர்களுக்கு முறையற்ற விதத்தில் தன்னிச்சையான தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட இடமாற்றங்களை மீள் பரிசீலனை செய்து அனைத்து உத்தியோகத்தர்களும் சமமெனக் கருதி இடமாற்றம் வழங்கப்பட வேண்டுமென யாழ்.மாவட்ட உத்தியோகத்தர்கள் வடமாகாண முதலமைச்சர், அவைத் தலைவர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருக் குக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாண சபை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றமானது ( வருடம் 2016 ) முறையற்ற விதத்தில் தன்னிச்சையான தீர்மானத்தின் அடிப்படையில் நடந்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் சில திணைக்களங்களில் கடமை புரியும் சில உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ந்து 10 வருடங்கள், 07 வருடங்கள் எந்தவித இடமாற்றமுமின்றிக் கடமை புரிந்து வருகின்றார்கள். இவ்வாறு தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் திணைக்களங்களில் சிலர் கடமை புரிந்து வரும் போது, சில உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களில் 4 மாதங்கள், 6 மாதங்கள் பூர்த்தியடையாமலும், மேலும் சில உத்தியோகத்தர்கள் கட்டாய இடமாற்ற விண்ணப்பம் கொடுக்கப்பட்டு மேன்முறையீடு செய்ய முடியாத நிலைமைக்கு உட்படுத்தப்பட்டும் வடக்கு மாகாண சபையின் வருடாந்த இடமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த விடயமானது வருடாந்த இடமாற்றத்துக்கு முரணான விடயமாகும். கணக்காய்வுத் திணைக்களம் உட்பட வேறு சில வடக்கு மாகாண சபைத் திணைக்களங்களில் 10 வருடங்களாகவும், 07 வருடங்களாகவும் தொடர்ந்து எந்த வித இடமாற்றமுமின்றிக் கடமை புரிந்து வரும் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் இல்லையா? இது தொடர்பாக தங்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்-என்றுள்ளது. (த)

# ஒன்பது மாதங்களில் 10 சிறுவர் கொலை

கொழும்பு, செப். 20

கடந்த ஒன்பது மாதங்களில் நாடு முழுவதிலுமாக 10 சிறார்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் ,சிறுவர் மற்றும் பெண்கள் என 795 பேர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பதில் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தலவத்துகொட, மாதிவல தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த ஒன்பது மாதங்களில் சிறுவர்கள் கடுமையாக நடத்தப்பட்டுள்ளமை தொடர்பில் 84 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டில், 27 சிறார்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். சிறுவர்கள் கடுமையாக நடத்தப்பட்டமை தொடர்பில் 197 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் சிறுவர் மற்றும் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் ஆயிரத்து 680 சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஆதரவால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும்

## ஆய்வாளர் கேணல் ஹரிகரன் சொல்கிறார்

கொழும்பு, செப்.20

ஐ.நா மனித உரிமைகள் சபையின் உதவியுடன் இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அமைப்பதற்கு அமெரிக்கா உடன்பட்டுள்ளது. இது தொடர்பில் தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி இலங்கைக்குத் தேவைப்படுகிறது. சர்வதேச விசாரணைக்குப் பதிலாக உள்நாட்டு விசாரணைக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்துள்ளது. இந்த வகையில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவளிக்கும்.

இவ்வாறு டெய்லியோ ஊடகத்தில் சர்வதேச அரசியல் ஆய்வாளர் கேணல் ஹரிகரன் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ள பிரதான விடயங்கள் வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதுடில்லி அரசியல் வட்டாரத்துக்கு அந்நியமானவரோ அல்லது இந்திய அரசின் மத்தியில் பரிச்சயமற்ற ஒருவரோ அல்லர். எனினும், கடந்த ஓராண்டாக, ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசியலில் வரவேற்கப்படுகின்ற ஒருவராகக் காணப்படுகிறார்.

இலங்கையின் தற்போதைய பிரதமர் அரசியலில் பெற்றுக் கொண்ட வெற்றிகளை விட சந்தித்த தோல்விகளே அதிகம். ஆனாலும் இவர் வெற்றிகரமாக தனது நாட்டில் இடம்பெறவிருந்த அரசியல் சதியை முறியடித்திருந்தார். இதனால் இவர் தற்போது பெரிதும் வரவேற்கப்படுகின்ற ஒரு அரசியற் தலைவராக இடம்பிடித்துள்ளார்.


கடந்த ஓர் ஆண்டு காலத்தில் இரண்டு தடவைகள் இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். பல்வேறு அரசியற் தடைகள் இருப்பினும், விக்கிரமசிங்க – சிறிசேன கூட்டணி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் விதமாகச் சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி கொண்டிருந்த சில அதிகாரங்கள் தற்போது நாடாளுமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளமை, பிரதமருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை, ஊழல் மற்றும் மோசடி நிறைந்த நிர்வாகம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளமை உட்பட பல்வேறு அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ராஜபக்சவின் எதேச்சதிகார ஆட்சியால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் களங்கப்படுத்தப்பட்ட இலங்கையின் நல்லாட்சியானது தற்போது சிறிசேன–விக்கிரமசிங்க ஆகிய இரு தலைவர்களாலும் மீளவும் நிலைநிறுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விக்கிரமசிங்க இலங்கையின் தேசிய அரசுக்குத் தலைமை தாங்குகின்றார். 1977 இன் பின்னர் தற்போது முதன் முறையாக, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் இணைந்து தேசிய அரசை நிறுவியுள்ளன. இதன்மூலம் நாட்டில் ஒற்றுமை, சமாதானம் மற்றும் அமைதி போன்ற சூழலில் அபிவிருத்தியை முன்னுரிமைப்படுத்தி தேசிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை நிறுவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் அரசியல் சூழலில் பரவலாக ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றிருப்பினும், அரசியல் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் ஒன்றை வரையறுப்பதற்கான வாய்ப்பை தற்போதைய அரசு பயன்படுத்தியுள்ளது. ஆனால் இலங்கையின் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் தற்போது புதுடில்லிக்கான தனது சுற்றுப்பயணத்தை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளமையானது முன்னரை விட இவருக்கு மிக அதிகளவான நம்பிக்கையை வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியத் தலைவர்களுக்கிடையில் முன்னரைவிடத் தற்போது அதிகளவு தொடர்பாடல்கள் ஏற்பட்டுள்ளன. ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது நாட்டின் பாதுகாப்பு மூலோபாயம் மற்றும் வர்த்தகம் போன்ற துறைகளில் சீனா தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது விக்கிரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலானது சீனா நோக்கிய இலங்கையின் வெளியுறவுக் கோட்பாட்டை மாற்றியமைப்பதாக அமைந்துள்ளது.



ஆகவே சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைகான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டதுடன் அதன்மூலம் இலங்கையுடன் விரிவான உறவைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோது அதனை விக்கிரமசிங்க – சிறிசேன கூட்டணி வரவேற்றதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட விரிசல்களை சீர்செய்வதற்கான மோடியின் விருப்பத்துக்கு விக்கிரமசிங்க – சிறிசேன கூட்டு அரசு ஒப்புதல் வழங்கியது. ஆகவே இலங்கையின் பிரதமர் புதுடில்லிக்கான தனது பயணத்தை மேற்கொண்டுள்ளமையானது இந்திய அரசியல் வட்டாரத்தால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. ஏனெனில் ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தை விடத் தற்போதுள்ள அரசானது புதுடில்லியின் நம்பிக்கையை அதிகம் பெற்றுள்ளது..

இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் எதிர்பார்ப்புக்கு ஏற்பச் செயற்படுவதற்கு விக்கிரமசிங்க மற்றும் சிறிசேன ஆகியோர் தயாராக உள்ளனர். இது இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் துணைபுரியும்.

ராஜபக்சவின் அரசினால் போரின் போதும் அதன் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்தியா மற்றும் மேற்குலகம் அழுத்தம் கொடுத்தபோது, அதனை முறியடிப்பதற்காக ராஜபக்ச பல்வேறு சதித்திட்டங்களை மேற்கொண்டார். இது இந்தியா மற்றும் மேற்குலகை எரிச்சலடையச் செய்தது.

ராஜபக்ச தனது அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காக, சிங்களத் தேசியவாதம் மற்றும் சீனாவின் தலையீட்டைப் பெரிதும் வரவேற்றார். இதேபோன்று, தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் கலந்துரையாடல்களை மகிந்த ராஜபக்ச புறந்தள்ளினார். தமிழ் மக்களின் நீண்டகால அரசியற் கோரிக்கைகளைப் பரிசீலிக்காது அதனை மகிந்த ராஜபக்ச தட்டிக்கழித்தார்.

இது இந்தியாவின் தமிழ்நாட்டு அரசியலில் அதிகம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இது இந்திய மத்திய அரசுக்குப் பெரும் அழுத்தமாக இருந்தது. இலங்கையுடன் வெற்றிகரமான நட்புறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டிருந்தபோதும் முன்னாள் அரசு தமிழ் மக்களின் கோரிக்கைகளைத் தட்டிக்கழித்தமையானது இதன் உள்நாட்டில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இப்பலவீனத்தை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்குள் நுழைந்து கொண்டது.

இலங்கையின் தற்போதைய அரசானது இந்தியாவால் ஆதரவளிக்கப்படும் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஏற்ப தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் இந்தத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளிடம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கையளிப்பதானது இலங்கையின் அரசியலைப் பொறுத்தளவில் மிகவும் கடினமான ஒன்றாகும்.

இலங்கையைப் பொறுத்தளவில் சில விவகாரங்களில் இந்தியாவின் உதவியும் அதன் புரிந்துணர்வும் மிகவும் அவசியமானதாகும். இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது கடந்த மூன்று ஆண்டுகளாக ஆராயப்பட்டு, அடுத்த வாரம் இறுதி வடிவாக்கப்படவுள்ளது.

ஆகவே இலங்கை மீதான அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையகம் வெளியிடப்பட்ட பின்னர் சிறிலங்காவைப் பொறுத்தளவில் இதற்கு இந்தியாவின் உதவியும் புரிந்துணர்வும் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கும்.

அமெரிக்காவின் தலைமையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உதவியுடன் இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அமைப்பதற்கு அமெரிக்கா உடன்பட்டுள்ளது. ஆகவே இலங்கை இது தொடர்பில் தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி தேவைப்படுகிறது.

அமெரிக்காவின் நகர்வானது தமிழ்நாடு, புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் விமர்சனத்திற்கு உட்பட்டுள்ள போதிலும் சர்வதேச விசாரணைக்குப் பதிலாக உள்நாட்டு விசாரணைக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்துள்ளது. இந்த வகையில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இந்தியாவும் ஆதரவளிக்கும் என நம்பப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–வ)

# ஆட்சி மாறியிருக்காவிடின் நாடு மோசமடைந்திருக்கும்

## அமைச்சர் மங்கள சொல்கிறார்

கொழும்பு, செப் 20

ஜனவரி–8இல் இந்த நாட்டில் மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் இன்று நாட்டின் நிலைமை மோசமடைந்திருக்கும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற ஊடகங்களின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் பிரதானிகளுடனான சந்திப்பின்போது தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் கூறுகையில்,

மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 28ஆவது கூட்டத் தொடரில் ஐ.நா. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் முன்னாள் ஆட்சியாளர்கள் பலருக்குப் பயணத் தடை விதிக்கப்படும் நிலைமை காணப்பட்டது. இராணுவப் பிரதானிகள் சிலருக்கும் இப்படியான நிலைமை இருந்தது. பொருளாதாரத் தடை விதிக்கப்படும் ஆபத்தும் இருந்தது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. உறுப்பு நாடுகள் இதனைச் செயற்படுத்தும்போது இலங்கையின் பொருளாதாரத்தில் 50 சதவீத பாதிப்பு ஏற்படும். இலங்கையில் பல இலட்சம் பேர் தொழில் இழந்திருப்பார்கள். எமது செயற்பாடுகளின் உண்மையான அளவுகோலை எதிர்வரும் 30ஆம் திகதி காணக்கூடியதாக இருக்கும் – என்றார். (த–சி)

# நாட்டில் உள்ள 262,974 முதியோர்கள் பாடசாலைப் பக்கமே செல்லாதவர்கள்

கொழும்பு, செப் 20

இலங்கையிலுள்ள முதியோர்கள் தொகையில் 2 லட்சத்து 62ஆயிரத்து 974 பேர் பாடசாலைப் பக்கமே செல்லாதவர்கள் எனக் கடந்த ஜூலை மாதத்தில் வெளியான பொது சன மற்றும் புள்ளி விவரத் தரவுகள் அறிக்கையொன்று கூறுகிறது.

இது நாட்டிலுள்ள முதியோர் சனத்தொகையில் 10.4 வீதமாகும்.

இலங்கையின் முதியோர்கள் சனத்தொகை 25 லட்சத்து 20 ஆயிரத்து 573 என்பதோடு மொத்தச் சனத்தொகையின் வீதாசாரமொன்றாகக் குறிப்பிடும்போது 12. 4 வீதம் முதியோர்களின் சனத்தொகையாகும்.

அதில் 11லட்சத்து 15 ஆயிரத்து 651 என்ற முதியோர்களான ஆண்களின் சனத்தொகையில் 57ஆயிரத்து 516 பேர் ஒருநாளாவது பாடசாலைகளுக்குச் சென்றதில்லை. அது ஆண்களின் சனத்தொகையின் வீதாசாரத்தில் 6.1 வீதமாகும்.

முதியோர்களான பெண்களின் சனத்தொகையான 14 லட்சத்து 4 ஆயிரத்து 922 பேரில் 2லட்சத்து 5ஆயிரத்து 458 பேர் ஒரு நாளாவது பாடசாலைகளுக்குச் சென்றதில்லை. அது பெண் முதியோர்களின் சனத்தொகை வீதாசர்ரத்தின் 17.6 வீதமாகும்.

முதியோர்கள் சனத்தொகையில் 8லட்சத்து 15ஆயிரத்து 647 பேர் முதலாம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரை கல்வி பெற்றுள்ளதோடு, 6 முதல் 8 ஆம் ஆண்டு வரை கல்விபெற்றுள்ள ஆண்கள் 5லட்சத்து 16 ஆயிரத்து 374 பேராகும். 9 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் ஆண்டு வரையில் கல்வி பெற்றுள்ள முதியோர்கள் சனத்தொகை 3லட்சத்து 4ஆயிரத்து 428 ஆகும்.

ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்துள்ள மூத்த பிரஜைகளின் தொகை 3 லட்சத்து 93ஆயிரத்து 557 பேராகும். ஜி.சி.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்துள்ள மூத்த பிரஜைகளின் தொகை 1லட்சத்து 65ஆயிரத்து 363 பேராகும்.

உயர் கல்வியைப் பெற்றுள்ள மூத்த பிரஜைகளுள் பெருமளவிலானோர் ஆண்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கமைய பட்டங்களைப் பெற்றுள்ளோரின் தொகை 44ஆயிரத்து 129 என்பதோடு அவர்களுள் 26ஆயிரத்து 898 பேர் ஆண்களாவர். 17,231 பேர் பெண்களாவார்.

பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சித்தியடைந்துள்ளோர் 10ஆயிரத்து 666 பேர் (0.4 வீதம்) என்பதோடு அதில் 5ஆயிரத்து 935 பேர் (0.4 வீதம்) ஆண்கள் என்பதோடு 4ஆயிரத்து 731 பேர் (0.3 வீதம்) பெண்களாவர். பட்டப்பின் படிப்புப் பட்டங்களைப் பெற்றுள்ள முதியோரின் தொகை 5ஆயிரத்து 597 பேர் என்பதோடு 3ஆயிரத்து 622 பேர் ஆண்களாவர். ஆயிரத்து 975 பேர் பெண்களாவர். (த–22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

## காணி விற்பனைக்கு

புளிப்பன் வீதி வட்டு/கிழக்கு, வட்டுக் கோட்டை, முத்து மாரியம்மன் கோயி லடியில் 5 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை (சி.19448) (13.15.16)
தொ.பே: 078 783 5864

## Car For Sale

Hyundai, Trajet, 7 setter, NPJQ----, Diesel, Price negotiable, qiuck sale
T.P - 076 757 0092

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

VE XXXX, 3200 km ஓடியது, Ceygra 90 China மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொ.பே. 077 642 6171 (64751) (13.15.16)
102, சிவப்பிரகாசர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை 8ஆம் வட்டார எல்லைக்குட்பட்ட துண்டிச் சந்தியில் அமைந்துள்ள குடிநில வளவு, மூலையடிவளவு, 02 நிலப்பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 203 3221

## வீடுகள் விற்பனைக்கு

மல்லாகம், சோடாக் கம்பனி வீதியில் அமைந்துள்ள இரண்டு வீடுகள் 3 ½ பரப்புக் காணியில் உண்டு. வீடுகளுக்கு பங்குக் கிணறு உண்டு. கிணற்றின் பங்காளிகளின் உரிமையாளருடன் இசைவானவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும். (வீடுகள் தனியாகவும் வழங்கப்படும். விலை பேசித்தீர்க்கலாம்.)
தொடர்பு : 077 669 0215

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## வெற்றுக்காணி விற்பனைக்குண்டு

கைதடிச் சந்தி, A9 வீதியில் வீதி யோரமாக அமைந்த கடைகள் கட்டடங்கள் அமைக்கக்கூடிய 4 பரப்பும் $2\frac{1}{8}$ குளியும் கொண்ட காணியும் அதனுடன் இணைந்த 100 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6068 414

## விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் பாமசியின் தளபாடங்கள் பொருள்கள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு : 077 249 7082
K.K.S. வீதி, இணுவில்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Lion German sheperd இன 2½ மாதம் நிரம்பிய black and brown நிறமுடைய 02 ஆண் நாய்க் குட்டிகள் உடனடி விற்பனைக்குண்டு. (சாவகச்சேரி, மீசாலை)
(64723.11.15) தொடர்பு : 077 525 8639

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதால் B.C.R பதிவு இலக்கமுடைய கொள்வனவு செய்து ஒருமாதமேயான M.D. 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 366 8286

## காணி விற்பனைக்கு

No.17, Uduvil Road, Manipay வீதியில் அமைந்துள்ள (5) ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. ரவி (64757 (13.15.16)
077 727 0310

## வீடு விற்பனைக்கு

முதலாம் கட்டை, புலோலி மத்தி மேற்கு, பருத்தித்துறையில் சுற்றுமதில் மற்றும் கிணற்றுடன் அமைதியான சூழலில் அழகிய வீடொன்று 3 பரப்பு மற்றும் 3 குழியில் பருத்தித்துறை சந்திக்கு அருகில் விற்பனைக்குண்டு
தொ.பே. Lindan (64757)(13.15.16)
077 316 9579, 077 291 9176

# தேவை

## வாகனம் தேவை

மென் ரக வாகனம் (மகேந்திரா, பட்டா போன்றவையும்) வாடகைக்கோ, விற்பனைக்கோ ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.பே: 077 581 1085, 077 1569844

## வைத்தியர் தேவை

பிரபல்யமான வைத்தியசாலைக்கு பல் டாக்டர் தேவை.
தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு : 511, ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனை.
011 2421 882

## தேவை

உதவிப்பணிப்பெண் வெள்ளவத்தையில் இருவருள்ள குடும்பத்துக்கு தேவை. இப்போ இருக்கும் சமையல் பெண்ணுக்கு உதவியாகவும் வீட்டுக் குள்ளும், வெளியிலும் வேலைசெய்யவேண்டும், சம்பளம் - 22,000/= (சி.19447) (13.15.16)
தொ.பே: 077 761 8841

## மேசன் தேவை

யாழ் நகரில் கட்டட வேலைக்கு நன்கு அனுபவம் உள்ள மேசன் சட்டறிங் கம்பி கூலிஆள்கள் உடன் தேவை.
தொடர்பு : 077 730 2343

## தேவை

வெதுப்பக இயந்திரத்தில் (அவன்) கேக், பிஸ்கற், ரஸ்க் போடத் தெரிந்தவர்கள் தேவை. பெண் பிள்ளைகளும் வேலைக்குத் தேவை.
தொடர்பு : 0726 999 345

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் 71, பூச நட்சத்திரம், 5' 6' Computer Diploma படித்துவிட்டு தனியார் துறையில் தொழில் புரியும் நன்நடத்தை உள்ள தீய பழக்கங்கள் எதுவும் அற்ற நன்மதிப்பைப் பெற்ற மணமகனுக்கு படித்த அழகிய தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றோம். யாழ் மாவட்டம், அரச உத்தியோகம், சைவ போசனம் விரும்பத்தக்கது. எதுவும் கட்டாயம் கிடையாது. வாழ்க்கைத்துணையை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:- 077 2697 523

# வேலைவாய்ப்பு

## வேலைவாய்ப்பு

இலங்கையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு டிக்கெட்டிங் வேலை செய்வதற்கு பயிற்சியுள்ள, பயிற்சியற்ற ஆண், பெண் தேவை. வயது 18-45 தகைமை O/L, A/L சம்பளம் 32,000, OT யுடன் 42,000/= தேவைப்படும் பிரதேசங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி இன்னும் பல பிரதேசங்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன, மொழி அவசியமில்லை, வரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள். தொடர்புகொண்டு நேர்முக பரீட்சைக்கு சமுகம் தரவும்.
076 801 6129
R.S.International Job Centre,
48 A 1/1, Maharagama Road,
Dehiwela, Colombo. (64754) (13.15.16)

## வேலைவாய்ப்பு

வடமராட்சியிலுள்ள பிரபல கணினி கல்வி நிலையம் ஒன்றுக்கு கணினி பயிற்றுவிப்பாளர்கள் மற் றும் வரவேற்பாளர்களுக்கான வேலை வெற்றிடங்கள்காணப்படுகின்றன. இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். தகைமை -சாதாரண தரம் அல்லது உயர்தரம். மேலதிக தகைமையாக Ms Office
தொடர்பு: 077 398 7164
Name< Space> Details sms to 077 3987 164

# வாடகைக்கு

## வீடு வாடகைக்கு

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலைக்கு அருகில் பண்பான சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 886 0135

## வீடு வாடகைக்குண்டு

கைதடியில் A9 வீதிக்கண்மையில் பெரிய வீடு வளவு பகுதியாகவும், பம்பலப்பிட்டியில் காலி வீதிக்கருகில் தளபாடங்களுடன் சேர்ந்த லக்சறி பிளட்சும் (குடியிருப்பு/வியாபார (Service) / களஞ்சியத்துக்கும் சிறந்தது) வாடகைக்குண்டு.
தொடர்பு : 0785679674, 07731075

# ஏனையவை




* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் டென்டல் கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 559 8006

றோயல் மெடிக்கல் சென்ரர்
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 077 654 4731

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
திரைப்பட திருவிழா செப்டெம்பர் 21 7.00 p.m




விசாரணை 021-2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk


## வேலைவாய்ப்பு


FR advertising கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L, A/L தகைமையுள்ளவர்கள் நேர் முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.
O/L இல்லாதவர்களும் பயிற்சியளித்து இணைத்துக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு:
கிளிநொச்சி - 077 587 9945, யாழ்ப்பாணம் - 077 208 3140
கொழும்பு - 077 354 8006
(63512)(13.15.16)

## A/L ICT பிரத்தியேக வகுப்பு

* கணினித்துறையில் 12 வருடங்கள் அனுபவமுள்ள B.Sc பட்டதாரி ஆசிரியரினால் தனியாகவும், குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
* அனைத்து கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் 10 மாதிரி வினாத்தாள்கள் செய்து முடிக்கப்படும்.
* தமிழ் மற்றும் English மீடியம்.

தொடர்பு : 077 515 3090


வெளிநாட்டு நாணயமாற்று சேவை
யாழ். நகரில் நம்பமுடியாத அதிகூடிய நாணயமாற்று பெறுமதியை வழங்குகின்றோம்.



GTV Enterprises (Pvt)Ltd.
Tel : 021 221 7224
No. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## 19.5 L Nature Pure

19.5L போத்தலில் அடைத்த சுத்தமான குடிநீரையும், அனைத்து வகையான Dispenser களையும் எம்மிடம் இருந்து மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள முடியும். (வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும்)
தொடர்பு : 077 254 3253

## கட்டடம் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் நல்லூரில் சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு உகந்தது
தொ.பே. 077 773 1852, 077489 4018
rajkumar.nagaratnam@gmail.com





வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான
Online Visa Applications
UK, CANADA, USA, AUSTRALIA
SWEDEN · ITALY · DENMARK · NEW ZEALAND · NORWAY · HOLLAND · GERMANY · SWITZERLAND · FRANCE · INDIA
Travel Itinerary, Translation, Travel Insurance, Valuation, Dual Citizenship Applications ஆகியன செய்து தரப்படும்.
IELTS A1 B1 Life Skills Classes
JANA COMPUTER TECH
No. 103-1, ... Road, Colombo- 06
visaonline5@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நவரட்ணம் துஷிகேஷன்**

(யாழ்/ மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வர்த்தக பிரிவு)

திதி: ஸப்தமி

தோற்றம் 28.12.1991

மறைவு 01.10.2014

எம் அன்புத் தம்பி துஷியே ! ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
நீ எம்முடன் வாழ்ந்த காலங்களை மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றன
உன் அன்பான பேச்சும் உன் குறும்புத் தனமான செயலும்
என்றும் உன் நினைவுகளைத் தந்து கொண்டிருக்கின்றன
காலத்தின் செயல்களாய் கண்சிமிட்டும் நொடிக்குள்
நீ எம்மை விட்டுச் சென்று விட்டாய் காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசி வரை உன் நினைவுகள் என்றும் எம் மனதில் தொடரும்
எத்தனையோ காலங்கள் கடந்து சென்றாலும்


**இன்று (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அபிராமி அகம்,
168/1, முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தின .

(64753) (14,15,16)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சிவராசா நிசாந்த்**

தோற்றம் 19.09.1983 | மறைவு 01.10.2014

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
எங்கள் உயிரில் உயிராய்க் கலந்தவனே
தங்க மகனே தாமரை நெஞ்சமே
தாங்க முடியாதுன் பிரிவுத்துயரமடா
உன்னைப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும்
உள்ளத்தில் உன் நினைவு உறங்கவில்லையடா
மங்காத புன்னகையும் மலர்ந்த முகமும்
மனத்திரையில் ஓவியமாய் இன்றும் தெரியுதடா
மங்களமாய்எமதில்லம் இருந்ததே அன்று
மதியிழந்த வானமாய் இருக்குதே இன்று
செங்கதிராய் ஒளிர்ந்த அன்பு மகனே
செந்நீரும் கண்ணீரும் மாற்ற வருவாயா?

இல.9, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உன் நினைவில்...

# சாந்தி வேண்டி விசேட வழிபாடு

வவுனியா, செப் 20

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியமும், தமிழ் விருட்சமும் இணைந்து சாந்தியும், சமாதானமும் வேண்டி விசேட பூசையும், தீபம் ஏற்றலையும் ஏற்பாடு செய்துள்ளன. கோவில்குளம் பூதேவி ஸ்ரீதேவி சமேத மஹா விஷ்ணு ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர். (த-10)

# கண்ணீர் அஞ்சலி

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய குருக்கள்
**சிவஸ்ரீ சச்சிதானந்த சர்வேஸ்வரக்குருக்கள்(சபாஜயா)**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சச்சிதானந்த பாலாம்பிகை**
அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சுதுமலை. ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்ம கர்த்தா சபையினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 07 1958



உதிர்வு 20 09 2014

**அரியகுட்டி யோகரத்தினம்**

திதி: 09.10.2015

அப்பா அந்தாத்தில் நாம் இங்கே ஆண்டு ஒன்று ஆனதப்பா
உங்கள் அழகான அன்பு முகம் பார்த்து
இன்பமான எம் வாழ்வில் இடி வந்து வீழ்ந்ததேனோ!
என்றும் எம் இதயத்தில் நிறைந்த உங்கள் நினைவுகள்
வளத்துடன் கூடிய கல்வி
இனியத்துக்கு வேண்டிய அறிவு எமக்கு அளித்த தெய்வம் எங்கே?
எமைச் சுமந்த உங்கள் சதுரம் எங்கே? மண்ணுலகை விட்டு உங்கள் உடல் தான்
விண்ணுலகு எய்தியது ஆனால் உங்கள்
அகலாத நினைவுகள் எம் மரணம் வரை தொடருமப்பா
கடவுள் ஏற்றுவிட்டான் உங்கள் ஆத்மா சாந்தியடைக

**ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(64686) (14,15,16)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 09 1985



மறைவு 01 10 2014

**அமரர் சிவராசா நிசாந்த்**

திதி : பூர்வபட்ச ஸப்தமி

**நாள்கள் நகர்ந்து ஈராறு**
**மாதங்கள் சென்றதடா !**
**நேற்றுன் பிறந்த தினமதில் - உன்**
**இனிய முகம் காணாமல்**
**உணர்விழந்து தவிக்கின்றோம் !**
**உய்ய வழி ஏதையா**
**கலைந்து போன கனவுகளால்**
**கனக்கும் நினைவுகளைச் சுமந்தபடி**
**உம் ஆத்ம சாந்திக்காக**
**பிரார்த்திக்கின்றோம்.**

# மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் சாவு

வவுனியா, செப். 20

செட்டிகுளம் அடப்பன் குளம் பகுதியில் கடந்த 17 ஆம் திகதி மின்சாரம் தாக்கி ஆபத்தான நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

கந்தசாமி ராஜேஸ்வரி (வயது55) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

சம்பவதினம் காலை 7 மணியளவில் வீட்டுக்குப் பின்புறமாக இருக்கும்வேப்பமரத்தில் குழை பறிப்பதற்குச் சென்ற போது வேப்பமரத்திலிருந்த மின்சார கம்பியை பிடித்துள்ளார். இதன்போது மின்சாரம் தாக்கி ஆபத்தான நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகவவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் அவர் உயிரிழந்துள்ளார். இவரின் வீட்டுக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. பாதுகாப்புக்குப் பொருத்தப்பட்ட மின் குமிழ் வயரில் இருந்தே மின்சாரம் சென்றுள்ளது. இராணுவத்தினர் மின்குமிழை அணைக்கத் தாமதம் ஏற்பட்டதாலேயே தவறுதலாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவரின் உடலைப் பார்வையிட்ட நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளைமேற்கொண்டார். மேலதிக விசாரணையினைசெட்டிகுளம் பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் மாறிவிட்டதை போல உணவும் புதிதாகிவிட்டது

வீட்டிலுள்ளவர்கள் அநேகமாக வெளியில் வாங்கும் உணவுப் பண்டங்களையே சாப்பிடுகின்றனர். அவற்றால் எமது வாயிலுள்ள கிருமிகளின் செயற்பாடுகள் அதிகரித்து, பற்துளைகளை ஏற்படுத்தும் சீனி அமிலம் வேகமாக உருவாகின்றது.

கராம்பு எண்ணெய்யால் பூரணமான சுப்பர் ஹெக்டிவ் பவர் சேர்க்கைகள் கொண்ட புதிய க்லோகாட், சீனி அமிலத்தை உருவாக்கும்

**கிருமிகளுக்கு எதிராக 99% போராடும்***

க்லோகாட், தற்போது ஃபிரெஷ் மின்ட் சுவையிலும் பெற்றுக்கொள்ளலாம்.




☑ கிருமிகளை கட்டுப்படுத்தும் ☑ சீனி அமிலத்தை செயலிழக்க செய்யும்

**இலங்கையரின் முதன்மை பற்பாதுகாவலன்***

SLDA SRI LANKA DENTAL ASSOCIATION

SLS 275

* ஆய்வுக்கூட பரிசோதனையின் கீழ் பரிசோதிக்கப்பட்ட புளோரைட், சீனி அமிலத்தினால் ஏற்படக்கூடிய பற்சிதைவை தடுக்க உதவும்.
* LMRB இன் ஆய்வுக்கமைய இலங்கையில் முதலிடத்திலுள்ள உள்நாட்டு வர்த்தக நாமம் (2014)
* ஒரிஜினல் க்லோகாட் இற்கு இலங்கை பல் மருத்துவர் சங்கத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ரூ. 20/- இலிருந்து

HEMAS

PHOENIX OGILVY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் மிக நம்பகமான வர்த்தக நாமமாக டி.எச்.எல்.

உலகின் முன்னணி அதிவேக சரக்கியல் சேவை வழங்குநரான டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் நிறுவனம் மிகவும் உயரிய நிகழ்வாகக் கருதப்படும் 2015 ரீடர்ஸ் டிஜெஸ்ட் நம்பகமான விருதுகள் வழங்கும் நிகழ்வில் தொடர்ந்து 7ஆவது ஆண்டாக ஆசியாவின் விமான சரக்கு கூரியர் சேவை பிரிவில் நம்பிக்கைக்குரிய வர்த்தக நாமம் எனும் விருதை வென்றுள்ளது.




டி.எச்.எல். நிறுவனம் முதல் முறையாக 2014இல் தாய்வான் நகரில் தங்க விருதை வென்றெடுத்ததுடன்,குறிப்பாக ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் தாய்வான் போன்ற நகரங்களில் பிளாட்டினம் விருதுகளை வென்று அதன் சந்தைத் தலைமைத்துவஸ்தானத்தை விஸ்தரித்திருந்தது.

டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் மலேசியா மற்றுமொரு தங்க விருதுடன் அதன் சந்தைத் தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொண்டதுடன், முதல் முறையாக வாசகர்கள் மூலம் வாக்களிக்கப்பட்டு தங்க விருதை டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் பிலிப்பைன்ஸ் உம் தனதாக்கிக் கொண்டது.

17ஆவது வருடமாக முன்னெடுக்கப்படும் ரீடர்ஸ் டிஜெஸ்ட் விருதுகள் என்பது ஆசியாவைச் சேர்ந்த ஹொங்கொங், இந்தியா, மலேசியா, பிலின்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற ஏழு சந்தைகளிலிருந்து கிடைத்த சுமார் 5000 வாசகர்களை உள் ளடக்கிய ஆய்வுகளின் அடிப்படை யில் முன்னெடுக்கப்படுகிறது.

விமான சரக்கு/கூரியர் சேவை பிரிவில் நம்பகமான வர்த்தகநாம விருதுகளை கொண்ட அனைத்துச் சந்தைகளிலும் டி.எச்.எல். உயர் தரவரிசைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

டி.எச்.எல். எக்ஸ்பிரஸ் ஆசிய பசுபிக் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜெரி சூ கருத்துத் தெரிவிக்கையில், ஒவ்வொரு நிறுவனமும் சிறந்த ஓர் ஆண்டினைப் பெற முடியும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் நிலையான சிறந்த சேவையை வழங்குவதே வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையைப் பெறுவதற்கான முறையாகும்.

நம்பிக்கை என்பது எமது வர்த்தக நாமத்தின் இதயமாக அமைந்துள்ள துடன், 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசியாவில் டி.எச்.எல். அதன் நம்பிக்கையை கட்டியெழுப்பிக் கொண்டுள்ளது.

Readers Digest நம்பகமான வர்த்தகநாமம் விருதுகள் போன்ற மரியாதைக்குரிய திட்டங்கள் மிக உயர்ந்த அளவு கோலை அமைக்க எம்மை ஊக்குவித்துள்ளது. கடந்தாண்டு குறிப்பாக தாய்வான் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் எமது செயற்றிறனை மேம்படுத்தியதையிட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன் என்றார்.

தற்போது நாம் கரியமில வாயு வெளியேற்றத்தை இல்லாதொழிக்கும் வகையிலும், செயல்பாட்டுச் செயற்திறனை மேம்படுத்தும் வகையிலும் புதிய எரிபொருள் திறன் மிக்க வாகனங்கள் மீது முதலீடு செய்து வருகிறோம்.

எமது வாடிக்கையாளர்களின்தேவைகளைக் கருத்தில் கொண்டு எமது சேவை வழங்கலைத் தொடர்ச்சியாக விஸ்தரித்து வருவதுடன், ஆசிய, அமெரிக்க மற்றும் உள்ளக ஆசியா என்பவற்றுக்கிடையே திறன் சேர்த்து வருகின்றோம்.

டி.எச்.எல். ஆகிய நாம், வெற்றி பெறுவதற்கு வாடிக்கையாளர் திருப்தி, புத்துருவாக்க தயாரிப்பு வடிவமைப்பு மற்றும் சிறந்த சேவை வழங்கல் போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்பதை அறிந்துள்ளோம் என மேலும் அவர் தெரிவித்தார்.

அதிகப்படியான புள்ளிகளினால் அதன் மிக நெருங்கிய போட்டி நிறுவனங்களை பின்தள்ளி விட்டு, ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் தாய்வான் போன்ற நாடுகளில் உள்ள டி.எச்.எல். நிறுவனம் பிளாட்டினம் விருதை வென்றெடுத்தது.

மலேசியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளில் தங்க தரத்தினை பெறுவதற்கு டி.எச்.எல் நிறுவனம் அதன் பிரிவுகளில் தெளிவான சந்தைத் தலைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

மிகவும் பெருமைக்குரிய ஒட்டுமொத்த ஆசியாவின் மிக நம்பகமான வர்த்தகநாம விருதினைப் பெறுவதற்கு மூன்று சந்தைகளில் முன்னோடியாக இருக்க வேண்டும். 2015ஆம் ஆண்டில் டி.எச்.எல் நிறுவனம் அதன் தலைமைத்துவத்தை நான்கிலிருந்து ஐந்து சந்தைகளுக்கு விஸ்தரித்திருந்தது.

கடந்த 2014ஆம் ஆண்டில் டி.எச்.எல். ஆனது இலத்திரனியல் மற்றும் பற்றரி செயல்பாடு உள்ளடங்கலாக மிகவும் எரிபொருள் சிக்கனம் மிக்க எஞ்சின்கள் கொண்ட புதிய வாகனங்கள் மீது முதலீடு செய்திருந்தது.

செயற்திறன் மிக்க தரை நடவடிக்கைகள், வலு, செயற்திறன் மிக்க கட்டடங்கள், சிறந்த காலநிலை கட்டுப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் புதிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமானம் போன்றவற்றின் ஊடாக பிராந்தியத்தில் வலுசெயற்றிறன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

டி.எச்.எல் நிறுவனம் ஆசிய பசுபிக் வலயத்தில் 40ற்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் சுமார் 22,000 ஊழியர்களுடன், 600,000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு தமது சேவையை வழங்கி வருகிறது.

கடந்த 2014இல், டி.எச்.எல் ஆனது, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தாய்லாந்து, வியட்நாம் மற்றும் ஹொங்கொங் பொருளாதாரத்தை இணைக்கும் புதிய உள்ளக ஆசிய விமான அறிமுகத்தோடு அதன் ஆசிய விமான வலையமைப்பை மேம்படுத்தியிருந்தது.




## தேசத்தில் ஏழு வருட சேவைகளை கொண்டாடும் செரன்டிப் மா ஆலை

உள்ளூர் சந்தையில் 7 ஸ்டார் தரத்தில் கோதுமை மாவை முதலில் அறிமுகப்படுத்தியதன் ஏழு வருட வெற்றியை செரன்டிப் மா ஆலை அண்மையில் கொண்டாடியது.



செரன்டிப் மா ஆலையானது, இலங்கை நுகர்வோருக்கு உயர்தரமான கோதுமை மாவை உற்பத்தி செய்து, விநியோகிக்கும் நோக்குடன் உள்ளூர்ச் சந்தையில் 7 ஸ்டார் தரத்தில் தமது கோதுமை மாவை அறிமுகம் செய்தது.

ஏழு வருடங்களில், நிறுவனத்தின் 7 நட்சத்திர தர மாவானது, நம்பகமான உற்பத்தியாக மாறியுள்ளதுடன், தேசத்திற்கு ஊட்டமளிக்கும் முக்கியமான பங்கையும் வகிக்கின்றது.

தூய்மை, புதுமை, தரம், புதியது, நிபுணத்துவமானது, சேவை மற் றும் நம்பிக்கை ஆகிய ஏழு பிரதான விழுமியங்களை உள்ளடக்கிய தாக 7 ஸ்டார் உற்பத்தி திகழ்கின்றது.

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் அமைந்துள்ள மா ஆலையின் ஊடாக, சிக்கலற்ற விநியோகத்தை செரன்டி மா ஆலையால் முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது.

இங்கு பாரிய சேமிப்பு வசதிகள் உள்ளன. உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த கப்பல்கள் வருகை தருவதற்கும், அது உயர்தர மாவாக ஆலையில் உற்பத்தி செய்யப்படு வதற்கு ஏதுவாக இது அமைகிறது.

தமது வாடிக்கையாளர்களுடன் உறுதியான உறவைக் கட்டியெழுப் புவதில் செரன்டிப் மா ஆலை முன்னுரிமை வழங்குகின்றது.

உயர்தர உற்பத்திகளை வழங்கு வது மாத்திரமன்றி, உயர் தரங்களையும் பேணுகின்றது. அத்தோடு புதிய வகையான மா உற்பத்திகளுக்கான நவீன தொழில்நுட்பக் கருவிகளையும் கொண்டிருக்கின்றது.

பேக்கரி மா, ரொட்டி மா, வீட்டுத் தேவைக்கான மா, பிஸ்கற் மா, நூடில்ஸ் மா,முழு கோதுமை ஆட்டா மா, உணவு மா மற்றும் ரவை என்பன உள்ளடங்கியதாக B2B உற்பத்திகள் உள்ளன.

இவை 25 கி.கி மற்றும் 50 கி.கி பொதிகளில் கிடைக்கும். சில்லறை வகைகளில் அனைத்து நோக்கத் துக்குமான கோதுமை மா, முழு கோதுமைஉணவு மா, மற்றும்ஆட்டா மா போன்ற 1 கி.கி மற்றும் 500 கிறாம் பொதிகளில் கிடைக்கின்றன.

மேலதிகமாக, ஆட்டா மற்றும் ஏனைய உணவு மா வகைகள் வர்த்தக மற் றும் வீட்டுத் தேவைக்காகவும் வழங்கப்படுகின்றன. வருடம் முழுவதிலும், வளர்ச்சியைப் பதிவு செய்து வரும் இந்த நிறுவனம் தனது உயர் தரமான மா உற்பத்திக்கான அங் கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இலங்கைச் சந்தையை உள்வாங் கிக் கொள்வதற்கான விருப்பத்தையும்செரன்டிப்மாஆலைவெளிப்படுத்தி வருகின்றது. 2009 ஆம்ஆண் டில், இலங்கை உணவ கங்க ளுக்கு உகந்த தனித்துவமான ரொட்டி மாவகையைஅறிமுகம் செய்தது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம் அருளும் வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை சிற்றாலயம்

**அமலமரித் தியாகிகளின் ஆன்மீகப் பணியில் யாழ் போதனா வைத்தியசாலையில் ஆன்மீக சமூக உளநல பணியாற்றும் வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை சிற்றாலய பெருவிழா செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி கொண்டாடப்படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**





அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர்*
*– யாழ்.பல்கலைக்கழகம்*

**வை**த்திய நிலையங்களில் நோயாளராக அனுமதிக்கப்படுவோர் உடல் ரீதியான குணமாக்கலை மட்டுமல்ல – உள ரீதியிலான குணமாக்கலையும் – ஆன்மிக ரீதியிலான குணமாக்கலையும் பெற வேண்டும் என்ற எண்ணம் மிக நீண்ட காலத்திற்கு முன்னதாக உணரப்பட்டுள்ளமையால் அரச வைத்திய நிலையங்களில் ஆன்மிக வளம் கொளிக்கும் ஆலயங்களை நிறுவ அரசு அனுமதி வழங்கத் தொடங்கியது. அந்த வகையில் யாழ் போதனா வைத்தியசாலையில் இந்து – கத்தோலிக்க மத ஆலயங்கள் நிறுவப்பட்டு ஆன்மிகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கத்தோலிக்க நோயாளர்களின் ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்யும் வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை சிற்றாலயம் விபத்து விடுதிக்கு (24 ஆம்) அருகாமையில் 31ஆம் 32 ஆம் விடுதிகளுக்கு நடுவில் அமைந்து நோயாளர்களுக்கு உடல் உள ஆன்மிக வளம் கொளிக்கிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தில் – முதலில் யாழ் மறைமாவட்டக் குருக்களாலும் (1972 – 1979) பின்னர் அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களாலும் (1979 – 2015) கடந்த 43 வருடங்களாக ஆற்றப்பட்டுவரும் உடல் உள ஆன்மிக குணமாக்கல் பணி பற்றிய தகவல்களை 2000 ஆம் ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஆன்மிகப் பணியாற்றிய செ.அன்புராசா அடிகளார் வழங்கிய தகவலில் இருந்தும் – 2011 ஆம் ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஆன்மிகப் பணியாற்றிய யோன் பற்றிக் அ.ம.தி அடிகளாரின் ஆக்கத்தில் இருந்தும் – தற்போதைய யாழ்.போதனா வைத்தியசாலை ஆன்மீகக் குரு பிலிப் றஞ்சனகுமார் அ.ம.தி அடிகளார் வழங்கிய தகவலில் இருந்தும் பெற்றுக்கொண்டோம்.

1972 ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட ஆயராக பொறுப்பேற்றுக்கொண்ட மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை, யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறுபட்ட உடல் உள நோய் நோக்காடுகளினால் துன்புற்று வருந்தி அவதிப்படுகின்ற நோயாளர்கள் – இறைவழிபாட்டில் பங்கெடுத்து மன அமைதி பெறவும் – திருவருட்சாதனங்களை இலகுவாகப் பெறவும் – குருக்களின் உதவியால் உடல் உள ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்யவும் – உள ஆற்றுப்படுத்தல் மற்றும் ஆலோசனை பெறல் போன்ற துணைகளைப் பெறவும் – யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தில் 1973 ஆம் ஆண்டு சிறிய ஆலயம் ஒன்றை அமைத்தார். இந்த ஆலயம் ஆரம்பத்தில் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பெயரிலேயே அமைக்கப்பட்டது.

யாழ் புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தையின் பொறுப்பில் கொடுக்கப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புனித யூதாததேயு சிற்றாலய ஆன்மிகப் பணிகளை அங்கு உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய தேவதாசன் அடிகளார் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் தனது பணிக்காலத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புனித யூதாததேயுவின் பெருவிழாவை இரண்டு தடவைகள் மாத்திரமே கொண்டாடினார் என அறியவருகின்றது.

யாழ் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட சிற்றாலயமானது கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பெயரில் அமைக்கப்படுவதைக் காட்டிலும் – இறைமகனின் அன்னையும் இறைமக்களின் அன்புத்தாயுமாக விளங்கும் தூய வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை பெயரில் அமைக்கப்படுவதே பொருத்தமானது எனப்பின்னர் உணரப்பட்டது. ஆரோக்கிய அன்னை அன்புத்தாயாக – எவ்வேளையிலும் எல்லோரையும், அவர்கள் வருத்தத்தில் இருந்தால் என்ன – துயரத்தில் இருந்தால் என்ன – தாய்க்குரிய அன்போடு அரவணைத்து – அவர்களுக்காகப் பாசத்தோடு பரிந்து பேசுவார் என்கின்ற வகையில் வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் பெயரில் யாழ் போதனா வைத்தியசாலையின் சிற்றாலயம் மாற்றி அமைக்கப்படுவது பொருத்தமானது என உணரப்பட்டது. இதன் பின்னர் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.இ.என்.குணசீலன் அடிகளார் – கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் (தற்போது மன்னார் மறைமாவட்டம்) – எஸ்.பி.பி.மங்களராஜா அடிகளார் ஆகியோர் யாழ் போதனா வைத்தியசாலையின் ஆன்மீக குருக்களாகப் பணியாற்றி நோயினால் அவதிப்பட்டு அங்கு வந்தோருக்கு பெருந்துணை புரிந்தனர்.

197[illegible] ம் ஆண்டு யூலை மாதம் 1ஆம் திகதி யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ் போதனா வைத்தியசாலை ஆன்மிகப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பை அமல மரித்தியாகிகள் சபையினரிடம் ஒப்படைத்தார். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கல அன்னை ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள அமலமரித் தியாகிகளின் தலைமைப்பீடமாகிய [illegible] இருந்து அமலமரித் தியாகிகள் யாழ் போதனா வைத்தியசாலையின் ஆன்மிகப் பணிகளை அன்று முதல் இன்றுவரை சிறப்பாக ஆற்றிவருகின்றனர்.

அமலமரித் தியாகிகள் சபையினர் யாழ் போதனா வைத்தியசாலை ஆன்மிகப் பணிகளைப் பொறுப்பெடுத்த பின்னர் பிரான்சிஸ் டானியல் அ.ம.தி அடிகளார் (1979 ஆனி – 1987 ஆவணி) யாழ் போதனா வைத்தியசாலை ஆன்மிகக் குருவாக பணியாற்றினார். பிரான்சிஸ் டானியல் அ.ம.தி அடிகளார் காலத்தில் யாழ் போதனா வைத்தியசாலை சிற்றாலயம் விஸ்தரிக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து மரிய செபஸ்ரியன் அ.ம.தி அடிகளார் (1987 புரட்டாதி – 1989) – லீனஸ் சொய்சா அ.ம.தி அடிகளார் (1990) – ஜீவேந்திரா போல் அ.ம.தி அடிகளார் (1991 – 1992 தை) – எட்மண்ட் றெஜினோல்ட் அ.ம.தி அடிகளார் (1992 மாசி – 1995 சித்திரை) – செலஸ்ரின் அ.ம.தி அடிகளார் (1995 சில மாதங்கள்) – யோகராசா அ.ம.தி அடிகளார் (1995 சில மாதங்கள்) – ஸ்ரனிஸ்லொஸ் சுவாம்பிள்ளை அ.ம.தி அடிகளார் (1995 – 1996) – யோகராசா அ.ம.தி அடிகளார் (1996 – 1998 பங்குனி) – அன்புராஜா அ.ம.தி அடிகளார் (1998 சித்திரை – 2002 மார்கழி) – ரட்ணராஜா அ.ம.தி அடிகளார் (2003) – வின்சன்ட் அ.ம.தி அடிகளார் (2003 சித்திரை – 2004 சித்திரை) – அந்தோனிமுத்து குருஸ் அ.ம.தி அடிகளார் (2004 வைகாசி – 2006 ஆனி) – ஜெயபாலன் அ.ம.தி அடிகளார் (2006 – 2007) – செபமாலை பெரேரா அ.ம.தி அடிகளார் (2008 – 2010 சித்திரை) – யோன் பற்றிக் அ.ம.தி அடிகளார் (2010 வைகாசி – 2013 வைகாசி) – செ.றெஜினோல்ட் அ.ம.தி (2013 ஆனி – 2014 ஆனி) – டிலோசன் அ.ம.தி. அடிகளார். (2014 ஆடி) – பிலிப் றஞ்சனகுமார் அ.ம.தி அடிகளார் (2014 ஆவணி – இன்றுவரை) ஆகியோர் ஆன்ம குருக்களாக பணியாற்றி யாழ் போதனா வைத்தியசாலை நோயாளர்களின் ஆன்மதேவைகளை பூர்த்தி செய்துள்ளனர்.

ஜீவாப் போல் அ.ம.தி அடிகளார் அமலமரித் தியாகிகளின் வட மாகாண முதல்வராகப் பணியாற்றிய காலத்தில் அன்புராசா அ.ம.தி அடிகளார் யாழ் போதனா வைத்தியசாலை ஆன்மிகக் குருவாக இருந்த போது வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் சிற்றாலயமானது விஸ்தரிக்கப்பட்டு மேல்மாடி கொண்ட கட்டடமாக அமைக்கப்பட்டது. யாழ் போதனா வைத்தியசாலை வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் சிற்றாலய ஆன்மிகப் பணியில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. ஆன்மிகக் குருவானவர் பகல் முழுவதும் யாழ் போதனா வைத்தியசாலை வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் சிற்றாலயத்தில் தங்கியிருக்கவும் தம்மை நாடிவருவோரை ஆன்மிகக் கடமைகளை நிறைவேற்றவும் உள ஆற்றுப்படுத்தல் பணியினை மேற்கொள்ளவும் மேலும் வசதி செய்யப்பட்டது. அத்தோடு நோயாளர்களைச் சந்தித்தல் – வைத்தியசாலையில் பணிபுரிபவர்களோடு கலந்துரையாடல் – பொது நிலையினரை வைத்தியசாலை நோயாளர் சந்திப்புக்கு ஊக்குவித்தல் – வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு ஒன்றுகூடல்களை அமைத்தல் – புதுப்பித்தல் பயிற்சி நெறிகளையும் கருத்தரங்குகளையும் காலத்துக்குக் காலம் ஒழுங்கு செய்தல் எனப் பல பணிகள் திட்டமிடப்பட்டன.

யாழ்போதனா வைத்தியசாலையில் தங்கியிருப்போர் விரும்புகின்ற போதெல்லாம் அங்குள்ள வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் சிற்றாலயத்திற்கு வந்து வேண்டுதல் செய்யவும் – அமைதியாக அமர்ந்து தியானம் செய்து ஆன்மிக வளம் பெறவும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடல் நோயால் பாதிக்கப்பட்டு உடல் நலம் பெற வைத்தியசாலையை நாடுவோர் என்ன நடக்குமோ என்ற பயத்திலும் பதற்றத்திலுமே வருகின்றனர். உடல் ரீதியான நோய் அதன் வருத்தம் ஒருபுறம் இருக்க – உள ரீதியான தாக்கம் அதன் உடல் சோர்வு இன்னொருபுறம் வாட்ட – உடல் உள ஆன்மிக பலவீனத்தில் இன்னும் சோர்வுள்ளவர்களாகவே வருகின்றனர். இவர்கள் வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் எப்போ வரும் என மணிப்பொழுதுகளை எண்ணி – தனிமையில் வாடி – வேதனையுற்று – நோயாளர்களை பார்வையிடும் நேரம் மிக விரைவாக முடிந்து விடுகிறது என்றே ஏங்குகிறார்கள். இதிலும் தம்மைப் பார்க்க எவரும் இல்லை – பணம் கொடுத்து அமர்த்தப்பட்டவர்கள் எப்போ தம் பணி முடியும் என்று விலகி சென்றுவிடவே விரும்புகின்றனர். உடல் நோய் ஒருபுறம் உளத் தாக்கம் மறுபுறம் ஆன்மிகச் சோர்வு இன்னுமொரு புறம் – தமது வீட்டு நிலைமைகள் என்ன நடக்கின்றனவோ என்ற ஏக்கம் இன்னொருபுறம் இவற்றின் மத்தியில் நோய் ஆறவில்லை – உடல் தேறவில்லை என்ற அங்கலாய்ப்பு மத்தியில் வைத்திய நிலையத்தில் அமைதி இழந்து அந்தரத்திலும் மனக் குழப்பத்திலும் இருப்போரைப் பார்ப்பதும் ஆறுதல் கூறுவதும் ஆற்றுப்படுத்துவதும் இறைவேண்டல் செய்வதும் மிகச் சிறந்த ஆன்மிகப் பணியாகும்.

நோயாளர் தரிசிப்பை அவர்களைத் தேடி வைத்தியசாலை சென்று அவர்களுக்காகச் செபிப்பதை – அவர்களோடு சற்றுநேரம் உரையாடுவதை அவர்களுக்கு தம்மாலான ஆறுதல் வார்த்தைகளைக் கூறுவதைப் பணியாக கொண்டிருப்போரை பின்வரும் நற்செய்தி வசனங்களே ஆறுதல்படுத்தும்.

...நான் பசியாய் இருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன் என்னை ஏற்றுக்கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன் நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்.

நோயுற்று இருந்தேன் என் னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன் என்னைத்தேடி வந்தீர்கள்... மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்தது எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (மத்தேயு 34 : 42)

ஆரோக்கிய அன்னை வாழ்க்கையில் பல துன்பங்களாலும் துயரங்களாலும் நோய் நோக்காடுகளாலும் மன வேதனைகளாலும் அல்லலுறுகின்ற அனைவர் அருகிலும் இருந்து ஆறுதல் அளிப்பாராக. தூக்கமின்றி துயருறுவோருக்கு ஆழ்ந்த தூக்கம் அருளுவாராக. விழிவழியே வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்து கருணை பொழிவாராக. தம் பரிந்துரைகளால் உடல் உள ஆன்மிக வளம்பெற அருள் பொழிவாராக. ஆரோக்கிய அன்னை அனைத்து மனித உடல் உள ஆன்மிக குறைபாடுகளில் ஆரோக்கியம் அளிக்கும் அன்னை வைத்தியசாலைகளில் தனிமையில் வேதனையில் கைவிடப்பட்ட நிலையில் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வில் துடித்துக்கொண்டும் தவித்துக்கொண்டும் இருப்போருக்கு ஆரோக்கியம் அருளும் அன்பு அன்னையாக என்றும் அரவணைத்து பாதுகாப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கும் போகாமல் - தொலைபேசி இலக்கங்களையும் கொடுக்காமல்
கையிலுள்ள பணத்தையும் கொடுக்காமல் - எந்தவொரு நேரத்திலும்

# ரீலோட் செய்வதற்கு சம்பத் வங்கியின் ஒரே தீர்வு!

# 8822 இற்கு SMS அனுப்புங்கள்!

சம்பத் ரீலோட் மூலம் இரவு பகல் எவ்வேளையிலும் எவ்விடத்திலிருந்தும் தற்பொழுது SMS ஊடாக இலகுவாக ரீலோட் செய்யலாம். 8822 இற்கு SMS செய்ததும் தேவையான தொகை உங்கள் கைத்தொலைபேசிக்கு உடனடியாக ரீலோட் செய்யப்படும். இவ்வழிமுறையில் உங்கள் அன்புக்குரியவர்களின் கைத்தொலைபேசிக்கும் ரீலோட் செய்யமுடியும்.

- ரீலோட் செய்யவேண்டிய தொகையை குறிப்பிட்டு 8822 இற்கு SMS அனுப்புங்கள்.

- இரகசிய இலக்கம் (இடைவெளி) தேவையான பணத்தொகை (இடைவெளி) குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 8822 இற்கு SMS அனுப்புங்கள்.

உ+ம்: 1234 – 100 - 07XXXXXXXX

இச்சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கைத்தொலைபேசி வலையமைப்புக்கள்.

airtel etisalat HUTCH Sri Lanka Telecom Mobitel We Care. Always.

**அழையுங்கள் - 0112 30 30 50**

இச்சேவையை பெற்றுக்கொள்ள இன்றே சம்பத் வங்கியில் பதிவுசெய்யுங்கள்.

Sampath Reload

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) www.sampath.lk






# பெருமிதம் தந்திடும் திறனும் கவர்ச்சியும்

புத்தம்புதிய சுசுக்கி 2015 சுசுக்கி CELERIO ஓட்டோ கியர் ஷிப்ட் சகிதம் Auto – ரூ. 2,495,000/- Manual – ரூ. 2,150,000/- (தொடக்கம்)

23.1 KMPL | AUTO GEAR SHIFT | 254L | DVD Video DVD

வீதியோர உதவிச் சேவை – ஆண்டுக்கு ரூ.3,000/-
2 ஆண்டுகள் அல்லது 50,000 கி.மீ. உத்தரவாதம் | 4 ஆண்டுகள் அல்லது 80,000 கி.மீ. நீடித்த உத்தரவாதம் (ரூ.25,000/- தொடக்கம்)

TRADE IN YOUR VEHICLE FOR A BRAND NEW SUZUKI

AMW bringing the world to you

அசோசியேட்டட் மோட்டர்வேஸ் (பிறைவேட்) லிமிட்டட்
445,பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 8.
www.suzukilk.com

மின்னஞ்சல் : sales@amwltd.com www.facebook.com/suzuki.lk விற்பனை ஹொட்லைன்: 0117 609 609


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாரிசவாதத்துக்கான

## பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை முறை

உலகமயமாதலின் ஊடாக மனித வாழ்க்கையில் பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்கின்றன. இன்றைய நவீன வாழ்க்கை முறையில் மருத்துவத்துறையின் வளர்ச்சிப்போக்கு பிரமிக்கத்தக்க வகையில் சென்று கொண்டிருக்கின்ற அதேநேரம், உலகையே உலுக்கும் அளவுக்கு நோய்களின் தோற்றமும், பரம்பலும் உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் மனித வாழ்க்கை முறையில் தவறான நடத்தைகளின் விளைவு மற்றும், சமநிலையற்ற சுகாதார பழக்க வழக்கங்களினால் மனித வாழ்க்கையை நிர்க்கதிக்கு உள்ளாக்குகின்ற நோய்களில் முக்கியமானதொரு நோயாக பாரிசவாதம் காணப்படுகின்றது.

**பாரிசவாதம் (Stroke)**

மனித மூளைக்கான இரத்தத்தையும், ஓட்சிசனையும் வழங்குகின்ற இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது வெடிப்பு ஏற்படுவதனால் பாரிசவாதம் ஏற்படுகின்றது. இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது வெடிப்பு ஏற்படுவதனால் மூளைக் கலங்களுக்கான ஓட்சிசன் விநியோகமும், இரத்த ஓட்டமும் தடைப்படுகின்றன. இதனால் கலங்களுக்கு தேவையான ஓட்சிசன் குறைவடைந்து மூளைக் கலங்கள் தொழிற்பாட்டை இழந்து, சில நிமிடங்களில் மூளைக் கலங்கள் இறந்து விடுகின்றன. இதன் விளைவாக அந்தப் பகுதி மூளைக் கலங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற உடற்தொழிற்பாடுகள் முற்றாகச் செயலிழந்து விடுவதையே பாரிசவாதம் என்கின்றோம். இந்த நோயின் விளைவாக உடற்தொழிற்பாடுகளில் முக்கியமான ஐந்து குழப்பங்கள் ஏற்படுகின்றன.





1. உடல் அசைவுகளைக் கட்டுப்படுத்தல்.
2. பேச்சு, மொழி, பாவனை மற்றும் புரிந்து கொள்ளுதல்.
3. ஞாபகசக்தி மற்றும் கிரகித்தல்
4. உணர்ச்சியற்ற தன்மை
5. உணவு விழுங்குதல் தொடர்பான பிரச்சினைகள்.

**பாரிசவாதத்துக்கு பின்னரான பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை**

பாரிசவாதம் ஏற்பட்டு அவசர சிகிச்சை பூர்த்தியடைந்தவுடன், இரண்டாம் கட்டமாகப் பாரிசவாதத்துக்குப் பின்னரான மறுவாழ்வுச் சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது. இந்தச் சிகிச்சை முறையானது நரம்பியல் விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனைக்கு இணைவாக ஒரு குழுசார் தொழிற்பாடாக (Multi disciplinary team approach) கட்டியெழுப்பப்படுகின்றது. இந்தக் குழுவிலே விசேடத்துவம் வாய்ந்த நரம்பியல் வைத்திய நிபுணர், உடற்பயிற்சி நிபுணர், பேச்சு மற்றும் மொழிச்சிகிச்சையாளர், மனநோய் வைத்திய நிபுணர், மறுவாழ்வு சிகிச்சைக்கு பயிற்றப்பட்ட தாதியர், தொழில்சார் பயிற்சி நிபுணர், சமூகநல உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் போன்றோர் தமது சேவைகளை நோயாளிக்கு வழங்குவதில் விசேடத்துவம் பெற்றுத் திகழ்கின்றனர்.

பாரிசவாதத்துக்குப் பின்னர் தொடர்பாடல் மற்றும் உணவு உட்கொள்ளுதல் பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பாரிசவாதம் ஏற்பட்டவர்களுக்கு காணப்படுகின்ற தொடர்பாடல் பிரச்சினைகள் மற்றும் உணவை உட்கொள்ளுவதில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தேவையான சிகிச்சை முறைகளை விசேடத்துவம் வாய்ந்த பேச்சு மற்றும் மொழிச்சிகிச்சையாளரிடம் வைத்தியசாலைகளிலும், மற்றும் மறுவாழ்வு சிகிச்சை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

**தொடர்பாடல் பிரச்சினைகள் மற்றும் சிகிச்சைத் திட்டமிடல்**

பாரிசவாதத்தின் பின்னரான தொடர்பாடல் பிரச்சினைகளினால் தகவல்களை விளங்கிக் கொள்ளுதல், வெளிப்படுத்துதல், தனிநபருடைய சமூக தொடர்புகள், தனித்துவம் மற்றும் சுயநம்பிக்கை என்பவை நெருக்கடிகளுக்கு உட்படுகின்றன. இவை அன்றாட வாழ்வில் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு தடையாகவும் அமைகின்றன. அவையாவன :

* மொழியை விளங்கி கொள்ளுதல் அல்லது கிரகித்துக் கொள்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகள் (Receptive Aphasia)
* பேசுதல் மற்றும் சரியான சொற்களைச் சொல்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகள் (Expressive Aphasia)
* வாய்ப்பகுதியில் உள்ள தசைகள் பலவீனம் மற்றும் குறைந்த இயக்கத்திறன்களின் காரணமாக சொற்களை ஒழுங்கமையச் சொல்லுதல் மற்றும் பேச்சு சத்தங்களில் தெளிவுத் தன்மை இழந்து காணப்படுகின்ற பிரச்சினைகள் (Dysorthria)
* பேச்சுக்குத் தேவையான தசை இயக்க அசைவுகளைச் சரியாகவும், ஒழுங்கு வரிசையாகவும் அசைப்பதில் அல்லது உச்சரிப்பதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் (Dyspraxia)
* எழுத்துக்களை வாசித்தல் (Dystocia) மற்றும் எழுதுவதில் உள்ள பிரச்சினைகள் (Dysgraphia)

பாரிசவாதத்துக்கு உட்பட்ட நோயாளியை முறையான விதத்தில் உரிய செயன்முறைகளினூடாகக் கணிப்பிட்டு மேற்கூறப்பட்ட பிரச்சினைகளில் சரியான பிரச்சினைகளை பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளர் இனம் கண்டு அதற்கமைய நோயாளியினுடைய தொடர்பாடல் ஆற்றலை மேம்படுத்த விசேடத்துவம் வாய்ந்த பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை நுட்ப முறைகளை செயற்முறைப் படுத்துவதுடன், மாற்றுவிதமான தொடர்பாடல் (AAC) வழிமுறைகளையும் அறிமுகப்படுத்துவார். (Augmentative and Alternative communication) இதனூடாக பாரிசவாத நோய்நிலைக்கு உட்பட்டவர் தனது நாளாந்தச் செயற்பாடுகளை சமூகத்தில் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும்.

**உணவு அல்லது ஆகாரங்கள் விழுங்குவதில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சிகிச்சைத் திட்டமிடல்**

பாரிசவாத நோய்க்கு உட்பட்டவர்களில் 65 வீதமானவர்களுக்கு உணவை விழுங்குவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சினை சரியான முறையில் அடையாளப் படுத்தப்படாத பட்சத்திலும் மற்றும் முறையான சிகிச்சைத் திட்டமிடல் அணுகு போசனை மட்டக் குறைபாடு என்பன நிமோனியா மற்றும் இதர அங்கவீன நிலைகள் ஏற்பட அதிக வாய்ப் புக்கள் உள்ளன.

பாரிசவாதம் ஏற்பட்டதன் விளைவாக, உணவை விழுங்குதல் மற்றும் பருகுதல் தொழிற்பாட்டை மேற்கொள்ளுகின்ற தசைகளுடைய இயக்கத்துக்குத் தேவையான வலிமை (Strength) மற்றும் ஒருங்கிணைப்பு (Coordination) என்பன குறைவடையத் தொடங்குகின்றன. இதன் விளைவாக உணவை விழுங்குவதிலும், நீராகாரங்களைப் பருகுவதிலும் பிரச்சினைகள் மற்றும் தாமதம் ஏற்படுகின்றது. மேலும் விக்கல், இருமல் போன்ற அபாயகரமான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஏனெனில் இவை சுவாசப்பைத் தொற்றுநோய் ஏற்படுவதற்கும் பிரதானமான காரணமாக அமைகின்றன. ஏனைய அறிகுறிகளாவன:

* தொண்டையினுள் உணவு அடைத்தல் அல்லது தங்குதல் போன்ற உணர்வு.
* உணவு உண்ணும்போதும், ஆகாரங்கள் அருந்தும்போதும் கஷ்டப்பட்டு மெதுவாக விழுங்குதல்.
* உணவு அல்லது ஆகாரங்கள் வாயிலிருந்து வெளியே வடிதல்.

> மனித மூளைக்கான இரத்தத்தையும், ஓட்சிசனையும் வழங்குகின்ற இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது வெடிப்பு ஏற்படுவதனால் பாரிசவாதம் ஏற்படுகின்றது.

* உணவு உட்கொள்ளும்போது அல்லது உட்கொண்ட பின்னர் கரகரப்பான சத்தங்கள் ஏற்படல்.
* வாயினுள் இரு கரைப்பகுதிகளினுள் உணவு தங்குதல்.
* உணவு மற்றும் ஆகாரங்களை விழுங்கும் பொழுது அவை மூக்கினால் வெளிவரல்.

வாய்ப்பகுதியினுடைய அசைவு மற்றும் இயக்கங்கள் மெதுவாக இருத்தல்.

பாரிசவாதம் ஏற்பட்டு உணவு அல்லது ஆகாரங்களை விழுங்குவதில் பிரச்சினையுடையவர்கள் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளர் நோயாளிக்கு விழுங்குதல் தொடர்பாகக் காணப்படுகின்ற பிரச்சினைகளைச் சரியான முறையில் பரிசோதனையை மேற்கொண்டு அதற்கான சிகிச்சைத் திட்டமிடல்களை மேற்கொள்வார். ஆரம்பத்தில் Water test மற்றும் Video - Fluoroscopy test போன்ற பரிசோதனைகளினூடாக விழுங்குவதில் காணப்படுகின்ற பிரச்சினைகளைச் சரியான முறையில் அடையாளக் கண்டு கொள்ள முடியும்.

பரிசோதனைகள் மூலமாக விழுங்குவதில் காணப்படுகின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான சிகிச்சை முறைகளாக,

* உணவுப் பதார்த்தத்தின் தன்மைகளை மாற்றிக் கொடுத்தல்
* உணவு உண்ணும்போது, முறையான இருக்கை, சமநிலை முறைமையைப் பின்பற்றுதல்.
* உணவை விழுங்கும்பொழுது கழுத்தை நோயாளரின் தன்மைக்கு ஏற்ப சரியான முறையில் அசைத்து விழுங்குதல்.
* உணவை இலகுவாக விழுங்குவதற்கான நுட்ப முறைகளை கையாளுதல் மற்றும் வாய்தசைக்கான பயிற்சி வழங்குதல்.
* இலகுவாக விழுங்கக்கூடிய உணவுகளை பரிந்துரை செய்தல். இதன் மூலமாக புரையேறுதலைத் தடுக்கலாம்.
* நோயாளிக்கு அல்லது நோயாளியின் பாதுகாவலருக்கு நோயாளரின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் வகையில் எடுத்துக் கூறுவதுடன், உணவு வழங்கும் போதும், உட்கொள்ளும்போதும் எவ்வாறான உத்திகளைக் கையாள வேண்டும் என்பவை பற்றி எடுத்துக்கூறுவதுடன் நாளாந்தப் பேச்சு மற்றும் மொழிச்சிகிச்சையின் அவசியம் பற்றி எடுத்துக் கூறுதல்.

பாரிசவாத நோய் ஏற்பட்டு ஆரம்பகட்ட மருத்துவச் சிகிச்சை முடிவடைந்த பிற்பாடு உடனடியாக பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையைப் பெற்றுக்கொள்கின்ற பட்சத்தில் நோயாளி தனது பேச்சு, தொடர்பாடல் மற்றும் உணவு ஆகாரம் போன்றவற்றை விழுங்குவதில் முகம்கொடுக்கிற பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடிவதுடன், நோயாளி தனது நாளாந்த வாழ்க்கைச் செயன்முறைகளுக்கு தன்னைப் பழக்கப் படுத்திக் கொள்ள இயலுமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாரிசவாதம் ஏற்பட்ட பின்னர் பேச்சு, தொடர்பாடல் மற்றும் உணவு அல்லது ஆகாரங்களை விழுங்குவதில் தாமதம் மற்றும் பிரச்சினைகள் ஏற்பட்டால் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பிரதான தனியார் வைத்தியசாலைகளில் உள்ள பேச்சு மற்றும் மொழிச்சிகிச்சையாளரிடம் உரிய சிகிச்சை முறைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக பாரிச்வாதத்துக்கு உட்பட்டவரின் வாழ்க்கை முறைமையை தரமானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் மாற்றியமைக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

**ப.கௌரிதரன்**
**பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளர்,**
**நரம்பியல் பிரிவு B,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினரால் வருடந்தோறும் நடத்தப்படும் மாபெரும் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இந்த் நிகழ்வில் பல கலை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. (10)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் செயற்படுத்தப்பட்ட பாடசாலை நோக்கிய சமூக செயற்றிட்டமானது அண்மையில் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 15ஆம் அணியைச் சேர்ந்த முகிழ்நிலை ஆசிரியர்கள் இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். (10)



தெல்லிப்பழை பன்னாலை வறுத்தலைகுளப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து தேர் திருவிழா நடைபெற்றது. திருவிழாவில் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் ஆண்கள் காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திகளை நிறைவு செய்தார்கள். (86)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச சபையினால் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் நெடுங்கேணி [illegible] ஒழிப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது. இதில் பிரதேச [illegible] வவுனியா வடக்கு சுகாதார வைத்திய பணிமனையின் பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர். (10)



இணுவில் இந்துக்கல்லூரியில் உலக எழுத்தறிவு தினம் அண்மையில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு தனது 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டிலிருந்து 1 லட்சம் பெறுமதியான போட்டோப்பிரதி இயந்திரத்தை வழங்கி வைத்தார். (10)



தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றி கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் திருமதி சு.சுதாகருக்கு பிரிவுபசாரமும் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி அலுவலராக பொறுப்பேற்றுள்ள ப. சதீஸ்குமாருக்கு வரவேற்பும் சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுக்கு சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமை வகித்தார். (126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குட்டியப்புலம் அபிராமி அம்பாள் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டுச் சைவப்புலவர். பண்டிதர். பொன்.சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றது. (10)




டெங்கு வாரத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் சிரமதானமும் மரம் நடுகையும் நடத்தப்பட்டுள்ளது. மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (114)



சர்வதேச இந்து இளைஞர் பேரவையினால் சிறுவனொருவனுக்குச் சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. வவுனியா கல்மடு ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த அ.பிரபாகரன் என்ற சிறுவனுக்கே மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது. சக்கர நாற்காலியினைப் பேரவையின் தலைவர் சிவ.கஜன், பேரவை உறுப்பினர்களான மணிவண்ணன், சுதா, கேசவன் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(402)



சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டிச் சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடத்தப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினருடன் இணைந்து சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகமும் சனசமூக நிலையம் நடத்திய இந்த இரத்ததான முகாமில் பலர் கலந்துகொண்டு இரத்தம் வழங்கியுள்ளார்கள். இந்த நிகழ்வில் விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (86)



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்குப் பொது முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன. கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பினை மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆரம்பித்துவைத்தார். ஆரம்ப நிகழ்வில் மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், கணக்காளர் கில்பேட் குணம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (113)





வவுனியா போகஸ் வெள பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் புதிய வெளிநோயாளர் கட்டட தொகுதி திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு குறித்த கட்டடத்தைத் திறந்து வைத்தார். வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஜெலதிலக, தர்மபால ஆகியோரும் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (402)



அரச சேவையில் முப்பத்தாறு வருடங்கள் சேவை புரிந்து அண்மையில் ஓய்வு பெற்ற வடமாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலக பிரதம முகாமைத்துவ உதவியாளர் சி.தர்மகுலசிங்கத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. வடமாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலர் திருமதி.ச.சுரேஜினி ஓய்வு பெற்றுச் செல்லும் சி.தர்மகுலசிங்கத்திற்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் அருகில் உள்ளகக் கணக்காய்வு அலுவலக நலன்புரிச் சங்கத் தலைவர் வே.தயாளன் நிற்பதையும் படத்தில் காணலாம். (288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Now in Jaffna
## (Educational Scholarships)

**பின்வரும் கற்கைநெறி மாணவர்கள் புலமைப் பரிசில்கள் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்**

- கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் விசேட பயிற்சிகள்.
- பயிற்சி இறுதியின் பின்பு வேலைவாய்ப்புக்கள்.
- வெளிநாடுகளில் ( UK/Canada/USA/Singapore/India ) போன்ற நாடுகளில் உயர்கல்வி வாய்ப்பு வசதிகள்.
- வெளிமாவட்ட மாணவர்களுக்கு இலவச உணவு தங்குமிட வசதி வழங்கப்படும்.

**✔ English Programmes**
1. Diploma in English
2. English Teachers Training
3. Cambridge English (FCE,PET,KET)
4. IELTS

**✔ Management Studies**
1. Diploma / HND in Business Management
2. Diploma in Accounting and finance.
3. Diploma in Sales and Marketing.

**✔ Hospitality and Tourism**
1. Diploma in Hotel Management
2. Diploma in Travel and Tourism

**✔ IT / Computing Studies**
1. Diploma in ICT
2. Diploma in Computer Hardware and Networking
3. Diploma in Web Design and Multimedia



(64762)(10.15.17)

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் ETS நிறுவனத்தினால் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-

**LCBT Campus** #47, சேர்.வைத்திலிங்கம் துரைசாமி, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

Hotline: 077 328 2406, 077 400 4279


# மரண அறிவித்தல்

## இரத்தினசிங்கம் சரவணபவானந்தன்

**(உரிமையாளர் வேல் முருகன் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் ஒளி இரும்பு வாணிபம், கண்டி வீதி கிளிநொச்சி, முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர், கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோயில் தேவஸ்தான உபதலைவர்)**



யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சரவணபவானந்தன் 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினசிங்கம் - கனகமணி தம்பதியரின் சிரேஷ்ட தவப்புதல்வனும், மனோகரியின் அன்புக் கணவரும், அருட்செல்வி (கனடா), சசிரேகா (கனடா), வர்த்தனி (ஆசிரியர் - வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி.வவுனியா), கஜேந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கச்சேரி, வவுனியா), சரவணபவானி (ஆஸ்திரேலியா), ஸ்ரீகணேச வேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயரோகன் (கனடா), விஜயகுமார் (கனடா), அனுராஜ், Dr.சுரேந்திரன் (பொது வைத்தியசாலை வவுனியா), பிரகாஷ் (பொறியியலாளர் ஆஸ்தி ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தான லக்சுமி, பொன்னம்பலநாதன், வசந்தமலர், சந்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சாய்ஹரி, சாய்கிரிஷ், ஜெசிக்கா, ஜெரோன், அனுசுருதி, சுகாஷ், சுரதா, சுவஸ்திகா ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2015) திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லமான இல. 92, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - Dr.V.சுரேந்திரன் (மருமகன்)
மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா.

(63513.11.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மிருசுவில் A9 றோட்டை முன் பக்கமாகவும், பாம் றோட்டை பக்க றோட்டாகவும் கொண்ட 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் பகுதிகளா கவும் பிரித்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0776079340

## காணி விற்பனைக்கு

பெரியமாவடி வீதி சாவகச்சேரியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778836467, 0775293167

(64774)(11,15,16)

## அறைகள் வாடகைக்குண்டு

யாழ் நகருக்கு மிக அண்மையில் A9 றோட் பஸ்ரியன் சந்தி, இல.05 இல் மாத வாடகைக்கு அறைகள் உண்டு. (பெண்களுக்கு மட்டும்)

தொடர்பு : 0772433939, 0772840793

(64772)(11,15,16)

## காணி தேவை

யாழ் நகருக்குள் ஸ்ரான்லி வீதியை அண்மித்ததாக 1½ பரப்புக் காணி அவசரமாகத் தேவை.

தொடர்பு: 077 197 4422

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகர எல்லைக்குள் அல்லது அதன் சுற்றாடலில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 076 638 5626

(64769)(11,15,16)

## வீடு விற்பனைக்கு

கொழும்பு - 13. பிரதான வீதி முகப்பாக கொண்ட 5 பர்ச்சஸ் பிரத்தியேக வாசலுடன் கூடிய பிரபல பாடசாலைகள், கோவில், தேவாலயங்களுக்கு அண்மித்த மாடிவீடு உடன் விற்பனைக்கு. வீடாகவும் வர்த்தக ஸ்தாபனமாகவும் பாவிக்க உகந்தது.

தொடர்பு: 0772 703 054

## ஆண்கள் விடுதி

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சகல வசதிகளுடன் மூன்று நேர உணவுடன் கூடிய தங்குமிடம் வாடகைக்கு உண்டு

தொடர்பு : 077 730 4545

(64768)(11,15,16)

## பெண்கள் விடுதி

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட அமைதியாக சூழலில் சகல வசதிகளுடன் மூன்று நேர உணவுடன் கூடிய தங்குமிடம் வாடகைக்கு உண்டு

தொடர்பு : 077 730 4545

(64765)(11,15,16)

## வேலை வாய்ப்பு

A/L Exam எழுதி விட்டீர்களா? நீங்கள் விற்பனை பிரதிநிதிகளாக விரும்புகின்றீர்களா? முன் அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகளும் தேவை.

நேரில் வரவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம் 303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(64770)(11,15,16)

## கணக்காளர் தேவை

**(Part Qualified Accountant)**

பிஜித் தீவில் (Fiji islands) வேலை செய்யக் கூடிய முன் அனுபவமும், திறமையும், தகைமையும் உள்ள தமிழ் பேசக்கூடிய கணக்காளர் (Part Qualified Accountant) தேவை. தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

மாத சம்பளம் - USD 800

விண்ணப்பிக்கவும்

enquiries@tlebpp.co.uk

(64767)(10,15,17)

## சட்டத்தரணியும் லிகிதரும் தேவை

காணி, குடும்பம், வர்த்தக, கம்பனி விடயங்கள் உட்பட குடியியல், குற்றவியல், மேன்முறையீடு, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் உறுதி முடிப்புகள் உட்பட அனைத்து சட்டவியங்களையும் கையாளும் எமது நிறுவனத்தின் யாழ்ப்பாண காரியாலயத்தில் வேலை செய்யக்கூடிய கனிஷ்ட சட்டத்தரணி (பெண்) ஒருவரும், கம்பியூட்டர் டயிப்பிங் மற்றும் இன்டர்நெட் அனுபவமுள்ள லிகிதர் (பெண்) ஒருவரும் தேவை.

விண்ணப்பங்கள் :- thambiahlawassociates@gmail.com

**Thambiah Law Associates**

No. 152-1/3&152-1/4
Hulftsdorp Street, Colombo - 11.
TP No : 011 23220509, Mobile No : 0714302909

70, Navalar Road,
Navanthurai, Jaffna.
TP: 0212215502

## உடனடி வேலைவாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கிவரும் பிரபல இரும்பு உருக்கு உற்பத்திக் கம்பனியில் "Bold and Nuts machine operators and trainees" பதவிக்கு வினைத்திறனான ஆண்கள் மற்றும் பெண்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

* க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
* நேரமுகாமைத்துவத்துடன் நன்நடத்தை உடையவராகவும் காணப்படவேண்டும்
* குறித்த துறையில் குறைந்தது 6 மாத முன்னனுபவம் விரும்பத்தக்கது.
* நிறுவனத்தை அண்மித்த பிரதேச விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதியானவர்கள் 24.09.2015 அன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை இடம்பெறும் நேர்முகத்தேர்விற்கு சுயவிவரக்கோவையுடன் சமுகமளிக்கவும். மேலதிக தகவல்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 077 302 9243

(64612)(12,15)

உங்கள் பிள்ளைக்கு 2½ வயது நிறைவடைந்து விட்டதா?
எந்தவொரு பாடசாலை நாட்களிலும் Play Group இல் இணைந்து கொள்ளலாம்.

(British & National Curriculum)



ADMISSIONS For Montessori

**BEEFORT INTERNATIONAL SCHOOL**

# 136, Navalar Road, Jaffna | Tel: 0115925923
Colombo : #27, St.Lucia's Street, Colombo 13
Trinco : #59A, Green Road, Trincomalee
Manipay : #248, Jaffna Road, Manipay

## மணமகன் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984இல் இலங்கையில் பிறந்த,பாவக்கிரகம் 53½ 7இல் செவ்வாயுடன் சனி,கிரக நிலைஉடைய B.SC படித்த ,சுவீடன் பிரசாவுரிமையுடைய உயரம் 5' 6" உடைய (உத்தர நட்சத்திரம்)(கன்னி இராசி) மணமகளுக்கு ,தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 0046 016 40400065
Karasu.m@hotmail.com

(64594)(12,15,17)

## ஆசிரியர்கள் தேவை

**ICPS**
International college of Professional Studies

* English Teachers
* Auto cad
* Web Designing
* Cake making / Cookery/ Bakery

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு தகுதியும் திறமையும் வாய்ந்த அனுபவம் மிக்க 35 வயதுக்குட்பட்ட ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

* கவர்ச்சிகரமான சம்பளம்
* தூர இடங்களிலிருந்து வருகை தரும் ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இன்றிலிருந்து ஐந்து தினங்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

infoicps@gmail.com

இல: 5, 10ஆம் ஒழுங்கை, வைரவர் கோவில் வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.

தொடர்புகளுக்கு: 024 729 0128, 077 205 8222

**METRO**
Travels & Tours (Pvt) Ltd.

### எமது சேவைகள்....

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச் சீட்டுக்கள்....
* சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதி சேவைகள்..
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்
* வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்

இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் ....

**METRO TRAVELS & TOURS (PVT) LTD**
# 272/1, Stanley Road,Jaffna, Srilanka.
Tel: 0212219424, 0212224647, 0212217199
Mobile: - 0773798767, 0777881115
Email: - bartheeban@metrotravels.lk

(C/18699)(10,15,17)

## உங்கள் அருகே உள்ளோம்.... தற்போது யாழ்ப்பாணத்தில்

அமெரிக்கா, மலேசியா, சீனா, யப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு கல்வி விசா

உங்கள் விருப்பத்திற்குரிய பாடங்களில் பட்ட மற்றும் பட்டப்பின் படிப்புகள்.

மலேசியாவில் G.C.E. O/L உடன் கல்வி ஆரம்பம்.
ஆங்கில பயிற்சியும் உண்டு
பகுதி நேர வேலை செய்வதாயின் உயர்சம்பளம்.
அமெரிக்காவிற்கு IELTS 4.5 அளவுகளில் மற்றும் குறைந்த தொகையில் மனிதவள டிப்ளோமா படிப்பு

கட்டணம் விசா கிடைத்த பிற்பாடே செலுத்துதல் வேண்டும்.

(C/19441)(10,17)

விவரங்களுக்கு

**COSS JAFFNA (PVT) LTD.**
381B, Stanley Road, Jaffna.
Tel : 0767561346 / 0777561346 / 0212217552

## முன்னணி கல்வி நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன

1. Receptionist (வரவேற்பாளர்)
2. English Teachers
3. Project Officers
4. IT/Computing விரிவுரையாளர்கள்
5. Business Management / Accounting விரிவுரையாளர்கள்
6. Manager (Operations)

நேர்முகப்பரீட்சைகளுக்கான பதிவுகளுக்கு தொடர்புகொள்ள
077 328 2406, 077 400 4279

**LCBT Campus**
47, சேர்.வைத்திலிங்கம் துரைசாமி, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(64763)(10,15,17)

## Study & Work in Singapore

படிக்கும் போதே பகுதி நேர வேலையின் மூலம் மாதம் ரூ.70,000/- மேல் சம்பாதிக்கலாம்.

### Hotel Management

* அடிப்படை தகைமை O/L மட்டும்
* குறைந்த செலவில் பயணம்
* பாடநெறிக் கட்டணம் தவணை முறையில்

VISA 4 வாரத்தில்

விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

## Study & Work in Australia

**Bachelor & Master Programs Available**

* Bachelor of Business (Accounting)
* Bachelor of Business (Management and Finance)
* Master of Professional Accounting (Standard)
* Master of Arts (TESOL)

INTAKES
November 2015
March 2016
June 2016

## Study in UK / Canada / Malaysia

**VISA FORM FILLINGS - USA, Canada, UK, France, Italy, German, Swiss**

போன்ற நாடுகளுக்கு Business / Family & Friends Visit / Tourist விசா Form சிறந்த முறையில் செய்து தரப்படும்.

**flex Institute**
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
Email: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சொர்ணரத்தினம் அப்புத்துரை



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணரத் தினம் அப்புத்துரை நேற்று (19.09.2015) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் சுகந்தினி, ஸ்ரீரஞ்சன், காலஞ்சென்ற அருள்ரஞ்சன் மற்றும் கிருஸ் ணரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகாலிங்கம், மனோராணி, உதயாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகரத் தினம், பஞ்சரத்தினம், சந்திரராஜா, சிவசோதி மற்றும் பகவதி ஆகியோரின்பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம், விஸ்வலிங்கம், புஸ்பராணி மற்றும் சொக்கநாதன் ஆகியோரின் மைத்துனியும் தயா, சுபோ, வினோ, றொசாந், கீத்தா, ரங்கன், ஜெயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தரணி, நகுல், வாசினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனத்திற்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மங்கையற்கரசி (ராணி) புவனேந்திரன்



பிறப்பு 15.02.1957 இறப்பு 17.09.2015

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும், வவுனியா வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி புவனேந்திரன் 17.09.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - பூபதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புவனேந்திரனின் அன்பு மனைவியும், ஆனந்தராஜன் (ஆனந்தன்), இளவரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜன் (பிரான்ஸ்), சாந்தன் (ஜேர்மனி), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரி யும், ரவிசங்கரின் அன்பு மாமியாரும், கோமதி (பிரான்ஸ்), மிகுந்தலா (ஜேர்மனி), பிக்மன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மயூரி, மயூரன், தீபிகா, றோசினி ஆகியோரின் அன்பு மாமியாரும், உமேசனின் அன்புப் பெரியம்மாவும், சொப்னா, சுமித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
ராஜன் (பிரான்ஸ் +33664889636),
கோமதி (பிரான்ஸ் +33664753772),
சாந்தி (பிரித்தானியா +447452144155),
சாந்தன் (ஜேர்மனி +4915211254363),
ஆனந்தன் (இலங்கை +94772200625),
இளவரசி (இலங்கை +94771545502)

தகவல் :-
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 27.06.1943
உதிர்வு 06.09.2015

### அமரர் உருத்திராபதி இராதாகிருஸ்ணன்

(இசைஞான திலகம், கலாபூஷணம்)

கடந்த 06.09.2015 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் அத்துடன் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.09.2015) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

(64756) (14,15,16)

## 6ஆம் மாத நீங்காத நினைவலையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வாய் 15.11.1986
தேர்வாய் 30.03.2015

அமரர்
### கிருஸ்ணபிள்ளை தயாளன் (ராசா)

திதி: பூர்வபக்க தசமி

மாதம் ஆறு போனாலும் ஆறவில்லை எம்துயரம்
ராசா தினமும் உன் பிரிவால் வாடுகின்றோம்
ஒரு முறை வந்து ஒரு வார்த்தை பேசாயோ?
பெற்றவன் பெருமைகொள்ள பேரொளியாய்-
ஒளிர்த்தாய்
உடன்பிறப்பை நேசித்து மகிழ்ந்தாய்!
நூற்றாண்டு வாழவே நாம் கண்ட கனவுகள்
யார் கண்டோம் உன் வாழ்க்கையை
காலன் மிக விரைவில் எடுப்பான் என்று

கடந்த 30.03.2015 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு 23.09.2015 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (63510)(10,15,17)

அந்தோனியார் கோயிலடி, பண்ட் றோட்,
ஸ்கந்தபுரம்.

குடும்பத்தினர்.
0772767411

## என்றும் நினைவுடன் ஆண்டுகள் 15



அமரர்
### வேலன் பசுபதி

(காங்கேசன்துறை வைத்தியசாலை ஊழியர்)

மண்ணுலகில் 25.10.1924
விண்ணுலகில் 20.09.2000

எம் வாழ்விற்கு ஒளி ஏற்றிய தெய்வமே!
எமதன்புப்பப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து அகவை 15 கடந்தாலும்
உங்கள் நினைவுடன் பரமனடி சேர
சந்நிதி முருகனைத் தொழும்

நிரந்தர முகவரி:
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

மனைவி, குடும்பத்தினர்.
முதலாவது வீதி, மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

(64548) (14,15,16)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி இரத்தினசிங்கம்

தோற்றம் 20 . 07 . 1937
மறைவு 18 . 09 . 2015



யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இரத்தினசிங்கம் 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், வசந்தி (பிரான்ஸ்), வாசுதேவன் (கனடா), விமலசேகர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள்வரதன் (பிரான்ஸ்), யோகராணி (கனடா), முல்லைச்செல்வி (கனடா) ஆகி யோரின் அன்பு மாமியாரும், சத்தியன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வித்தியன் (பிரான்ஸ்) மற்றும் சாஜினி (கனடா), பிருந்தா (கனடா) ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) மற்றும் சண்முகலிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர் - பரமேஸ்வராக் கல்லூரி, செங்குந்த இந்துக்கல்லூரி - பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர் செங்குந்த இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
0212054067

தகவல் :
குடும்பத்தினர்.

(64748)(11,16)

## பரிசளிப்பு விழா

காரைநகர்,செப் 20

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் இடம்பெற உள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இராசா இரவீந்திரன் கலந்து சிறப்பிக்க உள்ளார். (த-250)

## பொதுக்கூட்டம்

காரைநகர்,செப். 20

காரைநகர் பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு காரைநகரில் உள்ள 13 கிளைகளிலும் இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் இடம்பெற உள்ள இக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தகுதியுடையவர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கேட்டுள்ளார். (த-250)

## கஞ்சாவை வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 20

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதையடுத்து அவர்களுக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும் 50 மணித்தியாலங் களுக்கு சமுதாயச் சீர்திருத்த சேவையில் ஈடு படவேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டது.

குறித்த இரண்டு இளைஞர்களும் பொலிசாரினால் கடந்த ஜூலை மாதம் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (த-103)

## குருதிக் கொடை முகாம்

வவுனியா, செப். 20

உலக சமாதான தினத்தை முன்னிட்டு, வவுனியா மாவட்ட ஜனாதிபதி சாரணர் மன்றமும் திரி சாரணர் குழுவும் இணைந்து 10ஆவது மாபெரும் குருதிக்கொடை முகாமை இன்று நடத்துகின்றன. இன்று காலை 8.00 மணி முதல் பி.ப. 12.30 மணிவரை வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் நடை பெறும் இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்து கொள்ள முடியும். (த-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Technical officers/Site Engineers/மேசன் தேவை**

கட்டட நிர்மாணத்துறையில் அனுபவமிக்க Technical officers, Site Engineers, மேசன்மார் தேவை.
Building projects in Northern Province.

**தொடர்பு : 077 344 4801**

(c19435.11.17)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரியாலை ஸ்ரான்லி பாடசாலைக்கு அருகில் நொத்தாரிஸ் ஒழுங் கையில் 3 பரப்புக் காணி பங்குக் கிணறு நல்ல தண்ணீருடன் ஒரு பரப்பு 13 லட்சம், நாவலடியில் 6 பரப்புக்காணி ஒரு பரப்பு 1¼ லட்சம் நாவலடியில் 22 பரப்பு வயல் ஒரு பரப்பு 15 000/= விற்பனைக் குண்டு.

**தொடர்பு : 075 544 0503**

(c19436)(11,15,19)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி தனங்கிளப்புப் பிரிவு அறுகுவெளியில் தென்னைச் செய்கைக்கு ஏற்ற நிலப்பரப்பு 27 காணி விற்பனைக்குண்டு.( பூநகரி- யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் )

தொடர்பு: **071 534 6641, 077 471 3097**

(64594)(12.15)

**தேவை**

இங்கிலாந்து நொட்டிங்கத்தில் உள்ள துர்க்கை அம்மன் கோயிலுக்கு உதவி அர்ச்சகர்,தவில் ,நாதஸ்வரம் வாசிப்பவர்கள் (ஒரு சோடி) தேவை.
ஆங்கில அறிவு மிக மிக முக்கியம்

**தொடர்பு : 077 773 2214**
**0044 752 583 1901**
**Email-amvijay@yahoo.com**

(64609)(12.15)

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கி வரும் எமது மொத்த விற்பனை நிலையத்திற்கு வாகனங்களில் கொண்டு சென்று பொருள்களை விநியோகிப்பதற்கு விநியோக பையன்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் 30.09.2015 இற்கு முன்பாக உங்கள் சுயவிவரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சுப்ப சூஸ்,**
**இல.154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(64780)(11,15,16)

## Project Coordinator

St. John's College and Chundikuli Girls' College of Jaffna are seeking a female project coordinator. Someone who is passionate about working with orphan and needy children.
This role involves working extensively with Chundikuli Trust Fund, a UK based charity.

**Required skills:**

Demonstrable computer skills specifically with Microsoft Office Products Word and Excel and email.
Basic accounting skills and knowledge would be an advantage
Ability to work with minimal supervision in a dynamic and ever changing environment
Must be fluent in English (Reading and writing)

If you would like to make a profound difference to the life of Internally Displaced Children then please send your application to St.John's college on or before 28.09.2015 by post or email

**the Principal**
**at**
**St.John's College, Main Street, Jaffna.**
**Tel/Fax No: 0 21 222 2432**
**Email : stjohns@sltnet.lk**

(C/18690)(10.15.17)

## IRSTHA IMMEDIATE VACANCY

Systems design | Development | Integration & Testing

| | |
|---|---|
| Project Manager | 1 position |
| Software Engineers | 5 positions |
| Web Developers | 5 positions |

IRSTHA is a growing IT company located in Jaffna.We warmly welcome above positions both **senior** and **junior** levels immediately

All Candidates must have strong ability both Educational and Professional background. Also they are willing to work in team environment and long hours. Preferably those who have 1- 2 year working Experience in Coding Programming with web developing and analyzing database and developing Web, would be advantage.

***THE IDEAL CANDIDATE:for the Project Manager/ Senior Software Engineer***

* Should at least have: Bachelor's degree in Information Technology, Computer Science or any other related degree
* Minimum 4 years in Project Management – work experience.
* Hands-on programming experience
* Excellent project management, leadership and communication skills.
* Ability to pay attention to detail and quality consciousness
* Experience in using project management tools & techniques.
* Be a strong team player with the ability to motivate project teams.
* Results-oriented.
* PMP certification would be added advantage.

Candidates must have familiar in following Programming Languages
C#, C++, PHP, ASP.NET, VB.,J-Query,CSS,HTML,MY SQL,SQL.

Those who finished B.SC in computer science & IT, BIT(Colombo,Morotuwa) will be advantage.

Those who interested to improve their knowledge in IT career,Please feel free to apply for these position.

**Please send your job-application and CV along with documentation to -**
**E-Mail Address: job@irstha.com**
**64, Kannathiddy Rd, Jaffna.**


(64683)(11,15,16)

GATEWAY Language Centre

# GATEWAY LANGUAGE CENTRE

# IELTS

**A Comprehensive Preparation course covering all language skills Listening, Speaking, Reading & Writing**



Rs.11,000/=

* Latest course materials
* Individual attention
* Installment Payment
* Qualified Lecturers
* Air-Conditioned Classrooms

**Head Office -**
**# 39, College Road, Neeraviady, Jaffna**
**Tel: 021 492 7456**
**Fax: 021 221 7780**

**Hotline : 0716 362 362**

**Email: gatewayjfn@sltnet.lk Web: www.gatewayworldwide.com**

| Nelliady Branch: | Chavakachcheri Branch: | Kilinochchi Branch |
|---|---|---|
| #55, Point Pedro Road, Nelliady. 021 492 7457 | #1, New Market Building, Chavakachcheri. 021 492 7432 | Karadippokku Junction, A9 Road, Kilinochchi. 021 492 7454 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் கட்டுப்பாடு வாரத்தில் தலைமறைவாகும் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், செப்.20
டெங்குக் கட்டுப்பாட்டு வாரங்களில் வீடுகளைப் பூட்டிவிட்டுத் தலைமறைவாகும் குடும்பங்களுக்கு வழக்குத் தொடர சுகாதாரத் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் புதிய நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

டெங்குப் பரிசோதனைக் காலங்களில் அறிவித்தல் வழங்கிவிட்டுச் செல்லும் வேளையில் வீடுகளைப் பூட்டி விட்டுச் செல்லும் வீடுகளுக்கு முன்பாக குறித்த குடியிருப்பைப் பார்வையிட முடியாத நிலையில் காணப்படுவதால் மூன்று தினங்களுக்குள் துப்பரவு செய்து அறிவித்தலில் காணப்படும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க வேண்டுமென்றும், குறித்த கால தவணைக்குள் துப்பரவு செய்து தொலைபேசியில் அறிவிக்கத் தவறும் பட்சத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்றும் மஞ்சள் அறிவித்தல் ஒட்டப்படுகிறது.

குறித்த மூன்று தினங்களில் பின்னர் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் குறித்த வீடுகளைப் பார்வையிட்டுத் துப்பரவு செய்யப்படாத நிலையில் காணப்படுமிடத்து அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதேவேளை, டெங்குப் பரிசோதனைகளின்போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏது நிலையான குடியிருப்புகளுக்கும் காணிகளுக்கம் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுவருகிறது. குறித்த காலப் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தி யாகக் கூடிய இடங்களைத் துப்பரவு செய்து உடனடியாக அறிவித்தலில் உள்ள தொலைபேசி இலக்கத்தடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறும், தவறின் அவர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென்றும் தெரிவித்தனர். (த)

# இரகசியத் தடுப்பு முகாம்கள்; ஜெனிவாவில் தீவிர ஆராய்வு

இலங்கையில் இரகசியத் தடுப்பு முகாம்கள் உள்ளன என்றும், அவை தொடர்பான இரகசியங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை கள் பேசபைக்கு சார்பாக இடம் பெற்ற சிறிய கூட்டங்களின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற கடத்தப்பட்டு காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாக நடந்த சிறிய கூட்டங்களின்போது இரகசியத் தடுப்பு முகாம்கள் குறித்து தீவிரமாக ஆராயப்பட்டுள்ளன.

இதில் கலந்துகொண்ட காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, தனது கணவரை தேடித்தருமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கை மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்றுள்ளனர். (த–சி)

## தொடர்ச்சி

### தொகுதி

நேற்றுக் காலை கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் அமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார். இதன்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அடுத்த வருடம் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எண்ணியுள்ளோம். அதன்படி இந்த தேர்தல் கள் தொகுதி வாரியாகவே இடம் பெறவேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அத்தோடு எல்லை நிர்ணயப் பிரச்சினை காணப்படுகின்றது.இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசித் தீர்வு பெற்றுக் கொள்ள வுள்ளதாகவும் அமைச்சர் பைஸர் முஸ்தபா குறிப்பிட்டார். (த–வ)

### ஜெனிவா

ருமான துமிந்த திஸா நாயக்க இதனைத் தெரி வித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதியின் உத்தியோ கபூர்வ இல்லத்தில் இடம் பெற்ற சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் அந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்குக் கட்சியினால் குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது. அந்தக் குழு ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து, கட்சிக்கு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் எமது கட்சியின் நிலைப்பாடு பற்றி அறிவிப்பதாக துமிந்த திஸாநாயக்க கூறினார். (த–வ)

### உள்ளகப்

மையான மாற்றங்கள் ஏற்படவில்லை என அமெ ரிக்கக் காங்கிரஸ் கூட்டத்தில் சூடான விவாதம் இடம் பெற்றுள்ளது.

இலங்கையில் இன மற்றும் மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்கக் காங்கிரஸ் குழுவின் கூட்டம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெறுவதால் இலங்கையைப் பொறுத்தவரை இது மிகவும் முக்கியமான மாதம்.

காங்கிரஸ் குழுவின் கூட்டத்தில், சனல் 4 வெளியிட்டுள்ள இலங்கை: நீதிக்கான தேடல் என்ற ஆவணப் படம் காண்பிக்கப்பட்டதுடன், இலங்கை தொடர்பான இரு நிபுணர்களின் உரையும் இடம்பெற்றது.

இலங்கை தொடர்பான அமெரிக்க ஆலோசனைக் குழுவில் பணியாற்றும் மிரியம் யங் இலங்கையில் போருக்குப் பிந்திய சூழலில் எதிர்கொள்ளப்படும் பல விவகாரங்கள் குறித்து பரந்துபட்ட அளவில் கருத்தை முன்வைத்ததுடன் இலங்கையின் பாதுகாப்பு கட்டமைப்பு முழுமையாக மாறிவிடவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நம்பகத்தன்மைமிக்க பொறுப்புக் கூறும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவது மிகவும்கடினமான சவாலாகக் காணப்படப் போகின்றது. போரின்போது என்ன நடைபெற்றது என்பதை அறிந்து கொள்வதற்கு இலங்கைச் சமூகங் கள் மத்தியில் கலந்துரையாடல்கள் அவசியமானது.

தமிழ் மக்களோ அல்லது முஸ் லிம்களோ உள்நாட்டுப்பொறி முறை ஒன்றின் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மேலும் இந்தப் பொறுப்புக் கூறும் பொறிமுறை பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையில் நீதியைத் தேடு வதற்காக இதுவரை இத்துணை தூரம் பயணித்துள்ள அமெரிக்கா எதிர்காலத்தில் இன்ன மும் நெருக்க மான ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரசார இயக்குநர் ஜோன் சிவ்டன் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பான தீர்மானம் தெளிவானதாக, உறுதியான மொழியில் அமைந்துள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் பொறி முறை எவ்வகையில் தோல்வியைத் தழுவலாம் என்பதை சுட்டிக்காட் டியுள்ளமையை அதில் அவதானிக்க வேண்டும்.

இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையில் சம்பந்தப்பட்டு உள்ளவர்கள், அதில் நம்பிக்கை இல்லாதவர்களால் அச்சுறுத்தப்படலாம். இலங்கை தொடர்பான வலுவான தீர்மானமொன்றை நிறைவேற்றுமாறு காங்கிரஸ், ஒபாமா நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். (த–வ)

காணி விற்பனைக்கு
புத்தூர் சந்தி புத்தூர் வீதி (A9 புத்தூர் சந்தியிலிருந்து 200m தூரத்தில்)
கிணறு, மலசல கூடம் என்பற்றுடன் கூடிய 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: ·077 737 4925 ·0045 223 246 80

தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள்
சென்னை -10% off
லண்டன் -20% off
சுவிஸ் -15% off
நேஷன் வேர்டில் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
128,பிறவுண் வீதி யாழ்ப்பாணம் 0214920920,0773083820

விற்பனைக்கு
WHEEL ALIGNMENT SYSTEM
MONDOLFO FERRO
Trigon 725 (புதியது)
WHEEL BALANCING SYSTEM
MONDOLFO FERRO
M.T. 3200
EASY - ALU
ஸ்ரீகாந்தா சேவிஸ் நிலையம்
பலாலி வீதி, கோண்டாவில்.
T.P: 021 300 8977
(64782)(10.15.17)

பணியாளர்கள் தேவையா?
உங்கள் நிறுவனத்துக்கு வேண்டிய தகுதியான பணியாளர்களைப் பெற்றிட இன்றே
இலவச சேவை
WIN STAR JOB BANK
இனை நாடுங்கள்
இலவச சேவை
- எவ்விதமான கட்டணங்களும் இல்லை.
- சகலவிதமான தகைமைகளுடனும் எம்மிடம் பணியாளர்கள் உண்டு.
- உங்கள் விளம்பரச் செலவினை தவிர்த்துக் கொள்ளலாம். குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

WIN STAR JOB BANK மூலம் பணியாளர்களைப் பெற்று உங்கள் நிறுவனத்தினை வளமாக்கிடுங்கள்
WIN STAR JOB BANK
No.106, Post box Junction, Palaly Road, Thirunelvely.
(64776)(10.15.17) 021 320 9727

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு: 01.09.1942 இறப்பு: 19.09.2015

### கமலாசனதேவி ஜயாத்துரை

வதிரி பந்தியவத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலாசனதேவி ஜயாத்துரை நேற்று (19.09.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலங்கட்டை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராசாத்தி இல்லம்,
பந்தியவத்தை, நெல்லியடி
வடக்கு, கரவெட்டி.

தகவல்:
அரியராஜா மகிந்தன்

(C/19301) (10.15.17)

### திருமதி ஜெயராணி ரெட்ணராஜா



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி ரெட்ணராஜா 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - மார்க்கிறற் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான பேரின் பரட்ணம் - மேரி யோசேப்பின் தம்பதியினரின் அன்பு மருமகளும், ரெட்ணராஜாவின் (பிரத்தியேக கணித ஆசிரியர்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற வர்களான லில்லி, ஜெயமணி மற்றும் இந்திராணி, புஸ்பராணி, சந்திரராணி, ராஜகுமாரன் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பற்றிக், நீக்கிலஸ், அருள்ரெட்ணம், அழகேந்திரன், இன்பராணி, ஜெயசீலன் மற்றும் வத்சலா, வசந்தராணி, செல்வகுமார், அன்ரன் பாலேந்திரா, சியாமளா, ராஜகுலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற பத்மநாதர் மற்றும் யேசுதாசன், சண்முகதேவன், கலையரசி, பற்றிமா ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.09.2015) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12/3, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை கைலாயநாதன்



பிறப்பு: 27.11.1947 இறப்பு: 19.09.2015

யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், மன்னார் உப்புக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கைலாயநாதன் நேற்று (19.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை-மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், பேபிசாந்தா, காலஞ்சென்றவர்களான இலகநாதன், யோகநாதன், சண்முகநாதன் மற்றும் ஜெயராணி, யோகராணி, செல்வராணி, பத்மநாதன் (இந்தியா) ஆகியோரின் சகோதரனும், ரமேஸ் (கனடா), வாசுகி, கோணேஸ் (கனடா), தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசீகரன் (காணி மாவட்ட பதிவகம்-மன்னார்), சுஜாதா (கனடா), நிமலகுமார் (சுகாதார திணைக்கள சாரதி-மன்னார்) ஆகியோரின் மாமனும், கிஷாலினி, கிஷாமினி, ரக்ஷாஜினி, ஹரிஸ், ஹரிணி, ஹாசினி (கனடா), தனிஸ், விதுன், பிரணிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வசீகரன் 0771038547
நிமலகுமார் 0779725300
ரமேஸ் 0014389323834
ரஞ்சன் (கனடா) 0016479281336

தகவல்:
குடும்பத்தினர்.

(C/19303)
(10.17)

## திருமதி பொன்மணி பத்மநாதன்



கோணப்புலம் ஒழுங்கை, நீதி மன்றவீதி மல்லாகத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி பத்மநாதன் 19.09.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி, நாகம்மா மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் உமாகுலம், திலகவதி ஆகியோரின் ஆசை மைத்துனியும். முரளிதரன் (ஜேர்மனி), சத்தியபாமா, வாகீசன் (சுவிற்சலாந்து), சத்தியபிரியா(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), புவனகௌரி (ஜேர்மனி), விஜயகுமார்(ஜேர்மனி), தயாளகௌரி (ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி) காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கணக்கர் வளவு நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் உள்ள சகோதரனின் இல்லத்தில் நாளை (21.09.2015) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப 10.30 மணிக்கு இல்லத்தில் இருந்து மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணக்காளர் வளவு,
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
சகோதரன்
மு.பொன்னுத்துரை
021 300 1579

## விஸ்வகீர்த்தி தாதபிள்ளை தர்மரட்ணம் (செயலாளர் யாழ் மாநகர சபை)



தேசிய மற்றும் சர்வதேசப் பணிப்பாளர் அகில இலங்கை சமாதான நீதவான்கள் மனித உரிமை இயக்கம்.

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாதபிள்ளை தர்மரட்ணம் 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாதபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமணி வல்லிபுரம் மற்றும் தங்கராணி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரிகாவின் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை) அன்புக் கணவரும், ராகுல (ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), பிரகாஷ் (யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன்), சங்கவி (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியவதி (ஓய்வுநிலை யாழ் போதனா வைத்தியசாலை), செல்வரட்ணம் (ஓய்வுநிலை சுகாதார திணைக்களம்), காலஞ்சென்ற அரியரட்ணம் (தொழில் திணைக்களம்) மற்றும் சந்திரகலா (ஓய்வுநிலை மாநகர சுகாதார பணிமனை), உதயரட்ணம் (தொழில்துறை திணைக்களம்), அசோகரட்ணம் (பொறுப்பதிகாரி மதுவரித்திணைக்களம் வடமராட்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சங்கரநாதன் (ஓய்வுநிலை விற்பனைத்திணைக்களம்), காலஞ்சென்ற ஆனந்தராஜா (ஓய்வுநிலை விற்பனைத்திணைக்களம்), சகுந்தலாதேவி, கமலநாயகி, றூபா (வலிகாமம் உதவிக்கல்விப் பணிப்பாளர் கல்வித் திணைக்களம்), ஸ்ரீசண்முகபிரியா (அதிகாரி மத்திய சுற்றாடல் அதிகாரசபை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தாரகா (நீர்வழங்கல் அதிகார சபை), கனிஸ்ரோ (அஞ்சல் திணைக்களம் யாழ்ப்பாணம்), சத்யன் (INTEX PVT. LTD), இந்துஷா (ஆஸ்திரேலியா), துவாரகா (நேசன் லங்கா PVT. LTD), கார்த்திகா (முன்பள்ளி ஆசிரியை), தாரங்கன் (தீவக கல்வி வலயம்), கோபிநாத் (யாழ் பல்கலைக்கழகம்), துஸிதாஸ் (மருந்தாளர் பயிலுனர் சுகாதார அமைச்சு), பிரியங்கா (ஆஸ்திரேலியா), நிஷங்கா (மாணவி யாழ் வேம்படி மகளிர் கல்லூரி), லக்ஷ்மன் (மாணவன் யாழ் இந்துக் கல்லூரி), வைஷ்ணவி (2+) ஆகியோரின் சித்தப்பாவும், சசிதா (முன்பள்ளி ஆசிரியை), சுயாதா, நிமால்சங்கர் (இலங்கை பெற்றோலியம் கிழக்கு மாகாணம்), விமல்சங்கர் (விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்), ஜெனில்சங்கர் (ஆசிரியர் பூநகரி மத்திய கல்லூரி), சஜிபன் (லண்டன்), சலீபன், கஸ்தூரி, சலீதன், காயத்திரி (அனைவரும் கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நல்லூர் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

33/9, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0212229595

# யாழ். இந்துக் கல்லூரிக்கு பளுதூக்கலில் 2 தங்கம்

*7 வெள்ளிப் பதக்கம் பெற்று பிரகாசிப்பு*

யாழ்ப்பாணம், செப்.20

அகில இலங்கை பாடசாலை மட்ட பளுதூக்கும் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர்கள் இரண்டு தங்கம் உட்பட 9 பதக்கங்களை சுவீகரித்தனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 2015ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட 17 ஆவது பிரிவு ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டி நேற்று பொலன றுவை றோயல் கல்லூரியில் இடம் பெற்றது.

இதில் யாழ். இந்துக்கல்லூரி இரண்டு தங்கம் உட்பட ஏழு வெள்ளி பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டது.

இதில் சவிதன் 94கிலோ எடைப் பிரிவில் 150கிலோ எடையை தூக்கி முதலாம் இடத்தையும்,கிரிசன் 194 கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில் 135 கிலோ எடையை தூக்கி முதலாம் இடத்தையும் பெற்று தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

அபினேயன் 50கிலோ எடை பிரிவில் 138கிலோ எடையை தூக்கி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும்,யுஜந்தன் 56கிலோ எடைப்பிரிவில் 146கிலோ எடையை தூக்கி இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளி பதக்கத்தையும் ,டி.டி.யூட். 69கிலோ எடைப் பிரிவில் 130கிலோ எடையைத் தூக்கி இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளி பதக்கத்தையும் ,மிதுன் 77கிலோ எடைப்பிரில் 146 கிலோ எடையைத்தூக்கிஇரண்டாம்இடத்தை பெற்று வெள்ளி பதக்கத்தையும் , சிறிசன் 85கிலோ எடைப்பிரிவில் 143கிலோ எடையை தூக்கி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் ,கிஷாந் 94கிலோ எடைப்பிரிவில் 138கிலோ எடையைத் தூக்கி இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், ஜதிபன் 94கிலோ எடைக்கு மேற்பட்ட பிரிவில்125கிலோ எடையைத் தூக்கி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளி பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (வ–23)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி சிவப்பிரகாசம் (மண்கும்பான்)



மண்கும்பான் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பூமணி சிவப்பிரகாசம் 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் இராசம்மா தம்பதிகளின் மருமகளும், தங்கத்துரை, காலஞ்சென்ற சின்னம்மா, மற்றும் இராசரெத்தினம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், வசந்திரதேவி (இந்தியா), குகநேசன் (சோதி - சங்கீதா நகைமாடம்), சிவநேசன் (பிரான்ஸ்), சுமதி (நரம்பளை), விஜியநேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாயாரும் யோகநாதன், சாந்தினி, பரிமளா, மோகனராசா, கீர்திகா ஆகியோரின் மாமியும், பாணுரேகா, நிரோசன், சங்கீதா, சயந்தி, வசந், டக்ஷிகா, நிசாந், திவ்வியப்பிரசாத், கஜலக்சன், ரனுஜான், திவாஸ்கர், சக்ஷிதா, அனுஸ்கா, மானுஜா ஆகியோரின் பேர்த்தியும் டக்ஷா, சஹானா, சபரிஸ், காலஞ்சென்ற ஹர்சயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மேற்கு மண்கும்பான்.

(64779,11,15,16)

தகவல் :-
குடும்பத்தினர்.

## திருமதி யோகேஸ்வரி (பேபி) சண்முகம்



கைதடியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சண்முகம் 18.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகத்தின் அன்பு மனைவியும், உஷா, உமாசுதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஸ்ரீபன், மதிவதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் ஆறுமுகம், சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாளினி, தயா ளினி, மாலினி, வலன்ரைன், அலன்ரைன், கிருஸ்ணதுரோணன் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2015) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி - மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லாரை, மல்லாகம்.
021 321 9733

(64778)
(10.15.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மங்களேஸ்வரி சுப்பிரமணியம்



மீசாலை, அல்லாரை தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி சுப்பிரமணியம் அவர்கள் 16.09.2015 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அம்மாக்குட்டி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லமுத்து தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் பராசக்தி, பாக்கியலீலா, சறோஜா(சுவிஸ்), சந்திரசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடராசா, இராசதுரை, சிவராசா(சுவிஸ்), இராஜரஞ்சிதம்(ஆசிரியை - யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், நந்தகோபன்(- H.N.Bகிளிநொச்சி), சுசிலா (தாதிய உத்தியோகத்தர் - யாழ்போதனா வைத்தியசாலை), அகிலன் (சுவிஸ்), சோபா(சுவிஸ்), நிதர்சன், அபிசனா (சுவிஸ்), தனுஷிகா (யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி),பிறின்ஷிகா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்அக்ஷயா, வர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.09.2015 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 077 4482, 077 418 8597

# சாவுத் தண்டனை எதிர்நோக்கும் 1115 கைதிகள்

கொழும்பு, செப். 20

நாட்டில் உள்ள பல்வேறு சிறைச் சாலைகளில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டனை நிறைவேற்றப்படாத நிலையில் ஆயிரத்து 115 கைதிகள் இருப்பதாகச் சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 480 பேர் மாத்திரம் தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யாதவர்கள் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹான் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை, போகம்பரை, மஹர ஆகிய பல்வேறு சிறைச்சாலைகளில் இவ்வாறு சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இவர்களில் ஆண்களே அதிகமாக உள்ளனர்.

இதேவேளை 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் சாவுத் தண் டனை நடைமுறைப்படுத்தப் படவில்லை.

அத்துடன் தற்போது நாட்டில் அலுக்கோசு பதவி வெற்றிடமாக உள்ளமையினால் அதற்காக சிறைச் சாலைகள் திணைக்களத்தினால் அண்மையில் நாடு முழுவதும் விண்ணப்பம் கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கறுப்பு நிற வளமான யமுனாப்பாறி இன கிடாய் ஆடும் ஊர்க்கோழிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777590496 (64781) (10.15.17)

## உதவியாளர் தேவை

இருவர் மட்டும் உள்ள குடும்பத்துடன் தங்கி இருக்கக் கூடிய பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு : 077 613 8964 (64781)(11.15.16)

## தேவை

அச்சு இயந்திர இயக்குநர்கள் (KORA)

அச்சு இயந்திர உதவியாளர்கள்

கணினி வடிவமைப்பாளர்

அச்சுக்கூட உதவியாளர்கள் (Binding)

தொடர்பு: 077 165 9845

## காணி வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இணுவில் வீதியில் பாலாவோடை சந்திக்கு அருகில் வீட்டுடன் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 021 205 2467 (64785) (10.17)

## தையல்

இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்

இடம் : குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி, கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தொடர்பு : 076 639 9277 (62813,11,15)

## VACANCY

**Company** : Pillaiyar Rice Mills and Hardware Stores, Mallavi, Mullaitivu.

**Business** : Rice milling, Hardware material and Agro Input sales

**Job Title** : General Manager.

**OBJECTIVE / Job Purpose**

Responsible for planning and implementing overall business activities based on the vision of the company owner. Introduce systems and controls to improve the efficiency of the organization's functions including for manufacturing, trading and logistics. Provide direction and guidance to the management and staff, and liaise with the company owner and other stakeholders.

The candidate will be responsible for the below mentioned responsibilities and organizational functions.

Operations Management
Finance and administration
Human Resource Management
Training
Production Planning & Control
Process Enhancement & Cost Control
Quality Assurance
Preventive maintenance of production equipment
Occupational Safety and Health
Communication with stakeholders

**Required qualifications, Experience and Skills:**

1. Bachelor's of Degree in business Management or Business Administration.
2. A minimum of 2 years of experience in managing a business, preferably in manufacturing with direct responsibility for managing finance and operation of the business entity.
3. Effective problem solving capabilities.
4. Proven interpersonal and communication skills
5. Ability to read, write and converse in English and Sinhala in addition to proficiency in Tamil is preferred.
6. Proficiency in Computer packages and accounting software (Excel, QuickBooks)

Please forward your curriculum vitae indicating the post applied for and contact details with the name and addresses of two non-related referees within 7 days of this advertisement by e-mail to : **pillaiyarmill@hotmail.com**

**DIRECTOR**
**Pillaiyar Rice Mill (Pvt) Ltd,**
**Aninjiankulam, Mallavi, Mullaitivu.** (64986)(10.17)

## கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரில் — Full / Part time

### SPOKEN English With Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்களாக நடைபெறுவதுடன் பகுதி நேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

Full time : 3 Months — Course Fee : 13250/=

### 75% கட்டணக் கழிவுடன் கணனி கற்கை நெறிகள்

| Courses | Duration | Offer Fee |
|---|---|---|
| MS Office | 3 Months | 2000/= |
| DCS ( Diploma ) | 4 Months | 3000/= |
| Graphics | 4 Months | 7500/= |
| Web Design | 4 Months | 7000/= |
| Com. Hardware | 2 Months | 3000/= |

### Computerized Accounting

Accpack + M.Y.O.B. +Quick book + Tally

| | | |
|---|---|---|
| Monday to Friday | 1Week | Offer Fee 3250/= |
| Sat. / Sunday | 1 Month | |

### AutoCAD

| | | |
|---|---|---|
| Monday to Friday | 9amto 5pm | 3Weeks |
| Sat. / Sunday only | 9am to 5pm | 3 Months |

பாடநெறி முடிவில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

**BRITISH COLLEGE** OF EDUCATION

23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927114, 077-8927639

103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523

39, Convent Rd, Mannar. Tel : 023-4924124, 077-1113205

10, Vaverset Place, Wellawatta. Colombo -06. — 585, Peradeniya Rd, Kandy.

## பாடசாலை சேவை

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கான ஓட்டோ சேவை வழங்கப்படும்.

தொடர்பு : 077 979 0072 (64778)(11.15.16)

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பிரதான வீதியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் இருந்து 600 m தூரத்தில் 35 பரப்புக்காணி முழுமையாகவோ பிரித்தோ விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 6102405 ,077 491 3399

## பதிவு பெற்ற மருந்தாளர் தேவை

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்துக்கு Srilankan Medical Council இல் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவை.

தொடர்புகளுக்கு:- 07777 87 545 (64773)(10.15.17)

## பல புதிய மாற்றங்களுடன் புலமைச்சுடர்

(2016இல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கானது)




தற்போது தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான புலமைச்சுடரானது. இது வரை புலமை 10 வரை வெளிவந்தது. இவ் வருடம் புலமைப் பரிசில் பரீட்சை முடிவடைந்தமையால் புலமை 11லிருந்து புதுமையான பல மாற்றங்களுடன் முழுமையாக பயிற்சிகளைத் தாங்கிய வண்ணம் வெளிவருகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதியிலிருந்து

புலமைச்சுடரைப் பெற்று உங்கள் பிள்ளைகளை பரீட்சைக்கு தயார்ப்படுத்துங்கள்.

நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு இன்றே எமது சுடர்ஒளி , உதயன் பத்திரிகை முகவர்களிடம் முன்பதிவு செய்துகொள்ளுங்கள். அழைப்புக்களுக்கு

யாழ்ப்பாணம் : - 07765[illegible]/0774228102 — வவுனியா,மன்னார் :- 0772772726

மலையகம் :- 0718724056 — கிழக்குமாகாணம்:- 0773661093 — கொழும்பு:- 0718628379

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலப்பு நீதி

சாராக் கூட்டத்தில் இந்த வரைவு சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளது. வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபை அலுவலகத்தில் வரைவு விவாதத்துக்காகச் சமர்ப்பிக்கப்படும். எதிர்வரும் 30ஆம் திகதியளவில் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஆறு பக்கங்களில், 26 பந்திகளைக் கொண்ட இந்த வரைவின் பிரதி கடந்த வியாழக்கிழமை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மான வரைவு அமெரிக்கா தலைமையில், பிரித்தானியா, மசிடோனியா, மொன்ரெனிக்ரோ ஆகிய நாடுகளின் இணை அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

வரைவின்படி, அதில் கூறப்படும் விடயங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்படவுள் ளது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அது பற்றி ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கண்காணித்து பரிந்துரைகளின் முன்னேற்றம், மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து, 2016 செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 33ஆவது அமர்வில் வாய்மூல அறிக்கையை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

தற்போதைய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி, முன்னேற்றங்கள் தொடர்பான விரிவான அறிக்கையை, 2017 மார்ச் மாதம் நடைபெறவுள்ள, சபையின் 34ஆவது அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மான வரைவு கோரியுள்ளது. (உ–வ)

(தீர்மான வரைவின் சாராம்சங்களை உள்ளடக்கிய விரிவான விவரம் சூரியகாந்தி அட்டைப்படக் கட்டுரையில் உள்ளது)

## அமெரிக்கா

தலைமையகத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மாநாட்டில் ஜனா திபதி கலந்துகொண்டு உரை யாற்றவுள்ளார்.

அத்துடன் அமெரிக்க ஜனா திபதி பராக் ஒபாமாவையும் சந் தித்துக் கலந்துரையாடல் மேற் கொள்ளவுள்ளார் என ஜனாதி பதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மாநாட்டின் 70 ஆவது அமர்வு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த–சி)

## அரசமைப்புச்

சித் தலைவர் ஆகியோர் அரசமைப்புப் பேரவையின் பதவி ரீதி யான அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர். ஏனைய அங்கத்தவர்களுடன் அரசியலமைப்பு பேரவையில் மொத்தம் 10 பேர் அடங்குகின்றனர். ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார். அரச தரப்பு பிரதிநிதியாக பிரதமரினால் அமைச்சர் விஜேதாசராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் இணைந்து மேலும் 5 பிரதிநிதிகளை நியமிக்க வேண்டியுள்ளது. இந்த ஐவரில் மூவர் சிவில் பிரதிநிதிகள் என்பதுடன், ஏனைய இரண்டு அங்கத்தவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலை வரைப் பிரதிநிதித்துவப்படுத்தாத ஒருவர் அரசமைப்புப் பேரவைக்கு நியமிக்கப்படவேண்டியுள்ளபோதிலும், அந்த அங்கத்தவர் இதுவரை பெயரிடப்படவில்லை என நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம் நீ. இத்தவெல குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக பெரும்பாலும் அந்த அங்கத்தவர் பிரேரிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்பு பேரவை நாளை கூடுகின்றபோது, சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான பிரதிநிதிகளின் பெயர்கள் குறித்து கலந்துரை யாடப்படவுள்ளது. ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.இந்த ஆணைக்குழுக்களுக்குத் தொழிற்சங்கங்கள் பலவற்றிடமிருந்து பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் நீல் இத்தவெல மேலும் கூறினார். (த–வ)

## கடல்களில்

வடமராட்சி, கற்கோவளம் கடலில் நேற்றுப் பிற்பகல் குளிக்கச் சென்ற மாண வன் காணாமல் போயுள்ளார். மாலுசந்தி பத்தானையைச் சேர்ந்த புஸ்பராசா துவாகரன் (வயது –19) என்பவரே காணாமற் போனவராவார். நெல்லியடி மத்திய கல்லூரியில் ஜீ.சீ.ஈ. உயர் தரத்தில் பயிலும் இவர் சக நண்பர்களுடன் குளிக்கச் சென்றுள்ளார்.

கடலில் இறங்கிய நிலையில் கரைப் பகுதியிலேயே ஆழம் அதிகமாகக் காணப்பட்டதனால் தன்னைக் காப்பாற்றுமாறு கையால் சைகை காட்டியுள்ளார் என்றும், நண்பர்கள் குறிப்பிட்ட தூரம் சென்ற போதும் அவரைக் அவர்களால் கண்டறிய முடியவில்லை என்றும், அதனால் அச்சத்தில் கரையேறிக் கடற்கரையில் தொழில் புரிவோரை அழைத்துள்ளனர் எனவும் கூறப்பட்டது. தொழிலாளர்கள் கடலில் தேடியபோதும் அவர் மீட்கப்படவில்லை. இதனையடுத்துப் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. சுழி ஓடுபவர்களின் துணையுடன் பொலிஸார் தேடியபோதும் சடலம் கிடைக்கவில்லை என்றும், தாம் முன்னரும் அவ்வாறு அங்கு குளிக்கச் செல்வதாகவும் அவருடன் சென்ற ஏனைய நண்பர்கள் பொலிஸாருக்கு முதற்கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் துவாரகனின் பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுச் சம்பவ இடத்துக்கு வந்த தந்தையார், படகு மேல் வைக்கப்பட்ட நீளக்காற்சட்டை, சேட், ரீசேட், சைக்கிள் திறப்பு என்பவை தனது மகனுடையது என அடையாளம் காட்டியுள்ளார்.

குறித்த கடல் ஆபத்து நிறைந்த பகுதி எனவும், அந்தப் பகுதியில் பெயர் பலகை காணப்பட்டதாவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அந்தப் பகுதியில் மூழ்கினால் முனைப் பகுதியிலேயே சடலங்கள் கரையொதுங்குவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, முல்லைத்தீவு உப்புமாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள தூண்டாய் வடக்கு கடலில் குளித்துகொண்டிருந்த பாடசாலை மாணவர்களில் ஒருவர் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார். மற்றையவர் நீரில் மூழ்கிய நிலையில் காணாமற்போயுள்ளார்;. அவரைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளியவளை குமரபுரத்தைச் சேர்ந்த சத்தியநாதன் அனுசன் (வயது 17) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். உடுப்புக்குளத்தைச் சேர்ந்த சரவணகுமார் பிரதீஸ் (வயது 17) என்பவர் காணாமல் போனவர்.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் 3 பேரும் நேற்று முற்பகல் 11 மணியளவில் கடற்கரைக்கு நாவற்பழம் பிடுங்கச் சென்று பின்னர் அருகே யுள்ள பெருங்கடலில் குளித்துள்ளனர். அதன்போதே இருவர் கடலில் மூழ்கியுள்ளனர். உடனே ஏனைய மூன்று மாணவர்களும் கரையேறி அருகேயுள்ளவர்களை உதவிக்கு அழைத்து அவர்கள் விரைந்து கடலில் தேடுதல் மேற்கொண்ட போதும் பயனளிக்கவில்லை. அனுசன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார். அவரது சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மற்றையவரான பிரதீஸ் என்பவரது சடலம் இதுவரை மீட்கப்படவில்லை தேடும் பணி தொடர்கிறது. அந்தக் கிராம மக்களும் அயல் கிராம மக்களும் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மற்றைய சம்பவம் திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது. கண்டியிலிருந்து சுற்றுலா சென்றிருந்த குறித்த 15 வயது டைய சிறுவன் இறக்ககண்டி காந்தி நகர் கடலில் நேற்று முற்பகல் குளிக்கச் சென்றபோதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். நீதவான் விசாரணைகளின் பின்னர் சிறுவனின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(4,433,101,102,108,109–422)

## மத்திக்கும்

ளின் உதவியுடன் முன்னேறுவது தான் சிறந்தது.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

துன்னாலை மத்தி, கரவெட்டியிலுள்ள கோவிற்கடவை சனசமூக நிலையத் திறப்பு விழா நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தன்கையே தனக்கு உதவி என்பதற்கேற்ப மக்கள் அரசையே எதற்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்காது தனியார் நிறுவனங்களுடனும் தனி மனிதர்களுடனும் சேர்ந்து முன்னேறுவதுதான் இன்றைய காலகட்டத்தில் உசிதமானது. காரணம் அரசியல். மக்கள் பங்களிப்புடன் ஆரம்பிக்கின்ற எந்தவொரு வேலைத் திட்டமும் தோற்றுப் போனதாகச் சரித்திரம் இல்லை.

எமக்குக் கிடைக்கும் நிதியும் மிகச் சொற்பமே. எமது வருமானத்தை அதிகப்படுத்த சட்டதிட்டங்களைத் தற்போது உருவாக்கி வருகிறோம். அங்கும் நியதிச் சட்ட திட்டங்களை உருவாக்கக்கூடிய திறன் மிகுந்த அலுவலரின் பற்றாக்குறை எம்மைப் பாதித்துள்ளது.

தற்காலத்தில் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளின் ஒழுக்கப் பாடானது எம்முன்னே பரந்து விரிந்து கிடக்கின்ற பெரிய விடயமாகவுள்ளது. எமது பிள்ளைகளை அல்லது எம்மைச் சார்ந்துள்ள பிள்ளைகளை எவ்வாறு ஒழுக்க சீலர்களாக மாற்றுவது என்பது எம்முடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். அவர்களின் பழக்கவழக்கங்களைப் பாதிக்கக்கூடிய அடிப்படைக் காரணிகள் எவை? போதைப் பொருள்கள் எவ்வாறு மாணவர்களின் கைகளுக்குக் கிடைக்கின்றன? அதற்கான பணம் எவ்வாறு கிடைக்கிறது? போன்ற விடயங்களில் அனைவரும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

எமது சமூகத்தின் அழியாச் செல்வமாக விளங்கக்கூடிய கல்வி என்ற பெரிய சொத்தை எவ்வாறாவது அதன் [illegible] தெரிந்து [illegible] வர்களாக மாற்றி அடிமைச் சீவியம் நடத்தக்கூடிய கீழ்நிலைச் சமூகமாக மாற்றுவதற்குத் திட்டமிட்ட அரசியல் சதிவேலைகள் எம்முன்னே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதோ என்று எண்ண இடமுண்டு.

கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் எனப் பல செய்திகளும் வருகின்றன. மிகவும் பண்பட்ட சமுதாயமாகச் சிறந்த பழக்க வழக்கங்களுடன் கல்வியிலும் சிறந்து விளங்கிய எமது சமூகம் சீர்கெட்டுப் போவதனை, வேண்டும் என்றே திட்டமிட்டு அழிக்கப்படுவதை நாம் பார்த்துக் கொண்டு வாழாதிருக்க முடியாது. இவ்வாறான செயல்களைக் கண்காணிக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய சக்தி சனசமூக நிலையங்களுக்கு உண்டு. இதன் காரணமாகப் பொலிஸாருடன் பொதுமக்கள் சேர்ந்து எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ந்து அதற்கான குழு அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். விரைவில் மேல் மட்ட, நடுத்தர, கீழ் மட்டக் குழுக்கள் செயற்படவுள்ளன. மேல்மட்டக் குழு பிரதிப் பொலிஸ் மா அதிபர், அமைச்சர்கள் மட்டத்தில் ஆராயும். நடுத்தரக் குழு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மாகாண சபை உறுப்பினர் மட்டத்தில் ஆராயும்.மக்களிடையே கீழ் மட்டத்தில் செயற்பட இருக்கும் குழுக்களில் சனசமூக நிலைய அலுவலர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

எனவே மாணவர்கள், இளைஞர், யுவதிகள், உறவினர்கள், தெரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் போதைப் பழக்க வழக்கங்களுக்கும், களவு, கொள்ளைகளுக்கும் ஆளாவதாகத் தெரியவந்தால் அவர்களுக்கு அதனைக் கைவிடும்படி அன்பாக எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் எங்கள் குழுக்களிடம் அல்லது உங்கள் கல்லூரிகள் மூலமாக எடுத்துச் சொல்லுங்கள். முயற்சித்தால் ஆகாதது ஒன்றுமில்லை–என்றார்.

குறித்த சனசமூக நிலையம் சுமார் 8 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. அதனை முதலமைச்சர் இந்தியத் துணைத் தூதர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (த–4–108)

## சர்வதேசப் பங்களிப்புடன்

இந்தக் கருத்து வெளியிடப் பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்க ளுக்கான உதவி இராஜாங் கச் செயலர் நிஷா பிஸ் வால் இது குறித்து பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திடம் கருத்து வெளியிடுகையில்,

மனித உரிமைகள் கரிசனைகளுக்குத் தீர்வு காண்பதில் இலங்கையின் புதிய அரசு, வலுவான நோக்கத்தைக் கொண்டுள்ளதைப் பார்க்கிறோம். கடந்த ஒன்பது ஆண்டுகளாக செய்யப்பட்டதை விட, அதற்கு அப்பால், கடந்த ஒன்பது மாதங்களில், நம்பிக்கையை கட்டியெழுப்பவும், உள்ளடக்கிய சமூகத்தை நோக்கி நகரவும், இலங்கை அரசு அதிகமாக முயற்சி செய்துள்ளதைப் பார்க்க முடிகிறது.

அது ஒரு ஊக்குவிக்கும் சமிக்ஞை. இது இலங்கயின் முன்பாக உள்ள– அரசின் முன்பாக உள்ள– புதிய ஜனாதிபதியின் முன்பாக உள்ள– மக்களின் முன்பாக உள்ள மிக நீண்ட பாதை.

இலங்கைப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மிகக்கொடூரமான போரில், இருதரப்பிலும் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் திறந்தேயிருக்கின்றன. அவற்றை குணப்படுத்தவேண்டியது மிகவும் அவசியம். இதற்குக் காலம் எடுக்கும். 2009 இல் முடிவுக்கு வந்தது மூன்று தசாப்தங்கள் நீடித்த உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்களில் படையினரின் தாக்குதலில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மனித உரிமை குழுக்கள் கூறுகின்றன.விடுதலைப் புலிகள் மீதும் போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தை நோக்கி எல்லாப் பக்கங்களில் இருந்தும், தீவிரமான தொடர் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இது மிகவும் கடினமான செயல்முறை. நீண்ட செயல்முறை. இதில் தவிர்க்க முடியாத பின்னடைவுகளும் இருக்கும்.

அமைதி மற்றும் எல்லாக் குடிமக்களுக்குமான செழிப்பை இலங்கை மக்கள் அடிப்படையில் ஆர்வம் கொண்டுள்ளனர். எல்லா மக்களுக்கும் செழிப்பான வாய்ப்பையும், அமைதியையும் கொண்டு வருவதற்கு, அந்த நம்பிக்கை எம்மைத் தூண்டுகிறது என்று நான் நினைக்கிறேன்.

இலங்கையில் நீதித்துறை மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த நீண்டகால பிரச்சினைகளுக்கு, நம்பகமான உள்நாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே அமெரிக்கா ஆரம்பத்தில் இருந்து கூறிவந்துள்ளது–என்றார். (த–வ)'

## கலப்பு நீதிமன்ற

சட்டத்தில் இடமில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அனுமதியின்றி வேறொரு வடிவிலான நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கு முடியாதெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க மேலும் தெரிவித்ததாவது:–

ஐ.நா மனித உரிமைகள் சபையின் அறிக்கை தற்போது வெளிவந்துள்ளது. இலங்கையில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் காணப்பட்ட உண்மையான சூழலை வெளிப்படுத்துவதாக அது இல்லை. எவ்வாறாயினும், அந்த அறிக்கை யில் பெரும்பாலான விடயங்கள் மற்றும் அந்த அறிக்கை வெளி யிடப்படும்போது இடம்பெற்ற ஊடகச் சந்திப்புகள் காரணமாக இந்த நாடு குறித்து காணப்பட்ட பாதகத் தன்மை குறைவடைந்துள்ளது.

நாட்டில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற விடயம் போலியானது என உறுதியாகியுள்ளது. அதேபோன்று பாதுபாப்புத் தரப்பு மற்றும் சிவில் உறுப்பினர்கள் 42 பேர் இருக்கிறார்கள் எனப் பெயரளவில் கூறியது போலி என்பதும் வெளியாகியுள்ளது. எமது நாட்டுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்படும் என்ற சந்தேகமும் இல்லாமல் போயுள்ளது.


அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவத்தினர் வெளிநாடுகளில் கைது செய்யப்படுவார்களா என்ற சந்தேகமும் நீங்கியுள்ளது. எவ்வாறாயினும் இது பக்கச் சார்பான அறிக்கை. இந்த அறிக்கையில் ஏதேனும் தீர்மானங்கள் காணப்படுமாயின் அதனை அவ்வாறே செயற்படுத்த இலங்கைக்கு கடப்பாடு கிடையாது. ஐ.நா. பொதுச் சபையிலும் பாதுகாப்புச் சபையிலும் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செயற்படுத்த வேண்டி ஏற்படும்–என்றார். (த–வ)

## ஏற்கக்கூடிய

முக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஜெனிவாவில் தற்போது என்ன நடக்கின்றது என்பதன் அடிப்படையில் தீர்வுத் திட்டம் முன்வைக்கப் படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ள சம்பந்தன், நடைமுறைப் படுத்தப்படக்கூடிய நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக் கப் படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (த–வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹங்கேரிய – சைபீரிய எல்லையில் இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைக்குண்டு, நீர்த் தாக்குதல், மிளகு விசிறல் போன்றவற்றைப் பயன்படுத்தி ஐரோப்பிய குடியேறிகளைத் தடுக்கின்றனர். இதனால் பெண்கள், சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (த–ரி4)



# அடுத்த அய்லான்

## கிரீஸ் நாட்டுக் கடற்கரையில் ஒதுங்கிய பெண் குழந்தை

தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அஞ்சி அகதிகளாக ஐரோப்பாவுக்குச் சென்ற சிரியா நாட்டு குடும்பத்தை சேர்ந்த 3 வயதுக் குழந்தை அய்லான், கடலோரத்தில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட புகைப்படம், உலகம் முழுவதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அய்லானின் புகைப்படம் ஏற்படுத்திய விளைவால், அகதிகளை ஏற்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகின ஐரோப்பிய நாடுகள்.

இந்நிலையில் கிரீஸ் நாட்டின் ஸ்மிர் மாகாணத்தில் அய்ஜெயன் நகரக் கடற்கரையில் உயிரற்ற நிலையில் ஒரு பெண் குழந்தையின் உடல் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (த–ரி4)

# ஐ.எஸ். படையில் 2400 ரஷ்யர்கள்

## அதிர்ச்சித் தகவல் வெளியாகியது

மொஸ்கோ, செப்.21

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ் தீவிரவாதிகள் அப்பகுதியை இஸ்லாமியச் சட்டதிட்டத்துக்கு உட்பட்ட ஆட்சி நடக்கும் தனிநாடாக (இஸ்லாமிக் ஸ்டேட்) அறிவித்துள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சிரியா, ஈராக் நாட்டு ராணுவத்துடன் அமெரிக்க நட்பு நாடுகள் போரிட்டு வருகின்றன. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆதரவாக ரஷ்யா ஆயுதங்களைக் கொடுத்து உதவி வருவதாக அமெரிக்கா நீண்டகாலமாகக் குற்றம்சாட்டி வருகிறது.தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகள் இயக்கத்தில் 2ஆயிரத்து 400 இக்கும் மேற்பட்ட ரஷ்யர்கள் இணைந்து போரிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மத்திய ஆசியாவை சேர்ந்த சுமார் 3 ஆயிரம் பேர் ஐ.எஸ். இயக்கத்தில் உள்ளனர்.



இதில் ரஷ்யாவைச் சேர்ந் தவர்கள் மட்டும் 2ஆயிரத்து 400 பேர் என ரஷ்யாவின் பாதுகாப் புத்துறை அமைச்சகத்தின் முதன்மை துணை இயக்குநர் செர்கேய் ஸ்மிர் னோவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ரஷ்ய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், சமீட காலங்களில் ஐ.எஸ் இயக்கத்திற்காகப் போரிட்ட 170 ரஷ்யர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (த–ரி4)

# ஜன்னல் வழியே 300 குழந்தைகளை தூக்கி வீசிக் காப்பாற்றிய ஆசிரியர்கள்

## பாடசாலையில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து

பீஜிங்,செப்.21

சீனாவின் புஜியான் மாகாணத்தில் உள்ள நின்ங்டே நகரில் உள்ள மழலையர் பள்ளிக் கட்டடத்தில் கடந்த புதன்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. இதில் குழந்தைகளை ஜன்னல் வழியே தூக்கி எறிந்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் காப்பாற்றினர்.

இந்த மழலையர் பள்ளிக் கட்டடத்துக்கு கீழே இருந்த காகிதப் பூக்கடையில் ஏற்பட்ட தீ பரவத் தொடங்கியதால் இந்த கட்டடம் முழுவதும் கரும் புகை சூழ்ந்து கொண்டது.



இதையடுத்து அந்த கட்டடத்தின் குடியிருப்பில் இருந்த மக்கள் அதன் கீழே பெரிய கம்பளியைப் பிடித்துக் கொண்டனர். இந்தப் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் குழந்தைகளை பள்ளியில் ஜன்னல் வழியே கம்பளி மீது எறிந்தனர். இந்த வகையில் சுமார் 300 குழந்தைகளுக்கும் மேல் காப்பாற்றப்பட்டனர். இவர்களில் சுமார் 92 குழந்தைகளும், 12 பெரியவர்களும், தீயின் பாதிப்பிலிருந்து மீட்கப்பட்டாலும், இயல்பு நிலைக்கு வராததால், மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டனர். தீயணைப்பு வீரர்கள் வெறும் அரை மணி நேரத்தில் உயிர்ச்சேதமின்றி, இந்த கட்டடத்தில் பரவியிருந்த தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களும் சமயோசிதமாக யோசித்ததால் எதிர்கால இளைய சமுதாயத்தினரான மழலைகள் பாதுகாப்பாக தப்பி உயிர் பிழைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி4)

# சிலி நில நடுக்க எதிரொலி: ஜப்பானில் சுனாமி அச்சம்



ரோக்கியோ, செப். 21

சிலி நாட்டில் தலைநகர் சாண்டியாகோவில் கடந்த 16 ஆம் திகதி 8.3 ரிச்டரில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. அதில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. அதில் 11 பேர் உயிரிழந்தனர். கடலுக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டதாக அப்போது அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அதன் தாக்கம் சிலி மட்டுமின்றி ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிலும் எதிரொலித்தது. ஜப்பானில் வட கிழக்குக் கடற்கரைப் பகுதியில் குஜி என்ற பகுதி உள்ளது. அங்கு 12 க்கும் மேற்பட்ட சுனாமி அலைகள் தாக்கின. அங்கு 80 சென்ரி மீற்றர் அளவுக்கு ஒரு பெரிய அலையும் மற்ற பகுதிகளில் சிறிய அலைகளும் தாக்கின. முன்னதாகக் கடற்கரையோரம் வாழும் மக்களுக்குச் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கடலோரத்தில் வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். அதைத் தொடர்ந்து மக்கள் சாரை சாரையாக வெளியேறினார்கள். இந்த சுனாமி அலைகள் தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து எந்த தகவலும் இல்லை. (த–ரி4)

# தெற்கு சூடானில் எண்ணெய் லொறி வெடித்து விபத்து

## 182 பேர் சாவு

ஜூபா, செப்.21

சூடான் நாட்டின் தலைநகரான ஜூபாவுக்கு மேற்கே எண்ணெய் ஏற்றி சென்ற ஒரு லொறி திடீரென சாலையை விட்டுவிலகி கவிழ்ந்தது. அப்போது அந்த லொறியில் இருந்து வெளியேறிய எண்ணெயைப் பிடிக்க அந்தப் பகுதி மக்கள் திரண்டனர். அந்த நேரத்தில் திடீரென லொறி வெடித்துச் சிதறியது. இதில் அங்கு திரண்டிருந்த 100 பேர் பலத்த தீக்காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில் இந்த விபத்தில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 182ஆக அதிகரித்து இருப்பதாக அந்நாட்டின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். தெற்கு சூடானில் தீக் காயத்[illegible] பாதிக்கப்பட்டவர்களுக்கு [illegible] சிகிச்சை அளிப்பதற்கான போ[illegible] வசதி இல்லாததால் சாவு [illegible]ணிக்கை மேலும் அதிகரிக்கு[illegible] அஞ்சப்படுகிறது. (த[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடரின் 19 வயது பெண்கள் பிரிவின் முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 20
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடர் நேற்று யாழ். மாவட்டத்தில் ஆரம்பமானது. இந்தத் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவின் முடிவுகள்:–
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கேகாலை பெண்கள் வித்தியாலய அணியை எதிர்த்து யகுன்னாவ மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.இதில்கேகாலைபெண்கள் வித்தியாலய அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க





பாடசாலை அணியை எதிர்த்து காலி பல்லேகலே கனு கனிஷ்ட வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. சமனிலைத் தகர்ப்பு உதைகளில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலை அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் எட்டியாந்தோட்டை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து மாதகல் சென். ஜோசப் றோமன் கத்தோலிக்க பாடசாலை அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்து. சமனிலைத் தகர்ப்பு உதைகளில் சென். ஜோசப் றோமன் கத்தோலிக்க பாடசாலை அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## இன்றைய மோதல்கள்

### ஏ.எல். வி.கழகத்தொடர்

யாழ்ப்பாணம், செப். 20
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.
அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மூளாய் வளர்மதி அணியை எதிர்த்து அராலி திருமகள் அணி மோதவுள்ளது. (ம–23)


### நியூட்டன் வி.கழகத்தொடர்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம–108)

# சமனிலைத் தகர்ப்பு உதைகளில் நியூஸ்ரார் அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செப். 20
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமனிலைத் தகர்ப்பு உதைகளில் நியூஸ்ரார் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

# யங்ஹென்றிஸ் அடுத்த சுற்றுக்குள்



கரணவாய்செப்.20
வடமராட்சி உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன்சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சமனிலை தகர்ப்பு உதை மூலம் சிறிஅம்பாள் வி.கழகத்தை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம்;.
ஆட்டத்தின் முதல் ஐந்து நிமிடங்கள் நிறைவடைவதற்கு முன்னதாகவே சிறிஅம்பாள் அணி சார்பாக முதல் கோல் பதிவானது. பழிதீர்ப்பதற்காக படாதபாடுபட்ட யங்கென்றிஸ் முதல் பாதி முடிவடையும் தருவாயில் நினைத்ததைமுடித்து கோல்கணக்கை 1:1 என்று சமநிலை யாக்கியது.
முதல்பாதியின் ஆரம்பத்தைப் போலவே இரண்டாம் பாதியின் ஆரம்பத்திலும் சிறிஅம்பாளின் ஆதிக்கமே அதிகரித்து காணப்பட்டது. அம்பாள் அணியின் தர்சன் 12ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய 2:1 என முன்னிலை பெற்றது சிறிஅம்பாள். 19 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் சார்பாக பதில்கோல் பதிவாக 2:2 என ஆட்டம் சமனிலையில் முடிந்தது. இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமனிலை தகர்ப்பு உதையில் 4:3 என யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது. (ம–108)

# சென்.அன்ரனிஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், செப். 20
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

# சம்பியனானது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், செப். 20
பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை செந்தாரகை வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் தோட்டவெளி ஜோசவாஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம்சமநிலையில்முடிவடைந்தது. சமநிலைத் தகர்ப்பு உதைகளில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
ஆட்டநாயகனாக மன்னார் தோட்டவெளி ஜோசவாஸ் அணியின் ஜொறோ பயஸ்சும் தொடராட்ட நாயகனாக அதே அணியின் யோண் சனும்; தெரிவான அதேநேரம், சிறந்த கோல் காப்பாளராக நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியின் மைக்கலும் தெரிவானார்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் வடமாகாண விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட்டும் கலந்து கொண்டனர். (ம–23)

# தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடரின் 15வயது ஆண்கள் பிரிவின் முடிவுகள்



யாழ்ப்பாணம், செப். 20
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடர் நேற்று யாழ். மாவட்டத்தில் ஆரம்பமானது. இந்தத்தொடரில் 15வயதுக்குஉட்பட்டஆண்கள் பிரிவின் முடி வுகள்.
முதலாவதாக இடத்பெற்ற ஆட்டத்தில் அனுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து ரகுலா கல்லூரி அணி மோதிக் கொண்டது.இதில்அனுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அம்பாந்தோட்டை கிருடனி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து பதுளை மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் அம்பாந்தோட்டை கிருடனி மத்திய மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மருதமுனை அல்மதினா வித்தியாலய அணியை எதிர்த்து கொறவப்பொத்தனை ருவன்வெலி மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் மருதமுனை அல்மதினா வித்தியாலய அணி 4:0 என்ற கோல் கணக்கில் இலகு வெற்றிபெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடரின்
## 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவின் முடிவுகள்





யாழ்ப்பாணம், செப். 20
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உதை பந்தாட்டத் தொடர் இம்முறை யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுதல் நாளை வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரின் நேற்று நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவினருக்கான ஆட்டங்களின் முடிவுகள்.
சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்மனார் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஒல்சென்ற் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் அல்மனார் மத்திய மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மருதானை மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஷேச்மன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மருதானை மத்திய மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஹேவாவிதாரண வித்தியாலய அணியை எதிர்த்து ருவன்வெலி மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் ஹேவாவிதாரண வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நீர்கொழும்பு மரியஸ்றொல கல்லூரி அணியை எதிர்த்து அனுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் நீர்கொழும்பு மரியஸ்றொல கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஐந்தாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பதுளை அல் அதான் வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பதுளை அல் அதான் வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஆறாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் முருங்கன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மாவனல்லை சாஹிராக் கல்லூரி அணி மோதியது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் மாவனல்லை சாஹிராக் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## யாழ்.மத்தி காலிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், செப். 20
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கூடைப் பந்தாட்டத் தொடரின் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி அணி காலிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது.
கொழும்பு றோயல் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நேற்று இடம்பெற்ற காலிறுதிக்கு தகுதி பெறும் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து காலி அலோசியஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 37:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
இன்று இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் றோயல் சர்வதேச பாடசாலை அணி யாழ். மத்திய கல்லூரி அணியுடன் மோதவுள்ளது. (ம-23)



## வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர் சங்கத்திற்கான அங்குரார்ப்பணக் கூட்டம்

மாங்குளம், செப். 20
வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர் சங்கத்திற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. வடமாகாண பணிப்பாளர் எஸ்.எம். ராஜாரணசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு நிதியாக தேசிய விளையாட்டு உத்தியோக சங்கத் தலைவர் ஆர்.வி.ஆர்.ஜெயலால் கலந்து கொண்டார்.
நிகழ்வில் வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர் சங்க தலைவராக ஜே.ஏ.டி.எல்.லலித் ஜெயசேகர, செயலாளராக எஸ்.சதானந்தன், பொருளாளராக தே.அமலன், உபதலைவராக எஸ்.பிறின்ஸ்லம்பட், உபசெய லாளராக எம்.ஆர்.மோகனராஸ், பிரதான இணைப்பாளராக க.முகுந்தன் ஆகியோரும் ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான அங்கத்தவர்களாக வவுனியா மாவட்டத்துக்கு எஸ்.கமலன், யாழ். மாவட்டத்துக்கு எஸ்.சுதாகரன், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ச.குமார், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு செ.வசீகரன், மன்னார் மாவட்டத்துக்கு எஸ்.எம்.அக்கர் ஆகியோரும் சங்கத்தின் போசகராக ஓய்வுபெற்ற வடமாகாண விளையாட்டுத்துறை அதிகாரி எஸ்.அண்ணாத்துரையும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-422)



## முள்ளிப் பொத்தானை மகா வித்தியாலயம் வென்னப்புவ சென்.ஜோசேப் வித்தியாலயம் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றன



வலி வடக்கு, செப். 20
இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுவரும் தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடரின் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் இரண்டாம் சுற்றில் விளையாட கந்தானை முள்ளிப் பொத்தானை மகா வித்தியாலயம் வென்னப்புவ சென்.ஜோசேப் வித்தியாலமும் தகுதி பெற்றுள்ளன.
கொக்குவில் இந்தக் கல்லூரி மைதானத்தில் நேற்று பகல் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் கந்தானை முள்ளிப் பொத்தானை மகா வித்தியாலயம் 3:1 என்ற கோல் கணக்கில் காலி அலோசியஸ் மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று அடுத்த சுற்றில் விளையாட தகுதி பெற்றது.
மற்றுமொரு ஆட்டத்தில் கம்பனை சஹிரா கல்லூரியும் வென்னப்புவ சென்.ஜோசேப் வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற ஆட்டம் சமநிலையில முடிவடைந்தது.
சமநிலைத் தகர்ப்பு உதைகளில் 6:5 என்ற அடிப்படையில் வென்னப்புவ சென்.ஜொசேப் வித்தியாலயம் வெற்றிபெற்று அடுத்த சுற்றில் விளையாட தகுதிபெற்றது. (ம-86)

## ஈஸ்வரன் அணி இலகு வெற்றி

மாங்குளம், செப். 20
வவுனியா லீக்கின் முதற்தர அணிகள் பங்குபற்றும் பண்டாரவன்னியன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத்தொடர் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதியது. முதல் பாதியில் 1:0 என ஈஸ்வரன் அணி பின்தங்கிய போதிலும் இரண்டாம் பாதியில் எழுச்சிகண்டு அடுத்தடுத்து இரண்டு கோல்களை விளாசி ஆட்டநேரமுடிவில் 2:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

## கட்டடத் திறப்பு விழா

கரணவாய், செப். 20
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு இடம்பெற உள்ளது.
கழகத் தலைவர் க.மகிந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலக கணக்காளர் சி.சிவரஞ்சனும் சிறப்பு விருந்தினர்களாக மித்தில் ஞானவைரவர் ஆலயத் தலைவர் இ.ஜெகதீஸ்வரநாதன், துன்னாலை மேற்கு [illegible] நாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

## சென்.சேவியர் காலிறுதிக்கு தகுதி



மாங்குளம், செப். 20
இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உதைபந் தாட்டத் தொடர் தற்பொழுது யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் சென்.சேவியர் அணி காலிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.
காலிறுதிக்கு தகுதிபெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் அணியை எதிர்த்து உவா மத்திய கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் பதின்மூன்றாவது நிமிடத்தில் சென்.சேவியர் அணியின் அருளானந்தம் கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க முதல்பாதியின் முடிவில் சென்.சேவியர் 1:0 முன்னிலை பெற்றது. இருப்பினும் இரண்டாவது பாதியின் முதல் பத்து நிமிடங்களுக்குள்ளேயே ஊவாவின் சார்பாக பதில்கோல் பதிவாகி ஆட்டம் சமநிலையானது. இறுதிவரை மேலதிக கோலெதுவும் பதியப்படாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்பு உதைகளில் மன்னார் சென்.சேவியர் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

1983, யாழ். இந்து குடும்பம், கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு: 077 644 6628 (64759) (10.15.17)


**Personal Class-கணினி**

Laptop மூலமாக உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC நல்லூர்

விரைவான வேலை ! நிறைவான இலாபம் !!

# ஜூஸ் பக்கெட் மெசின்



தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD

No.16 Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03.

**மணமகள் தேவை** இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 1980இல் பிறந்த சொந்த தொழில்புரியும் (கட்டட ஒப்பந்தக்காரர்) சதய நட்சத்திரம் 30 கிரகபாவம் உடைய மணமகனுக்கு தகுந்த படித்த அழகிய பெண் தேவை.

தொடர்பு : 077 828 7949

**கணக்காளர் உடனடியாகத் தேவை**

**அடிப்படைத் தகுதி**

- A/L வர்த்தகம் / கணிதம்/ டிப்ளோமா/ பட்டதாரி
- அனுபவம் - ஒரு வருடம்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 077 774 8802
077 767 1765

E-mail: pinnacle.jafpm@gmail.com

**IDM** Nurturing Achievers SINCE 1974

தற்பொழுது மானிப்பாயில் மட்டும்

**IDM Computer Studies**
Manipay
Managed by Xpllora International (PVT) Limited

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் (21,23 Sep | 05 October)

October 15ம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு 30% கட்டண சலுகையுடன் T Shirt அல்லது 8GB Pendrive ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்

- IDM Diploma in ICT & Com.
- IDM Diploma in Business Mgt.
- IDM Diploma in Hardware & Net.
- IDM Diploma in English

021 225 6200 | 077 290 8584

இல 248, யாழ் வீதி, மானிப்பாய்




# மிர்சாவின் வெற்றிகள்

## ஊக்கமளிக்கின்றன -மலிக்

இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா நடப்பு வருடத்தில் நடைபெற்ற விம்பிள்டன் மற்றும் அமெரிக்கன் ரென்னிஸ் தொடர்களில் பெண்கள் இரட்டையர் பிரிவில் கிங்கிசுடன் இணைந்து கிண்ணம் வென்று சாதனை புரிந்தார். இந்த நிலையில் சானியா மிர்சாவின் வெற்றிகள் தனக்கு ஊக்கம் அளிப்பதாக அவரது கணவரும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரருமான சோயிப் மலிக் தெரிவித்துள்ளார்.

மிர்சா தொடர்பாக மலிக் தெரிவித்ததாவது:– சானியாவின் வெற்றிகள் என்னை கிரிக்கெட்டில் சாதிக்க ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. ஆனாலும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற நெருக்கடி இருக்கிறது. சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் நன்றாக விளையாட வேண்டும் என்பதே எனது நோக்கம்– என்றார். (ம)


உதயன் advt@uthayan.com 021 493 1111

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

விரைவில் ஆரம்பம். உடன் பதிவை உறுதிப்படுத்துக.

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**தொழில் துறைசார் வல்லுநர்களுடனான கலந்துரையாடல்**
SEP. 24 தொடக்கம் 27 வரை

தொழில்சார் கற்கை நெறிகள்பற்றி வல்லுநர்களுடன் கலந்துரையாட மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஓர் அரியசந்தர்ப்பம்

முன்பதிவுகளுக்கு: 076 752 0940 என்ற இலக்கத்திற்கு SEP. 23 இற்கு முன்னர் உங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை SMS செய்யுங்கள்

தொடர்புகளுக்கு: Spectra Skills (64696) (13.15.16)

No.19,Stanley Road, Jaffna.Tel. 021 222 1422

**சிறுநீரகம் தேவை**

இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் உள்ள ஒருவருக்கு அவசரமாக B+அல்லது O+ சிறுநீரகம் தேவை. நன்கொடையாளிக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : (மாணிக்கம் ஜயா) 077 502 2470 ,077 817 7878 (64612) (14.18)

**புதிதாக வியாபாரத்தை ஆரம்பித்து விட்டீர்களா....!**

உங்கள் வியாபாரத்தை கணினி மயப்படுத்தல் மற்றும் கணக்கியல் சேவைகளிற்கு விசேட கழிவு விலையில்.

Tel: 076 620 2313, Symart Tec

# இலவச கணினிப்பயிற்சி

ஐ.நா.அபிருத்தி திட்டஅனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு 2000ம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான மாணவர்கள். அரச ஊழியர்களுக்கு பயிற்சியினை வழங்கிய MCS நிறுவனம் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியமாணவர்களிற்கு அடிப்படையிலிருந்து பட்டக்கற்கைநெறிக்கான தயார்படுத்தல் பயிற்சிகள் உள்ளடங்கலாக கணினி ஆங்கிலக் கற்கை நெறிகள், மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் வேலைவாய்ப்பினை உடைய கற்கை நெறிகளையும் வழங்க உள்ளது முதற்கட்டபயிற்சியை அடுத்து Entrance Exam இல் தேர்வு செய்யப்படுவோர் மாத்திரமே இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர்

Type Free <Name><District><DOB>& Send To 0772395895

**MCS IT CAMPUS**

34, Sir Pon Ramanthan road, near University of Jaffna

BIT-Universtity of Colombo, CIMA-UK, Engineering- USA

**EXPONET** Overseas Consultants www.expogroup.lk

# STUDY IN LATVIA

(SCHENGEN VISA)

வேலை வாய்ப்புக்களுடன்

# நேரடி அனுமதிகள்

இலவசக் கருத்தரங்கு கொழும்பில்

25-09-2015
26-09-2015

VENUE:
EXPONET, COLOMBO
9.30 am 12.00 pm

யாழ். மாணவர்களே! அரிய சந்தர்ப்பம்





- LATVIA அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் கல்விசார் பிரதிநிதிகளை (Representative) இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்.
- FEBRUARY 2016 Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள். எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம். A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Schengen Visa (Sehengen Union) இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்).
- ஒரு வருடத்துக்கான கட்டணமாக Rs. 350,000/=

FLEX Graphic

#197, Arasady Road, Jaffna.
Tel: 021 7538395

No.379-1/2, Galle Road, Colombo 06.
Hotline: 011 7555511/14/18
E-mail: nimal@expogroup.lk

LEGAL REPRESENTATIVE FOR RTU (University)

இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான தரம் வாய்ந்த ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR** 120 Hours

சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி

CIMA, ACCA, CA, AAT, HND, Banking, University, College of Education

ஆகியவற்றின் கற்கை நெறிகளை தொடர ஆங்கிலம் உங்களுக்கு தடையா??

சகல கற்கை நெறிகளுக்குரிய ஆங்கில அறிவினை 100% வழங்குகிறோம்.

**DIPLOMA IN ENGLISH** 200 Hours

New Batches Start On :

| | | |
|---|---|---|
| B1 : 23-09-15 at 9.00 am | B3 : 26-09-15 at 9.00 am | B5 : 28-09-15 at 9.00 am |
| B2 : 23-09-15 at 2.00 pm | B4 : 26-09-15 at 2.00 pm | B6 : 28-09-15 at 2.00 pm |

**Study IELTS at CIL & Get 6+ Band**

**SPOKEN SINHALA CLASSES**

BI : Sat & Sun - 9.30-11.30am B2 : Sat & Sun - 3.00 - 5.00pm

CIL

Cambridge Institute of London
No : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 20.09.2015


# ஜெனிவாவில் மீண்டும் உச்சமடைந்தது இலங்கை விவகாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் மீண்டும் உச்சமடைந்தது இலங்கை விவகாரம்

## கலப்பு நீதிப் பொறிமுறைக்கு அழைப்பு

பாலா.மு

இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பான பிரச்சினை ஜெனிவாவில் மீண்டும் ஒரு தடவை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை தொடர்பான நான்காவது தீர்மானத்துக்கான வரைவை அமெரிக்கா தயாரித்துள்ளது. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் – ஊக்குவித்தல் – என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த முதல் வரைவு வெளிவந்துள்ளது.

இலங்கை அரச தரப்புக்கு அழுத்தம் கொடுக்கத்தக்க வகையில் அந்த முதல் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகள், அது வெளிப்படுத்திய பற்றுறுதிகள் என்பவற்றை நிறைவேற்றும்படி வலியுறுத்தும் அந்த வரைவு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையான கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்கும்படியும் இலங்கை அரசிடம் கேட்கின்றது.

இதில் மனித உரிமைகள் தொடர்பிலான சர்வதேச பிரகடனங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இலங்கையின் சுதந்திரம், இறைமை, பௌதிக ஒருமைப்பாடு, ஐக்கிய தன்மை ஆகியனவற்றை மதிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்த மக்களும் சர்வதேச பிரகடனங்களின் அடிப்படையில் மனித உரிமைகளை அனுபவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் நடைபெற்ற தேர்தல்களை வரவேற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் 19ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை, ஊழல் மோசடிகளை இல்லாதொழித்தல் ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவும் முயற்சி என்பவற்றையும் தீர்மான வரைவு வரவேற்றுள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய ஐக்கிய நல்லிணக்க நிறுவனம் நிறுவ எடுக்கப்பட்ட முயற்சி பாராட்டுக்குரியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு பக்கங்களில், 26 பந்திகளைக் கொண்ட இந்த முன்வரைவின் பிரதி கடந்த வியாழக்கிழமை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த 26 பரிந்துரைகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1. ஐ.நா. மனித உரிமை சபையின் 27ஆவது அமர்வில் இலங்கையில் நல்லிணக்கத்தையும் குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதலையும் ஏற்படுத்த வேண்டுமெனக் கோரி மனித உரிமைகள் சபை ஆணையாளர் ஆற்றிய உரை வரவேற்கப்படவேண்டியது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25–1 தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

2. முழுமையான அடிப்படையில் நீதியை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையின் புதிய அரசு காட்டி வரும் அர்ப்பணிப்பு கவனிக்கப்பட வேண்டியது. குறிப்பாக குற்றவியல் தண்டனை, உண்மையைக் கண்டறிதல், நிறுவன ரீதியான மாற்றங்கள் மற்றும் மீள பிரச்சினைகள் ஏற்படாமல் தடுத்தல் போன்ற காரணிகளைச் சுட்டிக்காட்டமுடியும்.

3. நீதியை நடைமுறைப்படுத்துவதில் நம்பகத் தன்மையை உறுதிசெய்ய இலங்கை அரசை ஊக்குவிக்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூகம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் விரிவான தேசியக் கலந்துரையாடல்களின் ஊடாக இதனைச் செய்ய முடியும். சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் வலுவான ஓர் பாதுகாப்புப் பொறிமுறைமை அவசியமானது.

4. அனைத்து இனங்களுக்கும் இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறுதல் அவசியமானது என்ற இலங்கை புதிய அரசின் நிலைப்பாடு வரவேற்கப்பட வேண்டியது. பக்கச்சார்பற்ற நேர்மையான விசாரணைப் பொறிமுறைமை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பின் மூலம் விசாரணைகளை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும். சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு இலங்கையை ஊக்கப்படுத்துகின்றோம்.

5. சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகத் தண்டனை விதிக்க உள்நாட்டுச் சட்டங்களை திருத்தி அமைக்க வேண்டும். குறிப்பாக உள்நாட்டு சர்வதேசச் சட்டங்களின் அடிப்படையில் குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள இடம்பெறாமை என்பவற்றைச் செயற்படுத்த ஆணைக்குழு உருவாக்கும் இலங்கை அரசின் திட்டம் வரவேற்கப்படவேண்டியது. இந்தப் பொறிமுறைமைகள் பக்கச்சார்பற்ற நேர்மையான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும். பக்கச்சார்பற்ற, தொழில்சார் தகைமையுடைய நேர்மையானவர்கள் இந்த பொறிமுறைமைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் தலைமைப் பதவிகளுக்கு நியமிக்கப்படவேண்டும்.

7. அனைத்து நீதிமன்றப் பொறிமுறைகள் ஐ.நா. மனித உரிமை சபை உள்ளிட்ட வெளிநாட்டு தரப்புக்களின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவப்படவேண்டும்.

8. பாதுகாப்புத் துறைசார் விவகாரங்களில் காத்திரமான மாற்றங்களை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும். பெரியளவிலான மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களாக அடையாளப்படுத்தப்படும் பாதுகாப்பு அதிகாரிகள் உயர் பதவிகளில் அமர்த்தப்படக்கூடாது. குறிப்பாகத் தற்காலிக நீதிப் பொறிமுறையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறிய படையதிகாரிகள் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் உள்ளடக்கப்படக்கூடாது.

9. சாட்சியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் அரசின் புதிய சட்டத் திருத்தம் வரவேற்கப்படவேண்டியது. இந்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியது அவசியமானது. பாதுகாப்பு தரப்பினர், அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சாட்சியமளிப்பவர்கள் பாதுகாக்கப்படக்கூடிய வகையில் சட்டங்கள் பலப்படுத்தப்படவேண்டும்.

10. அரச படையினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குறிப்பாகப் பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத்தின் தலையீடு முழுமையாக அகற்றிக்கொள்ளப்படவேண்டும். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும்.

11. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஆக்கபூர்வமான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அனைத்து இலங்கையர்களுக்கும் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், நீதியை நாட்டல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

12. ஊடகவிலாளர்கள், ஊடக நிறுவனங்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிறுபான்மை மத, இன சமூகத்தைச் சேர்ந்தவர்கள், பள்ளிவாசல்கள், கோயில்கள், தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய தண்டனை விதிக்கப்பட வேண்டியதுடன் மீளவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுக்க வேண்டும்.

13. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் நீக்குதல் தொடர்பில் இலங்கை அரசின் அர்ப்பணிப்பு வரவேற்கப்பட வேண்டியது. சர்வதேசச் சட்டங்களின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படமுடியும்.

14. பலவந்த கடத்தல்கள் தொடர்பிலான சர்வதேசப் பிரகடனத்தில் கைச்சாத்திட இலங்கை அரசு காட்டும் முனைப்பு வரவேற்கப்பட வேண்டியது. காணாமல்போனவர்கள் தொடர்பில் உறவினர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

15. சட்டவிரோத படுகொலைகள், பலவந்த ஆள்கடத்தல்கள், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுதல், காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், கைது செய்து தடுத்து வைத்தல் குறித்த கொள்கைகளில் மாற்றம், சிவில் நிறுவனங்களை வலுப்படுத்தல், அதிகாரப் பகிர்வின் ஊடாக அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தல், கருத்துச் சுதந்திரத்தினை உறுதி செய்தல் ஆகியனவற்றை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

16. 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட அமைதிப் பிரகடனம் வரவேற்கப்பட வேண்டியதாகும். போர் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் பயன்படுத்தச் சில சட்டங்களில் திருத்தங்களைச் செய்தல் மற்றும் நீக்குதல் குறித்து அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். சர்வதேச பிரகடனங்களுக்கு மதிப்பளிப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

17. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான சட்டத்தை உரிய முறையில் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைச் சபையின் 25–1 தீர்மானத்தின் அடிப்படையிலும் பெரியளவில் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை விதிக்க உரிய வகையில் உள்நாட்டுச் சட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

18. கடந்த காலத்தில் விசாரணை நடத்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதாக இலங்கை அரசு அளித்த வாக்குறுதி வரவேற்கப்பட வேண்டியது. நிசாந்த உதலாகம அறிக்கை உள்ளிட்ட அறிக்கைகளை இந்த மாத இறுதிக்குள் பகிரங்கப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வெலிவேரியவில் குடிநீர் கோரிப் போராட்டம் நடத்திய மக்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதல் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல் குறித்த விசாரணை அறிக்கைகள் வெளியிடப்படவேண்டும்.

19. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட அனைத்து ஆவணங்களையும் அறிக்கைகளையும் பேணிப் பாதுகாக்கும் பொறிமுறை ஒன்றை அரசு உருவாக்க வேண்டும். தனியார் அல்லது பொது நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

20. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கக் கூடிய வகையில் அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலமே நாட்டின் அனைத்து மக்களும் மனித உரிமைகளை அனுபவிக்க முடியும். 13ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாணசபை உள்ளிட்ட அனைத்து மாகாண சபைகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

21. நீதியை நிலைநாட்டும் முனைப்புக்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, அதன் ஆணையாளர் மற்றும் சர்வதேச சமூகம், இலங்கை வாழ் மக்கள், சர்வதேச அமைப்புக்கள், சர்வதேச நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிக்கொள்ள வேண்டும்.

22. அனைத்து வகையிலான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் பால் நிலை சார் ஒடுக்குமுறைகளை இல்லாதொழிக்க இலங்கையை ஊக்கப்படுத்த வேண்டும். பால் நிலை ஒடுக்குமுறைச் சித்திரவதை களில் ஈடுபடுபவர்களைத் தண்டிக்க நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும்.

23. ஐ.நா. மனித உரிமைகள் சபை அலுவலகம், இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்யவேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் சபையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது மதிப்பீடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக குற்றச்செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் மனித உரிமை விவ காரங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த நிலமைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 33ஆவது அமர்வின்போது வாய்மொழி மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சமர்ப்பிக்கவேண்டும். பரிந்துரைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து 34ஆவது அமர்வில் முழு அளவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

24. ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இலங்கை தொடர்ந்தும் நல்ல உறவுகளைப் பேணவேண்டும். இலங்கையின் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அதிகாரிகள் மேற்கொள்ளும் பயணங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். குறிப்பாக சட்டவிரோத ஆள்கடத்தல்கள் தொடர்பான விசாரணைக்கான இலங்கைப் பயணத்திற்கு அனுமதியளிக்க வேண்டும். சில பிரதிநிதிகள் நீண்ட காலத்திற்கு முன்னதாக இலங்கைக்குப் பயணம் செய்ய விடுத்த கோரிக்கைகளுக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை அவ்வாறான கோரிக்கைகள் குறித்து ஆராயப்பட வேண்டும். (ஐ.நா மனித உரிமைகள் சபையின் 25–1 தீர்மானம்)

25. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களும் இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கவேண்டும்.

26. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையகத்துடன் இணைந்து செயற்பட புதிய அரசு காட்டும் சிரத்தை கவனிக்கப்பட வேண்டியது. புதிய தீர்மானத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்படும்.

இவ்வாறு தீர்மானத்தின் முதல் வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஜெனிவாவில் நடக்கவுள்ள இலங்கை மீதான தீர்மானம் குறித்த முதலாவது, முறைசாரா கூட்டத்தில் உறுப்பு நாடுகளிடம் இந்த அறிக்கையை வழங்கி பேச்சு நடத்தி சில வேளைகளில் திருத்தங்களை மேற்கொண்டு இறுதியில் இந்த வரைவு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் 24ஆம் திகதி முன்வைக்கப்படும்.

முதல் வரைவு சிறப்பானதாகவும் தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை ஓரளவுக்காவது பூர்த்தி செய்வதாகவும் இருக்கின்றது. என்றாலும் இந்த வரைவு இந்த் வடிவத்திலேயே நிறைவேறும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தியா போன்ற ஈழத் தமிழர்களின் வில்லன்கள் இதில் திருத்தங்கள் மேல் திருத்தங்கள் செய்து இறுதியில் வரைவை நீர்த்துப் போகவும் செய்வர். கடந்த காலங்களிலும் இலங்கை தொடர்பான வரைவுகளை நீர்த்துப்போகச் செய்ததில் இந்தியாவே முன்னணிப் பங்கை வகித்து வந்தது. எனவே இந்த வரைவையும் அது நீர்த்துப்போகச் செய்யும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

அப்படியல்லாமல் இந்த வரைவு இன்னும் பலப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுமாக இருந்தால் அது ஈழத் தமிழர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டிபோல நடந்துகொள்ளாமல் இருந்தால் நல்லது!



■ தி.ராஜ்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட, இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை வெளிவந்து விட்டது. இந்த அறிக்கை தொடர்பில் தமிழ் மக்களிடத்தில் எவ்வாறு ஒருமித்த கருத்து இல்லையோ, அதேபோன்று தமிழ் அரசியல்வாதிகளிடத்திலும் ஒருமித்த கருத்து இல்லை. "வரவேற்கின்றோம்" என்ற ஒற்றைப் புள்ளியில் அறிக்கையைப் பற்றி ஓர் வரி அரசியல்வாதிகள் கூறினாலும், அதன் பின்னர் அவர்கள் கொடுக்கின்ற விளக்கங்கள், அவர்கள் வேறுபட்டு நிற்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சிங்கள அரசியல் தலைவர்களோ அறிக்கை தொடர்பில் ஓரணியிலேயே இருக்கின்றனர். சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்கப் போவதில்லை என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கின்றனர். அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித முன்வைத்த இந்தக் கருத்தை வெளிவிவகார அமைச்சர் மங்களவும் மறுதலிக்கவில்லை. "நீதி நிலைநாட்டப்படும்" என்று மொட்டையாகச் சொன்னதுடன் நிறுத்திக்கொண்டார்.

**பின்னணி**

இலங்கையின் இறுதிக் கட்டத்தில் – சமாதான காலத்திலிருந்து நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியான காலம் (2002ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம்ஆண்டு) வரை விசாரணை மேற்கொள்ளும் தீர்மானம் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. கடந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இந்தத் தீர்மானம் நிறைவேறியது.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்று, குறித்த தீர்மானத்துக்கு ஆதரவாகப் பல்வேறு நாடுகளையும் இணங்கச் செய்யும் முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. அதே காலப் பகுதியில் குறித்த தீர்மானத்தினால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனுமில்லை என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டு, அமெரிக்கத் தீர்மானத்தின் நகலை ஜெனிவாவில் வைத்து மற்றொரு தமிழ்த் தரப்பு எரித்தும் இருந்தது.

குறித்த தீர்மானம் மீது இந்தியா நடுநிலைமை வகித்திருந்தபோதும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் குறித்த் விசாரணைகளை முன்னெடுத்தது.

**ஒத்திவைப்பு**

விசாரணையின் வாய்மொழிமூல அறிக்கை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. எழுத்துமூல இறுதி அறிக்கை இந்த வருடம் மார்ச் மாதம் வெளியிடப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில், குறித்த அறிக்கையின் வெளியீடு செப்ரெம்பர் மாதம் வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்போது, குறித்த அறிக்கையை பலவீனப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது பல்வேறு தரப்பினராலும் குற்றஞ்சுமத்தப்பட்டது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ள சிலரும் இதே கருத்தை முன்வைத்திருந்தனர்.

**கசிந்த அறிக்கை**

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் புதியதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஐ.நாவின் விசாரணை அறிக்கையில் உள்ளகப் பொறிமுறையே பரிந்துரைக் கப்பட்டுள்ளதாகப் பரப்புரை செய்யப்பட்டது. கசிந்துள்ள ஆவணத்தின் அடிப்படையில் இந்த விடயம் தெரியவந்தது என்றும் குற்றஞ்சுமத்தப்பட்டது.

குற்றச்சாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அடியோடு மறுத்தபோதும், இல்லை அவர் பொய் சொல்கின்றார் என்றும், அந்தக் கசிந்த ஆவணம் உண்மை என்றும் அவரது சக வேட்பாளரேகூட அடித்துக் கூறினார்.

தற்போது அறிக்கை வெளியாகிவிட்டது. அதில் கலப்புப் பொறிமுறைக்கு பரிந்துரைத்துள்ளதுடன், உள்ளக விசாரணையை வலுவான காரணங்களைக் குறிப்பிட்டு நிராகரித்தும் இருக்கிறது. கசிந்த ஆவணம் உண்மை என்று அடித்துக் கூறியவர்கள், இன்று வாயை மூடி மௌனித்துப் போயிருக் கின்றார்கள்.

**தொடரும் குழப்பம்**

ஐ.நா. அறிக்கையால் இன்னமும் குழப்பம் முடிந்தபாடில்லை. ஐ.நாவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த சர்வதேசப் பொறிமுறை வேண்டும் என்று தமிழர் தரப்பில் குரல் கொடுக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம், சர்வதேச ஈடுபாட்டுடன் இதனை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று சொல்கின்றது. ஐ.நா. அறிக்கையும், சர்வதேச ஈடுபாட்டுடன் அதாவது, சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு பொறிமுறையின் ஊடாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ இது தொடர்பில் மீண்டும் புதியதொரு சந்தேகத்தை உருவாக்கியுள்ளார். உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஐ.நா. அறிக்கை முழுமையாக நிராகரித்துள்ளது, அவ்வாறு நிராகரிப்பதற்கான காரணத்தை அது அடுக்கிச் சொல்லியுள்ளது, 30 வருட காலப் போரினால் நீதித்துறை – பாதுகாப்புத்துறை சீரழிந்தது மட்டுமல்லாமல் நடுநிலையாக இல்லாமல் அது நசுங்கிப் போயுள்ளதாகச் சொல்கின்றது, அவ்வாறான உள்ளகப் பொறிமுறையை தூக்கி எறிந்து விட்டு, பின்னர் எவ்வாறு கலப்புப் பொறிமுறையை பரிந்துரைக்கலாம் என்பது கஜேந்திரகுமாரின் கேள்வியாக உள்ளது.

கலப்புப் பொறிமுறை என்பது, சர்வதேச நீதிபதிகளையும், இலங்கையின் உள்ளக கட்டமைப்பையும் கொண்ட ஓர் விசாரணைப் பொறிமுறை. உள்ளகக் கட்டமைப்புத்தானே சீரழிந்து விட்டதாகச் சொல்கின்றீர்கள், அப்படியிருக்கையில் அவ்வாறு சீரழிந்த கட்டமைப்புடன் இணைந்து ஏன் விசாரிக்கப் பரிந்துரைக்கின்றீர்கள். தனித்து சர்வதேச நீதிபதிகளை விசாரிக்கப் பரிந்து ரைக்கலாம் அல்லவா என்கிறார் அவர்.

**இராஜதந்திரம்**

சர்வதேசப் பொறிமுறை என்பது தமிழ் மக்களுக்கு ஏகோபித்த ரீதியில் வேண்டப்படுவதாக இருக்கலாம். ஆனால் அதனைக் கோரிப் பெற்றுக் கொள்வதற்கு ஏதாவது வழிகள் இருக்கின்றனவா ?

"கல்லு கிடைக்கும் வரையில் நாயுடன் பேசுவது இராஜதந்திரம் எனப்படும்" என்ற சமூகவலைத் தளங்களில் நகைச்சுவையாக குறிப்பிடுவர். அது உண்மைதான். நாம் பலமாகும் வரையில் எதிரியுடன் பேசுவதுதான், தப்பிக்க இருக்கும் ஒரே வழி.

இங்கேயும், எம்மிடம் இப்போது இருப்பது என்ன ? அதை வைத்து நாம் என்ன செய்யலாம்? என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். கடந்த காலங்களில் எவ்வாறு இது சர்வதேச விசாரணையில்லை, அறிக்கை உள்ளக விசாரணைக்கே பரிந்துரைக்கின்றது என்று சொல்லிக் குழப்பியடித் தார்களோ அதேபோன்று, தற்போதும் குழப்பியடிப்பதற்கான செயற் திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.

அமெரிக்காவினைத் தவிர வேறு எந்தவொரு நாடும் இலங்கைப் பிரச்சினையை கையில் எடுக்கத் தயாராக இல்லை என்ற நிலையில், தமிழகத்தினால் சர்வதேசப் பொறிமுறைக்கான தீர்மானத்தை இந்தியாவே கொண்டு வரவேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள போதும் கூட இந்தியா அதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதில்லை. அதனை புதுடில்லி இராஜதந்திர வட்டாரங்கள் வெளிப்படையாகவே கூறுகின்றன. ஐ.நா. அறிக்கை தொடர்பிலும் அவை அமைதியே காக்கின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழர்களுக்காகச் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஐ.நாவில் யார் பரிந்துரைப்பார்கள்? அமெரிக்காவின் தீர்மானத்திலும், ஐ.நா. பரிந்துரைத்ததைப்போன்று கலப்பு பொறிமுறையே குறிப்பிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தற்போதைக்கு அதனைப் பயன்படுத்தி அடுத்த கட்டத்துக்குள் செல்ல முயற்சிக்க வேண்டும்.

அதனை விடுத்து, கடந்த வருடம் ஜெனிவாவில் அமெரிக்காவின் தீர்மான நகலை எரித்தது போன்று, குழப்பியடித்து, கிடைக்க வேண்டியதையும் கிடைக்காமல் செய்யக் கூடாது.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி –
மெத்தக் கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத் தாண்டி" என்றில்லாமல் நடந்துகொள் வதே புத்திசாலித்தனம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஐ.நா. அறிக்கையால் நன்மை விளையுமா?

■ அதிரன்

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை வெளியாகி அது பல மட்டங்களிலும் பரபரப்பையும், அதிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா. அறிக்கை இலங்கையில் 2002 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை பாரதூரமான உரிமை மீறல்களை அடையாளம் காட்டுகிறது. இவை இலங்கையில் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்கள் இரு தரப்பினராலும் பெரும்பாலும் இழைக்கப்பட்டிருக்கலாம் என்று வெளிப்படுத்தியுள்ளது. நீதியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நீதிபதிகள்–வழக்குத் தொடுப்பவர்கள்– சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றத்தை ஆரம்பிப்பது மிக முக்கியமானது என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் பரிந்துரைத்துள்ளார்.

ஐ.நா. விசாரணை, இலங்கையில் நடைபெற்ற குரூரமான மீறல்கள் மற்றும் பாகுபாடற்ற எறிகணைத் தாக்குதல் (செல் தாக்குதல்), நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமற்போதல்கள், மனிதாபிமானமற்ற சித்தரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள், சிறுவர் ஆள்சேர்ப்பு மற்றும் வேறு பாரதூரமான குற்றங்களை வெளிக் கொண்டு வந்துள்ளது' என்று மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார். முக்கியமாக, இந்த அறிக்கையினூடாக வெளிக் கொண்டு வரப்பட்டுள்ள மீறல்கள் முழு சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும் பாரதூரமான குற்றங்களாகும். மேலும், இலங்கையில் நம்பிக்கை தரும் புதிய அரசியல் சூழலின் மத்தியில் இந்த அறிக்கை முன்வைக்கப்படுகின்றது. நம்பகத்தன்மையான அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புடைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது முக்கியம், எனவும் ஆணையாளர் கூறினார்.

மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் ஹுஸைனின் பார்வையிலேயே அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் பாரதூரமானவையாக உள்ளன என்கின்றபோது போரின் கோரமுகத்தை நேரிலேயே அனுபவித்துணர்ந்த மக்கள் மத்தியில் எத்தகைய உணர்ச்சிப்பிரவாகங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை விவரிக்க வார்த்தைகளே கிடையாது.

கடந்த காலங்களில் ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட பிரேரணைகள் ஆரம்ப வடிவங்களிலிருந்து இறுதி வடிவமாக வந்தபோது நீர்த்துப்போகச் செய்யப்பட்டு வலுவிழந்த நிலையில் தீர்மானங்களாக மாறியமை போன்று ஐ.நா. விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்களும் நீர்த்துப்போகச் செய்யப்பட்டுவிடுமோ என்ற அச்சங்கள் தமிழர்கள் மற்றும் நீதிக்காகக் குரல்கொடுக்கும் ஆர்வலர்கள் மத்தியில் காணப்பட்டது.

தமிழர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தில் கடந்த ஆறு தசாப்தகாலத்திற்கு மேலாக எதிர்கொண்ட மோசமான அடக்குமுறைகள், இன்னல்கள், கொடூரங்களுக்கு நீதிகேட்டு நடத்திய பல போராட்டங்கள் சுயநல அரசியல்வாதிகளின் செயற்பாடுகளாலும், பேரினவாதிகளின் தந்திரத்தாலும், காட்டிக்கொடுப்புகளாலும் சர்வதேச புவிசார் அரசியல் தேவைப்பாடுகளுக்காகவும் நசுக்கப்பட்ட அன்றேல் மலினப்படுத்தப்பட்ட வரலாறுகளுக்கு முன்பாக வெளியான ஐ.நா. விசாரணை அறிக்கை ஒரு மைல்கல்லாகவே பார்க்கப்படவேண்டும்.

இதுவரைகால வரலாற்றில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துச்சொல்வதற்கு சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய சர்வதேச ஆவணமொன்று இருந்திருக்கவில்லை. ஆனால், ஐ.நா. விசாரணை அறிக்கை, அந்தக் குறைகளைக் களையும் முதலாவது ஆவணமாக அமைகின்றது.

மூன்று முன்னணி சர்வதேச சட்ட வல்லுநர்களின் ஆலோசனையின் கீழ் ஏழு விசாரணையாளர்கள் விசாரணை நடத்தி அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அறிக்கையின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்பட்டது போன்று காரசாரமாகவே உள்ளன. பரிந்துரைகளை அச்சொட்டாக நிறவேற்றுவதன் மூலம் இலங்கைப் பிரச்சினையில் நீதியான நிரந்தரத் தீர்வை எட்டமுடியும். இதனூடாகவே நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட முடியும். அறிக்கையின் பிரகாரம் சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிக்ளை உள்ளடக்கிய கலப்பு சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு – நீதியான விசாரணைகள் நடத்தப்படுமானால் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெறவும் வழி பிறக்கலாம்.

ஆங்கில மொழியில் 261 பக்கங்களைக் கொண்ட இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கையில் பல முக்கிய விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

– சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் இரு தரப்பினராலும் பாதுகாப்புப் படையினருடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்க ளாலும் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய கொலைகள் இனம் காணக்கூடிய வடிவங்களில் பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடி மற்றும் படைத்தளங்களுக்கு அருகாமையில் நடைபெற்றுள்ளன. இவ்வாறு கொலைசெய்யப்பட்டோரில் இறுதிப் போரின்போது சரணடைந்தோர் மற்றும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டோரும் உள்ளடங்குவர்.

– பாதுகாப்புப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டோர் மீது குரூரமான பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டோரில் பெண்கள் மட்டுமல்லர் ஆண்களும் அடங்குவர்.

– போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பலர் காணாமலாக்கப்பட்டனர் என்பதனை நம்புவதற்குக் காரணங்கள் உள்ளன. போருடன் நேரடியாகத் தொடர்பில்லாதவர்களும் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப் பட்டுள்ளனர்.

– இலங்கை பாதுகாப்புப் படையினர் பரந்த அளவில் குரூரமான சித்திரவதைகளை, முக்கியமாக போரின் இறுதிப்பகுதியில் இழைத்துள்ளனர். சில தடுப்பு முகாம்களில் சித்திரவதைக்கான உபகரணங்களைக் கொண்ட அறைகள் இருந்தன.

– விடுதலைப் புலிகள் வயதுவந்தோரைக் கடத்தி கட்டாய ஆள்சேர்ப்புக்கு உட்படுத்தினர். பரந்த அளவில் சிறுவர்களைச் ஆள்சேர்ப்பு செய்து அவர்களைப் போரில் ஈடுபடுத்தினர்.

– போரின் இறுதிக்கட்டத்தில் நடத்தப்பட்ட பல தாக்குதல்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப அதாவது போரை நடத்துவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப நடைபெறவில்லை. அரசாங்கம் உருவாக்கிய யுத்த சூன்யப் பிரதேசத்தில் அமைந்திருந்த மருத்துவமனைகள், மனிதாபி மான உதவி வழங்கும் நிலையங்கள் மீது அரச படைகள் எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளன.

– வடக்கே உணவு உதவி மற்றும் மருத்துவப் பொருள்கள் சென்றடைவது தடுக்கப்பட்டமை நீதிமன்றத்தில் நிரூபிக்கப் பட்டால் அது ஒரு போர்க்குற்றமாகக் கருதப்படலாம்.

– மூன்று இலட்சம் இடம்பெயர்ந்தோரின் சுதந்திரம் சர்வதேச சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கால எல்லைக்கு மேலாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

– அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் மீது பல தரப்பினருக்கும் இருக்கும் அவநம்பிக்கையை குறைத்து எடை போட முடியாது. இத்தகைய பல்வேறு காரணங்களால் சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு சிறப்பு நீதிமன்றத்தை நிறுவுவது முக்கியமானதாகும். ஒரு தனி உள்நாட்டு நீதிமன்றப் பொறிமுறை மூலம் பல தசாப்த காலங்களாக நடைபெற்ற உரிமை மீறல்கள், முறைகேடுகள் மற்றும் உடைத்தெறியப்பட்ட வாக்குறுதிகளால் உருவாக்கப்பட்ட நியாயமான சந்தேகங்களை நிவர்த்தி செய்ய முடியாது.

ஐ.நா. அறிக்கையின் பிரகாரம் இலங்கை செயற்படுமானால் மனித உரிமைகள் பிரச்சினைகள் மட்டுமல்ல நீண்டகாலமாக உள்ள தேசியப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியும் என்று எதிர்பார்க்கலாம். ஐ.நா. அறிக்கையின் பரிந்துரைகளுக்கமைய உண்மை கண்டறியப்பட்டு உண்மையின் அடிப்படையில் நீதி வழங்கப்படவேண்டும். இதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்க உலகநாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதற்கு அப்பால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் மாத இறுதியில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள இலங்கை தொர்டர்பான தீர்மானம், ஐ.நா. அறிக்கையின் பரிந்துரைகளைச் செயற்படுவதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் அமைய வேண்டும். ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும்

ரம்யன்

செய்திகளுக்காகப் பத்திரிகைகளா அல்லது பத்திரிகைகளுக்காகச் செய்திகளா என்றவாறு ஓர் அன்பர் ஒரு செய்தியாளரைப் பார்த்துக் கேள்வியொன்றைக் கேட்டார். குதர்க்கமான இந்தக் கேள்விக்கு செய்தியாளரும் குதர்க்கமாகவே பதில் சொன்னார். நான் சேகரிக்கும் செய்திகள் யாவற்றையும் நான் பணிபுரியும் பத்திரிகைக்காகவே சேகரிக்கின்றேன். அதனால் என் போன்றவர்களின் செய்திகளுக்காகவே எமது பத்திரிகை பிரசுரிக்கப்படுகின்றது என்பதுதான் உங்கள் கேள்விக்கு விடையாக இருக்க முடியும் என்றார் செய்தியாளர்.

பொதுவில் பார்த்தால் செய்திகளைப் பிரசுரிக்கவே செய்திப் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன என்பது சரியாகவே தோன்றுகின்றது. ஆனால் எல்லாவிதச் செய்திகளையும் பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. தாங்கள் வெளியிடக்கூடியவை என்று கருதும் பொருத்தமானவற்றை மட்டுமே தெரிந்தெடுத்து வெளியிடுகின்றன.

சமூகத்தில், நகர்ப்புறங்களில், நாட்டில் மற்றும் உலக மட்டத்திலும் நிகழ்கின்ற சம்பவங்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து அவை பத்திரிகைச் செய்திகள் ஆகின்றன. ஆனால் இந்த மாதிரிச் செய்திகளை எல்லாம் பத்திரிகைகள் சேகரித்து வெளியிட வேண்டிய காரணம் என்ன என்பது ஒரு பொருத்தமான கேள்வியே.

மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். அவர்கள் அறிந்து கொள்ள விரும்புவார்கள் என்பது மட்டுமல்ல சமூகத்திலும் நாட்டிலும் நகரிலும் ஏன் உலக மட்டத்திலும்கூட நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பற்றி அறிந்து மக்கள்– குறிப்பாக இளைய சமூகத்தினர் தெளிவு பெறவேண்டும். விடயம் புரிந்தவர்களாய்த் திகழவேண்டும் என்பதற்காகவே செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. ஆகவேதான் பத்திரிகைகள் செய்வது ஒரு மகத்தான மக்கள் பணியாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில் பத்திரிகைகளின் கடமையும் பொறுப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதனால் செய்திகளை வெளியிடும்போதும் அவை குறித்த கருத்துக்களை முன்வைக்கும் போதும் ஒருசில கட்டுப்பாடுகளையும் வரைமுறைகளையும் ஒழுக்கங்களையும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

பொதுவில் பார்த்தால் செய்திகள் பத்திரிகைகளுக்காக உருவாவதில்லை. அவை தம்பாட்டிலேயே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகைகள்தான் அவைகளில் தங்களுக்கு வேண்டியவை, வேண் டாதவையென்றுதரம்பிரித்துத்தெரிவு செய்து பிரசுரிக்கின்றன என்பது தெளிவாகும்.




இன்று யாழ்ப்பாணத்தில் மூன்று தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவை தவிர கொழும்பிலிருந்தும் தமிழ், ஆங்கிலம், சிங்களப் பத்திரிகைகள் இங்கு வருகின்றன.

ஒரு காலத்தில் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகைகூட அச்சடித்து விநியோகிப்பது மிகமிகக் கடினமாக இருந்த ஒரு பிரதேசத்தில் இப்பொழுது பல பத்திரிகைகள் அச்சடிக்கப்படுவதற்கும் விற்பனையாவதற்கும் முடிகிறதென்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கவேண்டும்.

முதல் முக்கிய காரணம் மக்களின் வாசிப்புப் பழக்கம். குறிப்பாகப் பலவிதமான செய்திகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்திருப்பதாகும். இரண்டாவது மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய அறிய விரும்புகின்ற விடயங்களை இந்தப் பத்திரிகைகள் தேடி வழங்குகின்றமையாகும்.



மூன்றாவது அவ்வாறான செய்திகளை இலகுவாக பெற்றுக் கொள்ளவும் பிரசுரித்து விநியோகிக்கவும் நவீன தொழில் நுட்பங்களும் இயந்திர சாதன வசதிகளும் இலகுவில் கிடைக்கின்றன. இவைதவிர வேறு பல காரணங்களும் இருக்கலாம்.

ஐம்பதுகளின் பிற்பகுதியிலும் பின்னர் அறுபதுகளின் பிற்பகுதியிலும் பிரதேசப் பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்துவதற்குப் பலர் எடுத்த முயற்சிகள் வெறும் பரீட்சார்த்த முயற்சிகளாகவே தோல்வியில் முடிந்தன. அந்தக் காலத்தில் கொழும்பிலிருந்து வந்த பத்திரிகைகள் பெரிய அளவினதாகவும், முழுநாட்டின் மற்றும் உலகச் செய்திகளை விரிவாக வழங்குபவையாகவும் இருந்தமை ஒரு புறமிருக்க, அவைகளையே வாசித்துப் பழகிப்போன வாசகர்களுக்கு புதிய, சிறிய மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட செய்திகளைக் கொண்ட உள்ளூர் பத்திரிகைகள் திருப்தியளிப்பதாக இருக்கவில்லை. இந்த நிலையில் தான் அந்தக் காலத்தில் தோன்றிய ஈழகேசரி என்ற பத்திரிகை நிலைத்து நீடிக்க முடியாமல் போயிற்று என்ற கருத்தும் உண்டு.

பிற்காலத்தில் கே.சி.தங்கராஜா சகோதரர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாடு பத்திரிகைக்கு பின்புலம் சற்று பலமாக இருந்தமையால் பல்வேறு இக்கட்டுக்களைத் தாண்டி 25 வருடங்களுக்கு மேல் அதனால் நின்று பிடிக்க முடிந்தது. நிறுவுனர் கே.சி.தங்கராஜா அந்தக் காலத்தில் வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தமையால் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை அச்சடிக்கும் தாள்களை அவர்களால் இலகுவாகப் பெற முடிந்திருக்கலாம். மேலும் அப்போது ரைம்ஸ் பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவராக அவர் இருந்து பெற்றிருந்த அனு பவம் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை நடத்துவதற்கு உதவியாகவும் இருந்திருக் கலாம்.

அந்தப் பத்திரிகை தினசரி செய்திப் பத்திரிகையாக விரிவாக்கப்பட்டபோது, உள்ளூரில் அரசியல் சூழ்நிலைகள் சூடு பிடித்ததுடன் தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்திருந்த சத்தியாக்கிரகப் போராட்டமும் விறுவிறுப்படைந்திருந்தது. அதனால், உள்ளூரில் நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளை உடனுக்குடன் அந்தப் பத்திரிகையால் வெளியிடக் கூடியதாய் இருந்தது.

அதனால்அன்றாடம்நடந்தசம்பவங்களைப் பற்றி அறிந்துகொள்ள கொழும்புப் பத்திரிகை கள் வரும் வரை மக்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையிருக்கவில்லை. உள்ளூர் பத்திரிகைக்கு பெரும் வரவேற்பும் ஏற்பட்டது.

அத்துடன், கொழும்பு வீரகேசரியில் பணிபுரிந்து பின்னர் அங்கு நடந்த போராட்டம் காரணமாக வெளியேறியிருந்த ஆசிரிய பணியாளர்கள் மற்றும் ஒப்புநோக்குனர்கள், அச்சுக் கோர்ப்போர், பக்கம் போடுவோர் என்று பலபேர் இங்கு வந்து சேர்ந்தமையால் பத்திரிகையைத் தரமாக வெளியிடக் கூடியதாக இருந்தது. மேலும், ஏற் கனவே ஈழகேசரியில் பணிபுரிந்து அனுபவமும் பிரபல்யமும் பெற்றிருந்த ராஜ் அரியரத்தினம் அவர்களும் மற்றும் வீரகேசரியிலிருந்து விலகியிருந்த கே.பி.ஹரனும் முறையே ஆசிரியர், நிர்வாக ஆசிரியர்களாகப் பதவி ஏற்றுக் கொண்டிருந்தமையும் வீரகேசரியிலி ருந்து வந்திருந்த எஸ்.எம்.கோபால ரத்தினம் செய்தி ஆசிரியராகத் துடிப்புடன் பணியாற்றி யமையும் குறிப்பி டத்தக்கது.



## காதலர் வெண்பா

காதலர் ஒன்றிணைய கல்வியே மூலதனம்
கவர்ச்சிக்கு அடிமையாகி விடாதே பூதலத்தில்
சீக்கிரம் கல்யாணம் செய்யாதே உன்குழந்தை
ஆக்கிரமிக்கும் செய்துபார் ஆற

கையிலே காசில்லை கடின உழைப்பும் இல்லை
கடனுக்குக் காதல் பண்ணாதே - பையிலே
இலவசமாய் காதலுக்கு அழகு செய்யாதே அந்த
இறைவனுக்குத் தகாது பார்

கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம்!

## பற்றரிகளும் சூழலை மாசுபடுத்தும்!

■ பூபாலசிங்கம்

மின்சாரம், மனிதனோடு ஒன்றிவிட்ட உருவம் இல்லாத ஒன்று. இன்று மின்சாரம் இல்லாமல் ஒரு வேலையும் நடக்காது. வீடுதான் என்று இல்லை, மின்சாரம் இல்லை என்றால் நாடு என்ன உலகமே இயங்காது என்ற நிலை. 10 வருடங்களுக்கு முன்னர் வரை நாம் அரிக்கன் விளக்கில்தான் படித்தோம். ஆனால், இன்றைய தலைமுறையினர் சில நிமிடங்கள்கூட மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது என்று புலம்புவதை அறியலாம். இன்னமும் அரிக்கன் விளக்கு களில் படித்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தலை முறைகள் வடக்கிலும்–கிழக்கிலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன என்கிற சோகம் ஒருபுறம் இருந்தாலும், பெரும்பாலான மாணவர்கள் மின் விளக்கு இன்றிப் படிக்க முடியாது என்கி றார்கள்.

வளர்ந்து வரும் மக்கள்தொகைப் பெருக்கம், தொழிற்சாலைகள், வீடுகள், நகரங்கள், அவற்றில் பயன்படுத்தப்படும் மின்சாதனப் பொருள்கள் என அனைத்தும் அதிகரித்து வருவதால் மின்சாரத்தின் நுகர்வும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இலங்கைக்கு நீர் மின்வலு மூலமாகவும் அனல் மின்வலு மூலமாகவும் மின்சாரம் கிடைக்கிறது. ஆனாலும், அவ்வப்போது இது போதியளவில் கிடைப்பதில்லை. வறட்சி ஏற்பட்டு நீர் மின் உற்பத்தி பாதிக்கப்படும்போது நிச்சயம் இவ்வாறு நடக்கிறது.

மின்சாரம் இல்லாத நேரத்திலும் மின்சாதனப் பொருள்களை இயக்க, பற்றரியுடன் கூடிய தடையில்லா மின் சார சாதனம் (யு.பி.எஸ்.), ஜெனரேட்டர், இன் வேர்ட்டர் என்று இன்றைய அறிவியல் உலகில் மனிதன் தனக்குத்தானே பல வசதிகளை ஏற்படுத்திக் கொண்டான். ஆனாலும், அவை எல்லாம் மட்டும்போது மானதாக இல்லை.

மின்சாரம் என்பது நீர், காற்று, நிலக்கரி, அணு ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்த வரிசையில், தற்போது சூரிய மின்சாரமும் பிரபலமாகி வருகிறது. நகரங்களில் உள்ள வீடுகளின் கூரை களின் மீது தகடுகள் மூலம் தற்போது சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கப்பட்டு, அது பற்றரியில் சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு–கிழக்குப் பகுதிகள் சூரிய ஒளி மூலம் மின்சாரத்தைப் பெறுவதற்கு மிக மிக ஏதுவான பகுதிகள். இங்கு மின்சாரத்தை சூரிய ஒளி மூலம் உற்பத்தி செய்து அதனை ஏனைய பகுதிகளுக்கு விற்பனை செய்ய முடியும் என்கிற பொருளாதார சாதக நிலைகூட இருக்கின்றது. இதுவரையில் அந்தப் பக்கம் யாரும் முதலிடவில்லை என்பதால் இன்னமும் அது சரிவரச் செயற்படுத்தப்படாத திட்டமாகவே இருக்கிறது.

இன்று பருவநிலை மாற்றத்தினால், மழை பொய்த்துவிட்டது. மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டதால் வெப்பம் அதிகரித்து வருகிறது. வாகனங்கள் பெருகிவிட்டதால், அவற்றிலிருந்து வெளியேறும் புகையால் இன்னும் வெப்ப நிலை உயர்ந்து கொண்டே செல்கிறது.

இதற்கு மாற்றாக அனைத்தையும் மின்சாரத்தில் இயங்க வைக்கும் முயற்சிகள் வலுப்பெற்று வருகின்றன. இதனால் மின்சாரத்தால் இயங்கும் பொருள்களின் உற்பத்தி அசுர வளர்ச்சி கண்டுள்ளது. வீட்டு உபயோகப் பொருள்கள் மட்டுமல்ல, இரு சக்கர வாகனங்களையும் தாண்டி இன்று நான்கு சக்கர வாகனம், பேருந்து, விமானம் போன்றவைகூட மின்சாரத்தால் இயங்கும் அளவில் அறிவியல் கண்டுபிடிப்புகள் வளர்ந்து விட்டன.

இது ஒருபுறம் ஆறுதலான விடயமாகத்தான் இருக்கிறது. மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களால் மாசு இல்லை. மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கரியமில வாயுவால் (காபனீரொட்சைட்) ஏற்படும் மாசுகள், எரிபொருள் நுகர்வு ஆகியவற்றையும் குறைக்கலாம்.

உலக அளவில் எண்ணெய் வளம் தொடர்ந்து குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் பற்றரிகளை ஏற்கெனவே அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தயாரித்து வருகின்றன. இந்த வகையான வாகனங்கள் சுற்றுச் சூழலுக்கு மிகவும் உகந்தது என்று கூறப்படுகிறது.

பற்றரியால் இயங்கும் இரு சக்கர வாகனங்களின் பயன்பாடு சில ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் இருக்கிறது. என்றாலும், அது போதிய அளவு வெற்றிபெறவில்லை. அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட இத்தகைய இரு சக்கர வாகனங்களின் விற்பனைக் கடைகள் அண்மையில் மூடப்பட்டுவிட்டன. வருமானம் இல்லை என்பதே காரணம்.

பராமரிப்புச் செலவு என்னவோ குறைவுதான் என்றாலும், பற்றரியின் ஆயுள்காலம் முடிந்த பின்பு அதை மாற்றுவதற்கு ஆகும் செலவுகள், வாகனத்தின் இதர உதிரிப்பாகங்கள் சரிவர கிடைக்காதது போன்ற காரணங்களும் இந்த ரக வாகனங்களும் மக்களிடம் புகழ்பெறாமல் போனமைக்குக் காரணங்களாகின்றன.

வளர்ந்து வரும் மக்கள்தொகைப் பெருக்கம், தொழிற்சாலைகள், வீடுகள், நகரங்கள், அவற்றில் பயன் படுத்தப்படும் மின்சாதனப் பொருள்கள் என அனைத்தும் அதிகரித்து வருவதால் மின்சாரத்தின் நுகர்வும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சில நாடுகளில் பற்றரியால் இயங்கும் நான்கு சக்கர வாகனங்கள் சாலைகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பேருந்து, விமானங்களின் மாதிரிகளில் சோதனை ஓட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

நாட்டில் மின் சாதனங்களில் பெருவரவால் மின் பொருள் கழிவுகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இது இனி வரும் காலங்களில் இன்னும் எந்த அளவுக்கு உயரும் என்று கணிக்க இயலாது என் கின்றனர் அறிவியலாளர்கள்.

பற்றரியால் இயங்கும் யு.பி.எஸ். என்கிற தடையில்லா மின் சாதனம் பெருவாரியான இல்லங்களில் வந்துவிட்ட நிலையில், அதன் பற்றரியானது உத்தேசமாக ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றப்படுகிறது.

இரு சக்கர, நான்கு சக்கர, பாரஊர்தி, பேருந்து, ரயில் என அனைத்து வாகனங்களிலும் பற்றரியானது பயன்படுத்தப்படுகிறது. அதன் ஆயுள்காலம் முடிந்து தூக்கி ஏறியப்படும் பற்றரிகள் சுற்றுச் சூழலுக்குப் பெரும் மாசுபடுதலை விளைவிக்கின்றன. சூழலுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் அவற்றை முகாமை செய்வதற்கான திறன் எம்மிடமில்லை. மறுசுழற்சிக்கான தொழில்நுட்பமோ, தொலைநோக்குச் சிந்தனையோ நம் நாட்டில் இல்லை.

ஏற்கெனவே, குப்பை, பிளாஸ்ரிக் பொருள்களின் பெருக்கத்தால் மக்கள் வசிக்கும் பகுதிகள் மோசமாகிக் கொண் டிருக்கின்றன என்கிற வேதனையான சூழ்நிலை யில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கி றோம். மின்சாதனம், வாகனங்களை பற்றரியால் இயக்கும் முயற்சி வெற்றி பெற்றாலும், இது எந்த அளவுக்கு சுற்றுச்சூழலுக்கு நண்பனாக அமையும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோடி பேரைக் காவுகொள்வதற்குக் காத்திருக்கும் ஆபத்து

**'ஆன்டிபயோட்டிக்' கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பாக சிறிய வெட்டுக்காயம், சாதாரண காய்ச்சல்கூடப் பல்லாயிரக்கணக்கானவர்களின் இறப்புக்குக் காரணமாக அமைந்தன. 'பிளாக் டெத்' என வரலாற்றில் அறியப்படுகின்ற, 14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கொடிய 'பிளேக்' தொற்று நோயால் சுமார் 20 கோடி மக்கள் உலகம் முழுவதிலும் உயிரைவிட்டனர். 'ஆன்டிபயோடிக்'கின் கண்டு பிடிப்பானது மனித குலத்தை மிகப்பெரிய அழிவிலிருந்து காப்பாற்றியது.**

அருளினியன்



ஆசிய நாடுகளில் உள்ளவர்கள் 'ஆன்டிபயோடிக்' எனப்படும் பக்ரீறியா எதிர்ப்பு மருந்துகளைக் கட்டுப்பாடற்ற முறையில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், அந்த மருந்துகளுக்கான எதிர்ப்பு சக்தியை பக்ரீறியாக்கள் இன்னும் சில வருடங்களில் முழுமையாக உருவாக்கிவிடும். இதனால் 'ஆன்டிபயோட்டிக்' மருந்துகள் செயல்படாத நிலையை அடைந்துவிடும். இதன் விளைவுகளால் 2050ஆம் ஆண்டில் சுமார் ஒரு கோடி பேர் இறந்துபோகலாம் என்கிற அபாயகரமான எச்சரிக்கையை அண்மையில் உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ளது.

பக்ரீறியா நுண் உயிரிகளுக்கும், மனித குலத்துக்குமான போரானது ஆதி மனிதன் பூமியில் தோன்றிய காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்ற இந்தப் போரில் தோற்றுக்கொண்டிருந்த மனித குலம் தனது முதல் வெற்றியை 1929ஆம் ஆண்டில்தான் பதிவு செய்தது. ஆம், அந்த ஆண்டில்தான் அலெக்சாண்டர் கிரஹாம் பெல் என்ற விஞ்ஞானி பென்சிலின் என்ற முதலாவது 'ஆன்டிபயோட்டிக்' மருந்தைக் கண்டுபிடித்தார். அன்றில் இருந்து மனித குலத்துக்கும், பக்ரீறியாவுக்கும் இடையேயான போரில் மனித குலத்தின் கையே ஓங்க ஆரம்பித்தது.

நம் உடல் பக்ரீறியா தொற்றுக்குள்ளாகும்போது அதன் பெருக்கத்தைக் குறைத்தோ, அதை முற்றிலுமாக அழித்தோ நம்மை நோயிலிருந்து காக்கும் மருந்துகளே, 'ஆன்டிபயோடிக்' மருந்துகள் எனப்படும். பக்ரீறியா தொற்று ஏற்பட்டால், நம் உடலில் இயற்கையாக இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி எதிர்த்துப் போராடும். அதன் திறன் குறையும்போதோ அல்லது பக்ரீறியா தொற்றின் வீரியம் அதிகமாக இருக்கும்போதோ, இந்த 'ஆன்டிபயோட்டிக்' மருந்துகள் தேவையாகின்றன.

'ஆன்டிபயோட்டிக்' கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பாக சிறிய வெட்டுக்காயம், சாதாரண காய்ச்சல்கூடப் பல்லாயிரக்கணக்கானவர்களின் இறப்புக்குக் காரணமாக அமைந்தன. 'பிளாக் டெத்' என வரலாற்றில் அறியப்படுகின்ற, 14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கொடிய 'பிளேக்' தொற்று நோயால் சுமார் 20 கோடி மக்கள் உலகம் முழுவதிலும் உயிரைவிட்டனர். 'ஆன்டிபயோடிக்'கின் கண்டுபிடிப்பானது மனித குலத்தை மிகப் பெரிய அழிவிலிருந்து காப்பாற்றியது.

ஆனால், 'ஆன்டிபயோட்டிக்' இன்று தனது வீரியத்தை இழந்து வருகிறது. ஆன்டிபயோடிக் மருந்துகளுக்கான எதிர்ப்புசக்தியை (Antibiotic Resistance) பக்ரீறியாக்கள் திறம்பட உருவாக்கி வருகின்றன. ஆன்டிபயோடிக் மருந்துகளுக்கு எதிராக, பக்ரீறியாக்கள் உருவாக்கிவரும் இந்த எதிர்ப்புச் சக்தியானது, நவீன மருத்துவத்துறை எதிர்க்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது.

தேவையில்லாமல் ஒருவரின் உடலுக்குள் 'ஆன்டிபயோட்டிக்' மருந்துகள் செல்லும்போது, 'ஆன்டி பயோட்டிக்'குகளுக்கு எதிராக மனித உடலில் உள்ள பக்ரீறியாக்கள் தம்மை தகவமைத்துக் கொள்கின்றன. இதையே 'ஆன்டிபயோடிக்' மருந்துகளுக்கான எதிர்ப்பு சக்தி (Antibiotic Resistance) என்பார்கள்.

'ஆன்டிபயோட்டிக்' மருந்துகள் பக்ரீறியாக்களை எதிர்த்தே போராடும். ஆனால், வைரஸ் கிருமிகளால் ஏற்படக்கூடிய சளி, தடிமன் போன்றவற்றுக்குக்கூட சிலர் 'ஆன்டிபயோட்டிக் மாத்திரைகளை உள்ளெடுக்கின்றனர். தெற்காசியாவில் பெரும்பாலானவர்கள் தேவையே இல்லாமல், மருத்துவரின் பரிந்துரை இல்லாமலேயே 'ஆன்டிபயாட்டிக்'குகளை பயன்படுத்துகிறார்கள் என்கிறது உலக சுகாதார நிறுவனம். சிறிய தலைவலிக்குக்கூட 'ஆன்டிபயோட்டிக் மருந்துகளைச் சாப்பிடுகிறார்கள். வளர்ந்த நாடுகளில் 'ஆன்டிபயோட்டிக்'குகளின் பயன்பாடுகளை மிகுந்த கண்காணிப்பின் கீழேயே வைத்துள்ளனர்.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் இறைச்சிக் கோழிக்கு நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க 'ஆன்டிபயோட்டிக்' கொடுக்கிறார்கள். இதை மனிதன் சாப்பிடும்போது கோழி இறைச்சியுடன் சேர்த்து தனக்குத் தேவையில்லாத 'ஆன்டிபயோட்டிக்'கையும் உள்ளெடுக்கிறான். இப்படியாகத் தேவை இல்லாமல் 'ஆன்டிபயோட்டிக்'கை உள்ளெடுப்பதால் 'ஆன்ட்டிபயோட்டிக்'குக்கான எதிர்ப்பு சக்தியை பக்ரீறியாக்கள் இலகுவாக உருவாக்கிக்கொள்கின்றன.

பல்லாயிரம் கோடிகளை வருமானமாகத் தரும் கற்பக விருட்சமாக 'ஆன்டிபயோட்டிக்'குகள் உள்ளன. அந்த அளவுக்கு அவை தாராளமாக பொதுச் சந்தையில் கிடைப்பதற்கு மருந்து நிறுவனங்களின் கூட்டுதான் காரணம் என்கிறார்கள்.

"எல்லாவிதமான 'ஆன்டிபயோட்டிக்'கிற்கும் எதிர்ப்புச் சக்தி உருவானால், எதிர்காலத்தில் சிறிய காய்ச்சலே உயிர்க் கொல்லியாக மாறக்கூடிய அபாயங்கள் உள்ளன. ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன்பாக உயிர்க் கொல்லியாக இருந்த சில பக்ரீறியாக்கள் இப்போது சாதாரணமானவையாக மாறி வருகின்றன. ஆனால், அப்போது சாதாரணமாக இருந்த சில பக்ரீறியாக்கள் இன்று மிகவும் அபாயகரமானவையாக மாறி வருகின்றன" என்கிறார் மருத்துவர் சிவராமன்.

தேவையில்லாமல் 'ஆன்டிபயோட்டிக்' கைப் பயன்படுத்துவதை மக்கள் குறைத்துக்கொள்ளவேண்டும். அரசு சட்டங்கள் இயற்றுவதன் வாயிலாகத்தான் இதைச் செயல்படுத்தலாம். நமது உடலில் இயல்பாக உள்ள நோய் எதிர்ப்பு சக்தியே பல நோய்களைக் குணப்படுத்தப் போதுமானது என்பதைப் புரிந்துகொண்டு, மிக அத்தியாவசியமான வேளைகளில் மட்டுமே 'ஆன்டிபயோட்டிக்'கை உட்கொள்ள வேண்டும் என்கிறார் மருத்துவர் புகழேந்தி.

'ஆன்டிபயோட்டிக்' என்ற வார்த்தையே கடந்த ஐம்பது வருடங்களுக்குள் வந்ததுதான். அதற்கு முன்பாக நமக்கு வருகின்ற நோய்களை நம்முள் இயல்பாக இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டே தீர்த்து வந்தோம். மஞ்சள், மிளகு போன்ற நம் பாரம்பரிய உணவுகள் நமது உடலில் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தக் கூடியவையாக உள்ளன. இவற்றை 'புறோபயோட்டிக்' என்றுகூடச் சொல்லாம். நமது பாரம்பரிய உணவுப் பழக்கத்தை தொலைத்ததுதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள்.

மருத்துவரின் ஆலோசனை இல்லாமல், "மருந்து கொடுங்கள்" என்று கேட்டபடி இனி மருந்துக் கடைக்குச் செல்லும் வேளைகளில் எல்லாம், மனித குலத்துக்கும் பக்ரீறியாக்களுக்கும் இடையேயான் போரில் மனித குலம் தோற்றுப் போக நீங்களும் காரணமாக இருக்கப் போகிறீர்கள் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் சித்திரங்கள்



சிறுகதை

■ ஜோ.ஜெஸ்ரின்

கோல்பேஸ் கடற்கரையில் அலைகள் ஒவ்வொன்றாகக் கரையைத்தேடிக் கொண்டிருந்தன. அங்கே சில மாணவர்கள் கடற்கரை மணலில் சித்திரம் வரைந்து கொண்டி ருந்தார்கள். வணக்கம் ஜோன் வாத்தியார் என்று கூறியபடி நாரியா மிஸ் நடைப் பயிற்சி செய்து கொண்டிருந்த தவருடன் ஜோன் வாத்தியாருடன் எங்கட பள்ளிக் கூடம் பாருங்கோ கொஞ்சம் பின்னுக்கு தள்ளுப் படுறமாதிரி நிலைமைகள் மாறிப் போச்சுது."

"எதவச்சு நாரியா மிஸ் இப்படிச் சொல்லுறியள்?"

"இல்ல சேர்! உங்களிட்ட ஒரு விசயம் கதைக்க வேணும் எண்டுதான் றை பண்ணினான். பள்ளிக் கூடத்தில சந்தர்ப்பம் கிடைக்கேல்ல..... உங்கட வகுப்பில ஏஎல் படிக்கிற விமலன் படுமோசம் பாருங்கோ! அவன் ஒன்றா இரண்டா பல பெண் களோட தொடர்பு. நிறைய அசிங்கங்கள் நடக்குது சேர், உங்களுக்கு இதெல்லாம் விளங்காது..."

"இல்ல மிஸ் நீங்கள் சொல்லுறது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கு... வகுப்பில விமலன் நல்லாத்தான் தெரியிறான். என்னிடம் படிக்கும் முதல் தரமான மாணவர்களில அவனும் ஒருவன். பேசனல் லைபில இப்படி இருக்கிறான் எண்டு நீங்கள் சொல்லித்தான் தெரியுது."

"இல்ல சேர் எங்கட தூரத்து உறவுக்காரப் பெடியன் தான். அவனை உங்கட காத்தவராயன் கூத்தில காத்தானுக்கு போட்டிருக்கிறியளாமே. அவனுக்கு நீங்கள் இடம் கொடுக்காதேயுங்கோ பிறகு உங்கட பேரத்தான் நாசமாக்கிப் போடுவான். நல்ல பெயர் எடுக்கிறது இந்தக் காலத்தில கஸ்டம் சேர். அப்படி எடுத்தாலும் அதைக் காப்பாற்றுறதும் எங்களப் போல ஆக்களுக்குக் கஸ்டமானது."

"நாரியா மிஸ் பத்து வருசமா விமலன் எங்கட பள்ளிக்கூடத்திலதான் படிக்கிறான். கவிதை, நாடகம், விளையாட்டு என்று கோட்ட மட்டம், மாவட்ட மட்டம், தேசிய ரீதியில் எங்கட பள்ளிக் கூடத்துக்கு பெருமை தேடித் தாறான்...."

"என்ன சேர் நான் சொன்னா நம்பமாட்டியளே! நாங்கள் எப்பிடிப் பழகிறம் உங்கட காத்தான் கூத்துக்கு பக்கவாத்தியம் வாசிக்கிறதில இருந்து எங்கட உறவு நீளமானது. ஒரு மாணவனுக்காக என்னைப் புறக்கணிக்காதையுங்கோ. என்ர வகுப் பில பிரக்னன்ட்டான பிள்ளையை டிஸ்மிஸ் பண்ணுறதுக்கு நீங்கள் உதவின்னீங்கள். இதுவும் வில்லங்கமான கேஸ் சேர்...."

கோல்பேஸ் கடற்கரையில் ஜோன் வாத்தியும் நாரியா மிஸ்சும் இன்னும் நிறைய விடயங்கள் பேசிக்கொண்டார்கள்.

காத்தவராயன் கூத்துப்பாட்டுப் பாடுவதில் விமலனை மிஞ்ச யாராலும் முடியாது. அந்த அளவுக்குப் பெயர் எடுத்திருந் தான். பரம்பரை மரபில் வந்த விமலன் கடந்த பத்து வருடங் களாக இந்தக் கலையில் பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

நாரியா மிஸ்ஸின் சொல்லைக் கேட்டதால் ஜோன் வாத்தி விமலன் தொடர்பான குற்றச்சாட்டுக்களை நம்பவேண்டிய தாயிற்று. விமலனிடம் எதைப் பற்றியும் தீர விசாரிக்காமல் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கினார் ஜோன் வாத்தி

ஜோன் வாத்தியில் விமலனுக்குத் தனி மரியாதை உண்டு. மானசீகக் குருவாக அவரை மனதிலிருத்தித்தான் அவன் தன் கலை கல்விப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறான். ஜோன் வாத்தி சொல்லும் பாடங்கள் அற்புதமானவை. ஆழமான கருத்துள்ளவை.

ஒரு நடிகன் முதலில் நல்ல மனிதனாக இருக்க வேண்டும், நெறியாளருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அடிக்கடி தமது உரையில் குறிப்பிடுவார்.

காத்தவராயன் கூத்து ஒத்திகைகள் ஆரம்பமான நாளி லிருந்து விமலனும் ஒத்திகைகள் நடக்கும் இடத்துக்கு சென்று காத்திருந்தான். ஜோன் வாத்தி மௌனமாகி விட்டார்..

"விமலன் உன்னைக் காத்தவராயன் கூத்தில நடிக்க எடுக்கவில்லையாம் என்று பள்ளிக்கூடத்தில கதை அடிபடுகுது. அதிபரிடம் நாரியா மிஸ் ஏதோ கொம்பிள யின்ட் செய்தவவாம் நாரியா மிஸ்சும் ஜோன் வாத்தியும் குசுகுசுக்கும்போது அறிந்து கொண்டன். நீ கவலைப்படாத மச்சான்" என்று நண்பன் றஜீபன் ஆறுதல் கூறினான். இல்ல றஜீபன் எனக்கு நடிக்கவேணும் என்ற ஆசையில்லை. ஏதோ ஓர் ஆத்ம திருப்திக்காக வருடாவருடம் நடிச்சம். நாங்கள் நடிக்கிறதுக்கு பள்ளிக்கூடத்துக்கு வரேல்ல, படிக்கிறதுக்குத் தான் வந்திருக்கிறம். இவயளுக்கும் நாடகம் பழக்கிறதுக்கு சம்பளம் குடுக்கேல்ல எங்களுக்கு படிப்பிக்கத்தான்....."

நாரியா மிஸ்சின் ஒன்றுவிட்ட சகோதரனின் மகள் விமல னோட ஒரே கிளாஸ்மெட். போனவருசம் காத்தவராயன் கூத்தில விமலன் நடிச்சபோது இவள் ஏதோ ஆர்வக் கோளாறில லவ் லெட்டர் கொடுத்திருக்கிறாள். விமலன் அந்தக் கடிதத்தை அப்பவே கிளிச்சுப் போட்டிட்டான்.

இந்தக் கதை பள்ளிக்கூடத்தில அடிபட்டு இருவரும் காதலிப்பதாக கதை திரிபுபட்டு நாரியா மிஸ்சின்ர காதில போய் விழுந்திட்டுது. ரீச்சர் அம்மா விடுவாவே தன்ர பவறைக் காட்டத்தான் வகுப்பாசி ரியர் ஜோன் வாத்தியை கைக்குள்ள போட்டு சதி பண்ணியிருக்கிறார். வாத்தியார் நினைச்சா மாணவரை பழி வாங்கலாம்தான். ஆனா நியா யத்துக்கு எதிராக நடக்கக்கூடாது பாருங்கோ. அவருக்கும் பிள்ளை குட்டி என்று குடும்பமாக வாழுற வங்க சிந்திச்சுப் பார்க்கவேணும்.

"பள்ளிக்கூடத்தில படிக்கிற பிள்ளையளும் கொஞ்சம் அப்படி இப்படித் தான், அதுவும் கொழும்பு எண்டா சொல்லவே வேணும். உவன் விமலன் நல்ல பெடியன். இருந்தாலும் நாங்கள் இதுபற்றி ஒன்றும் கதைக்க முடியாது" என்று தன் ஆதங்கத்தை கொட்டிக்கொண்டிருந்தான் எமிலன்.

எமிலன் தான் படிச்ச பள்ளிக் கூடத்தில பற்றிஸ், வடை, பிளேன்ரீ என்று சின்ன கடை வைச்சு வரு மானமும் எகிறிக் கொண்டிருந்தது. கிடைச்சாலும் கொம்பியூட்டர் கிளாசுக்கும் போய்க்கொண்டு தன் சீவியத்தை தானே பார்க்கிற அள வுக்கு சின்ன முதலாளி.. ஓ எல் பரீட்சையில றிப்பீட் எடுத்தும் சித்தியடையாததால மூன்று வருடமாக கன்டீன் நடத்திக்கொண்டி ருக்கின்றான்.

காத்தவராயன் கூத்துக்குத் தன்னை எடுக்காததன் பின்னணியில் இருந்த நரியா மிஸ்சின் வஞ்சகத்தைப் புரிந்து கொள்ளவில்லை விமலன். அந்த ஆதங்கம் எமிலனுக்கு இருந்தது.

நாரியா மிஸ்சுக்கு நிறைஞ்ச சந்தோசம். ஒரு மாண வனின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட்ட தில் மகிழ்ச்சி. கொழும்பிலுள்ள அந்தப் பாடசாலை யில் விமலன் தனிமைப்படுத்தப்பட்டான் என்பதை விட தானாக ஒதுங்கிக் கொண்டான்.

ஒரு மாணவன் பெற்றோரிடம் இருக்கும் நேரத்தை விட ஆசிரியர்களுடன்தான் அதிக நேரத்தை செல வழிக்கின்றான். ஆசிரியர்கள் சிலர் தமது சுயநலத் துக்காக மாணவர்களின் கருத்தறியாமல், தீர விசாரிக்காமல் சில தீர்மானங்களை எடுப்பது வேத னைக்குரியதுதான்.

விமலன் பியர் குடித்துவிட்டான் என்ற மற்றுமொரு குற்றச்சாட்டின் பேரில் பாடசாலையில் இருந்து இடை நிறுத்தப்பட்டான். அதிபரின் அதிரடி விமலனுக்கு மேலும் மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தது. நாரியா மிஸ்சின் சூழ்ச்சிப் படலம் விமலனுக் கெதிரான பனிப்போராகவே இடம்பெற்று முடிந்தது. விமலன் பணிஸ்மென்றில் நின்ற இரண்டாவது நாள் காத்தவராயன் கூத்து பாடசாலையில் கோலாக லமாக நடைபெற்று முடிந்தது. சகமாணவர்களும் விமலனைப் புறக்கணித்தார்கள். காரணம் நாரியா மிஸ் ஜோன் வாத்தியின் சூழ்ச்சியில் தாங்கள் தப்பிப் பிழைப்பதற்காக விமலனின் நட்பை இழக்க அவர்கள் தாயராகி வந்தார்கள்.

மறுநாள் பத்திரிகைச் செய்தி கொழும்பின் பிரபல பாடசாலை மாணவன் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளான். அது ஏற்கனவே நடந்து முடிந்த கட்டுரைப் போட்டிக்கான பரிசு. தேசிய ரீதி யில் அவன் வென்றிருந்தான். அவன் பெயர் விமலன். பாடசாலையில் இப்போது எல்லாம் தலைகீழானது. தமக்குப் பெருமை தேடித்தந்த மாணவனைப் பாராட்டப் பாடசாலை சமூகம் தயாரானது. அவன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மூடி மறைக்கப் பட்டன. அவன் குற்றம் செய்தவனா இல்லையா என்ற கேள்விக்கு விடை காண இப்போது யாரும் தயாராக இல்லை. ஆனால்அவனது வெற்றியைப் பாட சாலைக்கு முதலீடாக்குவதில் கண்ணாக இருந்தனர். ஆனால் அந்த மாணவன் அமைதியாக கோல்பேஸ் கடற்கரை மணலில் சித்திரம் வரைந்து கொண்டிருந் தான். ஒவ்வொரு அலையும் அவனது மணல் சித்திரங்களை அள்ளிக்கொண்டு போனது. தான்தான் முதல் தரமான மாணவன் என்பது புரியாமல் அலை களிடம் ஏமாந்து கொண்டிருந்தான் விமலன்.

## போதை மனுசன் போர் நிறுத்த மாட்டாரோ..?

என்ரையிவர் குடிகாரர்
ஏனின்னும் திருந்தவில்லை?
சீர்திருத்தவாதிகளே
சிந்தித்து தீர்வு சொல்லுவீர்!
போர் நிறுத்த வேளையிலும் - இவர்
போர் நிறுத்த வில்லையின்னும்
மார்பிலே உதைகின்றாரே...!
மண்டையை உடைக்கின்றாரே...!
ஆருடனே சொல்லியழ-இவர்
ஆய்க்கினையை சொல்லியழ
ஊரெல்லாம் பகைபெருக்கி-இவர்
உபத்திரங்கள் செய்கின்றாரே
பேருடனே வாழ்ந்த எம் உறவுகளை
பேதலிக்க செய்கின்றாரே
போதைப் பொருளருந்தி தினம்
புதுமைகளை செய்து அழிகிறாரே
வேதனைகள் பெருக்கியிங்கே
வீதி யெங்கும் அலைகின்றாரே



மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாரோ..**
திருமணம் என்பது ஒரு நாள் கூத்து...அதுக்கு பிளான் பண்ற அளவுக்கு அதுக்கப்புறம் இருக்க வாழ்க்கைக்கு பிளான் பண்றதில்லை.

**வந்தியத்தேவன்**
தனிமை எப்போதும் உடன் இருப்பதுதான். ஆனால் யாரோ ஒருவரின் பிரிவு தான் அதை உணர வைக்கிறது.

**சாப்ளின் பாரதி** @chevazhagan1 · 44m
'சம்பாதிக்கிற திமிர்' என திறமையைக்கூட திமிரில் சேர்த்து விடுகிறது ஆணாதிக்க சமூகம்!

**மிருதுளா**
'யோக்கியம்னா என்னப்பா' 'முன்னாள் காதலிகூட வாட்சப்ல மட்டும் டச்ல இருக்கிறதுடா கண்ணா'

**ஏகலைவன்**
தான் ஏழையா இல்லை பணக்காரனான்னு தெரியாம, கடைசி வரைக்கும் குழப்பத்துலயே ஒரு குரூப் வாழுதுன்னா அது இந்த மிடில் கிளாஸ்தான்.

**டைசன் ™** @TigerTayson
பெற்றோரை புறக்கணிக்காத காதலும் பெற்றோருக்காக பிரிந்த காதுலுமே உண்மைக் காதல்.

# வலைப் பக்கம்

## ஒரே டவுட் டவுட்டா வருதே



1. காலம் மாறிப் போச்சு, காலம் மாறிப் போச்சுன்னு சொல்றோமே..மாறினதும் மாறிக்கிட்டே இருக்கறதும் நாம தானே?

2. எனக்கு இந்த ட்ரெஸ் சின்னதா போயிருச்சுன்னு சொல்றோமே..ட்ரெஸ் எப்படிங்க சின்னதா போவும்? நாம தான வளர்ந்துட்டோம்.

3. முள்ளு குத்திருச்சின்னு சொல்றோமே.முள்ளு நம்மள தேடி வந்தாங்க குத்துச்சு?

4. பணம் காணாம போயிருச்சுன்னு சொல்றோமே.. என்னைக்காவது நாம் பணத்தைத் தொலைச்சுட்டேன்னு சொல்றோமா?

5. புது செருப்பு கால்ல கடிச்சிருச்சின்னு சொல்றோமே.. செருப்புக்குத் தான் வாயே இல்லையே.அது எப்படிங்க கடிக்கும்?

6. fan ஓடுதுன்னு சொல்றோமே..அது எந்த பந்தயதுலங்க ஓடுது?

7. கரண்ட் (மின்சாரம்) போயிருச்சின்னு சொல்றோமே.. போனது பவர் (மின் சக்தி) தானுங்களே?

8. வலி உயிர் போவுதுன்னு சொல்றோமே..உயிர் போன அப்புறம் பேச முடியும்ங்களா?

## புதுப் புது அர்த்தங்கள்

மச்சான், நீ முன்னால தியேட்டருக்குப் போ... நான் பின்னாலயே தண்ணி பாட்டில் வாங்கிட்டு வந்துடுறேன்னு நண்பன் சொன்னா......
நாம சினிமா டிக்கெட் எடுக்கணும்னு அர்த்தம்.

மாப்ள, கிளம்பிட்டேன். உங்க தெரு முக்குலதான் இருக்கேன்னு நண்பன் சொன்னா......
அந்த டபேரா தலையன் இன்னமும் அவன் வீட்ட விட்டுக் கிளம்பலன்னு அர்த்தம்.

மச்சி, ஃப்ரீயா இருக்கியா? ஒரு முக்கியமான விடயம்னு நண்பன் பேச்சை ஆரம்பிச்சா.....
ஏதோ ஒரு அமவுண்ட் கடன் கேட்கப் போறான்னு அர்த்தம்.

பங்காளி, வாடா சரக்கடிப்போம் தின்ன வடையில இருக்கிற எண்ணெயத் தலையில தேய்க்கிற கஞ்சப் பிசினாரி நண்பன் பாசமா கூப்பிட்டா....அவன் காதல் கதைய சொல்லப் போறான்னு அர்த்தம்.

மச்சான், உன் போனக் கொடு... ஒரு கால் பேசிட்டுத் தர்றேன். என் நம்பர்ல இருந்து கூப்ட்டா ஃப்ரெண்டு போன எடுக்க மாட்டேங்கறான் நண்பன் நம்ம போன வாங்குனா....
நம்ம பேலன்ஸ கழுவி கவுத்தப்போறான்னு அர்த்தம்.






பங்கு, உன் பைக்க கொடுடா, அம்மாவ ரேஷன் கடையில விட்டுட்டு வந்துடுறேன் நண்பன் சொன்னா....
அவன் ஆளோட எங்கயாவது ஊர் சுத்தப் போறான்னு அர்த்தம்.

அவ ரொம்ப திமிர் பிடிச்சவ மச்சி, ரொம்ப ஹெட் வெயிட்டுன்னு ஒரு பொண்ணப் பத்தி நண்பன் சொன்னா...
அந்தப் பொண்ணுகிட்ட ஏற்கனவே லவ் லெட்டர் கொடுத்து திட்டு வாங்கியிருக்கானு அர்த்தம்.

மாப்ள, இது ரொம்ப ஷார்ட் கட்டுடா ன்னு சந்து சந்தா நண்பன் நம்மளக் கூட்டிட்டுப் போனா...
அந்த சந்துல ஏதோ ஒரு பொந்துல அவன் ஆளு இருக்குன்னு அர்த்தம்.

மச்சி, இதெல்லாம் ஒரு பாரா? நான் உனக்கு ஒரு நாள் வைக்கறேன் பாரு ட்ரீட்டுன்னு பில்லு வர்றப்ப நண்பன் சொன்னா....
இன்னைக்கு செலவு நம்மோட துன்னு அர்த்தம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.09.2015
சூரியகாந்தி

# உங்களுக்குத் தெரியுமா பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்



**நாலடியார்**

நான்கு அடிகளைக் கொண்ட வெண்பா வால் இயற்றப்பட்டதால் நாலடியார் எனப் பட்டது. இந்நூல் சமண முனிவர் நானூறு பேரால் பாடப்பட்டது. திருக்குறளைப் போலவே நாலடியாரும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பகுப்பாக உள்ளது.

**நான்மணிக்கடிகை**

நான்மணிக்கடிகை என்பது நான்கு இரத் தினத் துண்டங்கள் என்னும் பொருளைத் தரும். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களைக் கூறுவதால் நான் மணிக் கடிகை எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் விளம்பி நாகனார்.

**இனியவை நாற்பது**

பூதஞ்சேந்தனார் இயற்றியது. 40 வெண்பாக்களைக் கொண்டது. நானகு பாடல்களில் இன்பம் தருவன நான்கினைக் கூறியுள்ளார். மற்ற பாடல்களில் மூன்று மூன்று இன்பங்களை கூறியுள்ளார்.

**இன்னா நாற்பது**

ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டு ஒவ்வொன்றையும் இன்னா என எடுத் துக் கூறுதலின் இன்னா நாற்பது எனப் பெயர் பெற்றது. இந்த நூலை இயற்றியவர் கபில தேவர்.

**திரிகடுகம்**

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துப் பொருள்களை குறிக்கும். மூன்று மருந்துப் பண்டங்களால் ஆகிய திரிகடுகம் என்னும் மருந்து உடல் நலம் பேணுவதைப் போன்று, இந்நூற் செய்யுட்களில் மும்மூன்றாக உரைக்கப் பெற்ற அறங்களும் உயிர் நலம் பேணுவனவாம். இதனாலேயே இந்நூல் திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் நல்லாதனார்.

**ஆசாரக்கோவை**

ஆசாரக்கோவை என்பதற்கு ஆசாரங்களினது கோவை என்றோ ஆசாரங்களைத் தொகுத்த கோவை என்றோ பொருள் கூறலாம். இதன் ஆசிரியர் கயத்தூர்ப் பெரு வாயின் முள்ளியார்.

*(தொடரும்)*

## ண,ந,ன வேறுபாடுள்ள சொற்கள்:

- அரண் – மதில், பாதுகாப்பு கோட்டை, அரன், சிவன்
- அண்ணம் – மேல்வாய்
- அன்னம் – ஒரு பறவை
- ஆணி – கூரிய இரும்புத் துண்டு
- ஆனி – ஒரு மாதம்
- ஆணை – கட்டளை
- ஆனை – யானை
- உண்ணு – சாப்பிடு
- உன்னு – நினைத்துப் பார்
- ஊண் – உணவு
- ஊன் – இறைச்சி
- எண்ண – நினைக்க, எண்ணிப் பார்க்க
- என்ன – கேள்வி
- கணை – அம்பு
- கனை – கனைத்தல்
- கணம் – நேரம்
- கனம் – பளு, சுமை
- காண் – பார்
- கான் – காடு
- தணி – அடங்கு
- தனி – தனிதிருத்தல்
- துணி – சீலை
- துனி – துன்பம், கோபம், அச்சம்
- திணை – நிலம், ஒழுக்கம்
- தினை – தானிய வகை
- நாண் – கயிறு, நாணம்
- நான் – தன்னைக் குறிப்பது, தன்மை இடப்பெயர்
- திண்மை – வலிமை
- தின்மை – தீமை
- வண்மை – வளம், வழங்குதல்
- வன்மை – வலிமை

# பாரதிதாசன்

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் 29.4.1891 இல் புதுவையில் பெரிய வணிகராயிருந்த கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் ஆகி யோருக்கு பிறந்தார். கவிஞரின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம். 1920 ஆம் ஆண்டில் பழனி அம்மையார் என்பவரை மணந்து கொண் டார்.இவர் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும் தமிழ்ப் பள்ளியிலேயே பயின்ற காலமே கூடியது. தமது பதினாறாம் வயதிலியே கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். தமிழ் மொழிப் பற்றும் முயற்சியால் தமிழறிவும் நிறைந்தவராதலின் இரண்டாண்டில் கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். பதினெட்டு வயதிலேயே அவரின் சிறப்புணர்ந்த அரசி யலார் அவரை அரசினர் கல்லூரித் தமிழாசிரியாராக்கினர்.

இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதை யுரு வில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறுசிறு பாடல் களை அழ காகச் சுவை யுடன் எழுதித் தமது தோழர்கட்குப் பாடிக் காட்டுவார். நண்பர் ஒருவரின் திருமணத்தில் விருந்துக்குப் பின் பாரதியாரின் நாட் டுப் பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ் விருந்துக்கு வந்திருந்தார். ஆனால் கவிஞருக்கு அது தெரியாது. அந்தப் பாடலே அவரை பார தியாருக்கு அறி முகம் செய்து வைத்தது. தன் நண்பர்கள் முன்னால் பாடு என்று பாரதி கூற பாரதிதாசன் எங்கெங்கு காணினும் சக்தியடா என்று ஆரம்பித்து இரண்டு பாடலை பாடினார். இவரின் முதற் பாடல் பாரதியாராலேயே சிறீ சுப்பிரமணிய கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது என் றெழுதப்பட்டு சுதேச மித்தி ரன்இதழுக்குஅனுப்பப் பட்டது. புதுவையிலிருந்து வெளி யான தமிழ் ஏடுகளில் கிறுக் கன், கிண்டல் காரன், பாரதி தாசன் என பல புனைப் பெயர்களில் எழுதி வந்தார். தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிடர் இயக் கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாக கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள் மூலம் பதிவு செய் தார். பிரபல எழுத்தாளரும் திரைப்படக் கதாசிரியரும் பெரும் கவிஞ ருமான பாரதிதாசன் அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச் சேரி சட்டமன்ற உறுப்பினராக 1954ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946 இல் அறிஞர் அண்ணா அவர்களால் கவிஞர் 'புரட்சிக்கவி என்று பாராட்டப்பட்டு ரூ.25000 வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை உணர்வு நிரம்பியவர். கவிஞ ருடைய படைப்பான பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கு 1969 இல் சாகித்ய அகாடமியின் விருது கிடைத்தது. இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினரால் 1990 இல் பொது உடைமையாக்கப்பட்டன.





றெ.ரக்ஷனா,
தரம் 1D,
[illegible]க்குளி மகளிர் கல்லூரி.

# தனித்துவம்



கல்லில் சிலை வடிக்கும் சிற் பி ஒருவன் ஒரு தேவதையின் சிலையை வடித்துக் கொண் டிருந்தான். அற்புதமாக தத்ரூ பமாகத் தோற்ற மளித்த அந் தச் சிலை வடித்து முடித்த கணம் ஒரு மின்னல் நேரத் தில் உயிர் பெற்றது. தேவதை மகிழ்ச்சியுடன் சிற்பியின் கலைத் திறனைப் பாராட்டி வேண்டிய வரம் ஒன்று கேட் குமாறு சொன்னது.

சிற்பிக்கு வல்லவர்களுக்கு வல்லவனாக வேண்டும் என்ற வெகுநாள் ஆசை. அவன் அதை தேவதையிடம் சொன்னான். தேவதை அன்புடன் சிரித்துக் கொண்டே சிற்பியே! நன்கு சிந்தித்துத்தான் கேட்கிறாயா? என்று கேட்டது. சிற்பியும் மிகுந்த ஆவலுடன் ஆம்! என்றான்.

தேவதை சரி! அடுத்த இரண்டு நாள்களுக்கு நீ யாரை அல்லது எதை வல்லவன் என்று நினைக்கிறாயோ அதுவாகவே மாறிவிடுவாய் என்று வரம் அளித்து விட்டு அதே மின்னல் வேகத்தில் மறுபடியும் சிலை வடிவுக்குப் போய் விட்டது

சிற்பி திடீரென்று நிகழ்ந்த இந்த நிகழ்வைப் பற்றி நம்புவதா வேண்டாமா என்று தீவிரமாகச் சிந்தித் துக்கொண்டே தன் வேலையைத் தொடர்ந்தான்.

சூரியன் உச்சிக்கு வந்து தகித்துக் கொண்டிருந்தது. சிலை வடிக்கும் கருங்கற்பாறை கொதித்தது. கல் லைக் கொத்தும் உளி கொதித்தது. சிற்பியின் உட லெல்லாம் வியர்த்து வழிந்தது. சிற்பி இந்த சூரியன் மிகச் சக்தி படைத்தவனாக இருக்கிறானே. எல்லா வற்றையும் ஆட்டிப் படைக்கிறானே! இவன்தான் மிக வல்லவனாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். என்ன ஆச்சரியம்! உடனே அவன் தேவதை கொடுத்த வரத்தின் சக்தியால் சூரியனாகவே மாறிவிட்டான்.

சிறிது நேரம் உலகைச் சுற்றி வந்து தனது சக்தியால் ஆனந்தமாக கண்ணில் பட்ட எல்லாவற்றையும் தகிக்கச் செய்து மகிழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு இடத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. அவை சூரியனின் கதிர்களை மறைத்தன. ஆகவே அவை மறைத்த இடங்களை சூரியக் கதிர்கள் சென்றடைய முடியவில்லை. சூரியனாக இருந்த சிற்பி தன் மிக உக்கிரமான கதிர்களை அந்த மேகங்கள் மேல் செலுத்திப் பார்த்தான். அந்தக் கருமேகக் கூட்டங்கள் அசைவதாக இல்லை. என்ன... இந்த மேகக் கூட்டங் கள் சூரியனின் சக்திமிக்க கதிர்களையே மறைக்கும் வல்லமை படைத்தவையாக இருக்கின் றனவே என்று நினைத்தவுடன் அவன் அந்தக் கருமேகங் களாக மாறிவிட்டான்.

சிறிது நேரம் மகிழ்ச்சியாக சூரியக் கதிர்களை மறைத்துக் கொண்டு ஆனந்தப் பட்டுக் கொண்டிருந் தான். அப்போது பலமாகக் காற்றடித்தது. அந்தக் காற்று மேகக் கூட்டங்களை இப்படியும் அப்படியு மாக அலைக்கழித்தது. சிற்பி எவ்வளவு முயன்றும் காற்றின் வேகத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியவில்லை. சூரியனின் கதிர்களை மறைக்கும் மேகத்தையே செலுத்தும் காற்று எவ்வளவு வல்லமை படைத்ததாக இருக்க வேண்டும் என்று நினைத் தான். அந்தக் கணமே அவன் காற்றாக மாறி விட்டான்.

காற்று வடிவில் சிற்பி தென்றலாகவும் புயலாகவும் எண்ணப் படி மாறி மாறி உலகைக் கலக்கிக் கொண்டிருந்தான். மிகவும் வல்லமை படைத்தவ னாகத் தன்னைப் பற்றி எண்ணி எண்ணி நினைத்த இடத்திற்கெல்லாம் சடுதியில் சென்று மகிச்சியில் திளைத்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு முறை அப்படிக் கடும் புயலாக மாறிச் சென்று கொண் டிருந்த வழியை மறித்துக் கொண்டு ஒரு நெடிது யர்ந்த மலை நின்று கொண்டிருந்தது. எவ்வளவோ உக்கிரமாக முட்டி மோதிப் பார்த்தும் கடும் புயலாய் வடிவெடுத்திருந்த சிற்பியால் அந்த மலையைக் கடந்து செல்ல முடியவில்லை. அட.. இந்த மலைக் குக் கடும் புயலையும் மிஞ்சும் சக்தி இருப்பது முன் னமேயே நமக்குத் தெரியாமல் போய் விட் டதே! என்று நினைத்த மாத்திரம் அவன் ஒரு மலையாக மாறிவிட்டான்.

அப்போது மற்றொரு சிற்பி அந்த மலை மேல் மெதுவாக ஏறி வந்தான். அவன் ஓர் இடத்தில் உள்ள மலையின் பாறைகளைத் தேர்ந்தெடுத்து தன் உளியையும் சுத்தியலையும் கொண்டு பாறையைப் பிளந்து சிலை வடிக்க ஆரம்பித்தான். மலை வடி வில் இருந்த சிற்பி சக்தி வாய்ந்த மலையின் பாறை களையே பிளக்கும் சிற்பிதான் மலையை விட வல்லவன் என்று நினைத்தான்.

தேவதையின் வரம் பாக்கியிருக்கிறதே! அதனால் அப்படி நினைத்த மாத்திரத்தில் பழைய படி அவன் தன் சுய உருவை அடைந்து விட்டான்.

சுய உருவுக்கே திடீரென்று திரும்பி விட்ட அவனுக்கு இப்போது மூளைக்குள் ஏதோ பொறி தட்டியது போல் இருந்தது. நிதானமாக அமர்ந்து தன் அனு பவங்களை நினைத்துப் பார்த்தான்.

ஒவ்வோருவருக்கும் ஒரு தனித்துவமும் அதைச் சார்ந்து வல்லமைகளும் இருப்பதை அறிந்து கொண்டான். அனைவருக்கும் வல்லவனாக விளங்க வேண்டும் என்ற நினைப்பைக் கை விட்டான். தன் வல்லமைகளைப் முடிந்த வரை பெருக்கிக் கொண்டு அவற்றின் மூலம் உலகிற்கு உவப்பாக விளங்குவதே சிறந்தது என்று நினைக்க ஆரம்பித்தான்.

தேவதை அவன் முன் திரும்பவும் தோன்றி அவனுக்கு நிறையப் பரிசுகளை மிக மகிழ்ச்சியுடன் வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**20.09.2015 முதல் 26.09.2015 வரை**

**உங்களுக்கு எப்படி?**

## மேடம்

அதிர்ஷ்ட வீடு என்றும் சௌபாக்கிய ஸ்தானம் என்றும் அழைக்கப்படும் ஒன்பதாம் வீட்டை சிறப்பு வாய்ந்த குரு பகவான் பார்ப்பதால் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிஓடி வரும். அதிர்ஷ்டம் உயரும். தந்தையாருக்கு நன்மைகள் அதிகரிக்கும். அவர் ஏழாம் வீட்டைப் பார்ப்பதால் திருமணம் ஆகும். கணவர்-மனைவிக்கு அதிர்ஷ்டம் அடிக்கும். தொழில் பங்குதாரர் உதவிகரமாக இருப்பார். எட்டில் சனி என்பதால் இயந்திரங்களைக் கையாளும் போதும் வாகனங்களை செலுத்தும்போதும் கவனம் தேவை. ஐந்தில் சூரியன் ஆட்சி என்பதால் குழந்தைகளுக்கு அரசாங்க நன்மை உண்டு.

## இடபம்

பதினோராம் வீட்டில் அமர்ந்திருக்கும் கேதுவும் அந்த வீட்டைப் பார்க்கும் ராகுவும் வெளிநாட்டு உத்யோகத்தில் உங்களை உட்காரவைப்பார்கள். அல்லது உள்ளூரில் உள்ள வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். இந்த் அமைப்பினால் அதிகமாகப் பயணங்கள் மேற்கொள்ள வேண்டிவரும். சனி ஏழாம் வீட்டில் இருப்பதால் எதுவும் சற்று நிதானப் போக்கில்தான் நடைபெறும். சனி ராசியைப் பார்ப்பதால் கோபதாபங்கள் உங்களை அண்டாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

## மிதுனம்

பேச்சைக் குறிக்கும் இரண்டாம் வீட்டில் செவ்வாய் இருப்பதால் கோபமான பேச்சு வேண்டாம். அதேசமயம் அதே இரண்டாம் வீட்டில் சுக்கிரனும் இருப்பதால் உங்கள் பேச்சால் கவரப்பட்டு மற்றவர்கள் உங்களைப் பாராட்டுவார்கள். மூன்றாம் வீட்டில் குருவும் ஆட்சியாக சூரியனும் அமர்ந்திருப்பதால் சகோதர சகோதரிக்கு அரசாங்க நன்மைகள் உறுதியாகும். பத்தாம் வீட்டில் அமர்ந்திருக்கும் கேதுவும் அந்த வீட்டைப் பார்க்கும் ராகுவும் வெளிநாட்டில் உத்தியோகம்பெற்றுத் தருவார்கள்.

## கடகம்

பன்னிரண்டுக்கு உரிய புதன் ஆட்சியில் இருப்பதால் படிப்பு சம்பந்தமான செலவுகள் ஏற்படும். உங்களுக்கு மட்டுமல்லாமல் பிறர் கல்விக்கு உதவுவீர்கள். ஆறில் சனி இருப்பதால் கடன் வாங்குவதற்கு அவசரம் வேண்டாம்; யோசித்துச் செய்யுங்கள். ஏனென்றால் அப்படி வாங்கிய கடனை விரைவாக அடைக்க முடியாதபடி சனி செய்துவிடுவார். இரண்டில் சந்திரன் குருவுடன் இணைந்திருப்பதால் பேச்சில் மென்மையும் மேன்மையும் அதிகரிக்கும். பத்தாம் வீட்டுக்கு குரு பார்வை ஏற்பட்டிருப்பதால் புதிய வேலைக்கு மாற விரும்பினால் அதற்கு இதுவே உகந்த நேரம்.

## சிங்கம்

ஒன்பதாம் வீட்டுக்கு குரு பார்வை கிடைத்திருப்பதால் தந்தைக்கு நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப ஸ்தானத்திலுள்ள கிரகங்களில் புதனும் இருக்கிறார். இல்லத்தில் உறவினர் வருகை உற்சாகம் தரும். மாமன் வழி சொந்தங்களுடன் உறவு பலமாகும். பேச்சைக் குறிக்கும் இரண்டாம் வீடான வாக்கு ஸ்தானத்தால் வார்த்தைகளில் புத்திசாலித்தனம் தெரியும். உத்தியோக, தொழில் ரீதியாக மடமடவென்று சரமாரியாக வார்த்தைகளைக் கொட்டினாலும் அவற்றில் அர்த்தம் இருக்கும் வெற்றியும் கிடைக்கும். ஞாயிற்றுக்கிழமை கோதுமையால் செய்த இனிப்பைக் கொடுங்கள்.

## கன்னி

ஐந்தாம் வீட்டை சுக்கிரன் பார்ப்பதால் உங்கள் மகன் அல்லது மகள் திரைத் துறையிலோ கலைத்துறையிலோ ஈடுபடுவார். வெற்றி மீது வெற்றி வந்து அவரைச் சேரும்! திருமண வயதில் குழந்தைகள் இருந்தால் அவர்களே தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். நாலாம் வீட்டுக்குக் குரு பார்வை இருப்பதால் தாயாருக்கும் உங்களுக்குமிடையே நல்லுறவும் நல்லிணக்கமும் இருக்கும். பழைய சண்டை, சச்சரவு, மனத்தாபங்கள் குறைந்து நிம்மதி ஏற்படும். நான்காம் வீட்டை குரு பார்ப்பதால் தாயாருக்கு நன்மைகள் அதிரிக்கும்.

## துலாம்

11இல் குரு இருப்பதால் லாபம் அதிகரிக்கும். ராசியில் சந்திரன் வருகிறார். மனத் தெளிவு கூடும். குழப்பமான விடயங்களைத் தவிர்ப்பது நல்லது. அதீத யோசனைகள் தோன்றும். இரண்டாம் வீட்டில் சனிபகவான் - பேச்சில் நிதானத்துடன், குடும்பத்தில் சண்டை, சச்சரவு இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வாகனங்கள் அதிக செலவு வைக்கும். குடும்பத்தாருடன் அனுசரித்துச் சென்றால் நன்மை தேடிவரும். வெள்ளிக்கிழமை ஏழைப் பெண்மணிக்கு சிறிய வெள்ளிப் பொருள் அல்லது வெள்ளிக்காசு அளித்தல் நன்று.

## விருச்சிகம்

பன்னிரண்டில் சந்திரன் வருவதால் வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். குடும்பத்தில் யாருக்காவது திருமணம் நடைபெறும் அல்லது குழந்தைப் பேறுகிட்டும். ஒன்பதுக்குரியவர் உச்சமாக இருப்பதால் தந்தை மூலமாக நன்மைகளோ தந்தை வழி சொத்துகளோ கிடைக்கும். நான்காம் வீட்டை குரு பார்ப்பதால் கல்வியில் சாதனை படைப்பீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அல்லது தற்போதுள்ள வாகனத்துக்குப் புதுப் பொலிவு தருவீர்கள். அதிலும் குரு தன் வீட்டைத் தானே பார்ப்பதால், பணவரவு அதிகரிக்கும்.

## தனுசு

நாலில் கேது, கூடவே ராகுவின் பார்வையும் இருப்பதால் தாயாரின் உடல் நிலையில் சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் உடனே மருத்துவர் உதவியை நாடுங்கள். நாலாம் வீட்டில் கேது. படிப்பில் முழுக் கவனம் செலுத்தவேண்டும். அவர் ஞானகாரகன். அபார அறிவாற்றலை அளிப்பார். அருமையான உத்தியோகம் கிடைக்கும். ஏழரைச் சனி துவங்கியுள்ளதால் எந்த வகையிலும் பழிபாவம் அண்டாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வையுங்கள். ஒன்பதாம் வீட்டில் உள்ள குரு எல்லா வகையிலும் நன்மை அளிப்பார்.

## மகரம்

ஒன்பதில் உள்ள புதன் தந்தையின் அறிவாற்றலையும் சமயோசிதத்தையும் அதிகரித்து அவர் அலுவலகத்தில் மேன்மை பெறவும் அக்கம்பக்கம் மற்றும் அலுவலகத்தில் தன் பேச்சு, செயல் மூலம் மற்றவர்கள் பிரச்சினையைத் தீர்த்துப் புகழ் பெறுவார். ராசிக்கு சுக்கிரன் பார்வை கிடைத்திருப்பதால் கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். இரண்டாம் வீட்டை குரு பார்க்கிறார் - மாணவர்களுக்கு நன்மை அதிகரிக்கும். சனிக்கிழமை நவகிரக தரிசனம் செய்யுங்கள். ஏழைகளுக்கு உணவளித்து அனுமனை வணங்குங்கள்.

## கும்பம்

ஒன்பதாம் வீட்டிற்கு சந்திரன் வாரக்கடைசியில் வரப்போகிறார். வீணான மனக்குழப்பம் உருவாகலாம். எதுவுமே நடக்கும்போது தானாக நடக்கும் கற்பனை பயங்கள் வேண்டாமே! கடைசியில் அதே சந்திரன் பத்தாம் வீட்டிற்கு வந்து, எண்ணங்களையும் சிந்தனைகளையும் மனதையும் கட்டுப்படுத்தி உத்தியோகம் பற்றித் தெளிவாக முடிவெடுக்க வைப்பார்! மனதிலே குழப்பமிருக்காது இனி. விநாயகருக்கு மாலை சாற்றுங்கள். ஞாயிற்றுக்கிழமை நவகிரகம் சுற்றுங்கள்.

## மீனம்

படிப்பைக் குறிப்பிடும் நாலாம் வீட்டின் அதிபதி உச்சம் பெற்றிருப்பதால் கல்வியில் எதிர்பாராத உயர்வுகள் ஏற்படும். ராசியின் மீது கேது இருப்பதால் மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். ராசிநாதன் குரு ஆறில் இருப்பதால் தன்னம்பிக்கை குறையலாம். நெருங்கியவர்கள் மீதே சந்தேகம் ஏற்படக்கூடும். எனவே கற்பனை பயம், சந்தேகங்களை விட்டொழியுங்கள். வியாழக்கிழமை கோயிலைச் சுற்றுங்கள். கடலை மாவு இனிப்பை கோயிலில் விநியோகியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருக்கள் தழும்பாக மாறுகிறதா? உதடு வெடிக்கிறதா? இதோ டிப்ஸ்

முகத்தில் பருக்கள் வந்தால் அது தழும்பாக மாறி முகத்தை அசிங்கப்படுத்திவிடும். பருக்கள் தானாகப் பழுக்கும் வரை விட்டால் முழுமையாகப் பழுத்ததும் காய்ந்து அதன் மேலே படலம்போல் ஒட்டிக்கொண்டிருந்த தோல் வெளிப்பட்டுவிடும். வடு இருக்காது. கைகளால் நெருடிக் கிள்ளிவிடப்பட்ட பருவின் சீழ் அகன்றவுடன் தோலில் ஒரு பள்ளம் ஏற்பட்டு வடுவாக நிலைத்து விடும். அடிக்கடி பருக்களைத் தொடுவதாலும் அழுத்துவதாலும் அவை பெருத்து ஆழமாக ஆகிவிடுவதும் உண்டு. பருக்களைக் கிள்ளுவது தவறு. நெருடாமல் தொடாமல் இருந்தால் பருக்கள் வடுவின்றித் தாமே மறைந்துவிடும்.

**டிப்ஸ்:**

இனிப்புப் பண்டங்கள், கொழுப்பு நிறைந்த உணவுகள், சொக்லேட்டைச் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. குளிக்கும்போது உடலைத் தினமும் ஈரிழைத் துண்டால் அழுத்தித் தேய்த்துக் குளிப்பது நல்லது. முகத்தையும் ஈரிழைத் துண்டால் தேய்த்துவிடுவதால் வியர்வைக் கோளங்களைச் சுற்றியுள்ள தசைகள் வலுவுற்று துவாரங்கள் அதிகம் பெருக்காமலும் கொழுப்பின் கசிவு அழுக்கு தங்காமலும் அழற்சி அடையாமலும் பாதுகாக்க முடியும்.

## உதடு வெடிக்கிறதா?

குளிர்காலம் நெருங்கிவிட்டால் சளி, இருமல் போன்ற பிரச்சினைகளால் அல்லல்படுவது போன்று உதடு வெடிப்பு பிரச்சினையாலும் அவதிப்படுவோம். உதடு வெடித்து எரிச்சல் ஏற்படுவதால் நம்மால் விரும்பிய உணவுகளை சாப்பிட இயலாது. அதுவும் காரமான உணவுகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. மேலும், பிறரோடு வாய்திறந்து பேசுவதற்கு கூட மிகவும் சிரமப்படுவோம்.

**டிப்ஸ்:**

1 டீஸ்பூன் தேங்காய் எண்ணெய்யுடன் 1 டீஸ்பூன் உப்பை கலந்து ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொள்ளுங்கள். பஞ்சுருண்டையைக் கொண்டு இந்த கலவையை உங்கள் உதட்டில் தடவிக் கொள்ளுங்கள். பின் உதட்டின் மீது விரல்களை கொண்டு வட்ட வடிவில் ஒரு நிமிடத்திற்கு மென்மையாக மசாஜ் செய்யுங்கள். சிறிது நேரம் கழித்து, உங்கள் உதடு மென்மையாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். இறுதியில் ஒரு துணியைக் கொண்டு உதட்டைத் துடைத்து விட்டு அதனை காய வையுங்கள்.



# சுவையான ஆட்டிறைச்சி குழம்பு

ஆட்டிறைச்சிக் குழம்பு என்றாலே அது தனி ருசி. சுவையும் மணமும் கூடுதலாக இருக்கும். இதற்கு காரணம் இதில் சேர்க்கப்படும் மசாலாக்கள். காரமான குழம்பை சாப்பிட நினைப்பவர்கள் இதை முயற்சி செய்யலாம்.

**தேவையான பொருள்கள்**

ஆட்டிறைச்சி – அரை கிலோ
சின்ன வெங்காயம் – 100 கிராம்
தக்காளி – 2
மஞ்சள் தூள் – 1/2 ஸ்பூன்
மிளகாய் தூள் – 2 ஸ்பூன்
கொத்தமல்லி தூள் – 3 ஸ்பூன்
சோம்பு – 1/2 ஸ்பூன்
பட்டை, கிராம்பு , கருவேப்பில்லை – சிறிதளவு
எண்ணெய் – 4 டீ ஸ்பூன்
உப்பு – தேவையான அளவு

**அரைக்க தேவையானவை**

மிளகு – 1 டீ ஸ்பூன்
சீரகம் – 1 டீ ஸ்பூன்
பெருஞ்சீரகம் – 1 ஸ்பூன்
உள்ளி – 6 பல்
இஞ்சி – ஒரு துண்டு

**செய்முறை**

கறியை சுத்தம் செய்து வைத்துக்கொள்ளவும். செய்த கறியை



சிறிதளவு மஞ்சள் தூள், உப்பு போட்டு இரண்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வேகவைக்கவும். கறி நன்றாக வெந்தவுடன் ஒரு சட்டியில் மிளகு, சீரகம், பெருஞ்சீரகம் மூன்றையும் வறுத்து உள்ளி, இஞ்சி சேர்த்து அரைக்கவும்.

அகலமான பாத்திரத்தில் எண்ணெய் விட்டு பட்டை, கராம்பு பெருஞ்சீரகம், கருவேப்பில்லை சேர்த்து தாளிக்கவும். பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம் போட்டு வதக்கவும். இத்துடன் தக்காளி சேர்த்து வதக்க வேண்டும்.

நன்றாக வதங்கிய உடன் அரைத்து வைத்த மசாலாவை போட்டு வதக்கவும். சிறிது வதங்கிய பின் அதில் மிளகாய் தூள், கொத்தமல்லி தூள், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து வதக்கி, அதில் வேகவைத்த கறியைப் போட்டு நன்கு கொதிக்க விடவும். குழம்பு நன்றாக கொதித்து வற்றி எண்ணெய் மிதந்து வரும். இப்பொழுது ஸ்டவ்வை நிறுத்திவிடலாம். சுவையான ஆட்டிறைச்சிக் குழம்பு தயார்.

# அழகாக ஜொலிக்க விரும்புகிறீர்களா!

ஒரு நாளைக்கு குறைந்தது 3 லீற்றர் தண்ணீர் பருகுங்கள்.
ஆறு, ஏழு மணி நேரம் தூக்கம் அவசியம். (செல்போனைப் படுக்கும் நேரத்தில் வைத்துக் கொண்டிருப்பது, சீரியல்களில் மூழ்கிவிடுவதை தவிர்த்தாலே தூங்க நேரம் கிடைக்கும். நன்றாக தூக்கமும் வரும்.)
நார்ச்சத்து உணவுகள் அதிகமாக உட்கொள்ளுங்கள். பச்சைக் காய்கறிகளைச் சமைக்காமல் சாலட் செய்து சாப்பிடவும்.
தினமும் இருமுறை குளிக்க வேண்டும். எத்தனை அசதியாக, சோம்பலாக இருந்தாலும் படுக்கைக்குச் செல்லும் முன் குளித்துவிட்டுப் படுக்கவும்.
உடலுக்கும் தலைமுடிக்கும் தொடர்ந்து ஒழுங்காக எண்ணெய் தேய்க்கவும். அழகு சாதன பொருள்களை உபயோகித்தால் அவை மருத்துவத்தன்மையும், (ஹெர்பல்), இயற்கை தன்மையும் மிகுந்ததாக இருக்க வேண்டும்.
பழங்கள் நிறையச் சாப்பிட வேண்டும்.
உடற்பயிற்சி கண்டிப்பாகச் செய்ய வேண்டும். ஒல்லியான, ஆரோக்கியமான உடல்வாகு வேண்டுமென்றால் அதற்காக நேரம் ஒதுக்கி உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
படுக்கச் செல்லும் முன் ஒரு கிளாஸ் பால் குடியுங்கள்.
உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும், சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும்.
காய்கறி பழ வகைகளைத் தவறாமல் சாப்பிடுங்கள். இயற்கையான காய்கறி, பழ வகைகளில் உள்ள விட்டமின் மற்றும் சத்துக்கள் தோலில் சுருக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கக் கூடியவை.
வாரத்தில் ஒன்றிரண்டு தடவையாவது தோடம்பழ, கேரட் ஜூஸ் குடித்து வந்தால் சருமம் பளபளப்படையும்.
துவ[illegible]
வா[illegible]
போன்ற துவர்ப்பு சுவையுள்ள உணவை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.
வெந்தயக் கீரையை பாசிப்பருப்பு, சீரகம் சேர்த்து வேகவைத்து மசித்து வாரத்தில் 2 அல்லது 3 தடவை சாப்பிட்டு வந்தால் உடல் குளுமையாக இருக்கும். சுருக்கம் எட்டியும் பார்க்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "இரும்புக் கேற்றுப் போடுகிறது இன்றைய யாழ்ப்பாணம் வெளியே நான்!"

**ஜேகே என்ற பெயரில் எழுத்துலகில் அறியப்படும் ஜெயக்குமரன் போரியல் இடப்பெயர்வுகள் நீங்கலாக, பிறந்து வளர்ந்தது முழுவதும் திருநெல்வேலியில். படித்தது யாழ். பரியோவான் கல்லூரியில். பின்னர் உயர்கல்வியை மொறட்டுவை மற்றும் ஆர்.எம்.ஐ.ரி. (RMIT) பல்கலைக்கழகங்களில் கற்று, தற்போது மென்பொருள் பொறியியலாளராகப் பணிபுரிகிறார். தொழில் நிமித்தமாக கொழும்பு, சிங்கப்பூர் நகரங்களில் வசித்து தற்சமயம் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரத்தில் வாழ்ந்துவரும் ஜேகே, அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். தனது தாயகப் பயணத்தின் போது அவரைச் சந்தித்து உதயன் வாசகர்களுக்காக உரையாடினோம். இனி....**

***நேர்கண்டவர்: தபின்***

**கே:** படைப்புத்துறைக்குள் உங்கள் அடியெடுத்து வைப்பு எவ்வாறு நிகழ்ந்தது?

**ப:** அக்கா சொல்லும் சம்பவமொன்று. எனக்கு இரண்டு வயதாக இருக்கலாம். அக்கா என்னை மடியில் போட்டு கதை சொல்ல ஆரம்பித்திருக்கிறார். ஓர் ஊரிலே ஓர் இராஜகுமாரி இருந்தாள், அவளின் பெயர்.... என்று சொல்லி முடிக்க முதலே, நான் உடனே சாந்தி என்றிருக்கிறேன். சாந்தியக்கா பக்கத்து வீட்டுக்காரி!

பாலர்பாடசாலையில்சம்பந்தர்ஞானப்பால் குடித்த பாடத்தை படித்த நாளன்று நானும் நாலு வரி உல்டா தோடுடைய செவியன் எழுதி அம்மாவிடம் கிழி வாங்கியிருக்கிறேன். இதெல்லாம் சிறுபிள்ளை விளையாட்டுகள்.

கதை என்று உட்கார்ந்து எழுதி மற்றவர்களும் வாசித்தது பதினோரு வயதில் நிகழ்ந்தது. பதின்மூன்று வயதில் நண்பர்களோடு சேர்ந்து ஒரு புத்தகம் வெளியிட எடுத்த முயற்சி கையெழுத்துப்பிரதியோடு கருகிப் போனது. எழுத்து, வீட்டிலே தீண்டத்தகாத பொருளாகப் பார்க்கப்பட்டது. அந்த நாள்களில் கவிதை கிறுக்கப்பட்ட தாள்கள் கோழிப் பீ அள்ளவே பயன்பட்டன.

பல்கலைக்கழகக் காலத்திலும் பல சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். கொஞ்சம் சீரியசாக எழுத ஆரம்பித்தது இணையத்தில்தான். ஆரம்பத்தில் www.iamjk.com என்ற இணையத் தளத்தில் ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டிருந்தேன். அங்கே ஓரளவுக்கு உருப்படியான சிறுகதைகள் எழுதியிருக்கிறேன் என்று நம்புகிறேன். கடந்த நான்கு வருடங்களாக படலை (www.padalay.com) இணையத்தளத்தில் தமிழில் எழுதி வருகிறேன்.

**கே:** படைப்புலகில் உங்கள் பிரசவங்களும் அவற்றுக்கான பின்னணிகளும்?

**ப:** கந்தசாமியும் கலக்சியும், அமுதவாயன், வெள்ளி என மூன்று நாவல்கள், நாற்பது சிறுகதைகள், புத்தக விமர்சனங்கள், கவிதைகள், கட்டுரைகள் என்று படலை என்னை எழுத்து வசமாக்கிக் கட்டிப்போட்டிருக்கிறது. டக்லஸ் அடம்ஸின் நாவல்களை வாசித்த தாக்கத்தில் எழுதிய விஞ்ஞான சமூகப் புனைவே கந்தசாமியும் கலக்ஸியும். சங்க கால வாழ்வை வைத்து எழுதப்பட்ட நாவல் வெள்ளி. எக்சிஸ்டன்சலிசத்தை மையமாக வைத்து எழுதியது அமுதவாயன். வாதங்கள், வாதவழுக்களை விளக்கவென எழுதப்பட்ட தொடர் நாவலோ நாவல். இப்படி இணையத்தில் பல பரிசோதனை முயற்சிகளை தயக்கமின்றி செய்ய முடிகிறது. அச்சில் வெளியான என் [illegible]ல் புத்தகம் என் கொல்லைப்புறத்துக் [illegible]தலிகள்.

**கே:** புலம்பெயர் வாழ்வு உங்கள் எழுத்தில் எத்தகைய பாதிப்பை உண்டுபண்ணுகின்றது?

**ப:** புலம்பெயர் வாழ்வு எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் உகந்த சூழலையும் நேரத்தையும் கொடுக்கிறது. பல்லின கலாசார நகரமான மெல்பேர்னில் வாழ்வதால் பலதரப்பட்ட மனிதர்களோடு பழகும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அது பல கதைக்களங்களை கொடுக்கிறது. தற்போது வாசிக்கும் நூல்களிலும் அப்பன் முகத்தன்மையை உணர்கிறேன். இது எழுத்திலும் சிந்தனையிலும் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது.

**கே:** பொதுவாகவே புலம்பெயர் படைப்பாளிகளிடம் வெளிப்படும் தாயகம் பற்றிய ஏங்குதல், மீளத் திரும்பல் பற்றிய கனவுகள் உங்கள் படைப்புகளிலும் எட்டிப் பார்க்கிறதே. இதற்கு என்ன காரணம்?

**ப:** நனைவிடை தோய்தல் என்று இதற்கு மறைந்த எழுத்தாளர் எஸ்.பொ பெயர் சூட்டியிருப்பார். தாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைந்து அழுங்கும் ஏக்கங்களின் வடிகாலாக அமையும் எழுத்துக்கள். நனவிடை தோய்தல் எழுத்துக்களை புலம்பெயர் படைப்பாளிகள்தான் எழுதவேண்டுமென்பதில்லை. காலப்பெயர்வு காரணமாகவும் இவ்வகை எழுத்துக்கள் உருவாகலாம்.

ஈழத்தில் செங்கை ஆழியான் பலதடவை நனைவிடை தோய்ந்திருப்பார். சோ. பத்மநாதனின் நினைவுச்சுவடுகள், சுவடெச்சம் போன்ற நூல்கள்கூட நனைவிடைதோய்தல் வகையே. காலப்பெயர்வில் தாம் வாழ்ந்த, தற்போது கிடைக்கப்பெறாத வாழ்க்கையை நினைந்து புனையும் எழுத்துக்கள்.

எம்மைப்பொறுத்தவரையில் இவை ஒரு தலைமுறையின் வாழ்வியல். என் கொல்லைப்புறத்துக் காதலிகள்கூட நனைவிடை தோய்தல்தான். அது சொல்வது தொண்ணூறுகளில் நாம் கொண்டாடிய வாழ்க்கை. இன்று அது இல்லை. எனவே நான் புலம்பெயரா விட்டாலும் என் கொல்லைப்புறத்துக் காதலிகள் எழுதித்தான் இருப்பேன்.

நனவிடை தோய்தல் என்று வெறும் வடிகாலுக்காக இறக்கி வைக்கும் சப்புக்கொட்டு எழுத்துகளின் வாழ்நாள் மிகச்சிறியது. இதற்கூடாக ஒரு வாழ்வியலின் பதிவைப் புறம் மட்டுமில்லாது அகக்கூறுகளையும் சேர்த்து எழுதப்படும் படைப்புகளே காலத்தால் கொண்டாடப்படும். மற்றையவை மறக்கப்பட்டுவிடும்.

**கே:** சில வருட காலங்களைப் புலம்பெயர் தேசத்தில் கழித்துவிட்டு மீண்டும் சொந்த மண்ணில் காலடி வைத்த அனுபவம் எப்படி?

**ப:** யாழ்ப்பாணத்துக்கு நான் அடிக்கடி வந்து போகின்றவன். அதனால் மாற்றங்கள் எதுவும் முகத்திலடிக்கவில்லை. தவிர நான் வளர்ந்த யாழ்ப்பாணம் எப்போதோ இடம் பெயர்ந்து போய்விட்டது. எப்போதாவது தனியனாக ஒரு மலைவேம்புக்கு கீழேயோ அல்லது நல்லூர் தேரடியிலோ அமர்ந்திருக்கும்போது மட்டும் என் யாழ்ப்பாணமும் என்னைப் போலவே ஊர் திரும்பி என்னோடு அளவளாவும். அந்தக் கணங்களே ஊர் திரும்புதலுக்கான உந்துதல்கள்.

**கே:** நீங்கள் புலம்பெயர்தலுக்கு முன்னான யாழ்ப்பாணம்– பின்னான யாழ்ப்பாணம், ஒற்றுமை–வேற்றுமைப் படுத்துக?

**ப:** புதுப்பெயிண்ட் வாசத்தோடு கோயில் மாடப்புறாக்கள்.

வாசகனுக்காக காத்திருக்கும் நூலகங்கள்.

பேசுவதற்கு ஆள் இன்றி தனித்திருக்கும் மரத்தடிகள்.

காற்றுப்போய் பத்தியில் தூங்கும் மிதிவண்டிகள்.

குழைக்க ஆள் இல்லாமல் குழையும் பழஞ்சோறு.

தேங்காய்ப்பூ காய்ந்த அம்மிக்கல்லுகள்.

தார் மெழுகிய உந்துருளி வீதிகள்.

சீருடை காணாத தெருச்சந்திகள்.

ஆறரை இருட்டில் நல்லூர் திருவிழா.

காவல்துறை பொலிசாகி

நயினாதீவு நாகதீபவாகி

தண்ணீர்க் கிணறுகள் எண்ணெய்ப் போத்தல்களாகி


எண்ணெய்ப் போத்தல்கள் தண்ணீர் கிணறுகளாகி

மாற்றம் ஒன்றே மாறிலி என்ற தேற்றத்தை உணர்த்தி நிற்கின்றன.

*(14 ஆம் பக்கம் பார்க்க...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதி ஒரு தைலம்!

■ தி.இராசகோபாலன்

காலமெனும்சிற்பிசெய்தகவிதைத்தாயின் தலைமகன் மகாகவி பாரதி. விடியவே விடியாது என நினைத்திருந்த பொழுதை, விழிப்பதற்கு முன்னமே விடிய வைத்தவன். முடியவே முடியாது எனப் படுத்திருந்த சரித்திரத்தை, நெம்புகோல் போட்டு நிமிர வைத்த சாதனைக் கவிஞன். விரிசல் விட்டுக் கிடந்த இந்திய தேசத்தை, எழுத்தாணி என்னும் ஊசி கொண்டு தைத்த சரித்திர நாயகன்தான் அந்தக் கரிசல்காட்டுக் கவிஞன்.

விடுதலை வானத்தில் எழு ஞாயிறு தோன்றுவதற்கு முன்னமே எழுந்த விடிவெள்ளி மகாகவி சுப்பிரமணிய பாரதி. கவிஞர் சிற்பி பாடியதுபோல்,

***சோம்பல் முறிப்பதற்கும்***
***சோதிடம் பார்த்துக்***
***கொட்டாவி விடவும்***
***இலக்கணம் தேடிச்***
***சொப்பனங்களின்***
***ஒப்பந்தக் குவியலாய் இருந்த***
***இலக்கியப் பூமியை***
***அடிவாரம் வரையிலும்***
***புரட்டியெடுத்த***
***ஊழிப் பிரளயம் பாரதி***

எனப் பாட்டுலகில் ஒரு புதிய பூபாளம் பாடியவன் அந்த மகாகவி.

பாரதத்தில் ஒரு தனித் தீவாகத் திகழவில்லை பாரதி. ஒரு தைல தாரையாகத் திகழ்ந்தான். குளத்துத் தண்ணீரில் ஒரு சொட்டுத் தேனை விட்டால், அதே இடத்தில் கரைந்துவிடும். ஆனால், அதே தண்ணீரில் ஒரு சொட்டுத் தைலத்தை விட்டால், அந்தக் கிணற்றின் பரப்பளவு முழுவதும் தைலத்தின் ஆதிக்கம் பரவி நிற்கும். பாரதி ஒரு தைலந்தானே?

மாந்தோப்பிலிருந்து ஒரு குயில் குரலெழுப்பினால் அடுத்த மரத்திலிருந்த குயிலும் உடன் பின்பாட்டுப் பாடும். தொடர்ந்து தோப்புக் குயில்கள் ஒவ்வொன்றும் கூவத் தொடங்கும்.

குயில் பாட்டைக் கேட்ட மகாகவி பாரதி என்ற பாட்டுக் குயிலும், குக்குக்கு வென்று குயில்பாடும் பாட்டினிலே தொக்க பொருள் எல்லாம் தோன்றியதென் சிந்தைக்கே, அந்தப் பொருளை அவனிக்கு உரைத்திடுவேன், விந்தைக் குரலுக்கு, மேதினியீர், என் செய்கேன் எனப் பாடுகின்றார்.

தமிழ்க் குயிலாகிய பாரதி, செப்பும் மொழி பதினெட்டுஉடையாள், எனிற்சிந்தனை ஒன்றுடையாள் எனப் பாடியவுடன், உருதுமொழிக் குயிலாகிய இக்பாலும் கண்கள் ஆயிரம் என்றாலும் பார்வை ஒன்றே ஒன்றுதான் எனப் பாடுகிறார் (There should be one sight among thousand eyes).

மகாகவி பாரதி, யுக மாற்றம் விரைவில் வரும் என்பதை ஊகித்து, அச்சமில்லை, அமுங்குதல் இல்லை, ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம், அண்டஞ் சிதறினாலும் அஞ்சமாட்டோம், கடல் பொங்கி எழுந்தாலும் கலங்கமாட்டோம்... வீழ்க கலியின் வலியெல்லாம், கிருதயுகந்தான் மேவுக என முரசறைந்தான்.

பாட்டுக்கொரு புலவனாகிய பாரதி மண் விடு தலைக்குப் போராடிய அதே நேரத்தில், விண்ணை ஆள் வதற்கும் கனவு காணுகின்றான். அவன் கண்ட கனவு அப்துல் கலாம் கண்ட கனவு. அமரர் அப்துல் கலாம் நனவாக்கிய கனவு.

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர், வாராது போல் வந்த மாமணியாகிய பாரதி, ஆத்திசூடியில் வானநூல் பயிற்சி கொள் என்கிறார். வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி என்றும், சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம் என்றும் நுண்மான் நுழைபுலத்தோடு பாடுகின்றார். பாரதி கண்ட அறிவியல் பார்வை நம்மை வியக்க வைக் கிறது. இது எப்படி?

தீஞ்சுவைக் கவிஞனாக இருக்கும் ஒருவர், தீர்க்கதரிசியாகவும் இருக்க முடியும். அவன் கண்ட கனவை எப்படி நனவாக்குவது என்பதற்குரிய இணைப்புப் பாலத்தையும் அவனே கட்டி முடிப்பான் என ஒரு நீதிபதியைப் போல் தீர்ப்புரை வழங்கியிருக்கிறார் கார்ல் மார்க்ஸ். (he Artist of tomorrow will know how to bridge the gap between action and dream என்பது கார்ல் மார்க்ஸின் கணிப்பு).

பாரதி கண்ட தீர்க்கதரிசனங்கள் பல, இன்று நம் கண் முன்னே நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்றன. "நான் எதையும் தேடுவதில்லை. என் கண் முன்னே அவற்றைக் காண்கிறேன்" என்று ஓவிய மேதை பிகாஸோ கூறியதுபோல், பாரதியும் தம் கண் முன்னே பல புதுமைகளைக் கண்டிருக்கிறான்.

"திறமையான புலமையெனில் அதனை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்" என்றார் பாரதியார். அவர் ஊருக்காகப் பாடிய தாரக மந்திரம், அவர் வீட்டுத் தலைவாசலிலேயே சத்திய வாக்காயிற்று.

நெவின்சன் என்ற பிரிட்டன் நாட்டுப் பத்திரிகையாளர், லாலா ல்ஜபதிராய் ஏகாதிபத்தியத்தால் நாடு கடத்தப்பட்டதைக் கேள்விப்பட்டு பாரதி துடித்துப் பாடியதை, பேசியதைச் செவி மடுக்கிறான்.

"பாரதியின் புலம்பலை, கண்ணீர்க் கவிதையைச் சென்னைக்கடற்கரையில் செவிமடுத்தேன். அது நாடு கடத்தப்பட்ட வர்கட்கெல்லாம் பொதுவான புலம்பல் எனலாம். வீட்டைப் பற்றிய இன்ப நினைவுகள், சிறு வயதில் விளையா டிய நாட்டினிடம் ஆழ்ந்த பற்று, இந்தி யர்களிடையும்,வழங்காத மொழிகளி டையும் வாழ்க் கையின் ஏகாந்த மானதன்மை,இவை யெல்லாம் வெகு சாந்த முடனும், எளிதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன" என்று அந்தப் பத்திரிகையாளர் இந்தியாவின் நூதன உணர்ச்சி எனும் நூலிலே பதிவு செய்கிறார்.

அத்தகைய வீரயுகக் கவிஞனை 'வானத்து தேவன்வந்தான்காண், வந்ததுபோல்போனான் காண் எனப் புதுமைப்பித்தன் வானத்தை அண்ணாந்து பார்த்தது போல், பாரதியின் நினைவு நாளான செப்ரெம்பர் 11ஆம் நாளில் நாமும் அண்ணாந்து பார்க் கிறோம்.

> பாரதத்தில் தைல தாரை யாகத் திகழ்ந்தான் பாரதி. குளத்துத் தண்ணீரில் ஒரு சொட்டுத் தேனை விட்டால், அதே இடத்தில் கரைந்து விடும். ஆனால், அதே தண்ணீரில் ஒரு சொட்டுத் தைலத்தை விட்டால், அந்தக் கிணற்றின் பரப்பளவு முழுவதும் தைலத்தின் ஆதிக்கம் பரவி நிற்கும்.



# இரும்புக் கேற்றுப் போடுகிறது...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி.... )

கசக்கும் புலம்பெயர் உறவுகள்.
இனிக்கும் இருதய தொடர்புகள்.
மதில் சுவர்களில் கிழிந்து தொங்கும்
தன்னாட்சி, தேசிய கோஷங்களுக்கு மேலே
புதிதாய் பசை மணக்கும்
தனி ஒருவன் போஸ்டர்கள்.
வேலிகள் தொலைத்த படலையை திருத்தி
இரும்பு கேற்று போடுகிறது
இன்றைய யாழ்ப்பாணம்.
வெளியே நான்!

கே: உங்கள் எழுத்தில் விஞ்ஞானபூர்வமும், எள்ளலும் பல இடங்களில் எட்டிப்பார்க்கின்றன, இது எதனால்?

ப: எள்ளல் ஈழத்தமிழனின் வரமும் சாபமும். எழுத்தில் அது எட்டிப்பார்ப்பது இயல்பே. விஞ்ஞானத்தில் ஆர்வம் சுஜாதா போட்ட விதை.

கே: யாழ்ப்பாணத்தில் என் கொல்லைப் புறத்துக் காதலிகள் அறிமுக விழா பற்றிய உங்கள் உணர்வு வெளிப்பாடு?

ப: என் கொல்லைப்புறத்துக் காதலிகள் நூலை ஆக்கிரமிக்கும் காலப்பகுதியான தொண்ணூறுகளின் முற்பாதியில் தீக்கிரையாகிய யாழ். நூலகம் கம்பீரமாக நிமிர்ந்து காட்சி தந்தது. நூலில் அது ஒரு பாத்திரமாகவும் வருகிறது. இன்றைக்கு அதே நூலகத்தில் இந்த நூல் அறிமுக விழா இடம் பெற்றமை கலவையான உணர்வுகளை கொடுத்தது. இளையோர் முன்வந்து நடத்திய நிகழ்வில் சோ.ப. கருணாகரன் போன்ற மூத்தவர்கள் கலந்துகொண்டமை கொடுத்த உவகை சொல்லி மாளாதது. யாழ்ப்பாணம் என் முதுகில் தட்டி இன்னும் எழுது, நான் வாசிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறது. இனி என் வேலை எழுத்தாகிக் கிடப்பதே!

கே: யாழ்ப்பாணத்துக்கான நிரந்தரத் திரும்புகையா? கங்காருதேச வாசியா? உங்கள் தெரிவு எது? ஏன்?

ப: சொக்கலட் என்ற ஆங்கில நாவலில் வரும் வியான்னே எனும் பெண் ஒவ்வொரு வடக்கு பருவக்காற்றின்போதும் இடம்பெயர்வாள். இடம்பெயர்வதற்கு அவளுக்கு ஏதாவது ஒரு காரணம் அமையும். அம்மாவின் இழப்பு, காதல் தோல்வி, ஊரவர் வெறுப்பு என்று ஏதாவது ஒரு காரணம். என்னதும் அப்படியே. யாழ்ப்பாணம், பளை, வன்னி, கொழும்பு, சிங்கப்பூர், மெல்பேர்ன் என்று ஒவ்வொரு பருவத்துக்கும் ஒவ்வொரு ஊராக இடம்பெயருதல் வாழ்க்கையாகி விட்டது. சில இடம்பெயர்க்கப்பட்டவை. சிலது விரும்பி இடம்பெயர்ந்தது. தற்சமயம் மெல்பேர்ன் நகரம் என்னுடைய இயல்புக்குப் பொருந்தி வருகிறது. தனித்திருப்பது ஒரு சுகம். இன்றைய யாழ்ப்பாணத்தில் எழுதிக்கொண்டே தனித்திருப்பது என்பது முடியுமா என்பது கேள்விக்குறி. எழுதுவதற்காகவே சிங்கப்பூரிலிருந்து மெல்பேர்னுக்கு குடிபெயர்ந்தவன் நான். நிறைய நேரத்தை வாசிப்புக்கும் எழுத்துக்கும் அங்கே ஒதுக்க முடிகிறது. நாமுண்டு, நம் வேலையுண்டு என்று வாழ முடிகிறது. இப்போதைக்கு கங்காரு தேசமே என் வசிப்பிடம். மீண்டும் நான் யாழ்ப்பாணம் திரும்புவதா இல்லையா என்பதை பருவக்காற்றே தீர்மானிக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஸ்ட்ராபெரி
## காற்றுப்போன பலூன்

பணக்கார வீட்டுப் பெடியனைப் பேய் மிரட்டி எடுக்கிறது. "ஆவிகள் கடல் கடந்து வராது. நீ வெளிநாட்டுக்குப் போ" என்று மந்திர வாதி எச்சரிக்கிறார்.

இன்னொரு பக்கம், பா.விஜயின் பயன்பாட்டிலுள்ள வாடகைக் காரை ஒரு மாதத்துக்கு வாடகைக்கு எடுக்கிறார்கள் அவ்னி மோடியும் அவரது அப்பா ஜோ மல்லூரியும்.

மனநிலை பாதிக்கப்பட்ட தேவயானி, கணவருடன் (சமுத்திரக்கனி) கடைத் தெருவுக்குப் போகும் போது சமுத்திரக் கனியின் உயிரைக் குறிவைத்து ஒரு லாரி அவர் மீது மோதுகிறது.

அவ்னி தன்னிடம் நெருங்கிப் பழகுவ தைக் கண்ட விஜய் அதைக் காதல் என நினைத்துக் கொள்கிறார். அவ்னியோ பேய், பிசாசு சமாச்சாரங்களை விஜய்க்கு அறிமுகப்படுத்துகிறார்.

பணக்கார இளைஞன் நாட்டைவிட்டுப் போவது, சமுத்திரக்கனியின் சாவு, தேவயானியின் மனநிலை, ஜோ மல்லூரியின் திட்டம் எல்லாவற்றுக்கும் காரணம் ஒன்று தான்: பாடசாலை வாகன விபத்தில் பரிதாபமாக இறந்துபோன ஒரு குழந்தை!

அந்தக் குழந்தை இப்போது ஆவியாக உலவுகிறது. அது, விஜய்யிடம் ஏதோ பேச விரும்புகிறது. அது ஏன் பேச விரும்புகிறது? விஜய்யை அதைச் சந்திக்கவைக்க மல்லூரியும் அவ்னியும் ஏன் தவிக்கிறார்கள்? வெளிநாட்டுக்குப்போன இளைஞன் என்ன ஆனான்? சமுத்திரக்கனியின் போராட்டம் என்ன ஆயிற்று? இவற்றையெல்லாம் நெகிழ்ச்சியும் மிரட்டலுமாகச் சொல்ல முயல்கிறது ஸ்ட்ராபெரி.

படத்தைத் தயாரித்து, இயக்கி நடித்திருக்கிறார் பா.விஜய். மிரட்டும் பேய், பழிவாங்கும் பேய் வகைகள் இந்தப் படத்திலும் இருந்தாலும் அவற்றினூடே சமூக விழிப்புணர்வுக்கான இழையை வலுவாகப் பின்னியிருப்பதில் இயக்குநர் விஜய் பரவாயில்லை ரகம். கதையை இரண்டு மூன்று பாதைகளில் நகர்த்திச்சென்று அவற்றை ஒன்றாக இணைக் கும் முயற்சி திரைக் கதைக்கு விறு விறுப்பு. பேயைப் பேச வைப்பது, விபத்துச்சம்பவம், பேய்க்குகாலக்கெடு விதிப்பது போன்ற காட்சிகளால் சுவாரஸ்யம் கூட்ட முயல்கிறார்.

ஒரு கட்டம்வரை இவை படத்தை விறுவிறுப்பாக நகர்த்த உதவுகின்றன. மர்மங்களுக்கான காரணம் தெரிந்த பிறகு, படம் படுத்துக் கொள்கிறது. மல்லூரியும் வில்லனும் என்ன ஆகிறார்கள் என்பதைக் காட்டிய விதத்தில் இருக்கும் விறுவிறுப்பு போக, படத்தில் புதுமை இல்லை. இரண்டாம் பாதியின் பெரும்பகுதி அதிக சுவாரஸ்யங்கள் இல்லாமல் நகர்வது பலவீனம். முதல் பாதியில் கதை வேகம் எடுக்கும்போது திணிக்கப்படும் பாடல் காட்சிகள் படத்துக்கு முட்டுக் கட்டை போடுகின்றன. கதையை நகர்த் திச் செல்ல வலுவான காட்சிகள் இல்லாததால் ஒரேவிதமான காட்சிகள் திரும்பத் திரும்ப வந்து அலுப்பூட்டுகின் றன.

பாடகராக வெற்றிபெற்றிருக்கும் பா.விஜய், நடிப்பில் பரவா யில்லை. அவர் பயப்படுவது செயற்கைத்தனமாக உள்ளது. நடிப்புக்கு இன் னும் அவர் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கயிற்று ஊஞ்சலில் யோகாசனம் செய்தபடி வசீகரமாக அறிமுகமாகும் அவ்னிக்கு ஒரு கட்டம் வரை முக்கியமான பங்கு உள்ளது. அவரும் நன்றாகவே செய்திருக்கிறார். குறிப்பாக சுடுகாட்டுக் காட்சி! ஆனால் திரைக் கதை திடீரென்று அவரை அம்போ என்று விட்டுவிட் டுப் போய்விடுகிறது.

சமுத்திரக்கனி பேசும் வசனங்கள் கூர்மை. பேய்ப் படத்துக்குள் சமூக விழிப்புணர்வு வசனங்கள் இடம்பெறுவதும், கதையோடு அவை ஒட்டி வருவதும் ஆச்சரியம். தனியார் பள்ளிகளின் லாப நோக்கு, அசட்டை குறித்து பா.விஜய் எழுதியுள்ள வசனங்கள் சாட்டையடி.

பாடல்களைக் குறைத்து, காட்சிகளில் புதுமையை சேர்த்திருந்தால் ஸ்ட்ராபெரி இன்னும் இனித்திருக்கும். வேற நல்ல படம் ஏதும் பார்க்க வசதியே இல்லை என்றால் மட்டும் இந்தப் படத்தைப் பார்க்க நேரம் ஒதுக்குங்கள்.





# நீ ஆள நினைக்காதே! பிறர் வாழ நினை!

■ சாம் ரமேஸ்குமார்

யாருடைய செயல்கள் தர்மத்தைச் சார்ந்து இருக்கின்றதோ அவர்களிடத்தில் இறைவன் வாழ்கின்றான் என்று கீதை போதிக்கின்றது.

ஈழ மகான் தவத்திரு யோகர் சுவாமிகளோ, தரும நெறி பிசகாதே எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலையில் என்று சாதனை செய்வதுதான் தர்மம் என்கிறார் தனது நற்சிந்தனைப் பாடலில்.

கீதையின் வழியில் இல்லையாயினும் எம் தேசத்து தவத்திரு யோகரின் வழியிலாவது நாம் சிறிதளவேனும் தர்மத்தைக் கடைப்பிடித்திருக்கின்றோமா? நிச்சயம் ஒரு சிறு துளிகூட இல்லை.

தர்மம் என்பது வீதியோரத்தில் இருக்கும் சிவப்பு விளக்குக்கு சமன். அந்த விளக்குக்கு கட்டுப்பட்டே நாம் வீதியில் பயணிக்கிறோம். அந்த சிவப்பு விளக்கை மீறி நாம் பயணித்தோமானால் அதர்மம் என்ற விபத்துக்குள் அகப்பட்டு, நாம் இறந்து விடுவோம். வீதிப் பயணம் போன்றதே எம் தர்ம வாழ்வும். அது இன்றுவரை பயங்கரமான விபத்துக்குள்ளாகி விட்டது.

இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் பேசிப் பேசியே தர்ம நெறியில் இருந்து முற்றாக நாம் பிசகி விட்டோம். அன்பு மட்டுமே ஊற்றெடுக்கும் எம் சிவபூமி இப்போது மிருக பூமியாக மாறிவிட்டது. சனாதன தர்மத்தின் அச்சிலிருந்து விலகி அக்கிரமங்களுக்கும் அடாவடிகளுக்கும் துணை நின்று ஒற்றுமையே சிவமென உணராது அவநம்பிக்கையில் எங்களுக்குள்ளேயே துரோகிகளானோம். எப்படி இறைவன் எம்மைச் சார்ந்து இருப்பான்? சற்றும் எம்மனம் இதற்காக வெட்கப்பட்டதில்லை.

கூடு கட்டி வாழும் பறவைகூட பிற பறவைகளின் கூட்டை ஒருபோதும் அழிக்க நினைப்பதில்லை. ஆனால், மனிதர்களாகிய நாங்கள் அயலானையே அழிக்க நினைத்து ஆள நினைக்கின்றோம். இருந்தும் தவத்திரு யோகர் கூறுகின்றார். "நீ ஒரு போதும் ஆள நினைக்காதே. உன் குடும்பத்தையோ, சுற்றத்தையோ, மக்களையோ, தேசத்தையோ பிறர் வாழ நினை. அந்த வாழ்வின் ஊடே இறைவனைக் காண நினை இதுவே தர்மமாகும்." இந்த தர்ம சிந்தனை எம் மனமெங்கும் நிலவொளி போல் படர்ந்திருந்தால் எம் தேசத்திலும் மக்கள் மனதிலும் அமைதி கரைபுரண்டு என்றென்றும் ஓடியிருக்கும்.

எம் தேசத்தினதும் மக்களினதும் அமைதியின்மைக்கு காரணம் நானென்ற அகங்காரமே. இந்த அகங்காரமானது மனித ஆன்மாவிலிருந்து தேசத்தின் ஆன்மா வரைக்கும் ஆளுகின்ற பெரும் விஷக் களையாக எங்கும் பரவிவிட்டது. இது அரசியல் தளத்திலிருந்து பெரும் ஆன்மிக பீடங்கள் வரைக்கும் எரிமலையாய் கொந்தளிக்கின்றது. இவையெல்லாம் அடங்க வேண்டுமானால், நானென்ற விஷம் எல்லோரிடமும் நாமென்ற அமுதமாக மாறவேண்டும். இல்லையேல் நானென்ற விஷம் இனி பல தலைமுறைகளையும் கடந்து எம் இனத்தைக் கொல்லும்.

ஒளியில்லாத வீட்டை இருளே வழி நடத்துகின்றது. அதுபோல் தர்மம் இல்லாத எம் மனதை தீமைகளே வழி நடத்துகின்றன. அந்தளவுக்கு இறையருள் எம்மைவிட்டு தூரத்தே விலகிச் சென்று விட்டது. ஆனாலும் நாம் மாறமாட்டோம் மீண்டும் தர்மத்தைக் கடைப்பிடிப்போம். இறைவனையே என்றும் சார்ந்து வாழ்வோம். தவத்திரு யோகரின் பின்வரும் நற்சிந்தனைப் பாட்டு எமக்கு சிறு நம்பிக்கையின் ஒளிக்கீற்றைத் தருகின்றது.

*வாழ்வோ மென்று வென்று தாளம்*
*போடு*
*மாள மாட்டோ மென்று சொல்லித் தாளம்*
*போடு*
*நாம் நாம் நாம் என்று சொல்லித் தாளம்*
*போடு*
*நம்மை நாமறிந்தோ மென்று தாளம்*
*போடு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் பணிபுரியும் பெண்ணா?

வேலைக்குச் செல்பவர்கள் கொஞ்சம் பளிச் நிற ஆடைகளை அணியலாம். இந்த நிறங்கள் ஒருவரை எல்லோரிடமும் பேதமின்றிப் பழகுகிறவராக அடையாளம் காட்டும். நட்பு பாராட்ட வேண்டிய அலுவலகச் சூழலில் அப்படிப்பட்ட நிறங்களைத் தேர்ந்தெடுப்பதே சரி. டல்லான நிறங்கள் ஒருவரை மூடிடைப்பாக காட்டும். பேஸ்டல் கலர்கள் சாஃப்ட் கேரக்டராக காட்டும்.

நாம் அணிந்திருக்கும் ஆடைகள் மூலமாகவே நமது தன்னம்பிக்கையை புலப்படுத்த முடியும். பிங்க், மெல்லிய பச்சை, மெல்லிய நீலம் இப்படிப் போன்ற கண்களை உறுத்தாத மென்மையான நிறங்களில் ஆடைகளை தேர்ந் தடுத்து உடுத்த வேண்டும். எந்த வேலைக்கு போகிறோமோ அதற்குத் தகுந்த ஆடைகளைத் தேர்வு செய்து கொள்ளலாம். பொதுவாக, சல்வார், சுடிதார் இரண்டும் எல்லாப் பணிகளுக்கும் ஏற்றது. அதிலும் லோ நெக் ஸ்லீவ்- லெஸ் போன்றவற்றை கண்டிப் பாகத் தவிர்க்க வேண்டும்.

கூந்தலைப் பறக்கவிட வேண்டாம். போனி டைல் போன்ற அலங்கரிப்பெல்லாம் இல்லாமல் கூந் தலை நன்றாக பின்னல் போடுங்கள். அதிகமான அளவு வளையல்களும் வேண்டாம். இவை பெண்களை குடும்பப்பாங்காகக் காட்டும். கம்பீரமான தோற்றம்தான் வேலை செய்யும் இடங்களில் தேவை. உடை மிகவும் விசேடமாக இருந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எளிமையான உடையாக இருந்தாலும் அதை உடுத்தியிருக்கிற நேர்த்தியும், கம்பீரமும் உங்கள் மீது மரியாதையை ஏற்படுத்த வேண்டும்.

அழகான தங்க நகைகள் ஒன்றிரண்டை போட்டுக் கொள்ளலாம். ஆண்கள் அதிகம் உள்ள பணி இடங்களில் கொட்டன் சுடிதார் சல்வார், கொட்டன் புடைவைகள் போன்றவற்றை அணிவது நாகரிகமாகவும் சௌகரியமாகவும் இருக்கும். இறுக்கமான, நவநாகரிக உடைகளைத் தவிருங்கள். அலுவலகம் சார்ந்த விழாவுக்குச் செல்லும் போது அடர்த்தியான நிறங்களில் மெல்லிய கரை வைத்த பட்டுப்புடைவை அல்லது கொஞ்சம் விசேடமான பட்டுச் சுடிதார்கள் பயன்படுத்தலாம்.



# சமமானவர்களே..

சமூக அமைப்பில் உள்ள பல்வேறு நிறுவனக் கட்டமைப்புக்களில் குடும்பமும் ஒன்று. என்றாலும், சாதாரணச் சமூக உளவியலில் அது ஒரு நிறுவனம் என்பதான விம்பம் ஆழம் பெறவில்லை என்பதே உண்மை. சமூக , கலாசார, சமயம் சார்ந்த கருத்தியல்கள் கட்டமைத்துள்ள புனிதப் பிம்பம் மேலெழுந்து ஆழப்பதிந்துள்ளதன் விளைவே இதுவாகும்.

மனித உயிரி ஒரு சமூகப் பிராணி என்ற அளவில், சிறுகுழுவாக, பெருங்குழுமமாக ஒருங்கு சேர்ந்து வாழ்வது இயல்பான ஒன்றாகும். அந்த வகையில், குடும்பமும் ஆணும் –பெண்ணும் இணைந்து வாழும் ஒரு சமூகச் சிற்றலகாக இருக்கின்றது.

நம்முடைய சமூக அமைப்பில் கணவன் – மனைவி– குழந்தைகள் இணைந்ததாக, சிலபோது இவர்களோடு மூத்த தலைமுறையினரையும் உள்வாங்கியதாகக் குடும்பம் கட்டமைக்கப்பட்டுள்ளது. கணவன் – மனைவியாக இல்லறத்தில் இணையும் ஆணும் பெண்ணும் பரஸ்பர அன்பு, புரிந்துணர்வு, பகிர்வு, ஒருவரையொருவர் வலுவூட்டிப் பலப்படுத்திக் கொள்ளல் முதலான இன்னோரன்ன எதிர்பார்ப்புகளோடு ஒன்றிணைகின்றனர். எனினும், இந்த எதிர்பார்ப்புகள் எந்தளவு அடையப் பெறுகின்றன. கணவன் – மனைவி ஆகிய இருவருக்கும் இந்த எதிர்பார்ப்புகளை அடைவதில் சமவாய்ப்பு கிட்டுகின்றதா, பல்வேறுபட்ட ஆற்றல்கள், ஆளுமைத் திறன்களைக் கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்தின் பின்னர் அவற்றை மேலும் வளர்த்துத் தம்மை மேம்படுத்திக் கொள்ளத்தக்க சூழல் நிலவுகின்றதா என்பன போன்ற கேள்விகள் இங்கு மிக முக்கியமானவையாகும்.

இன்று அறிவியலும் தொழினுட்பமும் மிகவும் வளர்ந்துவிட்டன. மனிதர்கள் மிகவும் பண்பாடடைந்து விட்டார்கள். எல்லா விதமான உரிமைகளிலும் சமத்துவமும் சுதந்திரமுமே மேலானவை என்பதான கோசங்களை நாம் அடிக்கடி செவியுறுகின்றோம். பேச்சிலும் எழுத்திலும் இந்த விழுமிய சுலோகங்களை அடிக்கடி மீட்டிக் கொள்கின்றோம். என்றாலும், இன்றைய நாகரிக உலகினிலே இந்தக் கோசங்கள் எந்தளவு தூரம் நடைமுறைக்கு வந்துள்ளன என்று நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம்.

ஆணோ – பெண்ணோ மனித உயிரி என்ற அடிப்படையில் சமமானவர்களே. உடலியல் மற்றும் பண்புசார் நடத்தைகளில் சிற்சில தனித்துவமான வேறுபாடுகள் நிலவுவதை மையமாகக் கொண்டு ஒருவர் மற்றவரைவிட உயர்ந்தவர் என்றோ தாழ்ந்தவர் என்றோ கொள்வது நாகரிக, அறிவார்ந்த சமூகத்திற்கு ஒருபோதும் ஏற்புடைய கருத்தாகாது. அவரவர் நிலையில் அவரவர் தனித்துவமானவரே என்ற புரிதல் சமூகத்தில் பரவலாக்கப்படல் வேண்டும். இத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பாடசாலைகள் மற்றும் கலை– இலக்கிய–ஊடகங்கள் பெரும் பங்காற்ற முடியும்.

பொதுவாக, ஆணுக்குப் புற உலகம், பெண்ணுக்கு அக உலகம் என்பதான வேறுபாடுகள் தொன்றுதொட்டு நிலவி வருகின்றமையை நாம் அறிவோம். சங்க காலத்தில் தினைப்புனங்காத்தல் முதலான பணிகளில் பெண்கள் ஈடுபட்டதான குறிப்புகள் உளவே ஆயினும், போர்க்களங்களில் நேரடிப் பங்காற்றுவோராக ஆண்களே சித்திரிக்கப்பட்டுள்ளனர். எனினும், இன்றைய உலகில் வீட்டுக்கு அப்பால் பணியிடங்களில் மட்டுமல்ல முப்படைகளிலும் போர்க்களங்களிலும் கூட பெண்களின் பங்காற்றுகை கணிசமான அளவில் உயர்ந்துள்ளமையை நாம் அறிவோம்.

இருந்த போதிலும், ஒரு வீட்டில் பெண்ணின் நிலை என்ன? அவள் அங்கே என்ன செய்கிறாள்? பொருளாதார ரீதியாக வீட்டுப் பொறுப்பைக் கணவனோடு சமமாகப் பகிர்ந்துகொள்ளும் பெண்ணிடமிருந்து அவளது வீட்டின் அன்றாடப் பணிகளைப் பகிர்ந்துகொள்ள முன் வரும், அப்படிப் பகிர்ந்துகொள்ளல் தமது கடமையே என்று இயல்பாய் உணரும் ஆண்கள் எத்தனை பேர்? வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்தபடி குழந்தைகளை வளர்த்தல் உள்ளிட்டு சகல பணிகளையும் செய்து வரும் பெண்ணின் பணிகளுக்கான பெறுமானம் உரிய வகையில் வழங்கப்பட்டு வருகின்றதா? – இப்படியான கேள்விகளில் அனேகமானவற்றுக்கு எதிர்மறையான பதில்களே நமக்குக் கிடைக்கின்றமை கசப்பான சமூக [illegible]ம். உதாரணமாக,உங்கள் மனைவி என்ன செய்கிறாள்? என்றகேள்விக்கு, எந்தவிதமான தயக்கமும் இன்றி, எதுகும் செய்யவில்லை, வீட்டுல சும்மா தான் இருக்கா என்று சர்வ சாதாரணமான பதிலை நாம் பலமுறை எதிர் கொண்டு கடந்திருப்போம்.

கணவன் – மனைவி ஆகிய இருதரப்பினதும் உள்ளார்ந்த ஆற்றல்கள், உயர் கல்வி என்பவற்றுக்குக் குடும்ப வாழ்வு ஓர் இடையூறாக அமையாமல், பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் முன் கொண்டு செல்லப்படுவது உறுதிசெய்யப் படல் வேண்டும். இதன் மூலமே சமூகமும் நாடும் வளம்பெற முடியும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையி லான பரஸ்பரப் புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, ஒத்துழைப்பு, மரியாதையுணர்வின் அடியாகவே இவற்றைச் சாத் தியப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளியின் தூய்மைப் பணியாளர்கள்

த.வி.வெங்கடேஸ்வரன்

**சோ**வியத் ஒன்றியம் 1957 ஆம் ஆண்டுஒக்டோபர் 4ஆம் திகதி ஸ்புட்னிக்–1 விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. அதோடு விண் வெளி யுகம் தொடங்கியது. விண்வெளியில் குப்பைகளை குவிப்பதும் அன்றே தொடங்கிவிட்டது. இதுவரை சுமார் 3,500 விண்கலங்கள் ஏவப்பட்டுள்ளன.

**விண்வெளிக் குப்பை**

விண்கலங்கள் விண்வெளியில் செல்லும்போது அதன் மேல்கவசம் உள்ளிட்ட பல பொருள்கள் விண்வெளியில் நீக்கப்படும். அவை விண்வெளியில் மிதந்தபடியே இருக்கும். ரொக்கெட்டின் நான்காம் தளத்திலிருந்து விண்கலம் பிரியும்போது அதைப் பிணைத்து வைத்திருந்த நட்டு – போல்ட் உள்ளிட்ட பல பொருள்கள் விண் வெளியில் நிறைந்துவிடும்.

இது மட்டுமல்லாமல் விண்வெளியில் தவழ்ந்த முதல் அமெரிக்கர் எட்வைம் தவற விட்ட கைஉறை, மைக்கேல் காலின்ஸ் தவற விட்ட கமரா, விண்வெளியில் நிரந்தரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த விண்வெளி நிலையமான மிர் நிலையத்திலிருந்து அவ்வப் போது வெளியே கொட்டப்பட்ட குப்பை நிரம்பிய பைகள், சுனிதா வில்லியம்ஸ் தவறவிட்ட சுத்தி மற்றும் பல்விளக்கும் பந்துரிகை என ஏகப்பட்ட பொருள்கள் விண்ணில் மிதந்தபடியே உள்ளன.

நாட்பட நாட்பட செயலற்றுப் போகும் விண்கலங்களும் குப்பைகளாக மாறி விண்வெளியில் சுற்றிவரும். 1958இல் ஏவப்பட்ட வான்கார்ட் –2 என்ற அமெரிக்க விண்கலம் பல ஆண்டுகளுக்கு முன்பே செயலிழந்துவிட்டது. எனினும் இன்று வரை குப்பையாக விண்வெளியில் சுற்றுகிறது. இது சுமார் 240 வருடங்களுக்கு விண்வெளியில் சுற்றிவரும் என மதிப்பிடுகிறார்கள்.

**முதல் விண்வெளி விபத்து**

கூடைப்பந்து அளவுக்கும் மேற்பட்ட உருவம் கொண்ட பொருள்களை ராடர் கருவிகள் கண்டுபிடித்துவிடும். சுமார் 6 – 7 செ.மீ. அகலமுடைய பொருள்களைக் கவனமாகக் கணக்கெடுத்து பதிந்துள்ளனர். இத்தகைய சுமார் 19 ஆயிரம் குப்பைப் பொருள்கள் விண்ணில் சுற்றித் திரிவதாக இதுவரை தெரிய வந்துள்ளது. சுமார் ஒரு செ.மீ. அளவுக்கும் அதிகமான உருவம் கொண்ட பொருள்கள் என்று பார்த்தால் 6 லட்சம் பொருள்கள் வானில் மிதந்தபடி உள்ளன என்றும் ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

விண்ணில் மிதக்கும் இந்தப் பொருள்கள் கட்டுப்பாடு இல்லாமல் அங்கும் இங்கும் தாறுமாறாக அலைபவை. ஏதாவது ஒரு விண்கலத்தோடு அந்தப் பொருள்கள் மோதும் வாய்ப்பு அதிகம். விண்வெளியில் விண்கலன்களுக்கும், விண்வெளி வீரர்களுக்கும் இவை ஆபத்து.

காஸ்மாஸ்–2251 எனும் விண்கலம் செயலிழந்து வெறுமனே விண்வெளியில் சுற்றி வந்தது. அது தற்செயலாக இரிடியம்–33 என்ற செயற்கைக் கோள் மீது 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 11 அன்று மோதிச் சுக்குநூறாகியது. விண்வெளியின் முதல் மோதல் விபத்து இது.

**ஒளியின் அழுத்தம்**

விண்வெளியில் மிதக்கும் குப்பைகளை அகற்ற ஒரு நானோ விண்கலத்தை இங்கிலாந்து உருவாக்கியுள்ளது. மூர்த்தி சிறியதுதான் ஆனால் கீர்த்தி பெரிது என் பார்கள், அது போல வெறும் மூன்று கிலோ எடையில் 30 X 10 X 10 சென்ரிமீற்றர் என்ற அளவில் ஒரு சப்பாத்துப் பெட்டி மாதிரிதான் அது இருக்கும். டி–ஓர்பிட் சேயில் (DeOrbitSail) என்பது அதன் பெயர். கடந்த ஜூலை 10 அன்று இந்தியாவின் இஸ்ரோ நிறுவனம் பிஎஸ்எல்வி –C28 ரொக்கெட்டில் அதை வைத்து விண்வெளியில் ஏவியுள்ளது.



இந்தச் சின்ன விண்கலத்தில் 5x5 மீற்றர் அளவுக்கு பெரிதாக விரிந்து பாய்மரம் போல ஆகக்கூடிய உறுதிவாய்ந்த, ஆனால் மிகமிக மெலிதான விரிப்பு ஒன்று மடித்து வைக்கப்பட்டுள்ளது. விண்கலம் விண்வெளியில் நிலை கொண்டதும் இது விரியும்.

கடலில் வீசும் காற்று ஒரு அழுத்தத்தோடு வீசும். அதைப் போல சூரிய ஒளியும் பொருள்களின் மீது வீசும்போது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தும். அதன் விளைவாக, விண்வெளியில் பொருள்கள் சுமார் 6.79 x 10d3 $m/sec^2$ என்ற அளவிலான முடுக்கு வேகத்தை பெறும். பூமியில் இதனால் பெரிய விளைவுகள் ஏதும் ஏற்படாது. ஆனாலும் விண்வெளியில் இத்தகைய ஒரு அழுத்தம்தான் வால் நட்சத்திரத்துக்கு வாலை தோற்றுவிக்கிறது. இந்த அழுத்தம் தரும் ஆற்றலின் காரணமாகத்தான் வால் நட்சத்திரம் சூரியனுக்கு எதிர் திசையில் செலுத்தப்படுகிறது. இதே விசைதான் விண்வெளியில் விரியும் நானோ விண்கலத்தின் பாய்மரத்தில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்தி அதற்கான உந்துசக்தியைத் தரும்.



**பின்னிழுப்பு விசை**

பூமியிலிருந்து சுமார் 400– முதல் 800 கி.மீ. உயரத்தில் தாழ் விண்வெளி (Low Earth Orbit) உள்ளது. அந்தப் பகுதியில் முழுவதுமான வெற்றிடம் இல்லை. பூமியின் வளிமண்டலத்தின் மேலடுக்கிலிருந்து கசியும் பொருள்கள் அந்தப் பகுதியில் உள்ளன. எனவே, இந்த விண்கலம் அங்கு உள்ள அரிதான காற்றையும் வலைவீசிப் பிடித்துத் தனக்கான பின்னிழுப்பு விசையை (drag) அதிகரித்துக்கொள்ளும். இந்த பின்னிழுப்பு விசை அதிகரிக்க அதிகரிக்க விண்கலத்தின் பாதை தேய்ந்து உயரம் குறையும். மெல்ல மெல்ல பூமியின் வளிமண்டலத்தில் விண்கலம் புகும். அவ்வாறு புகும் டி–ஓர்பிட் விண்கலம் எரிந்து தூசு ஆகும். இதுதான் இந்த நானோ விண்கலத்தின் திட்டம்.

ஒரு விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பி, பின்னர் அதன் பாதையைத் தேயச் செய்து விண்கலத்தை அழிப்பதன் நோக்கம் விண்வெளியை சுத்தம் செய்வதுதான்.

(23 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பை விழுங்கியவள்!

தொடர்கதை

2

கண. மகேஸ்வரன்

லபக் கென்று தலையை உள்ளே இழுத் துக்கொண்டவளுக்கு சர்வ நாடிகளும் அடங்கி ஒடுங்கினாற்போல் மனதுள் கிலி பிடித்துக்கொண்டது.

கேசவன் என்னைக் கண்டிருப்பானோ? அவள் மனதுக்குள் நினைக்கவும், அதற்கான பதில் அங்கிருந்தே துலாம்பரமாய் ஒலித்தது.

"சொறி அனித்தா.... நீ மட்டும் தனியாகவா இருக்கிறாய்? இதை முதலிலையே சொல்லித்துலைத்திருக்கலாமே... நான், மாமிதான் குசினிக் கட்டுக்குள்ளோ பாத்ரூமுக்குள்ளோ காதுகேளாமல் இருக்கிறாவாக்கும் எண்டு நினைச்சல்லோ பெல்லை அடிச்சுக் கொண்டிருக்கிறன்.... சீ, என்ன விசர்ப் பிள்ளை..... சரி! நான் போய்ப் பிறகு வாறன்..."

கேசவன், குரலில் சலிப்பும் வெறுப்புமாகக் கொட்டிய வார்த்தைகளும் என்னவோ, நெருப்பாய்த்தான் சுட்டன.

சற்று நேரம் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தாள் அனித்தா.

உண்மையில் கேசவன் போகின்றனா... பாசாங்கு காட்டுகிறானா? என்ற சந்தேகம் அவளுக்கு.

அற நனைந்தவனுக்குக் குளிரென்ன, கூதலென்ன என்றாற்போல் தைரியம்தானே முளைத்தது.

இருப்புத் தெரியாதவரையில் பயம். இருப்பதுதான் தெரிந்து போயிற்றே.... இனியென்ன என்ற துணிவுடன் மீண்டும் ஜன்னலில் ஏறி நோட்டம் விட்டாள்.

கேசவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டே கேற்றை விட்டு வெளியேறுவது தெரிந்தது.

ஒருவேளை ரயர் பஞ்சராயிருக்குமோ... அதுதான் பம்முக்காக...? இருக்காது...! இவன், அவர்கள் வெளியே போனதைக் கண்டுதான் நான் தனியாக இருப்பேனென்று தெரிந்துகொண்டுதான் வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு நேரம்....?

எது எப்படியிருந்தால் எனக்கென்ன...? நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

சே.... என்ன உலகமிது?

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்த விந்தை மனிதர்கள் காலமும் போச்சே..." என்று வீராவேசமாய்க் குரல் கொடுத்த பாரதியின் நூற்றாண்டு விழா முடிந்து போன பின்னும் இந்தப் பூட்டி வைக்கும் பழக்கம் மாறவில்லையே என்று நினைத்த போதே கோபம் நெஞ்சுக்குள் பற்றிக்கொண்டு வந்தது.

ஒன்றில், மிதமிஞ்சிய வசதியும் சுதந்திரமும் படைத்த செல்வந்தக் குடும்பத்தில் பிறந்திறக்க வேண்டும். அல்லது கஞ்சிக்கும் வழியில்லாது நாதியற்று அலையும் ஏழை எளியதாய்ப் பிறந்திருக்க வேண்டும். இப்படி இரண்டுங் கெட்டானாய், பத்தாம் பசலிக் கொள்கைகளில் ஊறிக்கிடக்கும் நடுத்தர வர்க்கத்தில் பிறந்திருக்கவே கூடாதென்று சலித்துக் கொண் டாள்.

அப்பா அறப்படித்த பண்டிதராய் இருந்தென்ன? எந்தக் காரியத்தையும் சீராகச் செய்யத் தெரியவில்லை. வேளாவேளைக்கு உரிய காரியங்களைச் செய்து முடிக்கவும் வக்கில்லை.

அப்பாவைப் பற்றி நினைத்தபோதே அவளுக்கு எரிச்சலாக வந்தது.

அப்பாவை மறக்க முயற்சித்தபோது, கேசவன் மனதுக்குள் வந்தான்.

கேசவனைப் பற்றி அவள் நிறையவே அறிந்து வைத்திருந்தாள்.

எதெதுகூடாதென்று ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமோ, அதெல்லாம் அவனுக்கு நல்லவையாகத் தோன்றும். அவற்றையெல்லாம் அனுபவித்ததாக வேண்டுமென்ற கெடுபுத்தி அவனுடையது.

வசீகரமான முகம்; காந்தக் கண்கள்; எவரையும் சுண்டியிழுக்கும் ஒரு வித காந்த சக்தி அவன் தோற்றம் முழுவதையுமே ஆக்கிரமித்திருந்தது. ஆனால், அடிமனதில் வக்கிரத்தின் மொத்த உருவமே அவனாய் வார்க்கப்பட்டிருந்தான்.

சின்னஞ் சிறுசுகளுக்கு அவனைக் கண்டாலே குலைநடுக்கம். இளம் பெண்களுக்கோ பெரும் அந்தரம். பெற்றவர்களுக்கோ, இந்தப் பிசாசு எப்பதான் திருந்துமோ என்ற எதிர்பார்ப்பு. இது எப்பவடா ஒழியும் என்ற எண்ணமும்கூட அவர்களை அவ்வப்போது ஆட்டிப்படைக்கும். ஆனாலும் எதிர்த்து நிற்கமுடியாத அச்சம், அவர்களையெல்லாம் கட்டிப்போட்டிருந்தது.

அனுசரிப்பது போலும் தற்காத்துக்கொள்ளும் கலை தானாகவே எல்லோருக்கும் கை வந்திருந்தது. ஆயினும், கேசவன் வலைக்குள் விழாத பெண்களும் இல்லாமலில்லை. எப்படியோ அவர்கள் மனதைச் சுவீகரித்து, பெறுவதைப் பெற்று உதறுவதில் அவன் சமர்த்தனாகவே செயற்பட்டான்.

வாழவேண்டிய குருத்துக்கள் எழுவரின் கற்பையே சூறையாடி ஏப்பம் விட்டவன், அவன். அவர்களில் நால்வரின் உயிருக்கே உலையாகிப் போனவன்.

அப்படியிருந்தும், பொலிஸுக்குக்கூட அடையாளம் காட்டாத முதுகெலும்பற்ற அந்த ஊர் மொத்தத்திலுமே அவளுக்கு வெறுப்பாகவிருந்தது.

வீரப் பிரதாபம் பேசும் அப்பாகூட, அவன் விசயத்தில் மௌனமாயிருப்பது, அவளுக்கு மேலும் ஆச்சரியமாயிருந்தது. தானும் ஒரு பெண்பிள்ளையை வைத்திருக்கின்ற பயத்தால் இருக்கக்கூடும். ஏன் வீண் வம்பை விலைக்கு வாங்கவென்று ஒதுங்கியிருப்பாரோ, என்னவோ! இத்தனைக்கும் அவள் தாய்மாமன் மகன் தான் கேசவன்.

ஒரு சமயம் அம்மா கேட்டாள்.

"கேசவனைப் பற்றி ஊரென்ன கதைக்குதென்று உங்களுக்குத் தெரியும்தானே.... எல்லாம் வயதுக் கோளாறு செய்யிற வேலைதான். ஒருத்தராவது அதுபற்றிச் சிந்திப் பதாய்த் தெரியேல்ல. அண்ணரிட்டச் சொல்லி அவனுக்கு ஒரு கால்கட்டுப் போட்டால் எல்லாம் சரிவரும் என்றால், அவர் சொல்லுறார், உன்ர வீட்டுக்கே அவனை மருமகனாக ஏன் எடுக்கக்கூடாதென்று........"

அம்மா சொல்லி வாய்மூடமுன், அப்பா வீடே இரண்டுபடச் சத்தம் போட்டார்.

"அந்தக் காவாலிக் கழுதைக்குப் பெண்ணைக் கட்டி வைக்கிறதைவிட விபச்சாரம் செய்து சீவிக்க அவளை அனுமதிக்கலாம்."

என்ன ஒரு கொடூரமான வார்த்தை!

"சீ... என்ன பேச்சுப் பேசிறியள்?" அம்மா கடிந்து கொண்டாள்.

அப்பாவிடமிருந்து அப்படி ஒரு வார்த்தை வருமென்று அம்மாவோ நானோ சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கெட்டவனானாலும் ஒருவனுக்குக் கட்டிக் கொடுப்பதைவிட, மகளை வைத்தே பிழைக்கலாமென்று அர்த்தம் தொனிக்கவல்லவா அவர் பேச்சு இருக்கிறது. இப்படி ஒரு வார்த்தையைப் பகிடிக்குத்தானும் சொல்ல இந்த மனிதனுக்கு என்ன நெஞ்சழுத்தம் வேண்டும்?

அதைக்கேட்டபோதே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டும் போல் அவஸ்தைப்பட்டாள் அனித்தா.

அதற்கப்புறம் நிதானம் வந்தவராய், சற்று அடக்கமாகச் சொன்ன அந்த வார்த்தைகள்

"செல்லம், பூப்போல அவளை வளர்த்து ஒரு குரங்கின்ர கையிலயா கொடுக்கச் சொல்லுறாய்? உன்ர அண்ணன் மகனென்ற ஒரு சொந்த பந்தத்தைத் தவிர அவனிட்டை என்ன குணநலன் இருக்கு? அதை அறிஞ்சும் பிள்ளையைக் காவு கொடுத்துத் தலைகுனிஞ்சு நிற்கிறதிலும் பார்க்க, அவள் கன்னியாகவே எங்களுக் கொரு சுமையாயிருந்தாலும், எங்கள் அன்புச் செல்லமாய் குழந்தையாகவே இருந்துவிட்டுப் போகலாமடி. எனக்கு மட்டும் அவள் நிறைவாக வாழவேண்டுமென்று ஆசையில்லையா? அக்கறைதானில்லையா? இவனுக்குச் செய்யிறதைவிட, அவள் விரும்பின அந்தப் பொடியன்.... யாரோ எவனோ அவனுக்குச் செய்து வைத்திருக்கலாமே எண்டு, இப்ப யோசிச்சு எவ்வளவு கவலைப்படுறன் தெரியுமா? சாதிசனம் அந்தஸ்து என்று பார்த்துப் பார்த்து என்னத்தைக் கண்டன்.... ம்...."

அப்பாவுக்குக்கூட இப்படிச் சிந்திக்க முடிகிறதா?

சீ.... அப்பாவைப்பற்றி நான் என்னவெல்லாம் தப்பாய் நினைச்சன். அவள் மனதுக்குள் வேகினாள். ஆனாலும் கேசவன் போக்கு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அப்பா இருக்கும் சமயங்களில், அவன் ஒரு நாள்கூட வீட்டுப் பக்கம் எட்டிப் பார்ப்பதும் கிடையாது.

அப்பா இல்லாத நேரங்களில், அம்மாவோடு வந்து குழைந்து குழைந்து கதைப்பதைப் பார்த்தால், ஓர் அப்பாவிப் பையனின் அசடு முகத்தில் நிறைந்து வழியும்.

அந்த நேரங்களிலெல்லாம் அனித்தா அறைகளுக்குள் ஒழிந்து கொண்டாலும், அது பற்றி அவன் அலட்டிக்கொள்ளாததும் இன்னொரு ஆச்சரியம். ஆனால், அவன் தன்னை அடையத் துடிக்கிறான் என்பது மட்டும் அவளுக்குச் சூசகமாகத் தெரிந்துதானிருந்தது. அது நடக்கக்கூடிய காரியமில்லை என்பதும் கூடத்தான்.

இன்று ஒருவரும் இல்லாத நிலையில் அவன் வந்திருந்தும்கூட, தன்னை அணுகாமல் போயிருப்பது மேலும் அதனை உறுதிப்படுத்தியது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தன் உள்ளக் கிடக்கையை என்னிடம் வெளிப்படுத்தி அனுகூலம் அடைவதற்கான முயற்சியாக இருந்திருக்கலாம்.

அடைந்தே தீருவது என்ற ண்ணம் உள்ளவன், எதையும் திட்டமிட்டே செய்வான். ஏதோ சபலத்தோடு, பத்தோடு பதினொன்றாகத் தன்னையும் அனுபவிப்பதுதான் நோக்கமென்றால், இன்று அந்த வாய்ப்பைப் பயன்படுத்தியிருக்கலாம். அவன் எது செய்தாலும் தட்டிக் கேட்பதற்கு ஒரு நாதியில்லை.

ஆக, கேசவனின் எண்ணம், தன்னை அடைந்தே தீர்வதென்பதில்தான் உறுதியாய் உள்ளது என்பதை, அனித்தா உணரத் தலைப்பட்டாள். அந்த ஆச்சரியங்களிலிருந்து அவள் தன்னை விடுவித்துக்கொள்வதற்கு முன்பாக, மீண்டும் ஹோலிங்பெல் அலறியது. கூடவே அம்மாவின் குரல் சன்னமாய் ஒலித்தது.

"பிள்ளை, கதவைத் திற!"

அனித்தா, சுயத்துக்கு வந்தவளாய்க் கதவை திறந்தாள்.

(நெருப்பு உமிழும்)

## அமைதியின் பின்னால்

துளித்துளியாய்
நனைத்து போயிருந்த
நினைவுகளின் அணைப்பில்
மனம் குளிர்ந்து போயிருக்க
முடிந்து போன நாள்களும்
முற்றுப் பெறாத கனவுகளும்
கடலலைகளாய் தரைதட்டும் ஓசை.....
ஆழ்மனதில் - இன்னமும்
அவிழ்க்கப்படா முடிச்சுக்களாய்
உறங்கிக்கொண்டிருக்கும்
கதைகளுக்கு உயிரூட்டும் முயற்சி.....
பல தோல்விகளைத் தந்து
செத்துப்போன நிகழ்வுகளை
சூழல் அரங்கேற்றியும்
சுபம் சிதைக்கும் முயற்சிகளாய்
சூழ்ச்சி வலைகளாய்
அருகிருந்து விசை கொடுக்கும்
சந்தர்ப்பச் சூழல்.....
விழிகளுக்குள் மடை திறக்கும்
கண்ணீரின் பிரசவிப்பில்
கதை சொல்ல உதடுதுடித்தும்
நாவுக்குத் துணிவில்லை
சுபம் பற்றியுரைக்க.....
கவலைகளைச் சொல்ல
கனவுகளைப் பகிர
உறவுகளை உரிமைகொண்டுஅணுக
பரந்த மனதுக்கு
முடியவில்லை இடமிருந்தும்
அமைதியின் பின்னால்
பெருத்த இடிகளை
இறக்குவதற்கு சூழல்
மௌனிப்பது புரிந்துதான்
மனமழுது தொலைக்கிறது
பொய்யான புன்னகைகளை
முகமிருத்தி.....

**பா.பொன்நிலவன்**
மீசாலை



## நிர்வாண நினைவுகள்

பொறியான புகலிடத்துள்
பலியாகிப் போயின
பரி நிர்வாணங்கள் பல
கண்களை மறைத்த கறுப்புத் துணிகளும்
கைகளைப் பிணைத்த
கயிற்றுத்துண்டுகளும்
ஓர்
அநீதியின் காலத்தை
மன வெளிகளில்
பதித்துவிட்ட திருப்தியில்
அவைகளும் செத்துவிட்டன
சேற்று நிலங்களின் மேல்

உண்மைகள் தொகையாய்
புதைந்து போன இவ்வுலகத்தில்
இதெல்லாம்
நிஜம் தானாவென்ற வினாவோடு.....
மனம் ஏற்க மறுக்கின்றது இன்றுவரை
அந்த வயல் வெளி நிர்வாணங்களை

காலம் நகரலாம்.....
கண்ணீரும் மறையலாம்.....
ஆனாலும்
மனதுள் நீளுமிந்த நிர்வாண
நினைவுகளும்... நினைவலைகளும்
நிகழ்ந்தபடி தொடருது.....
தமிழினத்தின் வரலாற்றோடு.

**-அலெக்ஸ் பரந்தாமன்,**
புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள- அமையப்போகிறதா ஆதாமின் பாலம்?

-ஸூடோ ஸ்வாமி

இலங்கையின் புதிய பிரதமராகக் கடந்த மாதம் 21 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, தனது உத்தியோகபூர்வ முதல் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டு கடந்த வாரம் இந்தியா சென்று திரும்பியிருந்தார். இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் அழைப்பின் பேரில் அமைந்திருந்த இந்த மூன்று நாள் பயணத்தில் உயர்மட்டக் கலந்துரையாடல்கள் பலவும் இடம்பெற்றிருந்தன.



இந்தியாவின் மத்திய நெடுஞ்சாலைகள் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரியுடன் இடம்பெற்ற பேச்சின்போது இந்தியாவிலுள்ள தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் தரைவழித் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் பாலம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் களும் நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

22 கி.மீ. நீளமான கடல் மேம்பாலத்தையும் அதனோடு இணைந்ததாகச் சுரங்க வழிப்பாதை ஒன்றையும் கொண்ட இந்தத் திட்ட முன்மொழிவுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனது அண்டை நாடுகளுடன் போக்குவரத்து வலையமைப்பை விரிவாக்கி வரும் இந்தியா, கடந்த ஆனி மாதம் பங்களாதேஷ், பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த (BBIN-MVA) மோட்டார் வாகன உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. இதன் மூலம் சார்க் அமைப்பின் பாதியளவான நாடுகள் பொருளாதார நலன்களை ஈட்டிக்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள வேளையிலேயே இந்தியாவுடன் இலங்கையை இணைப்புச் செய்யும் முன்மொழிவும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்த பாரதப் பிரதமர் மோடி, இந்தியாவின் கடனுதவியுடன் இர்கொன் (IRCON) என்னும் இந்திய நிறுவனத்தினால் மீளமைக்கப்பட்ட தலைமன்னார் – மதவாச்சி புகையிரதத் தடத்தின் தலைமன்னார் – மடுவீதி மார்க்கத்தை ஆரம்பித்து வைத்திருந்தார். தலைமன்னாருக்கு பயணிப்பதற்கு முன்பதாக, இலங்கை நாடாளுமன்றில் உரை நிகழ்த்திய மோடி, மகாகவி பாரதியாரின் சிங்களத் தீவினுக் கோர் பாலம் அமைப்போம் என்னும் கவிவரிகளைத் தனது உரையில் நினைவு கூர்ந்தார் என்பது நோக்கத்தக்கது.



### ரணிலுக்கு உதித்த யோசனை!

உண்மையில் இந்தப் பால இணைப்பு பற்றிய எண்ணக்கரு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இருந்தபோதிலும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் இயற்கை அழிவு உட்பட்ட சில தடங்கல்கள் அதன் மேலதிக முன்னேற்றத்தைத் தடுத்திருந்தன.

2002 – 2004 காலப் பகுதியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்தச் செயற்றிட்டத்திற்குப் புத்துயிரளிக்க முயற்சி செய்திருந்தார். ஹனுமன் பாலம் என்னும் பெயரில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நான்கு தடங்களை கொண்ட பாலத்தையும் அதனருகே ஒரு வழித்தடமாக புகையிரத பாதையையும் உருவாக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான சம்மதம் மற்றும் உதவி இந்தியாவிடமிருந்தும் கோரப்பட்டுமிருந்தது. இதற்கான செலவாக 654 மில்லியன் டொலர் இலங்கை முதலீட்டுச் சபையால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் தமிழக அரசு இந்த விடயத்தில் முரண்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததன் காரணமாக அப்போதிருந்த இந்திய அரசு இதில் ஆர்வம் காண்பித்திருக்கவில்லை.

பொருளியல் நலன்களின் அடிப்படையிலும் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளின் வருகை, பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதி போன்ற விடயங்களில் இந்த பால-மீளமைவு நன்மை அளிக்கக்கூடியதே. ஆனாலும் போதைப்பொருள் கடத்தல், தொற்றுநோய்கள் போன்றவை இலகுவாக இலங்கைக்கு பரவுவதற்கான சாத்தியத்தையும் இந்த பால-மீளமைவு கொண்டிருக்கிறது.

### பாலத்துக்கு வலுக்கும் எதிர்ப்பு!

இலங்கையின் தேசிய நலன்களைக் கருத்தில் கொள்வதாகக் காட்டிக்கொள்ளும் தரப்பினரால் பாலம் தொடர்பான முன்மொழிவுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. பாலத்தினூடாக இலங்கையை இந்தியாவுடன் இணைத்துக்கொள்வதானது, ஒருவகையில் இலங்கைத் தீவை இந்தியாவுக்கு தாரைவார்ப்பதற்கு நிகரானது என்கிறார்கள் அவர்கள். அது மாத்திரமின்றி, வடக்கு – கிழக்கு இணைப்பை வலியுறுத்துவது போன்று பின்னொரு காலத்தில் தமிழ்நாட்டின் பாகமாக வடக்கு–கிழக்கு பிரதேசங்கள் மாறிவிடக்கூடிய அபாயம் நிலவுவதாக அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்குச் சில நாள்கள் முன்னதாக நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அபயராம விகாரையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்ட தேசிய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரான கலாநிதி குணதாச அமரசேகர,' இரு பிரதான கட்சிகளின் பிரதமர் வேட்பாளர்களையும் இந்தப் பாலம் தொடர்பிலான தத்தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு கோரியிருந்தார். பால அமைப்புத் தொடர்பில் இந்தியா ஏற்கனவே அடிப்படை வேலைத் திட்டங்களை ஆரம்பித்திருந்த நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

### ஆய்வு முக்கியம்

பாலமொன்றின் ஊடாக இலங்கையை இந்தியாவுடன் இணைத்துக்கொண்டால், அது தீவு என்னும் அந்தஸ்தை இழந்து இந்தியாவின் பகுதியாக மாறுவதுடன் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு சேதாரத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அறிவியலும் அதியுயர் தொழிநுட்பமும் வளர்ச்சிகண்டுள்ள இந்தக் காலத்தில் இந்தப் பால மீளமைவு பெரும் முயற்சிக்குரியதான ஒன்றல்ல.

அது மாத்திரமின்றி பொருளியல் நலன்களின் அடிப்படையிலும் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளின் வருகை, பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதி போன்ற விடயங்களில் இந்த பால–மீளமைவு நன்மை அளிக்கக்கூடியதே. ஆனாலும் போதைப்பொருள் கடத்தல், தொற்றுநோய்கள் போன்றவை இலகுவாக இலங்கைக்கு பரவுவதற்கான சாத்தியத்தையும் இந்த பால–மீளமைவு கொண்டிருக்கிறது.

பல்வேறு கோணத்திலும் சாதக–பாதகங்கள் பற்றிய ஆராய்வுகளை மேற்கொண்டு பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்து திட்டத்தை முன்னெடுப்பதே உசிதமானது. இல்லையேல் கொழும்பு துறைமுக நகர திட்டத்துக்கு நிகழ்ந்த கதியே இடைநடுவில் இந்தத் திட்டத்துக்கும் நிகழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் என மீண்டும் பொங்கி எழு தமிழா!

- வடலியூர் மு. ஜெயபாலசிங்கம்

அடம்பன் கொடியும் திரண்டிருந்தால்தான்
அதற்கெனத் தனி மிடுக்கு
கொடியினை பிரித்து சிதைத்து விட்டால்
எதிரிக்கு வரும், பெரும் செருக்கு
(அடம்பன்)

கடந்து சென்ற கொடுங்காலங்களை
மறந்து விடாதே வெண்ணை
திரண்டுவரும் வேளை மத்தை உடைத்து விடாதே
இது போன்ற தருணம் மீண்டும் வராதே
உன் எதிர்காலம் உந்தன் கையில் புரிந்து கொள்வாயோ
(கடந்து)

ஊர் இரண்டுபட்டால் எம் எதிரிக்குத்தான் கொண்டாட்டம்
அந்த நிலை மீண்டும் வந்தால் எமக்கெல்லாம் பெரும் திண்டாட்டம்
வாழும் வீட்டுக்குள் இருந்து கொண்டே அதற்கு கொள்ளியிடலாமா
நீ வைத்த கொள்ளி
வீட்டுடன் உன்னையும் எரித்திடும் மறந்திட வேண்டாம்
(ஊர்....)

ஆசை காட்டி மோசம் செய்து
உடைக்கப் பார்க்கிறார் உறுதியை
உடைக்கப் பாக்கிறார்
நாம்பட்ட துன்பம் போதும் போதும்
உடைந்திட மாட்டோம் மீண்டும் பிரிந்திட மாட்டோம்
(ஆசைகாட்டி)

அண்ணன் தம்பி உறவுக்குள்ளே ஆயிரம் இருக்கும்
இதை அறிந்த எதிரி கைகால் ஒட்டி உசுப்பு ஏத்துவான்
உண்மை நிலையை இருவரும் புரிந்தால்
வந்த வலிகள் தாமே பறக்கும்
(அண்ணன்)

சிந்தித்து செயற்படுவது எமது பொறுப்பு
அலைகடல் என தை 8இல் வந்த அராஜகத்தை
(வாக்குப்பலத்தால்) அடித்து விரட்டினாய்
அரை உயிராய் நிற்கும் அராஜகம் மெல்ல குரைத்துப் பார்க்குது
அதை கூட்டினுள் பூட்டு அமைதியை
நிலைநாட்டு - அப்போ
தன்மானம் உள்ளவன் தமிழன் என்று
தர்ணி எங்கும் பரணி பாடும்



## சொற்சிலம்பம் - போட்டி இல: 387

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | | 5 |
| | | 6 | | | | | |
| 7 | 8 | | | | 9 | 10 | |
| 11 | | | | 12 | | | |
| | | | 13 | | | | |
| 14 | | 15 | | | 16 | | 17 |
| | | 18 | | | | | |
| 19 | | | | | 20 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................................
பூரணமான தபால் விலாசம்: ..................................................
..........................................................................
கையொப்பம்:...............................................................

### இடமிருந்து வலம்

1. வம்சம்
4. அண்மை காட்டும் பொருளில் பெயர்ச் சொல்லுக்கு முன்னால் வருவது
6. மதிப்புடையவன்
7. எச்சரிக்கைச் சொல்
9. அந்தஸ்து நிலை
11. உறுதி
12. இணக்கம் தெரிவி
13. தச்சன் பயன்படுத்தும் ஒரு ஆயுதம்
14. வேறுபாடு காட்டும் தன்மை
16. பாகம்
18. கவிச்சக்கரவர்த்தி
19. நக்கல், நளினம் பண்ணும் செயல்
20. உன்மத்தம்

### மேலிருந்து கீழ்

1. செய்தி/புதினம்/விடயம்
2. எரியும் செயற்பாடு
3. நாள்
4. மகிழ்வைத் தருவது
5. சிரசில் எழுதப்பட்டது
8. ஒரு திசை
10. தங்களுக்கு எனப் பொருள்படும்
12. தடிமல் வர இதுவும் வரும்
13. ஊர்வன வகையைச் சேர்ந்தது
14. கமுகு மரத்திலிருந்து கிடைப்பது
15. பங்கு
16. பலதைச் சுட்டுவது
17. வீரம்/வலி/வலிமை

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன். அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 385 இற்கான
சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)விசித்திரம் (6)சாண் (7)கதி (8)தண் (9)கடுகதி (11)பரணி (12)வலி (13)கத்தரி (15)கடி (16)தந்தம் (17)கிளி (18)காதல் (19)கராம்பு (21)மைல் (22)வலம்புரி

**மேலிருந்து கீழ்**
(1)விசாகம் (2)சிண்டு (3)திகதி (4)ரதி (5)கண்ணிவெடி (8)தர (10)கணித்தல் (11)பலி (12) வரி (13)கந்தல் (14)தம் (15)களிம்பு (16)தகாமை (17)கிராம் (19)கல (20)புரி
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 385 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
இ.பஞ்சகௌரி,
முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
சி.நளினி
இல.24, திருமகள் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
தா.செல்வநாதன்,
மேதர்ஸ் லேன்,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
ஆ.தபோஜினி
சிவன் ஆலயம், இல 35B,
3ஆம் பண்ணை, கனகபுரம்,
கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**
ச.கார்த்திகா,
இல.13, அண்ணாநகர்,
பிரதான வீதி, வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

அ.அருளரசி
இல. 758, வைத்தியசாலை வீதி,
வவுனியா.

திருமதி ச.லிங்கமூர்த்தி,
அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

ரா.மாதுளன்
இல. 90, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி
இல.387
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்.
(30.09.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.387 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.10.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 385 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் ரஷ்யப் படை இறக்கம், பிராந்தியத்தில் சிக்கலை மேலும் அதிகரிக்குமா?

## அதிபர் ஆசாத்தை பதவி நீக்க புடின் தந்திரோபாயம்






**சவுதி அரேபியா ஆசாத்தின் நெடுங் கால எதிரியாகும். அதேசமயம் ரஷ்யா அவரது நீண்டகால நட்பு நாடாகும். அதற்குப் பிந்திய காலத்தில் பிராந்தி யத்தின் பல பாகங்களில் இருந்தும் இராஜதந்திரிகள் மொஸ்கோவுக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. ஆசாத்தை இடைக்கால அரசுத் தலைவராக வைத்துக் கொண்டு அவரது அதி காரங்களை படிப்படியாகக் களைவது பற்றி ஆலோசிக்கப்படுவதாகக் தெரிவிக்கப்படுகின்றது.**

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்பு முக்கிய பகுதிகளில் தீவிர மடைந்துள்ள நிலையில் சிரிய அதிபர் பாஷர் அல் ஆசாத்தை மெதுவாகப் பதவியிலிருந்து இறக்குவதற்கான முயற்சியில் ரஷ்யா இறங் கியிருப்பதாகவும் அதேசமயம் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவக் கூட் டமைப்பொன்றை உருவாக்க விரும்புவ தாகவும் செய்திகள் வந்துள்ளன.

சிரிய அதிபர் ஆசாத்துக்கு எதிராக தீவிரவாதி கள் நெடுங்காலமாகப் போரிட்டு வந்தாலும் அவரைப் பதவியிலிருந்து இறக்க முடிய வில்லை. இதற்கிடையில் ஐ.எஸ். தீவிர வாதிகள் சிரியாவின் பெரும் பகுதியையும் ஈராக்கின் சில பகுதிகளையும் இணைத்துக் கொண்டு தொடர்ந்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆசாத்தைப் பதவியிலிருந்து இறக்குவதற்கு மேற்கத்தைய நாடுகள் பலகாலமாக முயன்று வந்தாலும் ரஷ்யா அதற்கு முட்டுக்கட்டை யாக இருந்து வந்துள்ளது. இப்பொழுது ஆசாத்தை அதிபர் பதவியிலிருந்து மெதுவாக நீக்கிவிட ரஷ்யா விரும்புவதன் உள்நோக்கம் தெளிவாகத் தெரியவில்லை.

இதற்கிடையில் சிரியப் படைகளுடன் கிளர்ச் சியாளர்களை எதிர்த்துப் போராட ரஷ்யப் படைகள் ஆரம்பித்துள்ளதாக வெளிவந் துள்ள செய்திகள் மேற்கு நாடுகளில் கவலை யைத் தோற்றுவித்துள்ளன. இது சிரியப் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள் தள்ளி விடக்கூடும் என்று மேற்கு நாட்டினர் கவலை கொள்கிறார்கள். குறிப்பாக ரஷ்யப் படைகள் சிரியாவில் இறங்கி போரிடத் தொடங்கி யிருப்பது அங்கு ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டை மேலும் அதிகரிக்கச் செய்து ஆழமாக்கிவிடக் கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

ரஷ்யப் படைகள் சிரியாவில் செயற்படத் தொடங்கியிருக்கும் தகவல்களை அங்கு அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களில் அதிக ஈடுபாடு கொண்ட லெபனான் வட்டா ரங்களே வெளியிட்டுள்ளன. அவர்களைப் பொறுத்தவரை ரஷ்யப் படைகளின் எண் ணிக்கை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுவதாகக் கருதுகிறார்கள்.

அமெரிக்க அதிகாரிகள் தகவல் வெளியிடு கையில், கடந்த சில நாள்களில் ரஷ்யா போர்த் தாங்கிகளைச் சுமந்து செல்லும் இரண்டு கப்பல்களையும் சரக்கு விமானங்களையும் இந்தியாவுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரி வித்துள்ளனர். அதேசமயம் சிறிய அள விலான கடற்படையினரையும் அவர்கள் ஈடுபடுத்தி இருக்கின்றனர் எனவும் தெரிவித் துள்ளார்கள்.

சிரியாவில் ரஷ்யத் தலையீடுகள் அதிகரித் திருப்பது குறித்து ரஷ்ய தரப்பில் தெரிவிக் கப்படுவதாவது;

இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகள் சிரியாவி லும் ஈராக்கிலும் பெரிய இடங்களைக் கைப்பற்ற இருக்கிறார்கள். எனவே அவர் களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள உலகளாவிய போராட்டத்தில் சிரிய அரசும் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்ப தாகும். அமெரிக்காவும் ஆசாத்தின் பிராந்திய எதிரிகளும் அங்கு தோன்றியுள்ள பிரச் சினைகளுக்கு எல்லாம் அவரே பெரும் பங்கு வகித்து வருகிறார் என்று கருதுகிறார்கள். நேட்டோ செயலாளர் நாயகம் ஸ்டொல் டேன் பேர்க் கூறுகையில் சிரிய விவகாரத்தில் ரஷ்யாவின் இராணுவ தலையீடுகள் அதி கரித்து இருப்பதான செய்திகள் கவனத்தைப் பெரிதும் கவர்வனவாக உள்ளன என்றார். சிரியா பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டு வதை இதுமேலும் சிக்கலாக்கியுள்ளது என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

ரஷ்ய செயற்பாடுகள் சிரிய பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்று நேட்டோ செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

### பென்ரகன் வெளியிடும் கவலை

சிரியாவின் விமான நிலையத்தில் ஏழு ரஷ்ய போர்த் தாங்கிகளும் ஏராளமான கனரக பீரங்கிகளும் காணப்பட்டதையடுத்து அங்கு ரஷ்யா விமானப் படைத்தளம் ஒன்றை அமைக் கத் தொடங்கியிருப்பதாக அமெரிக்க அதி காரிகள் கருதுவதுடன் அதுகுறித்து பெருங் கவலையும் பென்ரகன் தெரிவித்துள்ளது. ஆசாத்தின் அதிகாரம்மிக்க பகுதியான லடாக் கியா நகரில் ஏராளமான போர்த் தாங்கிகள் காணப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகிறார்கள்.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் ரஷ்யா ஆசாத்துக்கு ஆதரவாகக் களம் இறங்கு வதையே இது காட்டுவதாக அமெரிக்கா கருதுகின்றது. பென்ரகன் பேச்சாளர் கெப்ரன் ஜெப் டேவிஸ் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளார். "லடா கியா நகருக்குத் தெற்கில் உள்ள பகுதியை முன்னி லையில் செயற்படும் தள மாக அவர்கள் பயன்படுத் தத் திட்டமிட்டுள்ளார்கள் என்பது தெரிகின்றது. இவை களையே அங்கு நடமாடும் ஆள்களையும் தளபாடங் களையும் கொண்டு நாம் அனுமானிக்க வேண்டியிருக்கிறது" என்றார். மொஸ்கோ தொடர்ந்தும் டமாஸ்கஸிற்கு இராணுவ உதவிகளை வழங்கிவரும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோ தெரிவித்திருந்தமைக்கு ஒரு நாள் கழித்து இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

### ஆசாத்தை ஓரம் கட்ட ரஷ்யா முயற்சி

வொசிங்டன் போஸ்ட் செய்திகளின்படி சிரிய அதிபர் பாஷர் அல் ஆசாத்தை ஓரம் கட்டுவதற்கு ரஷ்யா விரும்புகிறது. அதனைக் குறிக்கும் வகையில் அமெரிக்காவுக்கும் சவுதி அரேபியாவுக்கும் ரஷ்யா சமிக்ஞைகளை அனுப்பியுள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான ஒற்றுமை முன்னணியொன்றை அமைத்துப் பிராந்தியத்தில் தனது செல் வாக்கை நிலைநாட்டிக்கொள்ளும் விதத்தில் மெதுவாக ஆசாத்தை அதிகாரத்திலிருந்து கீழ் இறக்கிவிட ரஷ்யா விரும்புகிறது. ரஷ்ய அதி காரிகளும் சிரிய எதிர்க்கட்சித் தலைவர் களும் இவ்வாறு தெரிவித்து வருகிறார்கள்.

இந்த முயற்சி கடந்த ஜூனிலிருந்து முன்னெ டுக்கப்பட்டு வருவதாகக் கூறும் அவர்கள், அப்போது சவுதியின் பிரதி இளவரசரும் சவுதி மன்னரின் புதல்வருமான மொகம்மதுவுக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் வரவேற்பு அளித்து விருந்து நடத்தியிருந்தார் என்றும் தெரிவிக்கின்றார்கள். சவுதி அரேபியா ஆசாத் தின் நெடுங்கால எதிரியாகும். அதேசமயம் ரஷ்யா அவரது நீண்டகால நட்பு நாடாகும். அதற்குப் பிந்திய காலத்தில் பிராந்தியத்தின் பல பாகங்களில் இருந்தும் இராஜதந்திரிகள் மொஸ்கோவுக்கு அழைக்கப்பட்டு கலந்துரை யாடல்கள் நடைபெற்றுள்ளன. ஆசாத்தை இடைக்கால அரசுத் தலைவராக வைத்துக் கொண்டு அவரது அதிகாரங்களை படிப்படி யாகக் களைவது பற்றி ஆலோசிக்கப்படு வதாகக் கூறப்படுகின்றது.

இருந்தாலும் ஆசாத்தை உண்மையாக ஓரம் கட்டி விடலாம் என்று புடின் கருதுகின்றார். அவ்வாறாயின் அவரை அமைதியாக வெளி யேறும்படி வற்புறுத்துவாரா என்பது பெரிய கேள்வியாக இருக்கிறது என்கிறார்கள் விமர்சகர்கள். ரஷ்ய இராணுவம் சிரி யாவில் மேற்கொள்ளும் நட வடிக்கைகள் ஆசாத்துக்கு மேலும் அதிகாரத்தை அதிகரிப்பதற்காக அதிபர் புடினால் முன்னெடுக் கப்படுகின்றனவா அல்லது அவரை மெதுவாக பதவியிலிருந்து இறக் குவதன் மூலம் தனது செல்வாக் கையும் பலத்தையும் அதிகரித்துக் கொள்ள விரும்புகிறாரா என்பதில் சவுதி அதிகாரிகளுக்குச் சந்தேகம் உண்டு. அவ் வாறு புடின் திட்டமிடும் பட்சத்தில் கிளர்ச்சியா ளர்களுக்கு சவுதி தனது ஆதரவையும் உதவியையும் அதிகரித்து புடினுக்குப் பதில ளிப்பதாக இருக்கும்.

### சீனாவில் தலைமாற்றுச் சிகிச்சை

விசித்திரமான ஒரு நோய்க்குட்பட்டுள்ள ரஷ்ய நோயாளி ஒருவருக்கு தலையை மாற்றி வேறொரு மனிதரின் உடலில் பொருத் தும் சிகிச்சை 2017 டிசெம்பர் மாதத்தில் நடத்தப்படவிருக்கிறது. உலகில் முதன்முறை யாக நடைபெறவிருக்கும் இந்தச் சிகிச்சைக்கு உட்படவிருப்பவர் 30 வயது ரஷ்யரான வாவரி ஸ்பிரிடொனொல் என்பவராவார். இதனை மேற்கொள்ளவிருப்பவர் இத்தாலிய மருத்துவ நிபுணர். செர்கியோ கனவரோ ஆவார். சீன மருத்துவ நிபுணர் நென் ஜியாபிங் என்பவரும் இதில் இணைந்து செயற்பட விருக்கிறார். இந்தச் சோதனை வெற்றி பெறுமானால் நிச்சயம் அதற்காக சீனாவுக்கு நோபல் பரிசு கிடைக்கும். அதனால் சீனர்கள் அதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்று தெரிகின்றது.

"எமது சோதனைகளும் மேலதிக ஆய்வு களும் உறுதியானதன் பின்னர் நாம் இந்தச் சோதனையை மேற்கொள்ள இருக்கிறோம்" என்று அறுவைச் சிகிச்சை நிபுணர் கனவரோ தெரிவித்திருக்கின்றார். சீனாவிலுள்ள ஹார் பின் பல்கலைக்கழக மருத்துவ மனையில் இந்தச் சிகிச்சையை நடத்துவதற்கான ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அறுவைச் சிகிச்சைக்கு 11 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என்றும் சுமார் 36 மணிநேரம் பிடிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

### தாய்-கோயிலில் குண்டு வைத்தவர்

தாய்லாந்து ஏராவன் கோயிலில் குண்டு வெடிப்புக்குக் காரணமாக இருந்துள்ளவரை தாய்லாந்து பொலிஸார் இனம் கண்டுள்ளனர். அவரைக் கைது செய்வதற்கு நீதிமன்ற அனுமதியையும் பெற்றுள்ளனர். பாங்காக் கில் உள்ள பிரம்ம தேவனுக்குரிய ஏராவன் கோயில் குண்டுவெடிப்பில் ஓகஸ்ட் 17 ஆம் திகதி 20 பேர் வரையில் கொல்லப்பட்டனர். சந்தேக நபர் தாய்லாந்திலுள்ள சிறு பான்மை உயிர்குர் இனத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கானல் நீராகும் நியாயங்கள்

சந்திரசேகர ஆசாத்

அண்மைக் காலமாகத் தேசிய அளவிலும் சர்வதேச மட்டத்திலும் இடம்பெறும் சம்பவங்களும் வெளிவரும் கருத்துக்களும் நியாயங்களைத் தேடும் தமிழ் மக்களின் நீண்ட பயணத்தைக் கானல்நீர் நோக்கி கடுக வழி அலையும் மானின் நிலைக்குத் தள்ளி விடுமா என்ற அச்சத்தை பலரின் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு இலங்கைக்குப் பயணம் செய்த அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் நிஷா பிஸ்வால் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா ஒரு பிரேரணையை முன்வைக்க உள்ளதாகக் கருத்து வெளியிட்ட பின்பே இப்படியான ஒரு குழப்ப நிலை தோன்றி யுள்ளது. அதன் பின்பு பல்வேறு தரப் பினரிடமிருந்தும் வெவ்வேறு கருத்துக்கள் வெளிவர ஆரம்பித்தன. சர்வதேச விசாரணை கோரி தமிழ் மக்களின் தரப்பில் பல்வேறு போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வடமாகாண சபையும் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு சர்வதேசத் தீர்ப்பாயம் மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. எனினும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் வெளி யுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆற்றிய உரையும், அதில் அவர் வழங்கிய வாக்குறுதிகளும் அதற்கான பிரதிபலிப்புக்களும் சர்வதேச விசாரணை என்ற இலக்கைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன.

### இந்தியாவின் எதிர்ப்பு

கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் இந்தியாவினதும், சர்வதேசத்தினுடையதுமான அனுசரணையுடன் ஒரு சர்வதேச விசாரணைக்கான சூழலை உருவாக்கப் போவதாக வாக்குறுதி வழங்கியே மக்களின் ஆணையைக் கோரியது. தமிழ் மக்களும் தமது ஆணையைத் தாராள மாகவே தங்கள் பெருவாரியான வாக்குகள் மூலம் வழங்கியிருந்தனர்.

அதேவேளையில் இந்தியா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் கூட்டமைப்புக் கோரியிருந்தது.

ஆனால், ஐக்கிய நாடுகளுக்கான இந்தியப் பிரதிநிதி ரூபன் சின்ஹா மிகவும் தெளிவான முறையில் சர்வதேச விசாரணையை நிராகரித்துக் கருத்து வெளியிட்டிருந்தார். அவர், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை நடத்த இலங்கைக்குத் தகுதியும் ஆற்றலும் உண்டு எனவும், அதன் காரணமாகவே இந்தியா அமெரிக்கத் தீர்மானத்துக்கு 2014ஆம் ஆண்டு ஆதரவளிக்க மறுத்து நடுநிலை வகித்ததாகவும் தெரிவித்திருந்தார். மேலும் அவர், உள்ளக விசாரணை ஒன்றைநடத்துவது தொடர்பாகஅமெரிக்கா இலங் கைக்கு ஆதரவு வழங்குவதை வரவேற்கிறார் எனவும் தெரிவித்தார். எனவே மனித உரிமைகள் பேரவை யில் கடந்த வருடம் போலவே இந்த முறையும் இலங்கையைக் காப்பாற்றும் வகையிலேயே இந்தியா செயற்படும் என்பதற்கு ஒரு முன்னறிவித்தலாகவே இது பார்க்கப்படுகிறது.

இந்தியா எந்த வகையிலும் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எந்த ஒரு சர்வதேச நடவடிக்கைக்கும் வலுவான எதிர்ப்பையே தெரிவிக்கும். அதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே நிலவும் காஷ்மீர் பிரச்சினை. மற்றையது தென்னாசியாவில் இந்தியாவின் பிராந்திய வல்லரசுக் கனவு.

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் பெரும்பான்மையான முஸ்லிம்களைக் கொண்ட ஒரு மாநிலம். ஆனால் சுதந்திரத்தின் முன் ஆட்சியாளராக இருந்த இந்துவான அந்தப் பகுதியின் மன்னர் அதை இந்தியாவுடன் இணைத்துவிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை காஷ்மீர் விடுதலைப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இதில் சில அமைப்புக்கள் சுதந்திர காஷ்மீர் கோரியும் வேறு சில அமைப்புக்கள் பாகிஸ்தானுடன் காஷ்மீர் இணைக்கப்பட வேண்டும் எனக் கோரியும் போராட்டம் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக ஒரு சர்வதேச நடுவர் வேண்டுமெனப் பாகிஸ்தான் கோரி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்கா போன்ற நாடுகளும் காஷ்மீரில் ஒரு மக்கள் வாக்கெடுப்பு சர்வதேசத்தின் கண்காணிப்பில் நடத்தப்பட்டு மேற்படி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இந்தியா, காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி எனவும் அந்த விவகாரத்தில் சர்வதேசம் தலையிட முடியாது எனவும் திட்டவட்டமாகக் கூறிவருகிறது.

இப்படியான ஒரு புறச்சூழலில் இலங்கையில் இடம்பெற்ற அநீதிகள் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படுவதற்கு இந்தியா ஆதரவு வழங்குமானால் காஷ்மீர் விவகாரத்தில் சர்வதேசம் தலையீடு செய்வதை எதிர்ப்பதற்கான தார்மீகக் காரணங்கள் இல்லாமல் போய்விடும். எனவே இந்தியா இந்த விடயத்தில் சர்வதேச விசாரணைக்கு எதிராகச் செயற்படும் என்பதில் எவ்வித சந்தேகங்களுக்கும் இடமில்லை.

அடுத்தது இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்துவதில் கூடிய அக் கறை காட்டியே தனது ஒவ்வொரு நகர்வுகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படுமானால் இலங்கையைத் தனது மேலாதிக்கத்தில் வைத்திருக்க முனையும் இந்தியாவின் நிலை இலங்கை தொடர்பாக இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இது இந்தியாவின் பிராந்திய வல்லரசுகளுக்கு இடையூறானதாகும்.

இந்தியா, இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணையை எதிர்க்க இந்த இரு முக்கிய காரணங்கள் இருக்கும் அதவேளையில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட அநாகரிகமான வஞ்சக நடவடிக்கைகள் பல ஆதாரபூர்வமாக வெளிவரும் நிலை ஏற்படலாம். போரின் இறுதி நாள்களில் இந்திய முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோரே போரை வழிநடத் தினர் என்ற செய்திகள் அப்போது வெளிவந்தன.

மேலும் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப்புலி உறுப்பினர்களைக் கொல்லும்படி இந்திய ஆலோசகர்களே ஆலோசனை வழங்கினர் எனவும் தகவல்கள் அப்போது கசிந்தன. இந்தியத் தரப்பு இவை தொடர்பாக மறுப்புத் தெரிவித்தபோது, கோத்தபாய ராஜபக்ச தன்னிடம் சில ஒலிப்பதிவுகள் உண்டு எனவும் தன்னால் பல விடயங்களை நிரூபிக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

அது மட்டுமன்றி முன்னாள் ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ச இந்தியாவின் போரையே தாங்கள் நடத்தினோம் எனக் கூறியதை யும் மறந்துவிட முடியாது. மேலும் வவுனியாவிலுள்ள இலங்கைப்படை முகாம் மீது விடுதலைப்புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியபோது ராடர் சாதனத்தை இயக்கிய இரு இந்தியப் படையினர் காயமடைந்தனர். எனவே இலங்கை தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படுமானால் அதில் மகிந்த, கோத்த பாய, பசில் ஆகியோர் சாட்சியமளிக்கும் போது இந்தியா இறுதிப் போரில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட மோசமான நடவடிக்கைகளும் அம்பலத்துக்கு வரும். அப்போது இந்தியத் தமிழகம் கொதித்தெழுவதை எவராலும் தடுத்து விடமுடியாது. இது இந்திய ஆட்சியாளர்களுக்குப் பெரும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தும். இது எமது அரசி யல் தலைமைகளுக்குத் தெரியாததல்ல. அப் படியிருந்தும் இந்திய உதவியுடன் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப் போவ தாகச் சொல்வது ஓர் அப்பட்டமான பொய் யாகும்.

அதேவேளையில் மனித உரிமைகள் பேரவையில் 30ஆவது கூட் டத் தொடரில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆற்றிய உரை, ஒருபுறம் ஓர் உள்ளக விசாரணைக்கான கோரிக்கையாகவும், மறுபுறம் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றப் போவதாக உறுதிப்படுத்தும் ஒரு சத்தியப் பிரமாணமாகவுமே காணப்படுகிறது.

அவர் தனது உரையில் உண்மைகளைக் கண்டறியவும், காணாமற்போனோர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வும் சட்டம், நீதியை நடைமுறைப்படுத்தவும் பரிந்துரைகளையும் அதிகாரம் கொண்ட நான்கு ஆணைக்குழுக்கள் நிய மிக்கப்படும் எனவும் புதிய அரசமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டமை போன்று எதிர்காலத்தில் இடம்பெறாது எனவும் உறுதி தெரிவித்திருந்தார்.

அவரின் உரை தொடர்பாகவும், புதிய அரசின் முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உட்படச் சில நாடுகள் திருப்தி தெரிவித்துள்ளன. எனினும் ஐ.நாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி மிக்சல்றொபேட் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக நம்பகமான நீதி விசாரணைகள் முன்வைக் கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டதையும் கவனத்தில் எடுக்காமல் விடமுடியாது.

### சர்வதேச விசாரணை

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பாக தமிழ் மக்கள் முற்றாகவே நம்பிக்கை இழந்து விட்ட னர். திரும்பத் திரும்ப சாட்சியங்கள் சொல்லி அலுத்துப்போய் விட்டனர். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் நிறைவுற்று பல ஆண்டுகள் கடந்த நிலையிலும், மனித உரிமைகள் பேரவையில் அவை நிறைவேற்றப்பட வேண்டும் என இருதடவைகள் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட போதிலும் இன்றுவரை அவை நிறைவேற்றப்படவில்லை.

காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இரண்டு வரு டங்களாக விசாரணைகளை நடத்தி வந்தபோதிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவை காலம் கடத்தும் நடவடிக்கைகளாகவே கையாளப் பட்டன.

இனி அமைக்கப்படும் ஆணைக்குழுக்க ளும் இவ்வாறுதான் நடந்து கொள்ளும் என்றே நாம் கருத வேண்டியுள்ளது. கடந்த அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கும் இந்திய அரசுக்கும் இனப்பிரச்சினை தொடர்பாகவும், நல்லிணக்கம் தொடர்பாகவும் பல வாக்குறுதிகளை வழங்கியது. எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. மாறாக எதிர் வளமான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. புதிய அரசு வந்து எட்டு மாதங்களாகி விட்டபோதிலும்கூட எந்த ஒரு பரிந்துரையும் நிறைவேற்றப்பட வில்லை. வாக்குறுதிகளும் கிடப்பி லேயே கிடக்கின்றன. மாறாக எல்லாம் புதிதாக மீண்டும் ஆரம்பிக்கும் என்கிற வாக்குறுதியே இப்போது வழங்கப்படுகிறது. எனவே உள்ளக விசாரணை என்பது வெறும் கானல் நீர் என்றே தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

சர்வதேச நீதிமன்ற விசாரணை ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் என்பன சாத்தியமற்ற நிலையில் மூன்றாவது வழியாகத் தமிழ் மக்கள் ஒரு சர்வதேச தீர்ப்பாயம் மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி நிற்பது இந்தக் காரணங்களுக்காகவேயாகும்.

அதேவேளையில் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் வெளியிட்டு உரையாற்றியபோது போர்க்குற்றங்களை விசாரிக்க இலங்கைச் சட்டங்கள் போதுமானவையல்ல எனவும், மனித உரிமை மீறல்களுக்கான கட்டமைப்பின் அழுத்தங்கள் இன்றும் அப்படியே உள்ளன எனவும் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் சர்வதேச நீதிபதிகள், சட்டத்தரணிகள் அடங்கிய சிறப்புக் கலப்பு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். இது ஒரு நல்ல ஆரம்பமாகத் தென்பட்டாலும் இதுவும் கானல் நீரா இல்லையா என்பதற்கு எதிர்காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவு நிகழ்ந்த வீட்டிலும் கோப்பி குடிக்கிறார்கள். விபத்து நடந்த இடத்தில் சில நிமிடங்களில் போக்குவரத்து வழமைக்குத் திரும்புகிறது. இயற்கைச் சீற்றம் நிகழ்ந்த இடம் சுற்றுலா மையம் ஆகிறது. எல்லா இழப்புகளும் ஏதோ ஒரு விதத்தில் ஈடுசெய்யப்படுகின்றன.

# தோல்வியைக் கொண்டாடுங்கள்

கோபிகிருஷ்ணா

தோல்விகள் நமக்கான பாடங்கள் என்று தெரிந்தும் தோல்விகளைப் பற்றி நாம் அதிகம் நினைப்பதில்லை. வெற்றியைக் கொண்டாட நினைக்கிறோம். தோல்வியை மறக்க நினைக்கிறோம். அதற்கு தோல்வி தரும் வலிதான் காரணம். தோல்வியை நினைக்கையில் நம்மையும் அறியாமல் சிறுமைப்பட்டுப் போகிறோம். வெளியில் சொல்லாவிட்டாலும் குறுகிப்போகிறோம். இது எனக்கு நடந்திருக்க வேண்டாம் என்று நினைக்கிறோம்.

### மூடி மறைத்தல்

காரணம் இல்லாமல் காரியம் இல்லை. தோல்வி வருவது நமக்கு ஒரு பாடம் புகட்டத்தான். அந்தப் பாடத்தை வலிமையாகக் கற்றுத்தரத் தோல்வியால்தான் முடியும். வெற்றியால் வரும் பாடங்கள் அகந்தையை வளர்க்கும். தோல்வி தரும் பாடங்கள் அகந்தையை அழிக்கும். நம் அகந்தை அழிய அவ்வளவு சீக்கிரம் நாம் அனுமதிப்போமா?

பொய்யான காரணங்களை அகந்தை உற்பத்தி செய்யும். ஒரு தற்காலிக அமைதியை உருவாக்கி அதில் தோல்வி அனுபவத்தை மூடி வைக்கும். அந்த மூடி மறைத்தலில் தோல்வி நமக்குக் கற்பிக்கும் பாடங்களும் மனதில் ஏறாமல் போய்விடும்.

### தோல்வி நிலையானதா?

வெற்றியாளர்களின் சாகசங்களைக் கேட்பதில் நூற்றில் ஒரு பங்குகூடத் தோல்வியாளர்களின் அனுபவங்களை நாம் கேட்பதில்லை. வெற்றி பெற்றவர்களின் பழைய தோல்வி அனுபவங்கள்கூட சாகசங்களாகத்தான் பார்க்கப்படும். நிறைய தோல்விகளைச் சந்தித்தவர்களின் அனுபவங்கள் வளமான வாழ்க்கைப் பாடங்கள். அனைத்துத் தோல்விகளையும் நாமே பெற்றுக் கற்றுக் கொள்வதைவிடப் பிறர் தோல்விகளில் பாடம் கற்பது புத்திசாலித் தனம். தோல்வியடைந்தவர்களை உடனே உதாசீனப்படுத்துவது போன்ற மடத்தனம் எதுவுமில்லை. முதலில், வெற்றி, தோல்வியை வைத்து மனிதர்களை மதிப்பிடுவது மலிவான செயல்.

இரண்டாவது, தோல்வி என்பது நிரந்தர நிலையில்லை. ஒரு வெற்றி கூடச் சிலசமயத்தில் வாழ்க்கையின் உச்சத்துக்கு இட்டுச் செல்லலாம்.

மூன்று, தோல்வியாளர்கள் தங்கள் பாடங்களைப் பகிரத் தயாராக இருப்பார்கள். ஆறுதல் கிடைக்கக் கூடப் பகிரலாம். ஆனால், வெற்றி பெற்றவர்கள் பலர் தங்கள் தோல்வி அனுபவங்களைப் பகிர மாட்டார்கள். ஆதலால் தோல்விகள் பாடங்கள் என்றால் தோல்வி அடைந்தவர்கள் ஆசிரியர்கள்.

நாம் ஏன் தோல்விகளைக் கண்டு இப்படிப் பயந்து நடுங்குகிறோம்? சிறு வயது முதலே தவறுகளையும் தோல்விகளையும் ஒதுக்கத்தான் சொல்லித் தந்திருக்கிறார்கள்.

### வெற்றியின் மீதான வெறி

சரியும் தவறும் கலந்ததுதான் வாழ்க்கை. வெற்றியும் தோல்வியும் இணைந்திருப்பதுதான் இயல்பு. ஒன்றை மட்டும் கொண்டவர்கள் யாரும் இல்லை. நம் தெய்வங்கள்கூட இதற்கு விதி விலக்கல்ல.

வாழ்க்கையில் வெற்றியை மட்டும் தனியாகப் பிரித்து முழுமையாக உரிமை கொண்டாடிவிடலாம் என்று நினைப்பதினால்தான் இன்று வெற்றியை விற்கும் சந்தைகள் பெருகிவிட்டன. இதைப் படி, இதைக் குடி, இதைச் செய், இதை வாங்கு, இங்கு செல், இவரிடம் போ என்றெல்லாம் பிரித்துப் பிரித்துச் சந்தையைப் பிடித்துக் கொண்டதன் காரணம் நமக்கு வெற்றியின் மீது இருக்கிற வெறிதான்.

படிக்காதவர்கள், நல்ல மதிப்பெண்கள் வாங்காதவர்கள், நல்ல வேலை கிடைக்காதவர்கள், பணம் உழைக்காதவர்கள், சொத்துச் சேர்க்காதவர்கள் இவர்கள் எல்லாம் தோல்வியடைந்தவர்கள் என்று நம்ப ஆரம்பித்து விட்டோம். அப்படி என்றால் படிப்பு, வேலை, சொத்து சேர்த்தவர்கள் முழுமையான வெற்றியாளர்களா? பின் ஏன் இவர்களில் பலரிடம் இத்தனை வியாதிகள், விவாகரத்துகள், விவகாரங்கள்? இவையெல்லாம் தோல்விகள் இல்லையா?

### நம்பிக்கையே மருந்து

யோசித்துப் பார்த்தால், வெற்றியும் தோல்வியும் அவரவர் மதிப்பீடு சார்ந்தவை. வாழ்க்கையில் எதை நோக்குகிறோமோ அது கிடைத்தால் வெற்றி. அது தவறினாலோ அல்லது தாமதமானாலோ அதைத் தோல்வி என்று சொல்கிறோம். அவ்வளவுதான்.

எந்தத் தோல்வியும் பெரிதல்ல. அதைப் பூதாகரமாக ஆக்கி விடுவது நம் எண்ணங்கள்தான். அந்தந்தப் பருவத்தில் பெரிதாகத் தெரியும் தோல்விகள் காலமும் தூரமும் கடந்து நோக்குகையில் அற்ப விடயமாகத் தெரியும்.

மதிப்பெண்கள் குறைவதும், காதல் கை கூடாததும் அந்தந்தக் காலத்தில் வாழ்க்கையையே முடக்கிப்போடக் கூடியவை. ஆனால் அதைக் கடந்தும் வாழ்க்கை ஓடும். அதை விடச் சிறப்பான நிகழ்வுகளும் வாய்ப்புகளும் வாய்க்கும். நாளை பற்றிய நம்பிக்கைதான் நேற்றைய காயங்களுக்கு மருந்து.

### தோல்விகளுக்கு நன்றி

சாவு நிகழ்ந்த வீட்டிலும் கோப்பி குடிக்கிறார்கள். விபத்து நடந்த இடத்தில் சில நிமிடங்களில் போக்குவரத்து வழமைக்குத் திரும்புகிறது. இயற்கைச் சீற்றம் நிகழ்ந்த இடம் சுற்றுலா மையம் ஆகிறது. எல்லா இழப்புகளும் ஏதோ ஒரு விதத்தில் ஈடுசெய்யப்படுகின்றன.

உங்களுக்கு முன்பாக மலையேறுபவர் தடுக்கி விழும்போது, அங்கு வழுக்கல் அதிகம். பார்த்துப் போ! என்று சொல்லாமல் சொல்கிறார். உங்கள் விபத்தைத் தடுக்கிறார்.

உங்களுக்குக் கிடைத்த அனைத்துத் தோல்விகளுக்கும் நன்றி செலுத்துங்கள். உங்கள் தோல்விக்குக் காரணமான அனைவரையும் மனதாரப் பாராட்டி நன்றி சொல்லுங்கள். நீங்கள் செல்லும் பாதையில் உங்களுக்கு முன்பாக சென்று தோற்றவர்கள் அனைவரையும் நினைவு கூருங்கள்.

வெற்றியைத்தலைக்கு மேலே எடுத்துக் கொள்ள வேண்டாம். தோல்வியை மனதுக்குள் எடுத்துக் கொள்ள வேண்டாம். இரவும் பகலும் போல வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும் வாழ்க்கையை ரசிக்கக் கற்றுக்கொள்வோம்!

# விண்வெளியின் தூய்மைப் பணியாளர்கள்....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### அதி உயரத்தில் ஆழ் அமைதி

எல்லா விண்கலன்களும் புவியிலிருந்து ஒரே உயரத்துக்கு ஏவப்படுவதில்லை. தாழ்நிலையில் சுமார் 320 கி.மீ. உயரத்தில் பல விண்கலன்கள் ஏவப்படுகின்றன. வானிலை ஆய்வுக்கும், தொலை உணர்வுக்குமான பயன்களுக்காக அனுப்பப்படும் செயற்கைக்கோள்கள் தாழ்நிலைப் பாதைக்கு ஏவப்படுகிறது. இந்தப் பகுதியில் மிகமிகக் குறைவானதாகவே பூமியின் வளிமண்டலம் உள்ளது. வளிமண்டலத்தில் உராயும் விண்கலம் வேகம் இழக்கும். அதன் காரணமாக அதன் பாதை தாழ்ந்து போகும். பல ஆண்டுகள் கடந்த பின்னர் குறிப்பிட்ட நிலையில் பூமியின் வளிமண்டத்தில் புகும். வளிமண்டலத்தின் கூடுதலான அடர்த்தி காரணமாக உராய்வு ஏற்பட்டு மிகுந்த வெப்பம் ஏற்பட்டு விண்கலம் எரிந்துபோகும்.

ஆனால், பூமியிலிருந்து சுமார் 800 கி.மீ. உயரத்தில் உள்ள நடுநிலைப் பாதையில் வளி மண்டல உராய்வு அறவே இருக்காது. எனவே, இங்கு பாயும் பொருள்கள் எப்போதும் இங்கு சுற்றியபடியே இருக்கும். எனவே, மேலும் மேலும் உயரத்துக்கு விண்கலன்கள் ஏவப்படும்போது வெளிப்படும் குப்பைகள் விண்வெளியில் வெகு நீண்ட காலத்துக்கு சுற்றியபடியே இருக்கும்.

### தூய்மைப் பணியாளர்கள்

தங்கள் வாழ்நாள் முடிந்ததும் மடிந்த பிணமாகச் செயற்கைக் கோள்களைத் தறுதலையாக விண்ணில் சுற்ற விடுவது இன்றுள்ள போக்கு. இதனை மாற்றி வாழ்நாள் இறுதியில் செயற்கைக்கோள்களை பூமிநோக்கி உந்தி எரித்துவிட வேண்டும் என்பது எதிர்காலத் திட்டமாக உள்ளது. எவ்வாறு விண்கலங்களை வேகமாகப் பூமிநோக்கி விழச் செய்வது? அதற்குத்தான் கைகொடுக்கிறது டீ ஆர்பிட் சேயில் (De OrbitSail) தொழில்நுட்பம். நானோ தொழில்நுட்பம் அடிப்படையிலான இந்த செயற்கைக் கோளை செயலிழந்த செயற்கைக் கோளில் பதித்துவிட்டால், பெரிய பாய்மர விரிப்பின் உராய்வு காரணமாக அந்தச் செயற்கைக் கோளின் இயல்பான வேகம் குறையும்; அதன் பாதை தேயும். எனவே, விண்கலம் பூமி நோக்கி விழத் தொடங்கும். தூய்மைப் பணிக்காக தனது உயிரையும் இந்த விண்கலம் தியாகம் செய்கிறது.



விண்கலங்களை அவற்றின் செயல்பாடு முடிந்ததும் அடுத்த 25 ஆண்டுகளில் அகற்றி விடவேண்டும் என ஐ.நா. சபை கூறியுள்ளது. இது வெறும் அறிவுரைதான். விரைவில் இத்தகைய சட்டம் வரலாம். அப்போது விண்வெளியை சுத்தம் செய்ய இத்தகைய ஏராளமான தூய்மைப் பணியாளர்கள் விண்வெளிக்குப் பயணமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டு களச் சாவுகள்

ஆபத்தான விளையாட்டுக்களில் ஒன்றான குத்துச்சண்டையை இல்லாமல் செய்யவேண்டும் என்று உலகின் பல பாகங்களிலிருந்தும் அவ்வப்பொழுது குரல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம் போட்டியின் பொழுது ஏற்படும் படுகாயங்கள், பின்விளைவுகள் மற்றும் அவ்வப்பொழுது ஏற்படும் சாவுகள்தான். எதிர்ப்புக்கள் இருந்தால்தான் பிரபல்யமாக முடியும் என்பதுக்கேற்ப குத்துச்சண்டை வளர்ந்துகொண்டே சென்றதேயொழிய அழிவடையவில்லை. இதற்குச் சான்று மெவதர், மானி பாக்கியோ போன்ற உலகின் பெரும் பணக்கார ஜாம்பவான்கள் குத்துச்சண்டை வீரர்களே. வேறெந்த விளையாட்டு வீரர்களும் சாதிக்காத, சாதிக்க முடியாத செல்வங்கள் இவர்களிடம் கொட்டிக் கிடக்கின்றன.

ஆனால் வரலாறு காணாத அளவுக்குக் குத்துச்சண்டைக்கு எதிராகப் பல குரல்கள் ஒருமித்து ஓங்கி ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன. இதற்குக் காரணம் இந்த வாரத்தில் மட்டும் அரங்கேறிய இரண்டு களச் சாவுகளே. சாவடைந்த இருவரில் ஒருவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் பெயர் டேவிட் பிரவுன். மற்றையவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர் பெயர் மிஸ்வான்லே கோம்போலா. டேவிட் பிரவுண் பிரபல்யமடைந்தவர். மிஸ்வான்லே கோம்போலா வளர்ந்து வருபவர். இதுவரை பல உயிரிழப்புக்களைக் குத்துச்சணடை கண்டிருப்பினும் ஒருவாரத்தில் இருவர் உயிரிழந்திருப்பது இதுவே முதல்முறையாகும். ஆஸ்திரேலியாவில் ஆரம்பித்த குத்துச் சண்டைக்கு எதிரான குரல் தென்னாபிரிக்கா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி என்று பரவலடைந்துகொண்டு செல்கின்றது. இந்த எதிர்ப்புக் குரல்கள் மேலும் விரிவடைந்து குத்துச்சண்டைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைத் தர வேண்டும் என்பதே இன்று பலரினதும் எதிர்பார்ப்பு.

தமிழினியன்

# கபடியில் கலக்கிவரும்

## சிவநகர் அ.த.க. பாடசாலை

பொதுவாகப் பாடசாலைகளை வைத்தே அந்தந்தப் பாடசாலைகளுக்குரிய அணிகள் அறிமுகமாகிக்கொள்ளும். ஆனால் ஒரு கபடி அணியால் ஒரு பாடசாலையே அறிமுகமாகியிருப்பது இதுவே முதல்முறை. அந்தப் பாடசாலை சிவநகர் அ.த.க. பாடசாலை, அணி சிவநகர் அ.த.க. பாடசாலையின் கபடி அணி.

அபிவிருத்தியால் மிகைந்திருக்கும் நகரத்துப் பாட சாலை கள் பலவும் தமது தெரிவாக துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், ரென்னிஸ் போன்ற விளையாட்டுக்களைதெரிந்தெடுக்க, போதிய வளப்பற்றாக்குறை இடப்பற்றாக்குறை போன்ற காரணங்களால் சிவநகர் அ.த.க. பாடசாலையின் கட்டாயத்தெரிவாக அமைந்தது பாரம்பரிய விளையாட்டான கபடி. 1965ஆம் ஆண்டு முதல் மௌனமாக இயங்கிவந்த அந்தப்பாடசாலையின் குரல் கபடி, கபடி... என முதல்முதல் மௌனம் கலைத்தது 2002ஆம் ஆண்டிலேயே. 2002ஆம் ஆண்டில் ஆரம்பித்த இந்தக் கபடிச் சத்தம் நடப்பு வருடத்தில் தேசியமட்டத்தில் தங்கம் வென்றதன் மூலம் எம்மை அசைக்க இலங்கையில் எவரும் இல்லை என்ற இறுமாப்புடன் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது.

2003ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இப்பாடசாலையின் கபடி அணிகள் பெற்ற பதக்கங்களையும் கிண்ணங்களையும் நீண்ட பட்டியலிட்டுச் செல்லலாம். கோட்டம், மாவட்டம், மாகாணம், தேசியம் என இவ் அணிகள் பிரநிதித்துவம் பெறாத ஆண்டுகளோ அல்லது தொடர்களோ இல்லை. சிவநகர் அ.த.க. பாடசாலை கபடி என்னும் இராச்சியத்தில் கட்டிய மிகப்பெரும் அரியணையில் வைக்கப்பட்ட வைர கிரீடமாகியுள்ளது நடப்பு வருடத்தில் தேசியத்தில் அந்தப் பாடசாலையின் 15வயதுப்பிரிவு அணியினால் கிடைத்த தங்கப்பதக்கம். குறித்த பாடசாலையின் பழைய மாணவர்களான இ.பரஞ்சோதி, ப.கோபிராஜ் ஆகியோரே அன்று முதல் இன்றுவரை கபடியின் பயிற்சியாளர்களாக உள்ளனர். மொத்தத்தில் வீரர்கள் மட்டுமல்ல அந்த அணியின் பயிற்சியாளர்களும் சிவநகர் அ.த.க. பாடசாலையின் மைந்தர்களே.

சாதிக்கத் துடிக்கும் இந்தக் கபடி அணிகளின் நீண்ட சாதனைகளை வளப்பற்றாக்குறையுடன் இணைந்து அவ்வப்பொழுது இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது மழையும் வெள்ளமும். இந்த அணிகளால் பயிற்சியெடுக்கும் மைதானமாக பயன்படுத்தப்பட்டுவரும் இடம் மழை பெய்தால் சிறிய குளமாகவே மாறிவிடும். அடுத்த கட்டப் பயிற்சிக்கு வெள்ளம் வற்றும்வரை காத்திருக்க வேண்டும். கழகங்களுக்கு உதவிகளையும் உபகரணங்களையும் வாரிக்கொடுக்கும் அரசியல் வாதிகளும் ஆர்வலர்களும் தொடர்ந்து சாதித்துவரும் இந்த அணிகளைக் கண்டுகொள்வதே இல்லை என்று நொந்துகொள்கின்றனர் பயிற்சியாளர்கள்.

அளவற்ற தடங்கல்களையும் சவால்களையும் எதிர்கொண்டு தேசியமட்டம் வரை முன்னேறி சாதித்துக் காட்டிய அந்த வீரர்களின் அடுத்த பார்வை சர்வதேச மட்டத்தை நோக்கி விரிவாகின்றது. முடியாதா என்ன?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org